மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

**DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# தமிழ் இலக்கிய வரலாறு - II

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி– 627 012.

# பொதுத் தமிழ் - II

## முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

## Learning Objective:

- ❖ முதலாமாண்டுப் பட்ட வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் மொழி இலக்கியங்களை அறிமுகம் செய்தல்.
- ❖ தற்கால இலக்கியப் போக்குகளையும், இலக்கணங்களையும் மாணவர் அறியுமாறு செய்து அவர்களின் படைப்பாற்றலைத் தூண்டுதல்
- ❖ தமிழ் இலக்கியம் சார்ந்த போட்டித் தேர்வுகளுக்கு ஏற்ப கற்பித்தல் நடைமுறைகளை மேற்கொள்ளுதல்

| **Expected Course Outcomes** | | |
|---|---|---|
| **On the Sucessful Completion of the Studentswil be able to** | | |
| **இப்பாடத்தைக் கற்பதால் பின்வரும் பயன்களை மாணவர் அடைவர்** | | |
| **CO1** | சிற்றிலக்கியங்களின் வழி இலக்கியச் சுவையினையும் பண்பாட்டு அறிவினையும் பெறுவர். | **K4** |
| **CO2** | புதுக்கவிதை அறிவினையும் அறிந்து கொள்வர் | **K5,K6** |
| **CO3** | திராவிட இயக்க இலக்கியங்களைக் கற்பதன் மூலம் மொழி உணர்வு, இன உணர்வு, சமத்துவம் சார்ந்த சிந்தனைகளைப் பெறுவர். | **K3** |
| **CO4** | தமிழ்மொழியைப் பிழையின்றி எழுதவும், புதிய கலைச்சொற்களை உருவாக்கவும் அறிந்து கொள்வர். | **K3** |

| | | |
|---|---|---|
| **CO5** | போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்குத் தமிழ்ப் பாடத்தினைப் பயன்கொள்ளுதல் வகையில் பயிற்சி பெறுவர். | **K4** |
| **K1-Remember; K2-Undestand; K3-Apply; K4-Analyze; K5-Evaluate; K6-Create** | | |

**அலகு - 1 தமிழ் இலக்கிய வரலாறு அறிமுகம்**

1. சிற்றிலக்கியம் - குறவஞ்சி, கலம்பகம், உலா, பரணி, பள்ளு, பிள்ளைத்தமிழ், தூது அந்தாதி.
2. தனிப்பாடல் அறிமுகம்
3. இக்கால இலக்கியம் - கவிதை, சிறுகதை, நாடகம், உரைநடை, திராவிட இயக்கம் வளர்த்த தமிழ் .

**அலகு - 2 சிற்றிலக்கியமும் தனிப்பாடலும்**

**சிற்றிலக்கியம்**

1. கலிங்கத்துப் பரணி - விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண - முதல் - கேட்பாரைக் காண்மின் காண்மின் - வரை
2. திருக்குற்றாலக் குறவஞ்சி - வானரங்கள் கனிகொடுத்து
3. முக்கூடற் பள்ளு - ஆற்று வெள்ளம் நாளை வரத்
4. அபிராமி அந்தாதி - கலையாத கல்வியும் குறையாத வயதும் (பதினாறு செல்வங்கள்)
5. திருவரங்கக் கலம்பகம் - மறம் - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் - பேசவந்த தூத செல்லரித்த ஓலை செல்லுமோ
6. தமிழ்விடு தூது முதல் பத்து கண்ணிகள்

**தனிப்பாடல்**

1. வான்குருவியின் கூடு - ஔவையார்
2. ஆமணக்குக்கும் யானைக்கும் சிலேடைட் முத்திருக்கும் கொம்பசைக்கும் மூரித்தண்டே - காளமேகப் புலவர்
3. இம்பர் வான் எல்லை இராமனையே பாடி - வீரராகவர்
4. நாராய் நாராய் - சத்தி முத்தப் புலவர்

## அலகு - 3 - இக்கால இலக்கியம் - 1

1. பாரத சமுதாயம் வாழ்கவே - பாரதியார்
2. சிறுத்தையே வெளியில் வா - பாரதிதாசன்
3. நாமக்கல் கவிஞர் - கத்தியின்றி
4. தமிழ் ஒளி - மீன்கள் (அந்தி நிலா பார்க்க வா)
5. ஈரோடு தமிழன்பன் - எட்டாவது சீர் (வணக்கம் வள்ளுவ)

**சிறுகதைகள்**

1. கடிதம் - புதுமைப்பித்தன்
2. வாய்ச்சொற்கள் - ஜெயகாந்தன் (மாலை மயக்கம் தொகுப்பு)
3. அந்நியர்கள் - ஆர். சூடாமணி

**உரைநடை**

1. தம்பிக்கு...- மு.வ. கடிதங்கள் (முதல் இரண்டு கடிதங்கள்)

## அலகு - 4 - இக்கால இலக்கியம் - 2

1. திருக்குறள் (மாநாட்டு) உரை - தந்தை பெரியார்
2. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு உரை - பேரறிஞர் அண்ணா
3. தொல்காப்பிய பூங்கா - எழுத்து - முதல் நூற்பா கட்டுரை கலைஞர்

மு.கருணாநிதி

**நாடகம் / திரைத்தமிழ்**

1. வேலைக்காரி - திரைப்படம்
2. ராஜா ராணி - சாக்ரடீஸ் - ஓரங்க நாடகம்

**இதழியல் தமிழ்**

**முரசொலி கடிதம்**

1. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்

## அலகு 5 - மொழிப் பயிற்சி

### சொல் வேறுபாடு ∴ பிழை தவிர்த்தல்

வாசிப்பது - வாசிப்பவர்

சுவர் - சுவரில்

வயிறு - வயிற்றில்

கோயில் - கோவில்

கறுப்பு - கருப்பு

இயக்குநர் - இயக்குனர்

சில்லறை - சில்லரை

முறித்தல் - முரித்தல்

மனம் மனசு - மனது

அருகில் - அருகாமையில்

அக்கரை - அக்கறை

மங்கலம் - மங்களம்

**பயிற்சி**

- பிழையான சொற்களை ஒரு பத்தியில் கொடுத்து அந்தப் பிழையானச் சொற்களைச் சரியாக எழுதச் செய்தல்.
- சிறிய பத்தி ஒன்றை ஆங்கிலத்தில் கொடுத்து அதனைத் தமிழில் மொழிபெயர்க்க வைத்தல்.

**துணைநூற்பட்டியல்**

1. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி, புதுடெல்லி.
2. மது.ச.விமலானந்தன், தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
3. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம்,மதுரை.
4. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் சிற்பி பாலசுப்ரமணியம், முனைவர் சொ.சேதுபதி
5. புதிய தமிழ் இலக்கிய வரலாறு முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம், நீல.பத்மநாபன்
6. தமிழ் இலக்கிய வரலாறு - டாக்டர் அ.கா.பெருமாள்
7. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் ப.ச.ஏசுதாசன்
8. தமிழ் இலக்கிய வரலாறு - ஸ்ரீகுமார்
9. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - பாக்கியமேரிஷ
10. தமிழ் பயிற்றும் முறை, பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் - மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்

**OUTCOME MAPPING**

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PO 1 | PO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CLO1 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 |
| CLO2 | 3 | 3 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 |
| CLO3 | 2 | 3 | 3 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 2 |
| CLO4 | 3 | 3 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 |
| CLO5 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 2 | 2 | 3 | 3 | 2 |

**Strong -3, Medium -2, Low -1**

# அலகு - 1

# தமிழ் இலக்கிய வரலாறு அறிமுகம்

## 1. சிற்றிலக்கியம்

சிறிய இலக்கியம் எனப் பொருள்படும் சிற்றிலக்கியம் எனும் இச்சொல்லாட்சி மிகவும் அண்மைக் காலத்திலேயே ஏற்பட்டது. இன்று சிற்றிலக்கியம் எனும் சொல்லால் குறிப்பிடப் பெறும் இலக்கிய வகைகளை ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னால் பிரபந்தம் எனும் வடமொழிச் சொல்லால் குறித்தனர்.

சங்க இலக்கிங்களான தொகை நூல்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்றவற்றையும் பேரிலக்கியங்கள் என வழங்கும் வழக்கு உரையாசிரியர் காலத்திலேயே உண்டு. மேலும், காப்பியங்களைப் பெருங்காப்பியம், குறுங்காப்பியம் என வகைப்படுத்துவதும் ஏறக்குறைய உரையாசிரியர்களின் காலத்திலேயே உருவாகி விட்டதாகவே தெரிகிறது. தண்டியலங்கார ஆசிரியர் பெருங்காப்பியத்திற்கு இலக்கணம் கண்டு மொழிந்துள்ளமையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, காப்பியங்களைப் பெருங்காப்பியம், குறுங்காப்பியம் என வகைப்படுத்தும் வழக்குப் பிற்காலத்தில் அதாவது, கி.பி. 12ஆம் நூற்றாண்டுற்கு முன்னதாகவே இருந்தது என்பது தேற்றம். ஆனால், சிற்றிலக்கியம் அல்லது பிரபந்தம் என்று வழங்கும் வழக்கினை அக்காலத்தில் காண முடியவில்லை.

உரையாசிரியருள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலானோர் பிள்ளைத் தமிழ், கலம்பகம், தூது உள்ளிட்ட சில இலக்கிய வடிவங்களைத் தம் உரைகளில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்வராயினும் அவற்றை எல்லாம் சிற்றிலக்கியம் என்றோ பிரபந்தம் என்றோ இன்று வழங்குவது போன்று வழங்கினாரில்லை. ஆக, உரையாசிரியர் காலத்தில் பேரிலக்கியம் மற்றும் பெருங்காப்பியம் என்ற

வகைமைப்பாடு இருந்தபோதும் சிற்றிலக்கியம் அல்லது பிரபந்தம் என்ற வகைமைப்பாடு இல்லாதிருந்தது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

பலரோ ஒருவரோ பாடிய பல பாடல்களைத் தொகுத்து ஒரே நூலாகக் காட்டப் பெறும் இலக்கிங்களைப் பேரிலக்கியம் என்றும் அதிகமான எண்ணிக்கை உடைய பாடல்களைக் கொண்ட தொடர்நிலைச் செய்யுளட்களாலான நூல்களைப் பெருங்காப்பியம் என்றும், வழங்கும் வழக்கினைக் கண்ட பிற்காலத்தவர் குறைந்த பாடல் எண்ணிக்கையோடு தனித்தனி இலக்கிய வகைகளாக வழங்கப் பெற்று வரும் தூது, உலா, மாலை, கலம்பகம் முதலானவற்றை அப்பேரிலக்கியங்களிலிருந்து வேறுபடுத்தித் தனி வகையாகக் காட்ட எண்ணி அத்தகு சிறிய இலக்கிங்களை எல்லாம் பிரபந்தங்கள் எனும் பொதுப் பெயரால் வழங்கப் தொடங்கினர்.

பிரபந்தம் எனும் சொல் நன்கு கட்டப்பட்ட இலக்கிய வடிவம் எனும் பொருள் தருதலால் இலக்கியம் எனும் சொல்லுக்கு மாற்றாகவே இச்சொல்லை முதலில் பயன்படுத்தினர் எனலாம். இன்னும் சற்று ஆழந்து நோக்கினால் பிரபந்தம் எனும் வடசொல், தமிழில் தொகை, திரட்டு, எனும் சொற்கள் தரும் பொருளிலேயே முதன் முதலில் ஆளப்பட்டது என்பது புலனாகும்.

பிரபந்தம் என்ற சொல்லாட்சி தமிழில் பெறுகிற்று. இலக்கியம் எனும் நல்ல தமிழ்ச் சொல்லின் இடத்தைப் பிரபந்தம் எனும் வடசொல் கைப்பற்றித் தக்க வைத்துக் கொண்டது. பிரபந்தம் எனும் சொல் ஒருகாற் பேரிலக்கியம் என்னும் மற்றொருகாற் இலக்கியம் என்றும் பொருள் தருமாறு தமிழில் வழங்கி வருதலைக் கண்ட பிற்காலத்தவர் தூது, உலா, கலம்பகம் உள்ளிட்ட சிறிய இலக்கிங்களைச் சில்லறைப் பிரபந்தங்கள் எனவும் வழங்கத் தலைப்பட்டனர். சில்லறை எனும் சொல் சிலவாக அறுக்கப்பட்டது எனப் பொருள் தருதலால் சிறிய இலக்கியம் என்பதை உணர்ந்த சில்லறைப் பிரபந்தம் என வழங்கினர் (சிற்றிலக்கிய ஆராய்ச்சி - முதல் தொகுதி, இரா.கண்ணன்,ப.23). எனவே பிரபந்தம் எனும் சொல் இன்று கருதுமாறு சிற்றிலக்கியம் என்ற பொருளை எக்காலத்தும் தரவில்லை என்பதை உணர வேண்டும் பாட்டியல் நூல்கள் கூட பிரபந்தம் என்னம் சொல்லை இலக்கியம் எனும் பொருளிலேயே

ஆண்டுள்ளன. எனவே தான் அப்பாட்டியல் நூல்கள் பெருங்காப்பியம், காப்பியம், புராணம் ஆகிய இலக்கிய வகைகளையம் பிரபந்தங்கள் என்றே குறிப்பிட்டுள்ளன. இலக்கியங்களை அவற்றின் அளவு கருதி வகைமை செய்தோர். இன்று சிற்றிலக்கியங்கள் எனச் சுட்டப்பெறும் இலக்கிய வடிவங்களைச் சில்லறைப் பிரபந்தங்கள் என்றே வழங்கினர் என்பத நாம் கருத்தில் கொள்ள வேண்டியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தனித்தமிழ் இயக்கம் எழுந்தபோது சில்லறைப் பிரபந்தம் என்ற பெயருக்குப் பதிலாகத் தனித்தமிழிச் சொல்லான சிற்றிலக்கியம் எனும் பெயர் வழக்கிற்கு வந்தது.

**சிற்றிலக்கியத்தின் சிறப்புகள்**

சிற்றிலக்கியம் என்ற இலக்கிய வகையானது பெயரளவில் தான் சிறு இலக்கியம் என்ற பொருளைத் தருகின்றது. ஆனால், உண்மையில் இது பேரிலக்கியத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் பல சிறப்புகளைக் கொண்டுள்ளது.

சிற்றிலக்கியம் சங்க காலம் முதல் இன்று வரையிலும் தோன்றித் கொண்டிருக்கும் நீண்ட வரலாற்றை உடையது. சிற்றிலக்கியம் என்பதில் முந்நூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட இலக்கிய வகைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகையிலும் நூற்றுக் கணக்கான நூல்கள் உள்ளன. எனவே, தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சிற்றிலக்கியத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

சைவம், வைணவம், சமணம், கிறித்தவம், இசுலாம் எனப் பல்வேறு சமயத்தவர்களும் சிற்றிலக்கிய வகைகள் பலவற்றைப் படைத்துள்ளனர். உவமை, உருவகம், கற்பனைச் சிறப்புகளால் பேரிலக்கியத்திற்கு இணையான நிலையில் நிகழ்கின்றது. இறைவன், ஞானக்குரவர், மன்னன், வள்ளல், சாதராண மக்கள் என அனைவரையும் பற்றிப் பாடுவதாக அமைந்துள்ளது. நாட்டுப்புற இலக்கிய வகைக் கூறுகள் பலவற்றைக் கொண்டு சாதாரண மக்களையும் கவரும் வகையில் உள்ளது. நாட்டின் சமுதாய, அரசியல், பண்பாட்டு வரலாறுகளை வெளிப்படுத்துகின்றது.

இந்திய மொழிகள் பலவற்றிலும் காணப்படுவது. சான்றாகத் தூது இலக்கியம் வழமொழி, மலையாளம், கன்னடம் தெலுங்கு போன்ற மொழிகளில் காணப்படுவதைக்

கூறலாம். இவ்வாறு, சிறறிலக்கியம் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு திகழக் காணலாம்.

**சிற்றிலக்கியத்தின் வகைப்பாடுகள்**

தமிழ் மொழியில் காணப்படும் சிற்றிலக்கிய வகைகளில் குறிப்பிடுவதற்குரிய இலக்கிய வகைகளுள் சிலவாகிய குறவஞ்சி, தூது, மடல், உலா, பள்ளு, கலம்பகம் ஆகியவை பற்றிய பொதுவான சில செய்திகளைத் தருகின்றது.

குறவஞ்சி என்னும் இலக்கிய வகையின் பெயர்க்காரணம் நூல் பெயர் பெறும் முறை, தோற்றம், வளர்ச்சி முதல் நூல், அமைப்பு என்பன பற்றிக் கூறுகின்றது.

அவ்வாறே, தூது, மடல், உலா, பள்ளு, கலம்பகம் ஆகிய இலக்கிய வகைகளின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, உள்ளடக்கம் முதலிய செய்திகளை விளக்குகிறது.

**கோவை**

கோர்க்கப்படுவதனால் கோவை. இஃதோர் அகத்திணை இலக்கிய வகை. காதலன், காதலி இருவரின் உள்ளத்தில் கிளைத்து ஓங்கி வளரும் இன்ப இலக்கியம் இது. மன்னரைப் பாடினால் சிற்றின்பம், இறைவனைப் பாடினால் பேரின்பம், காதலன் - காதலி கூடல், இரண்டு உயிர்கள் பெறும் இன்பம், உயிர் - இறைவன் கூடல் பக்தி மார்க்கப் பேரின்பம். இறைவன் பெயரால், அவனைப் பாட்டுடைத் தலைவனாக்கிக் கோவை பாடும்போது சிற்றின்பம் பாடிப் பேரின்பம் தேடுகிறார்கள்.

**“இன்பமம் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை”**

என்னும் தொல்காப்பிய சூத்திரத்துக்கு இயைந்து எழுதப்படுவது கோவை என்மனார் இலக்கண அறிஞர். ஆண்பெண் உணர்வுகளை முழுமையாகச் சொல்லும் இலக்கியம், கோவை, நூல்களில் தலைசிறந்தது, மாணிக்கவாசகர் யாத்த ‘திருச்சிற்றம்பலக்

கோவை’ எனும் திருக்கோவையார் என்றும் இந்த நூலுக்கு மட்டுமே உயர்வு கருதிய ‘ஆர்’ விருதி உண்டு என்றும் சொல்கிறார்கள்.

கோட்டீச்சுரக் கோவை, திருவாரூர்க் கோவை, திருவெங்கைக் கோவை என்று வேறு சில கோவை நூல்களையும் குறிப்பிடுகின்றார்கள்.

கோவை என்றாலே சிதறிக்கிடக்கும் பொருள்களை ஒன்றாகக் கோத்துத் தரும் மாலையென்பது பொருளாம். சங்க இலக்கிய அகப்பொருள் மரபு அழிந்துவிடாதவாறு காத்த பெருமை கோவை நூல்களுக்கு உண்டு.

**“கோவை என்பது கூறுங் காலை**
**மேவிய களவு கற்பெனும் கிளவி**
**ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ**
**முந்திய கலித்துறை நானூறு என்ப”**

கோவை நூல்களுக்கு இலக்கணம் கூறுகிறது ‘பன்னிரு பாட்டியல்’ ‘கட்டளைக் கலித்துறை 400 பாடல்களில் இயல்வது கோவை என்கிறது இவ்விலக்கண நூல் ஆகும்.

**உலா**

காப்பியங்கள், தலைவர்கள் உலா வரும் செய்திகளைச் சுருக்கமாக உரைக்கின்றன. திருமுடி புனைந்தபின், வதுவை முடிந்தபின், போரில் வெற்றி பெற்றதும் உலா வரும் செய்திகள் அவை. பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம் முத்தொள்ளாயிரத்தில் சில பாடல்கள் எனச் இத்தகு உலாக்களைப் பேசுகின்றன. அத்தகு உலாக்களை விரிவாகப் பேசும் சிற்றிலக்கிய வகையே உலா. இதில் தலைவன் பெயர் கூறப்படும் காரணத்தாலும் அவனைக் கண்டு மகளிர் மாத்திரம் காதல் வயப்பட்ட செய்திகள் பேசப்படுவதாலும் உலாப் பிரபந்தம் புறப்பொருள் சார்ந்த பெண்பால் கைக்கிளை என்று வழங்குவர் இதனைப் பாடாண் திணைக்கு உரியது என்கிறார்கள்.

தலைவன் உலா வரும் சிறப்பைப் பாடுவது உலா இலக்கியம் தலைவனை ஏழ் பருவத்துப் பெண்களான பேதை, பெதும்பை மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்பார். காதல் கொள்வதான பாடல்கள், தமிழர் பண்பாடு, பெண்களின் பருவங்களை ஏழாகப் பிரிக்கின்றது. ஆய்வாளர்கள் அவர்களது வயது எல்லைகளையும் வகுத்துள்ளனர்.

கம்பன், திரு அவதாரப் படலத்தில், இராமன், பரதன் இலக்குவன், சத்துருக்கனை ஈனும் கோசலை, கையேயி, சுமித்திரை எனும் தயரதன் தேவிமாரைத் தெரிவையர் என்கிறான். தெய்வங்கள், மக்களைப் பாடும் உலாக்கள் உலாப்புறம் என வழங்கப்பட்டன. உலாவில் பெரும்பாலும் தலைவனின் அங்க வர்ணனைகள் இடம்பெறும். தலைவன் இளம் பருவத்தினனாக இருத்தல் அவசியம் என்கிறது சிதம்பரம் பாட்டியல் எனும் நூல்.

உலாக்கள் கலி வெண்பாவில் இயற்ற பெறும். ஒரு எதுகை அமைந்த இரண்டிரண்டு வரிகள் இவற்றைக் கண்ணி என்றனர். உலா வருபவர்களுக்கான வாகனங்கள் உண்டு. ஆதியுலாவின் இடபம், வாகனம் எனில் மூவருலாவில் களிறு வாகனம் இடபம் எனில் காளை, களிறு எனில் ஆண்யானை. சொக்கநாதர் உலாவில் தேர் முதலாய ஏழு வாகனங்கள். களிறு, குதிரை, பல்லக்கு ஆகியன உலாவரும் வாகனங்கள் எனப் 'பிரபந்த தீபிகை' எனும் நூல் கூறும் என்பார்கள். சேரமான் பெருமாள் நாயனார் சிவன் மீது பாடிய உலா ஆதியுலா எனப்பட்டது. உலா இலக்கியம் எட்டாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சிற்றிலக்கிய வகை என்றும் இதுவரை 81 உலா நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன என்றும் சொல்கிறார்கள்.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" எனுந் தொல்காப்பியத் தொடரே, உலாவின் மூலவித்து. பிற சிற்றிலக்கியங்களுக்கு உள்ளது போலவே தொல்காப்பியத்தில் வீழந்து விதை கிடக்கிறது. மன்னன் ஓர் ஊர்தியில் நாற்படைகள் புடை சூழத் தலைநகர்ப் பெருவீதிகளில் உலா வருவதை பிறந்த நாள், மணநாள், வெற்றி நாள் முதலிய திருநாட்களில் உலா வருவதை நகர மக்கள்

மாடமாளிகைகளிலும் தெரு ஓரங்களிலும் கண்ணாரக் கண்டு உவகை பொங்க வாழ்த்துவர்.

இம்மரபிலிருந்து புதிய இலக்கிய வகையாக ‘உலா’ எனும் சிற்றிலக்கியம் உருப்பெற்று எழுந்தது, எழுவகைப் பருவ மகளிரும் மன்னன் அழகால் காதல் மீதூர்ந்து அடையும் நிலைகளையும். அரசின் பத்து உறுப்பு நிலைகளின் வளங்களையும் (தசாங்கம்) உலாவின் வழியாகப் புலவர் பெரு மக்கள் புனைந்துரைக்கும் இலக்கிய வகையாக ‘உலா’க்கள் பல தமிழில் எழுந்தன.

இலக்கிய கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரபாதலால் உலாப்பாட்டு மரபுகளைப் பாட்டியல் நூல்கள் வரையறுத்து அவற்றிற்கு இலக்கணம் வரைந்துள்ளன.

ஏழ் பருவ மகளிர் வயது வரம்பினைக் கூட அவை வரையறுத்தன,

**“பேதை முதல் ஏழ்பருவவப் பெண்கள் மயக்கமுற**
**ஓதும் மறுகுஉற்றான் ஒள்வேலான் என்று ஏதம்**
**அறக் கலிவெண்பாவின் ஆக்கல் உலாவாம்**
**புறத்தசாங்கம் தாங்கிப் போற்று”** **(பிரபந்தத் திரட்டு)**

| **பருவங்கள்** | **ஆண்டு** |
|---|---|
| பேதை | 5 - 8 |
| பெதும்பை | 9 - 10 |
| மங்கை | 11 - 14 |
| மடந்தை | 15 - 18 |
| அரிவை | 19 - 24 |
| தெரிவை | 24 - 29 |
| பேரிளம் பெண் | 30 - 36 |

**தூது**

தூதும் கலிவெண்பா உலா, கோவை, பிள்ளைத் தமிழ் எனும் சிற்றிலக்கியங்கள் தமிழுக்கே உரிய சிறப்பு வகைகள், ஆனால் தூது என்பது ஒரு அகில இந்திய இலக்கியம். பிற இந்திய மொழிகளிலும் பல்வகைத் தூது இலக்கியங்கள் உண்டு. வடமொழியில் இதனை சந்தேசம் என்பர். வங்காளத்தில் ‘சந்தேஷ்’ என்றொரு இனிப்பு வகை உண்டு. அதுவும் ஒருவேளை தூது போயிருக்கலாம். மகாகவி காளிதாசனின் தூது நூல் மேக சந்தேகம். அதாவது மேகத்தைத் தூது விடுவது தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளம், சிங்கள மொழிகளில் தூது இலக்கியம் உண்டு.

தூது என்பது அற்புதமானதோர் தமிழ்ச்சொல், பட்டினப்பாலை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு எனப் பல சங்க இலக்கிய நூல்களில் இலகுவாக, பலவாகக் கையாளப்பட்ட சொல். தூதுப் பிரபந்தங்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையில் உ.வே.சா. குறிப்பிடும் செய்தி முக்கியமானது. ‘கோவைக் கண் உள்ள துறைப் பொருளும் கிளவியமைதியும் பெரும்பாலும் ஒரே அமைப்புடையன. உலாவில் உள்ள ஏழு பருவப் பெண்களின் வருணனையும் பிறவும் அத்தகையனவே. பிள்ளைத் தமிழிலும் பத்துப் பருவங்களும் ஒரு திறத்தனவாகவே அமைந்துள்ளன. தூது நூல்களிலோ, தூது விடுக்கப்படும் பொருளுக்கு ஏற்பச் செய்திகளும் பொருளமைப்பும் மாறுபட்டு இருக்கின்றன.

திருக்குறளின் 69-ம் அதிகாரம் ‘தூது’ பற்றிப் பேசுகிறது.

**“அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், வேந்து அவாம்**
**பண்புடைமை, தூதுரைப்பான் பண்பு”**

என்று தூது உரைப்பவன் பண்புகள் பேசப்படுகின்றன. மேலும் வள்ளுவர்.

**“அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை தூது உரைப்பார்க்கு**
**இன்றி அமையாத மூன்று”**

என்கிறார். தூதின் தன்மை பற்றியும் கூறுகிறார்.

**“தொகச் சொல்லி, தூவாத நீக்கி நகச் சொல்லி**

**நன்றி பயப்பதாம் தூது”**

என்கிறார்.

புராணங்கள், இதிகாசங்கள் தூது பற்றி நெடுகப் பேசுகின்றன. போர் தொடங்குமுன், இறுதி நடவடிக்கையாக விடுத்த தூதுகளை, இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் இவற்றுள் காணலாம்.

சத்தி முற்றத்துப் புலவர் பசியிலும குளிரிலும் வாடி, தன் இருப்பையும் நிலையையும் மனைவிக்கு அறிவிக்கும் வண்ணம் நாரையைத் தூதுவிட்ட பாடல், தமிழ் இலக்கியப் பரப்பில் அற்புதமானது.

**“நாராய், நாராய், செங்கால் நாராய்,**

**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**

**பவளக் கூர்வாய் செங்கால் நாராய்”**

என்று தொடங்கும் அந்தப் பாடலைப் பொருள் உணர்ந்து ஒரு முறை வாசித்தவர், வாழ்நாளில் மறக்க மாட்டார்கள். அதுவும் ‘கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழீஇ’ எனும் ஒரு பிரயோகம் மிக வலிமையானது. மேலும் ‘பனங்கிழங்கு பிளந்தாற்போல் பவளக்கூர்வாய் செங்கால் நாராய்’ எனும் அந்த உவமை வெகுவாகப் புகழப்படுவது.

பிசிராந்தையார் எனும் புலவர், கோப்பெரும் சோழனிடத்து, அன்னத்தின் சேவலை தூதுவிட்ட புறநானூற்றுப் பாடலும் சிறப்பானது. சங்க இலக்கியங்களான நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு நூல்களிலும் சைவத் திருமுறைகளான தேவாரத்திலும் நாலாயிரத் திவ்யா பிரபந்தத்திலும் தூதுப் பாடல்கள் உள.

எகினம், மயில், கிளி, மழை, பூவை, சகி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு முதலிய பத்தும் தூது விடப்பட்டுள்ளன. இந்தப் பத்தினுள் மயில், பூவை, குயில் என்பன தூதுபோன இலக்கியங்கள் இன்று இல்லை என்கிறார்கள்.

புகழேந்திப் புலவர் இயற்றிய 'இரத்தினச் சுருக்கம்' எனும் நூலில் எவற்றை எல்லாம் தூது அனுப்பலாம் எனும் இலக்கணம் இருக்கிறது என்கிறார் டாக்டர் உ.வே.சா.

**பள்ளு**

பாட்டியல் நூல்களால் 96 என வகுக்கப் பெற்றவை சிற்றிலக்கியங்கள், புத்திலக்கியங்களை 'விருந்து' எனக் குறிக்கின்றது தொல்காப்பியம்.

'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்பது தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுள் எண் 201. இவற்றுள் பள்ளு இலக்கியங்கள் 17 -ஆம் நூற்றாண்டையும் குறம் 18 -ம் நூற்றாண்டையும் சார்ந்தவை. நொண்டி, உழத்திப்பாட்டு ஏசல் என்பனவும் இந்தக் குடும்பத்தைச் சார்ந்தவை. பிற பிரபந்த வகைகளில் பள்ளும் குறமும் வாசிக்க இலகுவானவை. சிற்றிலக்கியங்களின் இலக்கணங்கள் கூறும் பாட்டியல் நூல்களில் பள்ளு எனும் இலக்கியத்துக்கான இலக்கணம் இல்லை என்கிறார்கள். இதுவரை 35 பள்ளு நூல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**அந்தாதி**

அந்தத்தை ஆதியாக வைத்துத் தொடுக்கும் பாவகை அந்தாதி ஆகிறது. ஒரு பாவின் அடியையோ சீரையோ, அசையையோ, எழுத்தையோ, அடுத்த சீரிலோ, அடியிலோ, பாவிலோ முதலாக வைத்துத் தொடுப்பது அந்தாதியாகும். பாக்களை மனனம் செய்வதற்கு அல்லது மனத்தில் நிறுத்திப் பயன்படுத்துவதற்கு இந்த அந்தாதிகள் மிகவும் உறுதுணையாகின்றன.

தொல்காப்பியர் இதனை 'இணைபு' என உரைப்பர். "அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி" என்பது யாப்பருங்கலகாரிகை.

**“மண்திணிந்த நிலனும்**

**நிலன் ஏந்திய விசும்பும்**

**விசும்பு தைவரு வளியும்**

**வளித் தலைஇய தீயும்**

**தீ முரணிய நீரும் என்றாங்கு”   (புறப்பாடல். 2)**

என்ற புறப்பாடல் அந்தாதித் தொடைக்கு ஏற்ற சான்றாகும். சங்க இலக்கியங்களில் காணப்படும் இக்கருக்களைக் கொண்டு பிற்காலத்தல் பல அந்தாதி நூல்கள் தோன்றின. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றின் தொண்டிப் பத்தும் அந்தாதி முறையில் அமைந்திருப்பதைக் காணலாம். அந்தாதி இலக்கியத்தை முதன்முதலாய்த் தனி நூலாகத் தோற்றுவித்த பெருமை காரைக்கால் அம்மையாரையே சாரும் அவருடைய அற்புதத் திருவந்தாதி.

அந்தாதி இலக்கியம் தொடங்கிய காலத்தில் வெண்பா வடிவம் பெற்றிருந்தது. அந்தாதி இலக்கியங்கள் மேலும் மேலும் பல்கிப் பெருகிற போது. விருத்தம், கட்டளைக் கலித்துறை போன்ற யாப்பு வகைகளிலும் வடிவுற்றன. காரைக்கால் அம்மையின் அற்புதத் திருவந்தாதி 100 வெண்பாக்களால் ஆன அந்தாதி ஆகும்.

**குறவஞ்சி**

குறி சொல்லும் மரபில் வந்த குறத்திப்பாட்டு 34 குறவஞ்சிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறம் என்பதன் மறுபெயர்களே குறவஞ்சி, குறுவஞ்சித் தமிழ், குறவஞ்சி நாடகம் என்கிறார்கள். குறவஞ்சியில் சிறந்தது குற்றாலக் குறவஞ்சி என்பர் புலவர் பெருமக்கள். இதனைத் திருக்குற்றாலக் குறவஞ்சி என்பார். ஊர், குற்றாலம் என்பதே பண்டைய தலப் பெயர். திரு என்பது முன்னொட்டு சிறப்பு அடைமொழி.

குறவஞ்சி இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவனின் உலா, அதனைக் கண்ணுற்ற தலைவியின் மையல், அத்தலைவியின் வாட்டம் போக்கக் குறத்தி குறி சொல்லுதல், குறவன் குறத்தி ஊடல் - கூடல் முதலியன இடம் பெறும். இந்நூல் ஒரு

வகையில் நாடக இலக்கியம் வெண்பா, அகவல், விருத்தம் எனும் பாவினங்களால் பாடப்பெறும் சிந்து, கண்ணி என்பனவும் விரவி வரும்.

**"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**

**ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்"**

என்னும் தொல்காப்பியம். களவியல் 115 -ம் சூத்திரத்தால் குறி வகையின அடியொற்றி, பல புதிய மாறுபடுகளுடன் குறவஞ்சி என்னும் நாடக நூல் தோன்றிற்று என்கிறார் வித்துவான் சு.பாலசாரநாதன்.

'சங்க இலக்கியங்கள் அரசர்களையும் வள்ளல்களையும் பாடின சமய நூல்கள் கடவுளைப் பாடின. குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்கள் கடவுளையும் மனிதர்களையும் பாடின. குறவஞ்சி நூல்கள் பாமர மக்களை நினைவில் கொண்டு தோன்றின. எனவே குறவஞ்சி நூல் மக்கள் இலக்கியமாகும் என்கிறார் அவர். பெயர் உண்டாயிற்று என்று தோன்றுகிறது. குறவஞ்சி - குறமகள் என்பார் டாக்டர் உ.வே.சா.

பள்ளு எனும் சிற்றிலக்கியம் பள்ளர் இன மக்களைக் கொண்டது போலவே, குறவஞ்சி எனும் சிற்றிலக்கியம் குறவர் இன மக்களைக் கொண்டதாகும்.

**பிள்ளைத் தமிழ்**

குழந்தைகள் வாழ்வின் கவிதை என்பர்கள். அந்தக் குழந்தையையே கவிதையாக்குகிறது. பிள்ளைத் தமிழ் பெரியோர்களைக் குழந்தைகள் ஆக்கி, கவிதைக் கூண்டுக்குள் போட்டு விளையாடுகின்றது பிள்ளைத் தமிழ்

மனிதர்களுக்கும் தெய்வங்களுக்கும் இடையே உள்ள இணைப்புச் சங்கிலிகள் குழந்தைகள் என்பார்கள். ஆனால் குழந்தைப் பருவத்தைத் தெய்வத்தின் மேலேற்றி, கவிதைத் தேர் ஏற்றிப் பத்துப் பருவங்கள் ஆக்கி உலாவிடுகின்றன பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள்.

**பின்ளைத் தமிழ் இலக்கியத்தின் ஆணி வேர்**

**“குழவி மருங்கினும் கிளவ தாகும்”**

**(தொல்.புறம்.29)**

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தம் உரையில் குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியத்திலும் பிள்ளைத் தமிழின் வேர்கள் கிடக்கின்றன.

பட்டினப்பாலையில், “பொற்கால் புதல்வர் புரவியின் றுருட்டும் முக்கால் சிறுதேர்” என்று வருகிறது.

“மணற் சிற்றில் காலில் சிதையா அடைச்சிய சிறுபட்டி” கலித்தொகையில் வருகிறான்.

**“குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும்தொட்டும் கல்வியும் துழந்தும்**
**நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மழலைக் குழந்தையர் மன்னர்களையே மயக்கியிருந்தனர்”**

வாழ்வில் மட்டுமல்லாமல் பிரபந்தங்களுள் முதலில் உருப்பெற்றதும் பிள்ளைத் தமிழே என்பது தமிழறிஞர்கள் கருத்து.

பெரியாழ்வார் தம் திருமொழியில் கண்ணனின் பிள்ளையின் குறும்புகளைத் தோழியிடம் சொல்லிப் புலம்புவதாகக் கூறும் பாடல்களிலிருந்து பிள்ளைத் தமிழ் சிற்றிலக்கியமாக வடிவு கொள்ளத் தொடங்கிவிட்டது எனலாம்.

தெய்வங்கள், மக்களைப் பாட்டுடைத் தலைவராக்கி அவர்கள் மேல் குழந்தைமையை ஏற்றி, பத்துப் பருவங்களாக்கிப் பாடுகின்றன பிள்ளைத் தமிழ் நூல்கள்.

ஆண்பால், பெண்பால் பிள்ளைத் தமிழ்களாக அவை பிரிந்தன காப்பு முதலாக அம்புலி ஈறாக, வரும் பருவங்கள் பெண்பால் பிள்ளைத் தமிழுக்கும் உரியவை. ஆனால் ஈற்றில் வரும் சிறுபறை, சிற்றில், சிறுதேர் ஆகிய ஆண்பால் பருவங்களுக்கு

ஈடாகப் பெண்பால் பிள்ளைத் தமிழில் கழங்கு, அம்மானை, ஊசல் எனும் மூன்று பருவங்கள் கொள்ளப்படும்.

சில பிள்ளைத் தமிழ்களில் இப்பருவங்கள் வேறாக மாறுதலும் உண்டு மூன்று முதல் இருபத்தொரு திங்களில் பிள்ளைத் தமிழில் வரும் பத்துப் பருவங்களையும் அடக்கி உரைப்பர்.

**"மூன்று முதல் இருபத்தொன்றனுள் ஒற் றைப்**

**பெறுதிங்கள் தனிற் பிள்ளைக் கவியைக் கொள்ளே"**

என்பது சித்திரப் பாட்டியல் ஆசிரிய விருத்தங்களே பிள்ளைத் தமிழின் பாவகையாகும்.

கடவுளரை, ஞானிரை, அரசர்களை, குறுநில மன்னர்களைக் குழந்தையாகப் பாவித்துப் பாடும் இலக்கிய வகையே பிள்ளைத் தமிழ் ஆகும். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் பாடிய 'குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்' தமிழின் முதல் பிள்ளைத்தமிழ் இலக்கியமாகக் கருதப்படும். எனினும் பெரியாழ்வார் குலசேகர ஆழ்வார் பாடல்களில் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் வேர்களைக் கண்டடைய இயலும்.

1. நச்சினார்க்கினியரது தொல்காப்பிய உரையில் பிள்ளைத் தமிழில் அமையும் பருவங்களைக் காண முடிகிறது.
2. கி.பி. 7-ம் நூற்றாண்டிலிருந்து தோன்றி வளர்த்த பாட்டியல் இலக்கண நூல்களும் பிள்ளைத்தமிழுக்கு விரிவாக இலக்கணம் வகுத்துள்ளன.
3. பிள்ளைத்தமிழ், பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு என்றும் கூறப்பெறும்.

**கலம்பகம்**

கலம்பகம் என்னும் சொல்லுக்குப் பல்வகை கலந்த ஒரு கலவை என்பது பொருளாகிறது.

“கனிவண்டு மழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலத் தொடையல்” எனும் தெர்ணடரடிப் பொடியாழ்வார் வாக்கால் பன்னிறமுடைய, பன்மணமுடைய ஒருமாலை கலம்பகம் என்பது தெளிவாம்.

**கலம் + பகம் = கலம்பகம்**

**கலம் - 12 (மரக்கால் படி)**

**பகம் - அதனிற் பகுதி 6**

ஆக 18 உறுப்புக்களுடைய இலக்கியத் தொகுதி கலம்பகம் என்பதும் பொருந்துகிறது.

அகப்பொருள், புறப்பொருள் துறைகள், பாக்கள், பாக்களின் இனங்கள், மக்களில் பல்வகை இனங்கள், அவர் தம் தொழில்கள், அவர்கள் பண்புகள் - அத்தனையையும் கலந்து அகத்தே வைத்திருப்பதனால் இதற்குக் கலம்பகம் என்னும் பெயர் மிகப் பொருந்துவதாகவே தோன்றுகிறது.

கலம்பகங்கள் அகம், புறம் என இரு பிரிவுகளிலும் பாடப்பெறும் புய வகுப்பு, அம்மானை, ஊசல் முதலிய பதினெட்டு உறுப்புகள் கொண்டது. அந்தாதியாக அமைக்கப்பெறும்.

**பரணி**

பரணி இலக்கியம் ‘விருந்து’ எனும் தொல்காப்பிய இலக்கியப் பகுப்பில் அடங்கி, களவேள்வி, கொற்றவை நிலை, முன்தேர்க் குரவை எனும் புறத்திணையியல் துறைகளின் கூட்டுக் கலவையாக எழுந்ததாகும்.

**“போர்க்களத்தில் பரண் மீதமர்ந்து, களக்**

**காட்சியைப் பாடுவது பரணி”**

என்றும்,

**“அணிமணிகளை வைக்கும் செப்புக்குப்**

**பரணியெனும் பெயருண்மையால்**

**பல்வேறு கற்பனைகளும் சுவைகளும்**

**பாக்களும் சந்தங்களும் சேர்த்துவைத்திருக்கும்**

**நூல் பரணி"**

என்றும்,

**"பரணி நாளில் கூளிகள் காளிக்குக் கூழ் சமைத்துப் படைக்கும்**

**நிகழ்வால் பரணி"**

என்றும்,

**"பரணியிற் பிறந்து தரணியாள்வான் மேல் பாடுவது பரணி"**

என்றும்,

பல்வகைப் பெயர்க்காரணங்களைக் கொண்டிலங்குவது பரணியெனும் சிற்றிலக்கியமாகும்.

வெல்லப்பட்டார் தொடர்பால் பெயர் பெறுவது இதன் சிறப்புகளுள் ஒன்று. இரணியனை வென்றதால் இரணியவதைப் பரணி. கலிங்கத்தைக் கருணாகரத் தொண்டைமான் வென்றதால் கலிங்கத்துப் பரணி. தக்கனை வென்றதால் தக்கயாகப் பரணி, பாசத்தை வென்றதால் பாசவதைப் பரணி, மோகத்தை வென்றதால் மோக வதைப் பரணி என்று வெல்லப்பட்ட பெயர்களை வைத்தே பரணிகளுக்குப் பெயரிடப்பட்டிருக்கின்றன. கலிங்கத்துப் பரணி 13 உள்ளுறுப்புகளைப் பெற்றுள்ளது.

பரணி எனும் நாள்மீனையும் ஒருவேளை அறிந்திருக்கலாம். 'பரணி தரணி ஆளும்' என்றொரு வழக்கும் உண்டு. அந்த நட்சத்திரத்தில் பிறந்தவரைக் குறித்து. பரணி எனும் நட்சத்திரத்தின் தேவதைகள் காளியும் யமனும் ஆவார்கள். அந்த நாள்மீனால் அமைந்த பெயர்தான் இவ்வகை இலக்கிய நூலுக்கும் பெயராக அமைந்தது என்று டாக்டர். உ.வே.சாமிநாத ஐயர் கருதுகிறார். போர்க்கள அதிபதிகள் யமனும் காளியும் என்பதால் இவ்வாறு கருதக் காரணம் இருக்கும். பொதுவாக

மாவீரரைப் புகழ்ந்து பாடுவதைப் பரணி பாடுவது என்றார்கள். பெரும்போரை சாமான்ய மன்னர்கள் வெல்ல முடியாது. பரணியை சாமான்யப் புலவர்கள் பாடவும் ஏலாது.

**“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**

**மானவனுக்கு வகுப்பத பரணி”**

என இலக்கண விளக்கம் கூறும். அது பரணியின் இலக்கணம். கடும் போரில் ஆயிரம் யானைகளை உடைய எதிரிப்படையை வென்ற மன்னவர்மீது மட்டுமே பரணி பாடப்படுவது மரபு.

## 2. தனிப்பாடல்கள் அறிமுகம்

சற்றேறக்குறைய 17ஆம் நூற்றாண்டில் தொடங்கி 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலுமாக வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த பாத்திறம்மிக்க தமிழ்ப் பாவலர்களின் சுவை மிகு வாழ்வியல் நிகழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டு பிறந்த பாடல்களின் அணி வகுப்பு நூல் இது.

அகமும் புறமும் விரவிக் கலந்து இலக்கிய நயமும், இலக்கணச் செறிவும் போட்டியிட அவ்வக்காலத்துப் பேச்சுமொழி நடைபெய்து நவரசம் ததும்பச் சொற்சிலம்பம் ஆடிக்காட்டிய வித்தகர்களின் இலக்கிய விளையாட்டரங்கம் என்னும் பெற்றியுடையுது.

தனிப்பாடல் திரட்டின் தொகுப்பு வரலாறு - பெயர் அறியப்படாத பல பாடல்களின் ஆசிரியர்களது பெயர்களும், அவர்களது நூற்பெயர்களும் விளங்கத் தொகுத்த பாடல்களின் தொகை நூல் ‘புறத்திரட்டு’ எனும் பெயர் கொண்டமைவது. இது 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியிருக்கலாம் என்பது பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளையின் கருத்து. இதன் பின்னர்த் தோன்றிய திரட்டு ‘தமிழ்நாவலர் சரிதை’ என்பதாம்.

தனித்தன்மை மிக்க வெவ்வேறு பாடல்களின் தொகுப்புகளாக ‘தனிப்பாடல் திரட்டு’ எனும் பெயரில் வெவ்வேறு எட்டு நூல்கள் தஞ்சை சரசுவதி மகால் நூல்

நிலையத்தில் காணக் கிடைக்கின்றன. ‘பன்னூல் திரட்டு’ என்னும் பெயரில் இத்தகு நூலை வெளியிட்டவர் பாண்டித்துரைத்தேவர். அதே போல பேராசிரியர் மு. இராகவையங்காரும் ‘பெருந்தொகை’ எனும் பெயரில் நூல் வெளியிட்டிருக்கிறார்.

முறையூர் வள்ளல் சண்முகம் செட்டியார், கொட்டாம்பட்டிக் கருப்பையா பாவலரைக் கொண்டு தனிப்பாடல்களைத் தொகுக்க முனைந்தார். ‘தனிச் செய்யுட் சிந்தாமணி’ எனும் பெயரில் அத்தொகுப்பு நூல் இவர்கள் வழி வெளியிடப்பட்டது.

தனிப்பாடல்களின் தோற்றக் காரணங்கள் - “பேரரசுகள் மறைந்து குறுநிலமன்னர்களின் ஆட்சி மலிந்த அக்காலத்தே தமிழறியாத வேற்றுமொழி பேசும் அந்நியர்கள் பலரே தமிழகத்தின் வேந்தர்களாய் ஆட்சி புரிந்தனர். தமிழரசர்கள் தம்மரசு இழந்தனர். எனவே இக்காலப்பகுதியில் வாழ்ந்த கவிஞர்களில் பலர், காலத்தின் கோலத்திற்கேற்றாற் போல், சிறுசிறு இலக்கியங்களையே (பிரபந்தங்களையே) இயற்றினர். காளமேகம் போன்ற திறமைமிக்க கவிஞர்களும் கூடத் தம் புலமை வெளிப்படும் முறையில் புகழ்மிக்க நூல்களை உருவாக்கவில்லை. வசைகவி பாடுவதிலும், சிலேடை இயற்றுவதிலுமே காலத்தைக் கழித்துவிட்டனர்” என்று தனிப்பாடல் திரட்டுக் கவிஞர்களின் காலம் மற்றும் கருத்துக் குறித்து மதிப்பிடுகிறார் பேராசிரியர் எம்.ஆர்.அடைக்கலசாமி.

தனிப்பாடல்களின் தனித்தன்மைகள் - மன்னரவையிடத்தே மண்டியிட்ட தமிழ்க் கவியுலகு மக்களின் பக்கம் எழுந்தது. மக்களுள் கருணை நிறைந்த வள்ளல்களின் தண்மையில் தளிர்த்தது.அலைக்கழித்து அவமதித்தோரைச் சபித்தது. அன்பு காட்டியோரின் அபிலாஷையை நிறைவேற்றக் கோமாளி ஆட்டம் போட்டது. புதிய அறமும் பாடியது. முறம் பாடவும் அது மறந்ததில்லை. சொல்லப்போனால், பதிற்றுப்பத்தாகவும், கலம்பகம், உலா முதலியனவாகவும் உருப்பெற வேண்டிய வள்ளல்களின் வரலாற்றை ஒற்றைப் பாடலில் நிறைத்து வைத்தது மட்டுமின்றி சாமான்ய மனிதர்களையும் அவர்களின் ,யல்போடு கவிதைப்படுத்தியது.

கடவுளினும் பெரிய மனிதன் - எங்கும் நிறைந்த ,றைவனைத் துதிக்கும் மரபில் மாறாத இத்தொகுப்புக் கவிதைகள் மனிதர்களைக் பிளவுபடுத்தும் இறைவழிபாட்டு புராண, சமய பேதங்களை எள்ளி நகையாடுகின்றன. எல்லை மீறும்போது சீறியும் விழுகின்றன. வறட்டுத்தனமான போலிப்பக்தர்களின் மீது சித்தர் பாடல்களைப் போல வசைபாடவும் செய்கின்றன.

காளமேகப்புலவர் வைணவராயிருந்து காதலிக்காகச் சைவரானவர். அவர் ஒரு முறை திருக்கண்ணபுரத்துக் கோயிலில் மழைக்கு ஒதுங்கப் போனார். அங்கிருந்த வைணவர்களோ அவரை உள்ளே வரக்கூடாது எனத் தடுத்தனா. உடனேஅவர் “கன்னபுர மாலே கடவுளிலும் நீ அதிகம் உன்னிலுமோ யான் அதிகம் -“என்று பாடத் தொடங்கிவிட்டார். எல்லோருக்கும் திகைப்பு. கோபமும் கூட. புரிந்துகொண்டது போல் அனைவரும் ஏற்கும் படியாகப் பின் வரும்படி பாடி முடிக்கிறார் அவர்.“......... -முன்னமேஉன் பிறப்போ பத்தாம் உயர்சிவனுக்கு ஒன்றும் ,ல்லைஎன் பிறப்பு எண்ணத் தொலையாதே”என்பது அந்த வெண்பா. ஆச்சரியமான வெண்பா. இத்தகு உன்னத அறக்கருத்துகள் பலவற்றையும் வைத்துப் பாடிய புலவர்களின் படைப்புகள்.

இந்நூலுக்கு உயிராவன என்பதோடு, சொன்னது பலிக்கும்படி அறம்பாடிய பாவலர்களின் வரலாற்றுப்பாடல்களும் ,தனுள் உறைகின்றன என்பதும் இங்குக் கருதத்தக்கது.

பதுமத்தான் பண்ணிய பாவம் - மனித குலத்தை வாட்டும் பிணிகள் தலையாயது பசிப்பிணி என்பது மணிமேகலை வாக்கு. ‘பசி வந்திடின் பத்தும் பறந்து போம்’ எனப்பழமொழி கூறுவதை ஔவையார் பாடல் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது.

**“மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**

**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – தேனின்**

**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**

**பசிவந்திடப் பறந்துபோம்" (நல்வழி – 297).**

வசையும் வாழ்த்தும் - இத்தகு பிணிக்கு அருமருந்தாய் உணவிடுதலைப் புண்ணியம் எனக் கருதிச் சத்திரங்களைக் கட்டிச் சமைத்தளித்தனர் முன்னோர். அப்படியான சத்திரம் ஒன்று நாகப்பட்டினத்தில் இருந்தது. அங்கே காளமேகம் அலைந்து திரிந்து பசியோடு வந்து சேர்ந்தார். அசட்டைத் தனத்தோடு இரவு முழுக்கச் சோறாக்கி விடிகிற பொழுதில் பரிமாற வந்த சத்திரக்காரனை நோக்கிச் பின்வருமாறு சபிக்கிறார்.

**"கத்துகடல் சூழ்நாகைக் காத்தானின் சத்திரத்தில்**

**அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி**

**உலையில்,டஊர்அடங்கும் ஓர் அகப்பை அன்னம்**

**இலையில் இடவெள்ளி எழும்".**

வசைப்பாடல்களைக் கேட்டுப் பயந்து வணங்கிய அச்சத்திரக்காரனின் வேண்டுகோளுக்கு இணங்கி இசைப்பாடலாகவும் அதனையே பாடிக் காட்டியவர் காளமேகம்.

வசைப்பொருளாவது: ஒலிக்கும் கடல் சூழ்ந்த நாகப்பட்டினத்தில் உள்ள "காத்தான்" என்பவனின் சத்திரத்தில் அத்தமிக்கும் போது, சூரியன் மறையும் போது அரிசி வரும் அதனைக் குத்தி (கொழித்து) உலையில் இடும்போது ஊர் அடங்கும்(நள்ளிரவாகும்) வெந்த பின்னர் ஓர் அகப்பைச் சோறு உலையில் இடும்போது(விடிவெள்ளி) முளைத்து விடும் என்பதாகும்

இசைப்பொருளாவது: அச்சத்திரத்தில் அத்தமிக்கும் போது – பஞ்சம் வரும் போதும் தடையில்லாமல் அரிசி வரும். ஊரடங்கும் என்றால் ஊரவர்களும் உலகத்தவர்களும் அதனை உண்டு பசி அடங்குவார்களே. ஓர் அகப்பை அன்னம் இலையில் இடும்போது அச்சோற்றின் வெண்மை நிறம் கண்டு வெள்ளியானது தோற்றுவிடும் என மாற்றம் கொண்டு விடுகிறது.

வாழ்க்கையைப் போலவே– போலித்தனமான வாழ்க்கைச் சடங்குகளையும், வறட்டு டாம்பீகத்தையும் உதறித்தள்ளி மனிதவுணர்வுகளை இயல்பாக்கிப் பாடுவன தனிப்பாடல்கள். காமம் மிக்குத் துயர்படும் தலைவியின் உளப்பாங்கை அகமரபில் தனிக்காவியமாக வேண்டிய பொருளை ஒற்றைப் பாடல்களில் உணர்த்தும் பாடல்கள் உண்டு. பொருள்கோள் முறையில் இலக்கணச் சான்றுக்குச் சாலப் பொருந்தும் வகையில் வாழ்வியலாகும் பாடல்களும் உண்டு. சொல்விளையாட்டு, பொருள் விளையாட்டு வைத்துக் கண்ணாமூச்சி காட்டும் குறும்பாக்களும் உண்டு. வாழ்க்கையைப் போல அனைத்தும் நிரம்பி வழிகிற துறையாக இத்தனிப்பாடல்கள் திகழ்வது அழகு.

தனிப்பாடல் உலகின் தமிழ்நேயம் - தமிழில் தோன்றிய ,ப்பாடல்கள் தமிழின் சிறப்பையும், தமிழர்தம் வாழ்வியலையும் பேசுகிறது. தமிழ்வாணியைத் துதிக்கிறது. தமிழின் செம்மைக்காகப் போலிப்புலவர்களைத் தண்டித்த புலவர்களைப் பாடுகிறது.

**“குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இல்லை**
**குறும்பி அளவாய்க் காதைக் குடைந்து தோண்டி**
**எட்டினமட்டும் அறுப்பதற்கோ வில்லி இல்லை:**
**இரண்டொன்றாய் தலை இறங்கப் போட்டு**
**வெட்டுதற்கோ கவிஒட்டக்கூத்தன் இல்லை**
**விளையாட்டாய்க் கவிதைகளை விரைந்துபாடித்**
**எட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு**
**தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே!”**

என்று பாடுகிறார் படிக்காசுத் தம்பிரான். சிதம்பரத்திலே படிக்காசு பெற்ற காரணத்தினால் இப்பெயர் பெற்ற இவரது இயற்பெயர் அறியமுடியாதது.சங்க இலக்கியப் புலவரை நினைவுகூர வைக்கிறது.

தவணை முறையில் கவிதை வியாபாரம் - புத்திசாலித்தனமாகப் பாட்டை விறுறுப் பணம் சம்பாதிக்கிற புலவர்களும் அக்காலத்தே இருந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்று கம்பர் தம் தனிப்பாடல் (இவரும் இராமாயணம் பாடிய கம்பரும்

வேறாயிருத்தல் வேண்டும்). ஆயிரம் பொன் எனத் தன் வெண்பாவிற்கு விலை வைத்த இவரது பாடல் தன் மீது வேண்டுமென விரும்பி வந்தாள் சிலம்பி எனும் தாசி. அவளிடம் இருந்ததோ ஐநூறு பொன். புலவரோ தனது விலை குறைக்கத் தயார் இல்லை. இருவருக்குமிடையில் ஓர் ஒப்பந்தம். முழுமை செய்து தரப்பெறும் என்பதாக. ஆக, தவணை முறையில் ஒரு கவிதை வியாபாரம் பாடல் தொடங்குகிறது.

**"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே**

**மண்ணாவதும் சோழ மண்டலமே"**

தமிழின் சொத்துக்கள் - இப்படி தனித்தனியே நோக்க ஒரு சிறுகதை போலும், இணைத்துப் பார்க்கக் காவியம் போலும்(புதினம் போலவும்) துவங்கி வாழ்வின் பலப்பல பரிமாணங்களையும் தரிசனப்படுத்துவன தனிப்பாடல்கள். இவ்வகையில் தமிழ் நாவலர் சரிதை சாஸதை 'தமிழ்க்கவி சரிதம்' ஆகியனவும் சேர்க்கப்படலாம்.

## 3. இக்கால இலக்கியம்

### தோற்றமும் வளர்ச்சியும்

மரபுக்கவிதை காலத்தால் முந்தியது. பல்வேறு இலக்கிய நூல்களாக இருபது நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தழைத்து விளங்கும் சிறப்புடையது. புதுக்கவிதை, கடந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிச் செழிக்கத் தொடங்கியது. இக்கவிதைகளின் தோற்றம், பெயர்க்காரணம், நோக்கம், நூல்கள், படைப்பாளர்கள், வளர்ச்சி, இன்றைய நிலை ஆகியன குறித்து இங்குக் காண்போம்.

### தோற்றம் - மரபுக்கவிதை

நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகவும் தொன்மையானதாக விளங்குவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூல் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப் பெறுகின்றது. இதற்கும் முந்தையனவாக இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. அவ்விலக்கண நூல்கள் 'எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவது போல' இலக்கியத்திலிருந்து இலக்கண நூல்கள் ஏற்படுகின்றன என்னும் விதிக்கு

இணங்க, தமக்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டு இலக்கணம் வகுத்தனவாகும். இலக்கண நூல்களில் செய்யுள் தொடர்பான எழுத்து, சொல், அகம்-புறம் என்னும் பாடுபொருள் குறித்த செய்திகள், யாப்பு, அணி ஆகியன பற்றிய வரையறைகள் இடம் பெற்றிருக்கும். எனவே இவற்றைக் கருதிப் பார்க்கும்போது, செய்யுள் என்னும் கவிதை வடிவம் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக்காலத் தொன்மையுடையது என உறுதிபடக் கூறலாம்.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியன குறித்த இலக்கணங்களைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. இறையனார் களவியல் உரையில் மறைந்து போன சங்க நூல்களின் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை ஆகிய தலைச் சங்க நூல்களும், கலி, குருகு, வியாழமாலையகவல், வெண்டாளி ஆகிய இடைச் சங்க நூல்களும் அவ்வகை நூல்களுள் அடங்கும். சிற்றிசை, பேரிசை என்பன கடைச்சங்கத்தில் இருந்து மறைந்தவற்றுள் அடங்கும். ‘மறைந்துபோன தமிழ்நூல்கள்’ என மயிலை சீனிவேங்கடசாமி, இவ்வகை நூல்கள் குறித்துத் தனியொரு நூலே எழுதியுள்ளார். அவற்றின்வழி மரபுக்கவிதையின் தொன்மையை நன்கு அறியலாம்.

**“தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்**
**சூழ்கலை வாணர்களும் - இவள்**
**என்று பிறந்தவள் என்றுண ராத**
**இயல்பின ளாம்எங்கள் தாய்”**

எனப் பாரதியார் பாடும் பாடல், மரபுக்கவிதையின் காலத் தொன்மைக்கும் பொருந்தக் கூடியதாகும்.

## பாரதியார்

சின்னசுவாமி சுப்பிரமணிய பாரதி (திசம்பர் 11, 1882 – செப்டம்பர் 11, 1921) ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவரைப் பாரதியார்என்றும் மகாகவி என்றும் அழைக்கின்றனர்.

பாரதி, தமிழ்க் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு, நவீனத் தமிழ்க்க் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதிமறுப்பு, பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். எட்டப்ப நாயக்கர் மன்னர் இவருடைய கவித்திறனை மெச்சி, பாரதி என்ற பட்டம் வழங்கினார். பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949 ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.

**"தேடிச் சோறு நிதந் தின்று**
**பல சின்னஞ் சிறு கதைகள் பேசி**
**மனம் வாடித் துன்பமிக உழன்று**
**பிறர் வாடப் பல செயல்கள் செய்து**
**நரை கூடிக் கிழப்பருவம் எய்தி**
**கொடுங் கூற்றுக் கிரை யெனப்பின் மாயும்**
**பல வேடிக்கை மனிதரைப் போலே**
**நான் வீழ்வே னென்று நினைத்தாயோ?"**

## பாரதிதாசன்

பாரதிதாசன் (ஏப்ரல் 29, 1891 – ஏப்ரல் 21, 1964) பாண்டிச்சேரியில் (புதுச்சேரியில்) பிறந்து பெரும் புகழ் படைத்த பாவலர். இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம். தமிழாசிரியராக பணியாற்றிய இவர், சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர்என்றும் பரவலாக அழைக்கப்படுபவர். இவர் குயில்என்னும் கவிதை வடிவில் ஒரு திங்களிதழை நடத்தி வந்தார்.

**சிரித்த முல்லை**

**"மாலைப் போதில் சோலையின் பக்கம்**

**சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது.**
**வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது.**
**வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்.**
**சோலை நடுவில் சொக்குப் பச்சைப்**
**பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து**
**குலுக்கென்று சிரித்த முல்லை**
**மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சிகொண்டேனே!"**

என்று தான் ரசித்த இயற்கை காட்சியை மனக்கண்முன் படிமம் காட்சியாக்கி கவிஞர் பாடியுள்ள பாங்கு சிறப்புக்குரியது.

## நாமக்கல் கவிஞர்

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை (அக்டோபர் 19, 1888 – ஆகஸ்ட் 24, 1972) தமிழறிஞரும், கவிஞரும் ஆவார். "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" போன்ற தேசபக்திப் பாடல்களைப் பாடிய இவர் தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றியவர். முதலில் பால கங்காதர திலகர் போன்றவர்களின் தீவிரவாதத்தால் ஈர்க்கப்பட்ட இவர் மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஆட்கொள்ளப்பட்ட பின் அறப் போராட்டத்தால் மட்டுமே விடுதலையைப் பெறமுடியும் என்ற முடிவுக்கு வந்தவர். இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி இருந்ததால் இவர் காந்தியக் கவிஞர் என வழங்கப்படுகிறார்.

**"கத்தி யின்றி ரத்த மின்றி**
**யுத்த மொன்று வருகுது**
**சத்தி யத்தின் நித்தி யத்தை**
**நம்பும் யாரும் சேருவீர்'"**

என்று அகிம்சை வழியில் காந்தியடிகள் நடத்திய அறப்போராட்டத்தை பாடியுள்ளார்.

## சுரதா

சுப்புரரத்திதாசன் எனப்படும் சுரதா இவரின் இயற்பெயர் : இராசகோபாலன். தஞ்சை மாவட்டம் பழையனூரில், திருவேங்கடம். சண்பகம் அம்மையார் தம்பதியின் மகனாக ஜனவரி 23, 1921 அன்று பிறந்தார்.

### சுரதாவின் சிறப்பப் பெயர்கள்

பாரதிதாசன் மீது கொண்ட பற்றிக் காரணமாக சுப்புரத்தினதாசன் என தன் பெயரை மாற்றிக்கொண்டார். உவமைக் கவிஞர் (ஜெகசிற்பியன்), கவிஞர் திலகம் (சேலம் கவிஞர் மன்றம்), தன்மானக் கவிஞர் (மூவேந்தர் முத்தமிழ் மன்றம்). கலைமாமணி (தமிழக இயலிசை நாடக மன்றம்), கவிமன்னர் (கலைஞர் கருணாநிதி).

**”எண்ணெயில் குளித்த கூந்தல்**
**இழையென நீண்டு பெய்யும்**
**வெண்மழை நீரே! விண்ணின்**
**வியர்வையே வாழ்க!**
**வீணையின் நரம்புகோல் வீழும் மழைநீர்**
**தாவரங் கட்கெல்லாம் தாய்ப்பா லாகும்!**
**மேகத்தின் சிரிப்பை மின்னலாம்! அந்த**
**மேகம் வழிக்கும் வியர்வையே மாயாம்!**
**புல்லுக்கும் பூண்டுக்கும் மழையே புணர்ச்சிநீர்!**
**எள்ளுக்கும் கொள்ளுக்கும் அதுவே வளர்ச்சிநீர்!”**

என்று இயற்கைமீது கொண்ட ஈடுபாட்டை கவிதைகளாகப் புனைந்துள்ளார்.

## முடியரசன்

இவரது இயற்பெயர் துரைராசு. மதுரை அடுத்துள்ள பெரியகுளத்தில் சுப்பராயலு, சீதாலட்சுமி அம்மையாருக்கு மகனாக அக்டோபர் 7. 1920ஆம் ஆண்டு பிறந்தார். வீறுகவியரசர் என்று புகழப்பட்டார்.

**”செலவழித்துப் பெற்றாலும் இயற்கைமணம்**

**சேர்க்காற்றைப் பெற்றிட்டாலும்**

**இலவழித்த பஞ்சணையார் மென்காற்றில்**

**இழைத்திருக்கும் சுகத்தை எள்ளின்**

**அலகனைத்தும் அறிவாரோ? சுரங்கத்தில்,**

**ஆலைகளில், உலைக்களத்தில்**

**பொலபொலக்க உடல்வியர்க்க உழைப்பவரே பொலி**

**நலத்தைக் காண்பா ராவர்"**

என்று உழைப்பின் மேன்மையை கவிஞர் பாடியுள்ளார்.

**முடியசரன் படைப்புகள்**

முடியரசன் கவிதைகள் (தமிழ்நாடு அரசு பரிசு), காசியப்பாவை, கவியரசில் முடியரசன், தமிழ் இலக்கணம்,வீரகாவியம் (தமிழ்நாடு அரசு பரிசு ), பாடுங்குயில், நெஞ்சு பொறுக்கவில்லையே, மனிதனைத் தேடுகிறேன், தமிழ் முழக்கம், நெஞ்சிற் பூத்தவை, ஞாயிறும் திங்களும், வள்ளுவர் கோட்டம், புதியதொரு விதி செய்வோம். தாய்மொழி காப்போம் மனிதரைக் கண்டு கொண்டேன்.

**வாணிதாசன்**

பாண்டிச்சேரி அருகே வில்லியனூரில் ஜூலை 22, 1895 அன்று அரங்க. திருக்காமு, துளசியம்மாள் ஆகியோருக்குப் மகனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ரங்கசாமி. பாண்டிச்சேரி அரசில் மேயராக இருந்த வாணிதாசனின் தாத்தாவின் பெயர் அது. அதை அழைக்கமுடியாதென்பதால் எத்திராசலு என அழைக்கப்பட்டார். இவரது கவிதை,

**"உருவினில் ஊருவந்த**

**ஒளியெல்லாம் ஒருநொடிக்குள்**

**மறுவிய வண்டால் உந்தன்**

**முகத்தினில் வழிந்துபாயும்**

**பெருமையில் ஒருநாள் வாழ்ந்தால்**

**பிரிவினை உணர்ந்தாய் பின்னர்**

**வருமந்தச் சுரம்பரென்று**

**வழிபார்த்தாய் அந்தோ! பேதை!”**

என்று வாடிய மலரை கண்டு கவிதை பாடியுள்ளார்.

## கண்ணதாசன்

கண்ணதாசன் (ஜுன் 24 1927 அக்டோபர் 17 1981) புகழ் பெற்றதமிழ்த் திரைப்படப்பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், நவீனங்கள், கட்டுரைகள் பல எழுதியவர். சண்டமாருதம், திருமகள், திரை ஒலி, தென்றல், தென்றல்திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர்.சாகித்ய அகாதமி விருதுபெற்றவர்.

**”தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது**

**யூத நிலத்தினிலே!**

**சத்திய வேதம் நின்று நிலைத்தது**

**தாரணி மீதினிலே!**

**எத்தனை உண்மை வந்து பிறந்தது**

**இயேசு பிறந்ததிலே!**

**இத்தனை நாளும் மானிடன் வாழ்வது**

**இயேசுவின் வார்த்தையிலே!**

**மண்ணிடை இயேசு மறுபடி வருவார்**

**என்பது சத்தியமே!**

**புண்கள் இருக்கும் வரையில் மருந்து**

**தேவை நித்தியமே!**

**விண்ணர சமையும் உலகம் முழுதும்**

**இதுதான் தத்துவமே!**

**எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே**

**இயேசுவை நம்புவமே!**

என்று இயேசு காவியத்தில் இறைவனின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று பாடியுள்ளார்.

## புதுக்கவிதை

பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை தமிழ் இலக்கிய வடிவம் என்பது செய்யுள் வடிவமாகவே இருந்தது. இந்நூற்றாண்டில் மேலைநாட்டில் பழைய யாப்பு உருவத்திலிருந்து விலகி, இயைபுத் தொடை (Rhyme) முதலியன இன்றி உரைநடைச் சாயலில் புதிய கவிஞர்கள் கவிதை படைக்கத் தொடங்கினர். 1892 -இல் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் புல்லின் இலைகள் என்ற தலைப்பில் வெளியிட்ட பன்னிரண்டு கவிதைகளைக் கொண்ட தொகுப்பு, யாப்பு மரபைப் புறக்கணித்து.'.ப்ரீவெர்ஸ் (Free verse) என்னும் வசன கவிதையாக அமைந்தது. அவர்தம் பாடுபொருளும் பிறர் இதுவரையில் பேசாப் பொருளாக அமைந்தது. இவரை அடியொற்றி எமர்சன், கார்ல் சான்ட்பெர்க், லின்ட்ஸே, வாலெஸ் ஸ்டீவன்ஸன், ஸ்டீவன் கிரேன், அமி லோவல் போன்ற எண்ணற்ற கவிஞர்கள் வசன கவிதை படைக்கலாயினர்.

பிரெஞ்சு நாட்டிலும், ரிம்பாடு என்னும் இளங்கவிஞர், 1886ஆம் ஆண்டு ஒளி வெள்ளம் என்னும் தலைப்பில் வெர்ஸ் லிப்ரே என்ற கட்டற்ற கவிதைகளைப் படைத்தார். இவரையடுத்து 1889 -இல் வியல் கிரிப்பின் என்பவர் கட்டற்ற கவிதை என்ற அறிவிப்புடன் தம் கவிதைகளை வெளியிட்டார்.

இத்தாலி, ஸ்பானிஷ், செர்மன், ருஷ்ய மொழிகளின் இலக்கண மரபுகளிலும் நெகிழ்ச்சியும் மாற்றமும் ஏற்படத் தொடங்கின. ‘விட்மனின் பாடலில் எதுகை, மோனை, தளை எதுவுமே இருக்காது வசன நடை போலவே இருக்கும் கவிதையைப் பொருளில் காட்ட வேண்டுமே யொழியச் சொல்லடுக்கில் காட்டுவது பயனில்லை எனக்கருதி வசன நடையிலேயே அவர் எழுதிவிட்டார்’ என்பார் மகாகவி பாரதியார். மரபுக் கவிதையில் வல்லவரும் தம் பல்வேறு பாடல்களை அதிலேயே படைத்தவருமாகிய பாரதியார்

வசன கவிதையில் விருப்புற்றவராகத் தாமும் காட்சிகள் என்னும் தலைப்பில் பல வசன கவிதைகளைப் படைத்துள்ளார்.

பாரதியைத் தொடர்ந்து ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் போன்றோர் புதுக்கவிதை படைக்கலாயினர்.

புதுக்கவிதைகள், பத்திரிகைகளில் வெளியிடப் பெற்றுப் படிப்படியாகச் செல்வாக்குப் பெற்றன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

காலம் என்னும் பாதையில் கவிதை என்னும் ஊர்தி பன்னெடுங்காலமாகவே ஊர்ந்து வந்துகொண்டிருக்கிறது. மரபுக்கவிதை என்னும் பெயர் கடந்து புதுக்கவிதை என்னும் பெயர் பெற்று நாளை ஏதோ ஒரு பெயர் தாங்கி ஊர்ந்து கொண்டுதான் இருக்கும்.பழந்தமிழர்கள் வெண்பா, ஆசிரியம், வஞ்சி, கலிஇபரி என பல பாவடிவங்களைக் கையாண்டனர். இவ்வாறு மாறிய வடிவங்கள் புதுக்கவிதையாக மாறிய சூழலை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**புதுக்கவிதைக்கான இலக்கணம்**

- புதிதாகப் பிறக்கும் இலக்கியத்தை, ‘விருந்து’ எனப் பெயரிட்டு வரவேற்றார்

  தொல்காப்பியர்

- பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று

  உரைத்தார் நன்னூலார்

  இலக்கணச் செங்கோல்

  யாப்புச் சிம்மாசனம்

  எதுகைப் பல்லக்கு

  தனிமொழிச் சேனை

  பண்டித பவனி

இவை எதுவுமில்லாத

கருத்துக்கள் தம்மைத் தாமே

ஆளக் கற்றுக்கொண்ட புதிய

மக்களாட்சி முறையே புதுக்கவிதை

எனப் புதுக்கவிதைக்கான இலக்கணத்தை எடுத்துரைப்பார் கவிஞர் மு.மேத்தா.

**புதுக்கவிதையின் தோற்றம்**

புதுக்கவிதையின் தோற்றத்துக்கு உரைநடையின் செல்வாக்கு, மரபுக்கவிதையின் செறிவின்மை, அச்சு இயந்திரம் தோன்றியமை, மக்களின் மொழிநடையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியன அடிப்படைக் காரணங்களாகும்.

- ஆங்கிலப் புதுக்கவிஞர் எஸ்ரா பவுண்டு ‘புதிதாக்கு’ (Make it New) என ஒரு கட்டளைச் சொற்றொடரைப் பிறப்பித்தார்.
- “சுவை புதிது பொருள்புதிது வளம்புதிது சொல்புதிது சோதிமிக்க நவகவிதை” என்றார் பாரதி.

Free Verse என்ற கவிதை அமைப்பும் ஆங்கிலத்தில் இருந்தது. பிரான்சின் போதலேர், ரிம்போ, மல்லார்மே ஜெர்மனியின் ரில்கே, அமெரிக்காவின் வால்ட் விட்மன், இங்கிலாந்தின் எஸ்ரா பவுண்டு T.S..எலியட் போன்றோரின் முயற்சிகளால் புதுக்கவிதை பிறந்தது. தமிழில் இம்முயற்சிகள் தொடங்கப்பட்ட போது முதலில்‘வசன கவிதை’ என்றும் பின்னர் ‘சுயேச்சா கவிதை’ ‘இலகு கவிதை’ ‘விடுநிலைப்பா’ என்றும், “கட்டிலடங்காக் கவிதை“ என்றும் அதன் பின்னர்ப் புதுக்கவிதை என்றும் வழங்கப்பட்டன.

**புதுக்கவிதையின் வளர்ச்சி**

வால்ட் விட்மனின் “புல்லின் இதழ்கள்” என்ற புதுக்கவிதையைப் படித்திருந்த பாரதி அதைப் போலத் தமிழிலும் புதுமை படைக்கவேண்டும் என்றஆர்வத்தால்

காட்சிகள் என்ற தலைப்பில் புதுக்கவிதை எழுதினார். அதற்கு அவர் இட்ட பெயர் "வசன கவிதை" என்பதாகும். பாரதி வழியில் ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராசகோபலன், வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன், போன்றோர் புதுக்கவிதைகளைப் படைத்து தமிழ்ப்புதுக்கவிதைகளை வளர்த்தனர்.

**புதுக்கவிதை வளர்ந்த மூன்று காலகட்டங்கள்**

1. மணிக் கொடிக் காலம்
2. எழுத்துக் காலம்
3. வானம்பாடிக் காலம்

ஆகிய காலகட்டங்களில் தோன்றிய தமிழ் இதழ்கள் புதுக்கவிதைத் துறைக்குப் பொலிவூட்டின.

**1. மணிக்கொடிக் காலம்**

மணிக் கொடிக் காலத்தில் மணிக்கொடி என்ற இதழ் மட்டுமன்றிஇ சூறாவளி, காலமோகினி, கிராமஊழியன், சிவாஜிமலர், நவசக்தி, ஜெயபாரதி ஆகிய இதழ்கள் புதுக்கவிதைகளை வெளியிட்டுவந்தன. இவற்றுள் மணிக்கொடி இதழ் முதலில் தோன்றியதால் இக்காலத்தை மணிக்கொடிக் காலம் என்று அழைத்தனர். இக்காலத்தில், புதுக்கவிதை முன்னோடிகளான ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராசகோபாலன், க.நாசுப்பிரமணியன், புதுமைப்பித்தன் போன்றோர் மணிக்கொடி காலத்துக் கதாநாயகர்களாக விளங்கினர்.

**2. எழுத்துக் காலம்**

எழுத்து, சரஸ்வதி, இலக்கிய வட்டம், நடை, தாமரை, கசடதபற, போன்ற இதழ்கள் இக்காலகட்டத்தில் புதுக்கவிதையை வளர்த்தன .ந.பிச்சமூர்த்தி ஆரம்பித்து வைத்த புதுக்கவிதை இயக்கம், எழுத்து இதழில் தொடர்ந்தது. மயன், சிட்டி, வல்லிக்கண்ணன், ஆகியோர் ஒன்றுசேர்ந்து சி.சு.செல்லப்பா, க.நாசுப்பிரமணியன் போன்றோர் இக்காலத்துக்கு சிறப்பு சேர்த்தனர்

**3. வானம்பாடிக் காலம்**

வானம்பாடி, தீபம், கணையாழி, சதங்கை முதலிய இதழ்கள் இக்காலத்தில் புதுக்கவிதைக்கு முன்னுரிமை தந்து வெளியிட்டன. புவியரசு, ஞானி, முல்லைஆதவன், அக்கினிபுத்திரன், சிற்பி, கங்கை கொண்டான், தமிழ்நாடன், சக்திகனல், மு.மேத்தா, தமிழன்பன், ரவீந்திரன் முதலியோர் வானம்பாடிக் கவிஞர்களாவர்.

**ந.பிச்சமூர்த்தி**

ந. பிச்சமூர்த்தி (நவம்பர் 8, 1900 – டிசம்பர் 4, 1976) அண்மைய தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர். தமிழ்ப் புதுக்கவிதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் பிச்சமூர்த்தி. தத்துவார்த்தம் பிணைந்த கதை சொல்லும் பாணியினை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் பிச்சமூர்த்தி. வழக்கறிஞர் பட்டம் பெற்றுப் பணியாற்றிய பிச்சமூர்த்தி, இந்து அறநிலையத்துறை அதிகாரியாகவும் பணியாற்றியவர். இவரின் படைப்புகள் அனைத்தும் நாட்டுடமையாக்கப்பட்டுள்ளன.ஜ1ஸ நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளனஸ.

**"பிறவி இருளை துளைத்து**
**சூழ்வின் நிழலை வெறுத்து முகமுயர்த்தி**
**எப்படி விண்ணினின்று வழியும் ஒளியமுதைத் தேடிப்போகிறது.**
**ரவியின் கோடானுகோடி விரல்களின் அழைப்புக்கிணங்கி**
**எப்படி உடலை நெளித்து நீட்டி வளைந்து வளருகிறது!**
**என்று சித்திரப்படுத்தும் ந. பி.**
**முண்டி மோதும் துணிவே இன்பம்**
**உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி"**

என்று உயிரின் முயற்சிப் பற்றியும் சூரியனின் கதிர்களால் உயிர்கள் வளர்தல் பற்றியும் அறிவியலும் தத்துவமும் கலந்ததாக புதுக்கவிதை படைத்துள்ளார்.

## புதுமைப்பித்தன்

1906 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 25 ஆம் தேதி திருநெல்வேலியில் சொக்கலிங்கம் பிள்ளை பருவதத்தம்மாளின் மகனாக திருபாதிரிப்புலியூரில் பிறந்தார். இவர் சிறுகதை எழுத்தாளர் மட்டுமல்ல நல்ல கவிஞர்கூட என்பதற்கு கீழ்க்காணும் கவிதை சான்றாக அமையும்.

**"ஓகோ, உலகத்தீர், ஓடாதீர்!**
**சாகா வரம் பெற்ற,**
**சரஸ்வதியார் அருள்பெற்ற**
**வன்னக் கவிராயன் நானல்ல,**
**உன்னிப்பாய்க் கேளுங்கள், ஓடாதீர்!**
**வானக் கனவுகளை**
**வக்கணையாச் சொல்லும்**
**உண்மைக் கவிராயன் நானல்ல.**
**சத்தியமாய்ச் சொல்லுகிறேன்**
**சரஸ்வதியார் நாவினிலே**
**வந்து நடம்புரியும்**
**வளமை கிடையாது!"**

என்று தன்னை கவிஞன் என்று எண்ண வேண்டாம் என்னும் தொணியில் அங்கதச் சுவையுடன் பாடியுள்ளார்.

## வல்லிக்கண்ணன்

சுப்ரமணிய பாரதியிலிருந்து, அவருக்குப்பின் வளர்ந்து செழித்த தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றை, ஒரு சிறந்த கட்டுரை நூலாக தமிழ் இலக்கியத்தில் பதித்த ஆளுமை வல்லிக்கண்ணன். நா.பார்த்தசாரதி தான் நடத்தி வந்த "தீபம்"

இலக்கிய இதழில் இதனை ஒரு கட்டுரைத் தொடராக 1977இல் வல்லிக்கண்ணனை எழுதவைத்தார். 1978இல் சாகித்ய அகாடமி வல்லிக்கண்ணனுக்கு "புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்" என்கிற இந்நூலுக்காக விருது வழங்கி கௌரவித்தது.

2006 -இல் மறைந்த வல்லிக்கண்ணன் சிறுகதை,நாடகம், நாவல் என நிறைய எழுதியிருக்கிறார். எனினும் தன் கட்டுரை நூல்கள் சிலவற்றிற்காகக் கவனிக்கப்பட்டவர். பாரதி, ந.பிச்சமூர்ச்சி, கு.ப.இராஜகோபாலன் ஆகியோரின் தாக்கத்தில் இளம் வயதிலிருந்தே கவிதைகளை எழுதி வந்தவர். எழுத்தாளர் சி.சு.செல்லப்பாவின் "எழுத்து" இலக்கிய இதழில் இவரது புதுக்கவிதைகள் வெளிவந்தன.

## தருமு சிவராம்

இவரது இயற்பெயர் சிவராமலிங்கம். காலம் : 20.04.1939-06.01.1997, இவர் இலங்கையில் பிறந்தவர். பிரமிள் என்ற பெயரில் கவிதைகள் எழுதி வந்தார். இவர் இயற்றிய நூல்கள்: லங்காபுரி ராஜா, வெயிலும் நிழலும். விருதுகள் : புதுமைப்பித்தன், புதுமைப்பித்தன் வீறு.

**"முதல் முகத்தின் தங்கைக்கு துடித்து**
**அன்று விழுந்த பகலை மீண்டும்**
**மிதித்து நடப்பவளே!**
**கொலுசு சூழாத நிசப்தத்தில் நின்**
**வெண்பாதச் சதைகள் மெத்திட்ட**
**புல்தரையைக் கவனி!**
**உன்முன் சென்றவள் என்னை**
**உதறிச் சிந்திய சுவடுகள்!**
**அழுதழுது புரளும் என்**
**மன வெறுமையிலே**
**ஏழுவண்ணப் புதிர்கள்**
**அவிழ எனவா நின்**

**ஒருதுளிப் பார்வை? அல்ல**

**தோற்றழியும் என் தவிப்பை**

**என் உடலின் இலைநரம்புகள்**

**உள்ளூரப் பரிகசித்துச்**

**சிரிக்க என் முகம்தேடி**

**பார்க்க நிமிர்ந்தனையோ?**

**உயர்ந்து வளர்ந்த சின்னவளே**

**அண்ணாந்து என் மாடியைப் பார்ப்பதேன்?"**

என்ற கவிதை வரிகள் தலைவியை நோக்கும் தலைவனின் எண்ண ஓட்டமாய்த் திகழ்கின்றது.

### சி.மணி

இவரது இயற்பெயர் எஸ்.பழனிசாமி சி.மணி, வே. மாலி என்னும் புனைப்பெயர்களில் கவிதை எழுதி வந்தார். இவர் ஆங்கிலப் பேராசிரியர். இரு முறை தமிழ்ப்பல்கலைக்கழகப் பரிசு பெற்றவர். ஆசான் கவிதை விருது, கவிஞர் சிற்பி விருது, "விளக்கு "இலக்கிய விருது பெற்றுள்ளார்.

**இவரது படைப்புகள்**

"வரும் போகும்", "ஒளிச் சேர்க்கை", "இதுவரை", "நகரம்", "பச்சையின் நிலவுப் பெண்", "நாட்டியக்காளை", "உயர்குடி", "அலைவு", "குகை","தீர்வு", "முகமூடி", "பழக்கம்", "பாரி".

சி.மணியின் கவிதைகள் பொதுநிலைச் சார்பாக இருப்பினும் சமூகத்தை **பிரதிபலிப்பவையாக இருந்து வந்துள்ளன.**

**"ஏனிந்த வாழ்வென்னும்**

**வளர் குழப்பம்**

**முகமயிராய்க்**

**கவலையின்றிக்**

**கூட்டு வட்டிக்**

**கடனாய் வளர் குழப்பம்” (எழுத்து - 1964)**

“முடிவு“ எனும் கவிதையில் வாழ்வில் இருப்பிற்கான வழி எது என்ற தேட முயற்சிக்கிறார்.

**”முடியாதா சாவைச்**

**சுடுகாட்டில் எரித்துவிட?”**

என்ற கவிதை இவரது இருத்தலியலுக்கான விருப்பத்தை கண்டடைவது இலக்கியம் என்று அதை அவர் நம்புவதாக புலப்படுகிறது.

**”இலக்கிய வழியில் நிரந்தரம் கிடைக்கும்**

**கலைகள் கொண்டு, அறிவினைக் கொண்டு,**

**அறமும் அன்பும் கொண்டு, மனிதன்**

**சாவைச் சுடுகாட்டில் எரித்துவிட முடியும்““ (நடை - 1954)**

என்று தீரமாக வாழ்வின் முழுக்காலத்திலும் நம்பினார் என்றும் கூட கூறலாம்.

“அறை - வெளி“ என்னும் கவிதையில் தன்னைச் சிறைபடுத்திக் கொண்டதன் துயர நிலையினை குறிப்பிடுகிறார்.

**நா. காமராசன்**

நா. காமராசன், தமிழ் புதுக்கவிதை இயக்க முன்னோடியும் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். தொடக்கத்தில் மரபுக்கவிதைகள்எழுதி வந்த இவர் காலப்போக்கில்வசனகவிதை, புதுக்கவிதை ஆகிய துறைகளுக்கு மாறி அவற்றிலே தன் சிறப்பை வெளிப்படுத்தினார். கிராமியச் சந்தங்களுடன் புதுப்பார்வை திகழப் படிமக் கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவர் ஒரு உருவகக் கவிஞர் ஆவார். அழகான கவிதைகளால் பொருத்தமற்ற கொள்கைகளைச் சாடும் காமராசன், “கவியரசு, சோசலிசக்கவிஞர், புதுக்கவிதையின் முன்னோடி, புதுக்கவிதை ஆசான்” என்றும் அழைக்கபடுகிறார்.

“தன் கால்களில் இரத்தம் கசியக்கசிய பழைய முட்பாதைகளில் முன்னேறி முதலில் புதுக்கவிதை உலகுக்கு ஒரு புதுப்பாதை அமைத்தவன் நா. காமராசன் தான் என்பதை மூர்ச்சை அடைந்தவன் கூட மறந்து விடக் கூடாது” என்று கவிஞர் வைரமுத்துவால் புகழப்பட்டவர்.

**திருநங்கைகள்**

**“காகிதப் பூக்கள்**
**காலமழைத் தூறலிலே**
**களையாய்ப் பிறப்பெடுத்தோம்**
**தாய்ப்பாலின் சரித்திரத்தில்**
**சதுராடும் புதிரானோம்**
**விதைவளர்த்த முள்ளானோம்**
**விளக்கின் இருளானோம்**
**சதைவளர்க்கும் பிணம்நாங்கள்**
**சாவின் சிரிப்புகள்”**

என்று காகிதப்பூக்கள் என்னும் தலைப்பில் திருநங்கைகளைப் பற்றி பாடியுள்ளார்.

**மீரா**

தமிழ்க் கவிஞர்களுள் பாரதியைப்போல் சமூகப் போராளிகளாகவும் திகழ்ந்தவர்கள் மிகச் சிலர். அவர்களுள் ஒருவர் கவிஞர் மீரா. நடையில் எளிமை, கருத்தில் வலிமை, தமிழ்க் கவிதை மரபில் பழுத்த புலமை, சொல்லுக்குச் சொல் புதுமை, அங்கதம் என்னும் குறும்பு குதிக்கும் தமிழ்நடை, ஆனால் எவரையும் புண்படுத்தாத பண்பாட்டு வரையறை என்ற எல்லைக்குட்பட்ட இலக்கியவாதி.

**சாதனையாளர்**

மரபிலும், வசன கவிதையிலும், புதுக்கவிதையிலும் சாதனைகள் செய்தவர். சிறந்த உரைநடை எழுதியவர். முன்னணிப் பதிப்பாசிரியராக இருந்து பல இளம் படைப்பாளிகளைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்தவர். இலக்கிய இதழ்களின்

ஆசிரியர். ஆசிரியர் சங்கம் மற்றும் உழைக்கும் மக்களின் சங்கத் தலைமைப் பொறுப்பில் இருந்து உரிமைப் போராட்டங்கள் நடத்தியவர். இப்படிப் பல சிறப்புகளுக்கு உரியவர் மீரா.

**பிறப்பு**

தமிழ்நாட்டின் இராமநாகையில் 10-10-1938இ ல் வதங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கையில் 10-10-1938இல் பிறந்தார். பெற்றோர்: மீனாட்சி சுந்தரம் - இலட்சுமி அம்மாள். இளம்பருவத்தில் பர்மாவில் (மியான்மர்) வளர்ந்தார்.

**"எங்கள் ஊர் எம்.எல்.ஏ**
**ஏழு மாதத்தில்**
**எட்டுத் தடவை**
**கட்சி மாறினார்**
**மின்னல் வேகம்**
**என்ன வேகம்?**
**இன்னும் எழுபது**
**கட்சி இருந்தால்**
**இன்னும் வேகம்**
**காட்டி இருப்பார்...**
**என்ன தேசம்**
**இந்தத் தேசம்?" (ஊசிகள், பக்கம்,13)**

என்று அரசியலில் கட்சித்தாவல் பற்றி சாடியுள்ளார்.

## அப்துல் ரகுமான்

அப்துல் ரகுமான், கவிஞரும், தமிழ்ப்பேராசிரியரும் ஆவார். கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். "வானம்பாடி" இயக்கக் கவிஞர்களோடு இணைந்தியங்கியவர். எழுதுபவர்களின் தலைவாயிலில் தம் கவிதை வெளியீடுகளின் வாயிலாகப்புதுக்கவிதைத் துறையில் நிலைநிறுத்திக் கொண்டவர்களுள் அப்துல் ரகுமான் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் ஆவார். அவர் பால்வீதி என்ற கவிதைத்

தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். அத்தொகுதி வெளிவந்த போது கவிதையை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் வழி வெளியீட்டு முறையை அமைத்துக் கொண்டார். தமிழில் கவிதைக் குறியீடுகள் குறிந்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். தமிழில் ஹைக்கூ, கஜல்ஆகிய பிறமொழி இலக்கியங்களை முனைந்ததிலும் பரப்பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

1960 க்கு பின் கவிதை உலகுக்கு வந்த இவர் கவியரங்கக் கவிதைகளாலும் சிறப்படைந்துள்ளார். சிலேடை வார்த்தைகளால் கேட்போரைக் கவர்வது இவரது பாணி. வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். அறிவுமதி உள்ளிட்ட இளந்தலைமுறை கவிஞர்களுக்கு ஆசானாக விளங்கினார். ஆலாபனை கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.

**“கண்ணீரின் ரகசியம்**
**இறைவா எனக்குப்**
**புன்னகைகளைக் கொடு’ என்று**
**பிராத்தித்தேன்**
**அவன் கண்ணீரைத் தந்தான்**

**‘வரம் கேட்டேன்**
**சாபம் கொடுத்து விட்டாயே**
**என்றேன்**
**இறைவன் கூறினான்**

**‘மழை வேண்டாம்**
**விளைச்சலை மட்டும் கொடு’ என்று**
**எந்த உழவனாவது கேட்பானா’**

**ஆனால் நீ**

**அப்படித்தான் கேட்கிறாய்**

**கண்ணீரில் புன்னகையும்**

**புன்னகையில் கண்ணீரும்**

**ஒளிந்திருப்பதை**

**நீ அறிய மாட்டாய்**

**......................................**

**கண்ணீர்தான்**

**உன்னைக் காட்டுகிறது"**

கண்ணீருக்குள் மறைந்துள்ள உண்மை முகங்களை கவிதையாக வடித்துள்ளார்.

## மு. மேத்தா

மு.மேத்தா (முகமது மேத்தா) பெரியகுளத்தில் பிறந்தார். இவர் சென்னை மாநிலக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்த கவிஞர்களுள் இவரும் ஒருவராவார். உவமை உருவகங்களில் பழமையையும் புதுமையையும் இணைத்த மு.மேத்தா, வளமான கற்பனை, எளிய நடை, எளிய சொல்லாட்சி, மனித உணர்வுகளின் படப்பிடிப்புகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர். இவரது முதற் கவிதைத ̇ தொகுப்பு கண்ணீர்ப் பூக்கள். காதல் சோகமும், தமிழ்த் தாகமும் இழையோடும் அவரது கவிதைகள் அவ்வப்போது கூர்மையான சமூக விமர்சனங்களிலும் இறங்குவதுண்டு. சமூக விமர்சனத் தொனியில் அமைந்த "தேச பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி" என்ற கவிதை மு.மேத்தாவுக்கு புகழ் தேடித் தந்த கவிதை ஆகும்.

மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், சிறுகதை, நாவல், கட்டுரைகள் முதலியவற்றைப் படைப்பதிலும் வல்லவரான மு.மேத்தா அத்துறைகளில் பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அவருடைய நூல்களுள் "ஊர்வலம்" தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்ற கவிதை நூலாகும். இவரது "சோழ நிலா" என்னும் வரலாற்று நாவல் ஆனந்த விகடன் இதழ் நிகழ்த்திய

பொன்விழா இலக்கியப் போட்டியில் முதல் பரிசு பெற்றது ஆகும். இவர் திரைப்படத் துறையிலும் பாடல்கள் எழுதி வருகிறார்.

**“நான் வெட்ட வெட்டத் தழைப்பேன்**
**இறப்பினில் கண் விழிப்பேன்**
**மரங்களில் நான் ஏழை**
**எனக்கு வைத்த பெயர் வாழை”**

போன்ற வரிகள் இவர் போக்கினைக் காட்டும்.

”வானம்பாடி” என்ற புதுக்கவிதை ஏட்டின் வாயிலாக அறிமுகம் ஆன கவிஞர்களுள் மு.மேத்தாவும் ஒருவர்.

## வைரமுத்து

வைரமுத்து ஜூலை 13,1953) புகழ் பெற்ற தமிழ்த் திரைப்படம் பாடலாசிரியர், கவிஞர். சிறந்த பாடலாசிரியருக்கான இந்திய அரசின் விருதை ஆறு முறை பெற்றுள்ளார். நிழல்கள் (1980) எனும் திரைப்படத்தில் ”பொன்மாலைப் பொழுது” எனும் பாடலை முதன் முதலில் எழுதிய இவர் சனவரி 2009 வரை 3800 பாடல்களை எழுதியுள்ளார். முன்பு இளையராஜாவுடலும், பின்னர் ஆர்.சருமானுடனும் இவர் இணைந்து வழங்கியப் பாடல்க புகழையும் பல விருதுகளையும் பெற்றுள்ளன.

**சிரிப்பு**

**”வாழ்க்கை பூட்டியே கிடக்கிறது**
**சிரிப்புச் சத்தம் கேட்கும்போதெல்லாம்**
**அது திறந்து கொள்கிறது**
**வாழ்வின்மீது இயற்கை தெளித்த**
**வாசனைத் தைலம் சிரிப்பு**
**எந்த உதடும் பேசத் தெரிந்த**
**சர்வதேச மொழி சிரிப்பு**
**உதடுகளின் தொழில்கள் ஆறு**

**சிரித்தல் முத்தமிடல்**

**உண்ணால் உறிஞ்சல்**

**உச்சரித்தல் இசைத்தல்**

**சிரிக்காத உதட்டுக்குப்**

**பிற்சொன்ன ஐந்தும்**

**இருந்தென்ன? தொலைந்தென்ன?**

**தருவோன் பெறுவோன்**

**இருவர்க்கும் இழப்பில்லாத**

**அதிசய தானம்தானே சிரிப்பு"**

என்று வாழ்க்கையினையுடைய சிரிப்புகளைப் பற்றி பல விதமாகச் சிந்தித்துக் கவிதை இயற்றியுள்ளார்.

## சிற்பி பாலசுப்பிரமணியன்

சிற்பி பாலசுப்பிரமணியம் கவிஞர், மொழிபெயர்ப்பாளர். பேராசிரியர், இதழாசிரியர் சிறந்த கவிஞர், புகழ்பெற்ற கல்வியாளர், இலக்கிய இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்ட பல்துறை அறிஞர்.

"புன்னகை பூக்கும்" பூனைகள்" நூலின் முன்னுரையாக, சிற்பி கவிதை பற்றிக் கவிதை எழுதுகிறார்-

**"எழுத்து**

**ஆன்மாவின் ரத்தம் கவிதைகள்**

**காலத்தின் உதடுகள்**

**தகிடுதத்தங்களுக்கு**

**நகக்கண் ஊசி**

**வடக்கும் தெற்கும்**

**மேற்கும் கிழக்கும்**

**பேதமாய்ப் பாரோம்!**

**யாம் திசைகளை விழுங்கும்**

**திகம்பர கவிகள்”**

என்று கவிதைக்கான உருவத்தை விளக்குகிறார்.

## சிறுகதையின் தோற்றம்

காலம் காலமாகக் கதை சொல்வதும், கதை கேட்பதும் எல்லாத் தேசங்களிலும், எல்லா மக்களிடையேயும் வாய்மொழி மரபாக இருந்து வந்திருக்கிறது. நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே, மக்கள் இனக் குழுக்களாக இயங்கி வந்த போது, ஓய்வு நேரங்களில் சக மனிதர்களிடம் தொடர்பு கொள்வதற்கும், குடும்ப உறவினர்களுடன் பொழுதைக் கழிக்கவும் கதை கூறும் மரபைக் கையாண்டு வந்துள்ளனர். கதை கூறுபவர் தன்னுடைய கற்பனை வளத்தாலும், அனுபவத்தின் பயனாலும், தான் கண்டதையும் கேட்டதையும் விரித்துச் சொல்லி, கேட்போரின் பொழுது போக்கிற்குத் துணை நின்றனர். ‘ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜாவாம்’ என்று சுவாரஸ்ய உணர்வோடு கதை தொடங்கும் மரபும் நம்மிடையே இருந்துள்ளது. பொய்ம்மொழி, பொய்க்கதை, புனைகதை, கட்டுக்கதை, பழங்கதை என்றெல்லாம் கதைகள் அக்காலத்தில் சுட்டப்பட்டுள்ளன. குடும்பங்களில் சிறு குழந்தைகளுக்குப் ‘பாட்டி கதை’ சொல்லும் மரபு உண்டு. அம்மரபு போன தலைமுறை வரை தமிழ் மண்ணில் இருந்து வந்துள்ளது.

பின்பு ‘எழுத்து மரபு’ ஏற்பட்ட போது, கதைகள் பெரிய எழுத்துக் கதைகளாக எழுதப்பட்டன. பின்னர், அச்சு இயந்திர வருகைக்குப் பின்னர், அக்கதைகள் நூல்களாகவும் வெளிவந்தன. இன்றும், அவை பெரிய எழுத்துக் கதைகள் என்ற பெயரில் விற்பனையில் உள்ளன. அல்லி அரசாணி மாலை, புலந்திரன் கதை, வீர அபிமன்யு, மயில் இராவணன் கதை, சதகண்ட இராவணன் கதை, நல்லதங்காள் கதை, அரிச்சந்திரன் கதை என்று இக்கதைகள் பல.

மேலை நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும், கீழை நாடான ரஷ்யாவிலும் சிறுகதை என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சி, ஓர் உணர்ச்சி, ஓரிரு

பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு, அரைமணி நேரத்தில், ஒரே அமர்வில் படித்து முடித்துவிடக் கூடிய கதைகள் தோற்றம் பெற்று அச்சேறின. ஆங்கிலக் கல்வியின் காரணமாக, நம்மவர்களும் அதே போன்ற கதை மரபை நம்மிடையே உருவாக்கத் தொடங்கினர். இப்படித் தொடங்கியதுதான் தமிழ்ச் சிறுகதை வரலாறு.

**உலக மொழிகளில் சிறுகதையின் தோற்றம்**

உலக நாடுகளில், மற்ற நாடுகளைவிட அமெரிக்காவில் தான் சிறுகதை மிக விருப்பமான இலக்கிய வடிவமாகப் போற்றப்படுகிறது. நாவலை விடச் சிறுகதைக்கே அங்குச் செல்வாக்கு அதிகம். பிராங்க் ஓ கானர் (Frank O ‘Connor) என்ற சிறுகதை விமர்சகர், ”அமெரிக்கர்கள் சிறுகதை எழுதுவதில் காண்பிக்கும் திறமையைப் பார்த்தால், அதை அவர்கள் தேசியக் கலையாகக் கருதுகிறார்கள் என்று சொல்லலாம்” என்று குறிப்பிடுகிறார். ”அமெரிக்க மக்களிடையே இருக்கும் வேகமும் பொறுமையின்மையும் காரணமாகத்தான் சிறுகதை வடிவம் அமெரிக்க இலக்கிய உணர்வுக்கு ஏற்புடையதாயிற்று” என்று வில்லியம் டீன் ஹவெல்ஸ் (William Dean Howells) என்ற மற்றொரு விமர்சகர் கூறியுள்ளார். அமெரிக்காவின் மிகச் சிறந்த சிறுகதைப் படைப்பாளர்களாக விளங்கும் எட்கர் ஆலன்போ, நத்தானியல் ஹாதான், வாஷிங்டன் இர்விங், ஓஹென்றி ஆகியோர் உலக நாடுகள் அனைத்திலும் செல்வாக்குப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

பிரான்ஸ் நாட்டில் தோன்றிய சிறுகதைகள் உலக அளவிலேயே மிகப் புகழ்பெற்றவை ஆகும். மெரிமீ (Merimee), பால்ஸாக் (Balzac), மாப்பசான் (Maupassant) ஆகிய சிறுகதை ஆசிரியர்கள், ஆங்கில மொழிபெயர்ப்பின் மூலமாக உலகத்தினரால் அறியப்பட்டனர். இவர்களில், மாப்பசான்தான் இந்திய மொழிச் சிறுகதைப் படைப்பாளிகளுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கின்றார்.

இங்கிலாந்தில் ரட்யாட் கிப்ளிங் (Rudyard Kipling), ஆர்.எல்.ஸ்டீவன்சன் (R.L.Stevenson), கதரீன் மான்ஸ்ஃபீல்ட் (Katherene Mansfield), தாமஸ் ஹார்டி (Thomas Hardy), ஜோசப் கான்ராட் (Joseph Conrad), ஹென்றி ஜேம்ஸ் (Henry

James), ஜேம்ஸ் ஜாய்ஸ் (James Joice) போன்றவர்கள் சிறுகதை எழுத்தாளர்களில் முக்கியமானவர்கள் ஆவார்கள். இங்கிலாந்தில் ஸ்ட்ரான்ட் (Strand), ஆர்கஸி (Argosy), பியர்சன்ஸ் மேகஸீன் (Pearsons Magazine) என்ற இதழ்கள் சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

**தமிழில் சிறுகதையின் தோற்றம்**

தமிழ் மொழியில் அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்பு வீரமாமுனிவர் (1680-1749) எழுதிய பரமார்த்த குரு கதை என்ற கதை நூல், அவர் காலத்திற்குப் பிறகு, 1822இல் சென்னை கல்விச் சங்கத்தாரால் அச்சிடப்பட்டது. இந்நூல்தான், சில ஆய்வாளர்களால் தமிழின் முதல் சிறுகதை நூலாகச் சுட்டப்படுகிறது. பின்பு கதாமஞ்சரி (1826), ஈசாப்பின் நீதிக்கதைகள் (1853), மதனகாமராஜன் கதை (1885), மயில் இராவணன் கதை (1868), முப்பத்திரண்டு பதுமை கதை (1869), தமிழறியும் பெருமாள் கதை (1869), விவேக சாகரம் (1875), கதா சிந்தாமணி (1876) என்ற கதை நூல்கள் வெளியாயின. பண்டிதர் ச.ம.நடேச சாஸ்திரி, தமிழ் நாட்டில் வழங்கி வந்த செவிவழிக் கதைகளைத் தொகுத்து, தக்காணத்துப் பூர்வ கதைகள் (1880), திராவிடப் பூர்வ காலக் கதைகள் (1886), திராவிட மத்திய காலக் கதைகள் (1886) என்ற தலைப்புகளில் வெளியிட்டார். தெலுங்கிலும் கன்னடத்திலும் வழங்கி வந்த தெனாலிராமன் கதை, மரியாதை ராமன் கதை போன்ற கதைகளும் தமிழில் அச்சாயின. அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் தொகுத்த விநோத ரச மஞ்சரி என்ற கதை நூல் 1876இல் வெளிவந்தது. இதில் கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகம், ஏகம்பவாணன், ஔவையார் போன்றோர் வரலாறு கதையாகச் சொல்லப்பட்டுள்ளது. திருமணம் செல்வக்கேசவராய முதலியார் அபிநவக் கதைகள் என்ற கதைத் தொகுதியை எழுதி வெளியிட்டுள்ளார். இதில் கற்பலங்காரம், தனபாலன், கோமளம், சுப்பையயர், கிருஷ்ணன், ஆஷாடபூதி என்ற ஆறு கதைகள் இடம் பெற்றிருந்தன. இவ்வாறு, தமிழில் சிறுகதை முயற்சிகள் அச்சு வடிவில் சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் மேற்கொள்ளப்பட்டன என்பதை அறிய முடிகின்றது.

**முதல் காலக் கட்டம் (1900 - 1925)**

தமிழில் மேலைநாட்டு மரபை ஒட்டிய நவீனச் சிறுகதை முயற்சிகள் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. சமூகச் சீர்திருத்த நோக்குடன் இக்கதைகளைப் படைத்ததாக மாதவையா அந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இதில் இடம்பெற்ற திரௌபதி கனவு, குழந்தை மணத்தையும், கைம்பெண் கொடுமையையும், அவனாலான பரிகாரம் என்ற கதை வரதட்சணைக் கொடுமையையும் பேசின. மாதவையா, தாம் ஆசிரியராக இருந்து வெளியிட்ட பஞ்சாமிர்தம் இதழிலும் தமிழில் பல சிறுகதைகள் எழுதியுள்ளார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் பல சிறுகதைகளைப் படைத்துள்ளார். நவதந்திரக் கதைகள், வேணுமுதலி சரித்திரம், மன்மத ராணி, பூலோக ரம்பை, ஆவணி அவிட்டம், ஸ்வர்ண குமாரி, ஆறில் ஒரு பங்கு, காந்தாமணி, ரயில்வே ஸ்தானம் என்று பல கதைகளை எழுதியுள்ளார். பாரதியார் கதைகள் சம்பவங்களைப் பேசுகின்றனவே தவிர, இவற்றில் சிறுகதைகளுக்குரிய உணர்ச்சி இல்லை என்று பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.

வ.வே.சு. ஐயர் 1912ஆம் ஆண்டு, கம்ப நிலையம் என்ற பதிப்பகத்தின் மூலம் மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் என்ற ஐந்து கதைகள் அடங்கிய தொகுதியை வெளியிட்டார். மங்கையர்க்கரசியின் காதல், காங்கேயன், கமல விஜயன், அழேன் ழக்கே, குளத்தங்கரை அரசமரம் என்ற ஐந்து கதைகளில் குளத்தங்கரை அரசமரம் என்ற கதையே தமிழின் முதல் சிறுகதையாகப் பல விமர்சகர்களால் சுட்டப்படுகின்றது. வ.வே.சு.அய்யர் இக்கதையில் பாத்திர ஒருமை, நிகழ்ச்சி ஒருமை, உணர்வு ஒருமை என்ற மூன்றையும் சிறப்பாக அமைத்துள்ளதாக இலக்கிய விமர்சகர்கள் கூறுகின்றனர். வரதட்சணைக் கொடுமை இக்கதையின் கருப்பொருளாகும். ருக்மணி என்ற பெண்ணுக்குத் திருமணம் ஆகிறது. வரதட்சணைப் பிரச்சினை காரணமாக, சாந்தி முகூர்த்தம் தடைபட்டு, கணவனுக்கு வேறு திருமணம் நிச்சயமாகியது. இதனால் ருக்மணி தற்கொலை செய்து கொள்கிறாள். தன் தவற்றை உணர்ந்த கணவன் துறவு பூணுகிறான். ஒரு மரம் இக்கதையைச் சொன்னதாக

அமைந்துள்ளது இதன் தனிச்சிறப்பாகும். இக்கதை, 1913ஆம் ஆண்டு விவேக போதினி இதழில் வெளிவந்தது. வ.வே.சு. அய்யர் காலத்திற்குப் பிறகு நாரண துரைக்கண்ணன், தி.ஜ.ரங்கநாதன் போன்றவர்கள் சிறுகதைகள் படைத்துள்ளனர். நாரண துரைக்கண்ணன் சமுதாயப் பிரச்சினைகளைப் பேசும் கதைகள் பல எழுதியுள்ளார். 1915இல் தொடங்கி, சுமார் 60 ஆண்டுகள் வரை எழுத்துப் பணியில் இருந்தார் அவர். தி.ஜ.ர.வின் முதல் சிறுகதை சந்தனக் காவடி ஆகும். இவருடைய புகழ் பெற்ற சிறுகதை நொண்டிக்கிளி ஆகும். கால் ஊனமுற்ற ஒரு பெண், எவரும் தன்னைத் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று உணர்ந்த பின் எடுக்கும் புரட்சிகரமான முடிவே கதையாகும். கதையில், நொண்டிப் பெண்ணின் ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. காந்தியத்தைப் பேசும் பல சிறுகதைகளையும் இவர் எழுதியுள்ளார். இவ்வாறு மாதவையா, பாரதியார், வ.வே.சு. அய்யர் போன்றோர் தமிழில் சிறுகதை முன்னோடிகளாகப் போற்றப்படுகிறார்கள்.

**இரண்டாம் காலக் கட்டம் (1926 - 1945)**

மௌலி, லா.ச.ரா., மு.வரதராசனார், அகிலன், அண்ணா, மு.கருணாநிதி இவர்களின் கால கட்டம் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் சிறப்பான காலக் கட்டம் எனலாம். புதுமைப்பித்தன், கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா, மௌனி போன்றவர்களும், கல்கி, ராஜாஜி, கே.எஸ்.வேங்கட் ரமணி, சிட்டி, சங்கரராம், லா.ச.ரா. போன்றவர்களும் இக்காலக் கட்டத்தில் சிறுகதை எழுதியுள்ளனர். இவர்களில் கல்கி, நவசக்தி, விமோசனம், ஆனந்த விகடன் போன்ற இதழ்களில், பின்பு கல்கி இதழிலும் எழுதியுள்ளார். அவர் அதிர்ஷ்ட சக்கரம், கவர்னர் விஜயம், காங்கிரஸ் ஸ்பெஷல், கோர சம்பவம், சாரதையின் தந்திரம், டெலிவிஷன், திருவழுந்தூர் சிவக்கொழுந்து என்று பல சிறுகதைகளை எழுதியுள்ளார்.

கல்கி எழுதியவை, வெகுஜன இதழுக்கு ஏற்ப அமைய, அவருடைய காலக் கட்டத்தில் எழுதிய புதுமைப்பித்தன் கதைகள் வடிவம், உத்தி, உள்ளடக்க முறைகளில் பரிசோதனை முயற்சிகளாக அமைந்து இலக்கிய அந்தஸ்து பெற்ற சிறுகதைகளாகச் சிறந்தன. தமிழ்ச் சிறுகதை முயற்சியை உலகத் தரத்திற்கு

எடுத்துச் செல்ல முயன்றவர்களுள் புதுமைப்பித்தன் முதன்மையானவர் ஆவார். மணிக்கொடி என்ற இலக்கியப் பத்திரிகையுடன் தொடர்பு கொண்டு மிகச்சிறந்த படைப்பு முயற்சியில் ஈடுபட்டார். மேல்நாட்டுச் சிறுகதை ஆசிரியர்களின் படைப்பாக்கத்தை நன்கு அறிந்த அவர், அவற்றை உள்வாங்கிக் கொண்டு, தமது சொந்தப் படைப்பாளுமையைக் கொண்டு அற்புதமான சிறுகதைகளைப் படைத்துள்ளார். புதுமைப்பித்தன் கேலிக்கதைகள், புராணக் கதைகள், தத்துவக் கதைகள், நடப்பியல் கதைகள் என்று பலவகையான கதைகளைப் படைத்துள்ளார். வறுமையைப் பற்றிப் பொய்க் குதிரை, ஒருநாள் கழிந்தது, பொன்னகரம், துன்பக்கேணி போன்ற கதைகளையும், புராணக் கதை மரபை வைத்துச் சாபவிமோசனம், அகல்யை அன்றிரவு போன்ற கதைகளையும், தத்துவ நோக்கோடு கயிற்றரவு, மகாமசானம், ஞானக் குகை போன்ற கதைகளையும், வேடிக்கை வினோதக் கதையாகக் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் என்ற கதையையும், நாட்டுப்புறக் கதைப் பாங்கோடு சங்குத்தேவனின் தர்மம், வேதாளம் சொன்ன கதை போன்ற கதைகளையும் எழுதியுள்ளார். தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் புதுமைப்பித்தனின் ஆளுமையும் மேதைமையும் பின் வந்த படைப்பாளிகளுக்கு முன் மாதிரியாக அமைந்தன எனலாம். புதுமைப்பித்தன் சாகாவரம் பெற்ற சிறுகதைகளைப் படைத்து, தமிழ் இலக்கியக் கருவூலத்திற்கு வளம் சேர்த்துள்ளார்.

மௌனி, இக்காலக் கட்டத்தைச் சேர்ந்த மற்றொரு சிறந்த படைப்பாளி ஆவார். மௌனியின் சிறுகதை முயற்சி வித்தியாசமானது. குறியீடு என்னும் உத்தியை அவர்தம் கதைகளில் அதிகம் எடுத்தாண்டுள்ளார். அதனால், மௌனியின் கதைகளைச் சாதாரண வாசகர்களால் அத்துணை எளிதாகப் புரிந்து கொள்ள இயலாது. இவருடைய தமிழ்நடையும் அசாதாரணமானது. ஏன்? இவருடைய முதல் கதையாகும். இவருடைய சிறுகதைகள் அனைத்தும் அழியாச் சுடர், மௌனியின் கதைகள் என்ற பெயர்களில் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

இந்தக் காலக்கட்டத்தில் எழுதிய மற்றொரு எழுத்தாளர் லா.ச.ராமாமிர்தம். இவர் கதை சொல்லும் நடையும் வித்தியாசமானதாகும். இவர், மந்திர உச்சாடனம்

போலச் சொற்களை ஒலிப்பாங்குடன் பயன்படுத்தும் விதத்தில் தமக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளார். சிறுகதை வடிவத்தையும் தாண்டி, விசுவரூபம் எடுப்பன இவருடைய கதைகள். தரங்கிணி, காயத்திரி, இதழ்கள், புலி ஆடு, ஜ்வாலை என்பன இவருடைய சிறுகதைகளில் சிலவாகும்.

இக்காலக் கட்டத்தில் எழுதிய குறிப்பிடத்தகுந்த பிற சிறுகதை எழுத்தாளர்கள் பி.எஸ். ராமையா, கி.ரா. என்ற கி.ராமச்சந்திரன், சிதம்பர சுப்பிரமணியன், டி.எஸ். சொக்கலிங்கம், சங்கு சுப்பிரமணியன் போன்றவர்கள் ஆவர்.

**மூன்றாம் காலக் கட்டம் (1946 - 1970)**

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில், மூன்றாவது பகுதியான இக்காலக் கட்டத்தில், மிகப் பலர் சிறுகதை எழுதுவதை மேற்கொண்டார்கள். கரிச்சான் குஞ்சு, தி.ஜானகிராமன், எம்.வி.வெங்கட்ராம், ரா. பாலகிருஷ்ணன், விந்தன், கு.அழகிரிசாமி, மு.சிதம்பர ரகுநாதன், அகிலன், நா.பா என்ற நா.பார்த்தசாரதி போன்றவர்களும், திராவிட இயக்க எழுத்தாளர்களான அண்ணா, மு.கருணாநிதி ஆகியவர்களும், மு.வ. என்னும் மு.வரதராசனார், ஜெயகாந்தன் ஆகியவர்களும் சிறுகதைகள் படைத்துள்ளனர். இவர்களில் சிலர் சிறுகதை இலக்கியத்திலும், சிலர் நாவல் இலக்கியத்திலும், சிலர் இவ்விரண்டு இலக்கிய வகைகளிலும் தடம் பதித்துள்ளனர்.

தி.ஜானகிராமன், தமிழ் எழுத்துலகில் நாவல், சிறுகதை என்ற இரண்டு இலக்கிய வகைகளிலும் முன்வரிசையில் நிற்பவர். கு.ப.ரா. வைப் போன்று ஆண், பெண் உறவைக் கதைப் பொருளாக்கிக் கொண்டவர் ஆவார். கதைமாந்தர் படைப்பிலும், மொழி ஆளுகையிலும் வெற்றி பெற்ற இவர் மறதிக்கு, செய்தி, முள்முடி, சிலிர்ப்பு போன்ற பல கதைகளை எழுதியுள்ளார்.

இக்காலக் கட்டத்தில் சிறுகதை, நாவல் என்ற இரண்டு படைப்பிலும் சிறந்து விளங்கிய எழுத்தாளர்களுள் அகிலனும், நா.பா.வும் ஜெயகாந்தனும் குறிப்பிடத்தக்கவர்கள். அகிலன் பதினேழு சிறுகதைத் தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார். இவரின் முதல் சிறுகதை காசு மரம் என்பதாகும். வறுமை, ஆண் பெண் உறவுகள், விதவை நிலை, வரதட்சணைக் கொடுமை என்று பல

பொருண்மைகளில் இவர் கதைகள் படைத்துள்ளார். நட்பு, வீரம், காதல் போன்ற இலக்கியப் பொருண்மைகளும் இவருடைய கதைகளில் காணக்கிடைக்கின்றன. இவருடைய எரிமலை என்ற இக்கதை சிறுகதைத் தொகுதி தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது.

அகிலனைப் போன்று மரபிலக்கியப் பாங்கில் கதை இலக்கியத்தை எடுத்துச் சென்றவர் நா.பா. தெய்வத்தாலாகாதெனினும், ஆயுதம், தகுதியும் தனிமனிதனும், பிரதி பிம்பம், ஒரு கவியின் உள்உலகங்கள், மறுபடியும் ஒரு மஹிஷாசுர வதம், அமெரிக்காவிலிருந்து பேரன் வருகிறான், களவும் கற்று, ஒரு சர்வதேசக் கருத்தரங்கு போன்ற பல சிறுகதைகளை எழுதியுள்ளார்.

திராவிட இயக்கச் செல்வாக்குடன் பகுத்தறிவுப் பாதையில் கதை படைத்தவர்களுள் அண்ணா, மு.கருணாநிதி, ஆசைத்தம்பி, தென்னரசு, டி,கே,சீனிவாசன், தில்லை வில்லாளன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் உள்ளடக்கம், உத்தி, நடை ஆகியவற்றை முழுமையாகக் கையாண்டு கதை படைத்தவர்களுள் அண்ணா முதன்மையானவர். சாதி சமய மறுப்பு, வறுமை, கலப்பு மணம், பலதார மணம், விதவை மணம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டன இவருடைய கதைகள். தஞ்சை வீழ்ச்சி, சொர்க்கத்தில் நரகம், திருமலை கண்ட திவ்விய ஜோதி, புலி நகம், பிடி சாம்பல் போன்ற பல கதைகளில் மத நம்பிக்கையைக் கண்டித்துள்ளார். செவ்வாழை இவருடைய மிகச் சிறந்த கதையாகும்.

ஏழ்மையின் கொடுமையை இக்கதையில் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். வடிவ உத்தியுடன் பகுத்தறிவுப் பாதையில் கதை எழுதியவர் மு.கருணாநிதி. குப்பைத்தொட்டி, கண்டதும் காதல் ஒழிக, நளாயினி, பிரேத விசாரணை, தொத்துக் கிளி, வாழ முடியாதவர்கள் போன்ற இவருடைய சிறுதைகள் குறிப்பிடத்தக்கன.

இக்காலக் கட்டத்தில் எழுதிய ஜெயகாந்தன் சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்ற பெயரைப் பெற்றுள்ளார். முற்போக்கு எழுத்தாளராக அறியப்பட்ட அவர் தொடக்கத்தில் சோதனை ரீதியாகவும் பின்னர் ஜனரஞ்சகமாகவும் கதைகளைப் படைத்துள்ளார்.

இவருடைய பல சிறுகதைகள் விமர்சனத்திற்கும் விவாதத்திற்கும் உள்ளாயின. சிறுகதையின் உள்ளடக்கத்திற்கு மட்டுமல்ல, வடிவத்திற்கு உரமளித்தவர் இவர். இவருடைய எழுத்துகள் பலரை எழுதத் தூண்டின. இவருடைய பாணியில் இன்று பலர் எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

**நான்காம் காலக் கட்டம் (1976 முதல் இன்று வரை)**

எழுபதுகளில் சா.கந்தசாமி, இந்திரா பார்த்தசாரதி, ந.முத்துசாமி, அசோகமித்திரன், நீல பத்மநாபன், வண்ணநிலவன், வண்ணதாசன், சுஜாதா, நவபாரதி, சுப்பிரமணிய ராஜு, பாலகுமாரன் போன்றவர்களும் பா.செயப்பிரகாசம், பிரபஞ்சன், கிருஷ்ணன் நம்பி, ஜெயமோகன், ஜி.நாகராஜன் போன்றவர்களும் சிறுகதைப் படைப்புகளில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாகத் தடம் பதித்துள்ளனர். இந்தக் காலக் கட்டத்தில், நவீனத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம், கருத்திலும் சொல்லும் நேர்த்தியிலும் மொழியைக் கையாளும் முறையிலும் பல மாறுதல்களைக் கண்டுள்ளது. இச்சிறுகதைகள் தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் பிரதிபலித்துக் காட்டுகின்றன. சிறுகதைப் படைப்பே விமர்சன ரீதியாக எழுதப்பட்டது. அதனால் தேவையற்ற சொல் அலங்காரம், தேவையில்லாத வர்ணனைகள் என்பனவெல்லாம் தவிர்க்கப்பட்டு, படைப்பு அதன் முழு வீச்சோடு வெளிப்பட்டுள்ளது எனலாம். இருபத்தோராம் நூற்றாண்டு தொடர்பு யுகம், கணினி யுகம் என்றெல்லாம் சுட்டப்படுகிறது. இந்நூற்றாண்டில், இணைய இதழ்கள் என்ற புதுவகை இதழ்கள் தோற்றம் பெற்றன. அவற்றில் உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் ஒருங்கே இடம் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்த காஞ்சனா தாமோதரன், கீதா பென்னட், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன் போன்றவர்கள் தொடர்ந்து இவ்விதழ்களில் எழுதி வருகின்றனர். இவர்களைத் தொடர்ந்து உலகத் தமிழ் எழுத்தாளர்கள் பலர் சங்கமிக்க இணைய இதழ்கள் வழி அமைத்தால் அது தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியை மற்றோர் உயரத்திற்கு உறுதியாக இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

## நாடகத்தின் தோற்றம்

மனிதன் என்று அறிவு பெற்றுத் தோன்றினானோ, அன்றே நாடகமும் ஏதோ ஒரு முறையில் தோற்றம் பெற்றிருக்கக் கூடும். மனிதனின் விளையாட்டு உணர்வும், பிறரின் செயல்களை நடித்துக் காட்ட விரும்பும் இயல்பும், நாடகம் தோன்றக் காரணங்களாக அமையலாம். பொதுவாக நாடகத்தின் தோற்றம் பற்றிய தெளிவான கருத்து அறிய முடியாத ஒன்றாகவே உள்ளது. நடனத்திலிருந்துதான் நாடகம் தோன்றியிருக்க வேண்டும் என்பார் சிலர். சமயச் சடங்குகளிலிருந்து நாடகம் தோன்றியிருக்கலாம் என்பாரும் உளர். பொதுவாகச் சடங்கிலிருந்தே நாடகம் உருவாகியிருக்கலாம் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும்.

புராதன (பழங்கால) மனிதன், பருவகால மாற்றங்களையும், இயற்கையோடு நிகழும் பல மாற்றங்களையும் கண்டு, இவை தனக்கு மேலான சக்திகளின் செயற்பாடே என்று நம்பினான். அதனை அடிப்படையாகக் கொண்டே சடங்குகள் உருவாகின. இதுவே நாடகமாக வளர்ந்தது.

மனிதனின் இயல்பான குணமாக இருக்கின்ற நாடகத் தன்மை, ஒன்றைப் போலச் செய்து காட்டுதல் என்பதாகும். வேட்டையாடிய மனிதன் தான் வேட்டையாடிய நிகழ்வுகளை மீண்டும் செய்து காட்டினான். தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைச் சொல்லிக் காட்டினான். பின்பு அதனைச் செய்து காட்டினான். இவையே நாடகமாக மாறின.

### நாடகம் - சொல் விளக்கம்

நாடகம் என்பதனைக் குறிக்கும் Drama என்ற சொல், கிரேக்கச் சொல்லின் அடியாகப் பிறந்தது. ட்ரமோனியன் (Dramonian) என்ற கிரேக்கச் சொல்லே இதன் மூலமாகும். இதன் பொருள் ‘ஒன்றைச் செய் அல்லது ஒன்றைப் போல நடித்துக் காட்டு’ என்பதாகும்.

‘நாடகம்’ என்று வழங்குகிற தமிழ்ச் சொல்லுக்கு அறிஞர்கள் பலவாறு பொருள் விளக்கம் தருகின்றனர். ‘நாட்டின் சென்ற காலத்தையும், நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடு + அகம் = நாடகம் என்று ஆயிற்று’ என்று அவ்வை சண்முகம் கூறுவார். ஆனாலும் நாடகம் என்ற சொல் தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியங்கள் ஆகியவற்றில் வரும் இடங்களை நோக்கினால் இன்று நாம் நாடகம் என்பதற்குக் கொள்ளும் பொருளில், அன்று கூறப்படவில்லை என்று அறியலாம். நாட்டியம் என்ற கருத்திலேயே காணப்படுகிறது.

‘நாடகம்’ என்ற சொல்லுக்கு வேர்ச்சொல் ‘நட’ என்று பாவாணர் கூறுகிறார். ‘நட’ என்னும் வேர்ச் சொல்லிலிருந்து நடனம், நாட்டியம், நாடகம் என்பன ஆட்டத்தை அறிவிக்கும் மறுபெயர்களாக வந்தன என்பார். நடம், நட்டம் என்ற சொற்களும் ஆடலைக் குறிப்பன.

**தமிழ்நாடகத்தின் தொன்மை**

தொல்காப்பியர் ”நாடக வழக்கினும்” என்று நாடகத்தைக் குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரம் நாடகக்கூறுகளுடன் நாடகக் காப்பியமாகவே திகழ்கிறது. கூத்தாட் டவைக்குல்லாத் தற்றே என்ற குறள் வழி நாடக அரங்கம் இருந்த செய்தியினை அறியலாம். அகத்தியம், குணனூல், கூத்தநூல், மதிவாணர் நாடகத் தமிழ் போன்ற நாடக நூல்கள் பழந்தமிழர் வழக்கில் இருந்தன என்பதனைச் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் அவர்கள் குறிப்பிட்டுச் செல்கிறார். குறவைக் கூத்து, துணங்கைக் கூத்து, ஆடிப்பாவை போன்ற கூத்துவகைகளை சங்ககாலத்தில் காணமுடிகிறது.

**இருவகை நாடகங்கள்**

வேத்தியல், பொதுவியல் என நாடகங்களை அக்காலத்திலி இருவகையாகப் பகுத்திருந்தனர். வேத்தியல் என்பது வேந்தனுக்காக நடித்துக்காட்டப்படுவதாகும், பொதுவியல் என்பது மக்களுக்காக நடித்துக்காட்டப்படுவதாகும்.

**பல்லவர் கால நாடகங்கள்**

சமண, புத்த சமயங்கள் கலைகளுக்கு எதிராக செயல்பட்டதால் இருண்ட காலத்தில் நாடகத்தமிழ் ஒளியிழந்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் இசைக் கலைக்கு உயிரூட்டினர். எனினும் நாடகத்துக்கு பெரிய செல்வாக்கு ஏற்படவில்லை. எனினும் இக்காலத்தில் மகேந்திர வர்ம பல்லவனின் "மத்தவிலாச பிரகசனம்" என்ற நாடகநூல் புகழ்பெற்றிருந்தது. இன்னிசைக்கூத்து, வரலாற்றுக் கூத்து என இருவகை நாடக மரபுகளும் இக்காலத்தில் இருந்தன.

**சோழர் கால நாடகங்கள்**

சோழர் காலத்தில் இராஜராஜனின் வெற்றிச்சிறப்பைப் பாராட்டும் "இராஜராஜவிஜயம்" நிகழ்த்தப்பட்டது. இதில் நடித்தவர்களுக்கு "ராசராச நாடகப்பிரியன் என்று பட்டம் வழங்கினர் என்பதைக் கல்வெட்டுகள் வழி அறியமுடிகிறது.

**தமிழ் நாடகத்தின் எழுச்சி**

இசுலாமியர் படையெடுப்புக்குப் பிறகு கலைகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாடகங்கள் மீண்டும் புத்துயிர் பெற்று வளர ஆரம்பித்தன. குற்றாலக்குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, இராமநாடகக் கீர்த்தனை, நந்தனார் சரிதக் கீர்த்தனை ஆகிய நாடகங்கள் மக்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றன.

காசி விசுவநாத முதலியார் அவர்களின் டம்பாச்சாரி நாடகம் தான் முதன்முதலில் மேடையில் நடிக்கப்பட்ட சமூகநாடகமாகும்.

**தமிழ் நாடக முன்னோடிகள்**

பம்மல் சம்பந்தம் முதலியார், சங்கரதாசு சுவாமிகள், பரிதிமாற் கலைஞர் ஆகிய மூவரையும் தமிழ்நாடக மூவர் என்று அழைப்பது வழக்கம்.

1. பம்மல் சம்பந்தம் – இவர் எழுதிய மொத்த நாடகங்கள் 93 ஆகும். இவரே தமிழ்நாடகத்தின் தந்தை என அழைகப்படுகிறார். மேலும் இவரைத் தமிழ் சேக்சுபியர் என்றும் அழைப்பர். இவர்தம் நாடகங்கள் இன்பியல், துன்பியல், கேளிக்கை, அங்கதம், நையாண்டி, புராணிகம், வரலாறு, மொழிபெயர்ப்பு எனப் பலதரப்பட்டவையாகும். இவர் சுகுண விலாச சபை என்ற நாடகக் குழுவினை நடத்தி வந்தார். இக்குழுவினரால் நடத்தப் படும் நாடகத்தில் கற்றவர்களையும் அறிஞர்களையும் நடிக்கச் செய்தார். நாடகக் கலைக்குத் தம் 81 ஆவது வயது வரை பெரும்பணி ஆற்றினார். கண் பார்வை மங்கிய நிலையிலும் தாம் சொல்லியே பிறரை எழுத வைத்தார். பத்ம பூஷண் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர். ஷேக்ஸ்பியரின் ஹேம்லெட், ஆஸ் யூ லைக் இட் உள்ளிட்ட நாடகங்களை அமலாதித்யன், நீ விரும்பியபடியே என்ற பெயர்களில் தமிழ் நாடகங்களாக மொழிபெயர்த்தார். சதி சுலோச்சனா, யயாதி, சந்திர ஹரி, தாசிப் பெண், சபாபதி போன்ற இவரது நாடகங்களில் சில திரைப்படமாகவும் வெளிவந்துள்ளன.

2. பரிதிமாற் கலைஞர் – நாடகம் படித்தல், நடித்தல், இலக்கணம் வகுத்தல் என மூன்று பெரும் பணிகளை ஆற்றினார். நாடகவியல் என்ற தமிழ்நாடக இலக்கண நூலை இயற்றினார். இவர் படைத்த நாடகங்களுள் ரூபாவதி, கலாவதி, மானவிஜயம், சூர்ப்பனகை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

**சங்கரதாசு சுவாமிகள்**

முறைப்படுத்தப்பட்ட தமிழ்நாடகவரலாறு இவரிலிருந்தே தொடங்குகிறது. இருபதாம் நூற்றாண்டு நாடகத்துறையை நசிவடையாமல்க் காத்ததால் இவரைத் தமிழ்நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றுவர். ஆரம்ப காலத்தில் எமன், இராவணன் போன்ற எதிர்மறைக் கதாபாத்திரங்களில் நடித்து பின்னர் நாடக ஆசிரியரானார். இவர் சமரச சன்மார்க்க சபை என்ற நாடகக் குழுவினை நடத்தி வந்தார். இக்குழு சிறுவர்களை மட்டுமே நடிகர்களாகக் கொண்டு நடத்தப்பெற்ற முதல் பாலர் நாடக சபையாகும். அதன் பிறகு தத்துவ மீனலோசனி வித்துவ பால சள என் நாடகக்குழுவினை உருவாக்கி அதன் ஆசிரியராகத் தனது இறுதிநாள் வரை

இருந்தார். அபிமன்யு சுந்தரி, இலங்காதிலகம், கோவலன், நல்லதங்காள், பிரகலாதன் உள்ளிட்ட 40 நாடகங்கள் இவர் படைத்தவையாகும்.

**நாடகங்களின் வகை**

தமிழ்நாடகங்களை அதன் கருப்பொருளைக் கொண்டு புராண நாடகம், இலக்கிய நாடகம், துப்பறியும் நாடகம், வரலாற்றுநாடகம், நகைச்சுவை நாடகம், மொழிபெயர்ப்பு நாடகம், தழுவல் நாடகம், என வகைப்படுத்தாலாம். சான்றாக புராண நாடகங்கள், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிறைய தோன்றின. பிரகலாதன், ஐயப்பன், தசாவதாரம், சிறுதொண்டர் ஆகிய நாடகங்கள் அவற்றுள் குறிப்பித்தக்கனவாகும். இலக்கிய நாடகங்களைப் படித்துமுடித்தவுடன் ஒரு நாடகம் பார்த்த நிறைவு கிடைக்கும். அவ்வகையில், சுந்தரம்பிள்ளையின் – மனோன்மணீயம், பாரதிதாசனின் – பிசிராந்தையார், மறைமலையடிகளின்- அம்பிகாபதி அமாராவதி, அ.ச.ஞானசம்பந்தனின் தெள்ளாறு எறிந்த நந்தி முதலிய நாடகங்கள் இலக்கிய நாடகங்களுள் குறிப்பித்தக்கனவாகும்.

**நாடக சபைகள்**

தஞ்சை கோவிந்தசாமிராவ் காலத்தில் இருந்தே அமெச்சூர் நாடக சபாக்கள் தோன்றத் தொடங்கின. மனமோகன நாடக சபையைக் கோவிந்தசாமிராவ் தோற்றுவித்தார். சுகுண விலாச சபையைப் பம்மல் சம்பந்த முதலியாரும் மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ பாலசபையைச் சங்கரதாஸ் சுவாமிகளும் தோற்றுவித்தனர். இவற்றிற்குப் பின்னர் பல சபைகள் தோன்றின. நாடகத்தை ஒரு பொருள் ஈட்டும் தொழிலாக மட்டும் அல்லாமல் அதை ஒரு வளரும் கலையாகவும் நினைத்து வளர்ப்பதில் இச்சபைகள் ஆர்வம் காட்டத் தொடங்கின.

**பாலர் சபைகள்**

தமிழ் நாடகக் கலை வளர்ச்சியில் இளம் நடிகர்களைக் கொண்ட பாலர் சபைகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. பாலர் நாடக சபையை உருவாக்குவதிலும் சங்கரதாஸ் சுவாமிகளே முன்னோடியாகத் திகழ்ந்தார். இவரது மதுரை தத்துவ

மீனலோசனி வித்துவ பால சபா, தி.க.சண்முகம் உள்ளிட்ட பல நடிகர்களை உருவாக்கியது. மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி பல இளம் நடிகர்களை உருவாக்கியது. பின்னாளின் திரை உலகில் புகழ்பெற்ற எம்.ஜி.ராமச்சந்திரன், காளி. என்.ரத்தினம், பி.யு.சின்னப்பா போன்ற பல நடிகர்கள் இந்தச் சபையில் உருவானவர்களே ஆவர். மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபையும் பல நடிகர்களை உருவாக்கியது. கே.சாரங்கபாணி, நவாப் ராஜமாணிக்கம், பி.டி.சம்பந்தம், எம்.எஸ்.முத்துக்கிருஷ்ணன், டி.பி.பொன்னுசாமி, எம்.ஆர்.ராதா, சிதம்பரம் ஜெயராமன், ஏ.எம்.மருதப்பா ஆகியோர் இச்சபையில் இருந்து உருவான நடிகர்கள் ஆவர்.

**நாடகப் பணிகள்**

தொழில்முறை நாடகங்களில் இருந்த பல கூறுகள் சபைகளால் மாற்றம் பெற்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில.

இரவு முழுவதும் நாடகம் ஆடுவது நிறுத்தப்பட்டு நாடகத்துக்கென நேரம் வரையறை செய்யப்பட்டது. சூத்திரதாரனும், விதூஷகனும் நாடகத்தின் தொடக்கத்தில் வரும் வழக்கம் நிறுத்தப்பட்டது. இதே போல் மோகினி ராஜன், மோகினி ராணி வரும் வழக்கமும் நிறுத்தப் பட்டது. நாடகக் கதையின் சுருக்கம் அச்சிடப்பட்டுச் சபையோருக்கு முன்னரே அளிக்கப்பட்டது.

நாடகத்தில் உரைநடை வசனம் பெருகியது. மொழிச் செப்பம் கடைப்பிடிக்கப்பட்டது. நாடகத்துக்கு முக்கியமானதாகக் கருதப்பட்ட பின்பாட்டு முழுவதுமாக நீக்கப்பட்டது. பக்க வாத்தியக்காரர்கள் மேடையில் தனி ஆதிக்கம் செலுத்துவது நிறுத்தப்பட்டது. நாடக மாந்தர்கள் ஒவ்வொருவரும் மேடைக்கு வரும்போதும் உள்ளே செல்லும் போதும் பாடவேண்டும் என்னும்முறை நிறுத்தப்பட்டது.

நாடக இசைக்குத் தாளம் போன்ற கருவிகளைத் தட்ட வேண்டும் என்பது கைவிடப்பட்டது. ஆர்மோனியக்காரர் மேடையில் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்த நிலையை மாற்றி நாடக மேடையின் கீழே அல்லது ஒதுக்குப் பக்கத்தில் அவருக்கு இடம் ஒதுக்கப்பட்டது. நாடக மேடையில் திரைகள் அமைப்பது பற்றிய ஒழுங்குமுறை அமெச்சூர் சபைகளால் தான் ஏற்பட்டது.

புராண இதிகாசக் கதைகள் மட்டுமன்றி வரலாறு, சமூகம் தழுவிய நாடகங்களும் இச்சபைகளால் தான் உருவாயின. துன்பியல் நாடகங்களையும் இச்சபைகள் தான் அறிமுகப்படுத்தின. நாடகத்தில் அங்கம், களம், காட்சி என்னும் பிரிவுகளை ஏற்படுத்திப் புதுமையைப் புகுத்தினர். வடமொழி நாடகங்கள் மட்டுமன்றி ஆங்கிலம், பஞ்சாபி, மகாராஷ்டிரம் ஆகிய மொழிகளின் நாடகங்களும் தமிழாக்கப்பட்டு நடிக்கப்பட்டன. இத்தகைய மாற்றங்களை எல்லாம் அமெச்சூர் நாடகச் சபைகளே செய்தன.

**நாடக ஆக்கத்தில் பெண்கள்**

காலப்போக்கில் ஆண்களே பெண்வேடமிட்டு நடித்துக் கொண்டிருந்த நிலைமாறி பெண்களும் மேடையேறி நடிக்க வந்தனர். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த நிலை உருவானது. பெண் நடிகைகளில் குறிப்பிடத் தகுந்தவர்கள் பாலாம்பாள், பாலாமணி, அரங்க நாயகி, கோரங்கி, மாணிக்கம், டி.டி.தாயம்மாள், வி.பி.ஜானகி ஆகியோர் ஆவர். அந்தக் காலக்கட்டத்தில் புகழ்வாய்ந்து இருந்த மொத்த நாடக சபைகள் அறுபத்து ஒன்பது. அவற்றில் ஆறுசபைகளைப் பெண்களே ஏற்று நடத்தி வந்தனர்.

பாலாமணி அம்மாள் பாலாமணி அம்மாள் நாடகக் கம்பெனியை நடத்தி வந்தார். வி.பி.ஜானகி அம்மாள் காஞ்சிபுரம் ஸ்ரீ விஜய கந்தர்வகான சபையையும், பி.இரத்தினம்பாள் ஸ்ரீ கணபதி கான சபையையும் நடத்தி வந்தனர். வேதவல்லி தாயார் சமரச கான சபையையும், விஜயலட்சுமி கண்ணாமணி ஆகிய இருவரும் விஜய கந்தர்வ நாடக சபையையும் நடத்தி வந்தனர். பி.இராஜத்தம்மாள் ஸ்ரீ மீனாம்பிகை நாடக சபையை நடத்தி வந்தார்.

பெண்கள் நாடக சபை நடத்தி வந்தவர்களுள் மிகுந்த பேரும் புகழும் பெற்றவர் பாலாமணி அம்மையார் ஆவார். இவர் காசி விசுவநாத முதலியாரின் டம்பாச்சாரி விலாசத்தை மீண்டும் மீண்டும் அரங்கேற்றிப் பேரும் புகழும் பெற்றதுடன் நல்ல வருமானத்தையும் ஈட்டினார். இருப்பினும் கோரமான வறுமைப் பிடியில் இவரது முதுமை வாழ்க்கை மதுரையில் முடிந்தது.

**நாடக இலக்கண நூல்கள்**

நாடகக் கலையை விளக்கமாகக் கூறும் பழந்தமிழ் நூல்கள் எவையும் கிடைக்காத நிலையில் நமக்குக் கிடைத்திருப்பன இருபதாம் நூற்றாண்டு நாடக விளக்க நூல்களே ஆகும். பரிதிமாற் கலைஞர் என அறியப்படும் வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார், நாடக இயல் என்னும் சிறந்த நாடக நூலை எழுதியுள்ளார்.

நாடகம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? நாடகத்தை எப்படி எழுத வேண்டும் நடிப்புக்குரிய இலக்கணங்கள் எவை என்பன போன்ற செய்திகளைப் பரிதிமாற் கலைஞர் தம் நாடக இயல் என்னும் நூலில் விளக்குகிறார். சுவாமி விபுலானந்த அடிகள், மதங்க சூளாமணி என்னும் நாடக ஆராய்ச்சி நூலை வெளியிட்டுள்ளார். நாடக அமைப்புக் குறித்த பல செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகளார், காளிதாசரின் சகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார். அதில் நாடகத்தைப் பற்றிய பல ஆராய்ச்சிக் குறிப்புகளைத் தந்துள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நூற்றுக்கணக்கான நாடகங்கள் உருவான நிலையில் அவற்றை நெறிப்படுத்துவதற்கு ஏற்ற இலக்கண நூல்கள் தோன்றாவிட்டாலும் மேற்காட்டிய நூல்கள் ஓரளவு நாடக நெறிமுறைகளை உருவாக்கின.

**விடுதலை இயக்க நாடகங்கள்**

இந்தியாவில் விடுதலை வேட்கை உருவான கால கட்டத்தில் விடுதலை உணர்வூட்டும் நாடகங்கள் எழுதப்பட்டன. ஆங்கிலேயருக்கு வரி கொடுக்க மறுத்து தூக்குக் கயிற்றில் தொங்கிய வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாறு நாடகமாகியது. கட்டபொம்மு கூத்து என்னும் நாட்டுப்புறப் பாடல் வடிவிலும் பின்னர் நாடக வடிவிலும் கட்டபொம்மன் கதை உருவானது. இதுதவிர பூலித்தேவன், ஊமைத்துரை, பெரியமருது,

சின்னமருது, ராஜா தேசிங்கு, திப்பு சுல்தான், கான் சாகிபு ஆகியோரின் வீரம் நிறைந்த வரலாறுகளும் நாடகங்களாக எழுதப்பட்டன.

விடுதலை இயக்கத்தின் முதல் நாடகமாகக் கருதத்தக்கது ஸ்ரீ ஆரிய சபா என்னும் நாடகம் ஆகும் என்று நாடக ஆய்வாளர் டாக்டர் குமாரவேலன் குறிப்பிடுகிறார். இந்த நாடகம் 1894 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இந்நாடகம் அன்றைய காங்கிரசின் கொள்கை விளக்கமாக அமைந்தது.

இந்திய விடுதலையைப் பற்றிய சித்தாந்தமும் செயல்திட்டமும் தெளிவாக உருவான போது அவற்றை விளக்கும் நாடகங்களும் தமிழில் தோன்றின. இசை வளம் பெற்ற நாடகப் பாடல்களும் உருவாயின.

**நாடக மேடையில் இசை**

மதுரகவி பாஸ்கர தாஸ், பூமி பாலக தாஸ், ராஜா சண்முக தாஸ், லெட்சுமண தாஸ், இசக்கி முத்து வாத்தியார், ரெங்கராஜ் வாத்தியார், கோவை ஐயாமுத்து போன்ற பலர் விடுதலை உணர்வை ஊட்டும் பாடல்களை நாடக மேடைக்கு ஏற்றவாறு எழுதினர். மேலும் பாரதியார், பாரதிதாசன், கவியோகி சுத்தானந்த பாரதியார், நாமக்கல் கவிஞர், எஸ்.டி.சுந்தரம் ஆகியோரின் பாடல்களும் மேடைகளில் பாடப்பட்டன.

நடிக மணி விஸ்வநாததாஸ், எம்.எம்.சிதம்பரநாதன், எஸ்.ஜி.கிட்டப்பா, கே.பி.சுந்தராம்பாள், பி.யு.சின்னப்பா, எம்.பி. அப்துல் காதர், பி.எம்.கமலம், டி.ஆர்.கோமளம், தி.க.சண்முகம் போன்ற பலரும் விடுதலை இயக்கப் பாடல்களை நாடக மேடையில் பாடி மக்களை எழுச்சி கொள்ளச் செய்தனர்.

தொழில்முறை நாடக மேடைகளில் விடுதலை வேட்கையை ஊட்டுவதற்காக எழுந்த நாடகங்களில் தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலரின் நாடகங்கள் குறிப்பிடத்தகுந்தவை. இவையன்றி வெ.சாமிநாத சர்மாவின் பாணபுரத்து வீரன், எஸ்.டி.சுந்தரத்தின் கவியின் கனவு, கோவை ஐயாமுத்துவின் இன்பசாகரன் ஆகிய

நாடகங்கள் பலமுறை மேடை ஏறின. இந்தியா விடுதலை அடைந்த பின்னரும் கூட விடுதலையின் சிறப்பினைக் கூறும் பல நாடகங்கள் எழுதப்பட்டன.

**தற்கால நாடகங்கள்**

தற்கால நாடகங்கள் என்பது கி.பி.1870லிருந்து தொடங்குவதாகக் கொள்ளலாம். தொன்மை நாடகப் போக்குகளிலிருந்து ஒரு மாற்றம் பெற்ற நிலையை நாடகம் அக்காலக்கட்டத்தில் தான் அடைந்தது. மேலும் பல நாடக மேதைகளும் தமிழகத்தில் தோன்றி நாடகப் போக்குகளை மாற்றியமைத்தனர். 19ஆம் நூற்றாண்டில் பம்பாயில் தோன்றி இந்தியா முழுவதும் நாடகம் நடத்திய பார்சி நாடகக் குழுக்களின் தாக்கமும், உரைநடை வளர்ச்சி, மேல்நாட்டு நாடகப் போக்கின் தாக்கம் ஆகியனவும் தமிழ் நாடகத்தைப் புதிய வடிவிற்குக் கொண்டு வந்தன.

ஆங்கிலக் கல்விக் கற்ற காசி விசுவநாத முதலியார் 1867இல் டம்பாச்சாரி விலாசம் என்ற முதல் சமூக நாடகத்தைப் படைத்து அரங்கேற்றினார். மேலைநாட்டு நாடக அமைப்பில் அங்கம், களம் ஆகிய பிரிவுகள் அமைந்தன. ஆனால் நாடகம் தெருக்கூத்துப் பாணியிலேயே அமைந்திருந்தது. அதன்பின் 1877இல் இராமசாமி ராஜா என்பவர் பிரதாப சந்திர விலாசம் என்ற நாடகத்தை உரைநடையில் எழுதி வெளியிட்டார். இந்நாடகம் மூலம் அதற்கு முன்னிருந்த பாட்டு மயமே நாடகம் என்னும் நிலைமாறியது. உரைநாடகம் என்னும் புதிய நாடக அமைப்பு ஏற்பட்டது.

## திராவிட இயக்க நாடகங்கள்

1944 ஆம் ஆண்டு தமிழ் மாகாண நாடகக் கலை அபிவிருத்தி மாநாடு ஈரோட்டில் நடந்தது. இந்த மாநாடு தந்த எழுச்சி திராவிட இயக்க நாடகங்கள் உருவாவதற்கு ஊக்கம் தந்தது.

**பாவேந்தர் பாரதிதாசன்**

பாவேந்தர் பாரதிதாசன் இந்த மாநாடு நடப்பதற்கு ஐந்து ஆண்டுகட்கு முன்னரே அதாவது 1939 இல் வீரத்தாய் என்னும் கவிதை நாடகத்தையும் , இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்னும் நாடகத்தையும் எழுதினார். பாவேந்தர் மொத்தம் 50

நாடகங்களை எழுதியுள்ளார். அத்தனை நாடகங்களும் தமிழரின் நாகரிகம், பண்பாடு, பகுத்தறிவு ஆகியவற்றின் சிறப்புகளையும் தனித்தன்மையையும் எடுத்துக்கூறுவன.

**பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் நாடகங்கள்**

பாவேந்தருக்கு அடுத்த நிலையில் பேரறிஞர் அண்ணா முழுநீள நாடகங்களையும் ஓரங்க நாடகங்களையும் எழுதியுள்ளார். சந்திரோதயம், வேலைக்காரி, ஓர் இரவு, நீதிதேவன் மயக்கம், சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ஜியம், காதல் ஜோதி ஆகியவை அண்ணாவின் நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை.

அண்ணாவை அடுத்து கலைஞர் கருணாநிதி எழுதிய தூக்குமேடை, ஒரே முத்தம், மணிமகுடம், உதய சூரியன், காகிதப் பூ ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. சலகண்டபுரம் ப.கண்ணன் எழுதிய சீர்திருத்த நாடகங்களுள் குறிப்பிடத்தக்கன மின்னொளி, கன்னியின் சபதம், நந்திவர்மன், மானமறவன், வீரவாலி ஆகிய நாடகங்களாகும்.

திராவிட இயக்க எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க மற்றொருவர் ஏ.கே.வேலன் ஆவார். இவர் இராவணன், எரிமலை, கங்கைக்கு அப்பால், கம்சன், கும்பகர்ணன், கைதி, சிலம்பு, சூறாவளி, சாம்பாஜி எனப் பல நாடகங்கள் எழுதியுள்ளார். போர்வாள், இரக்கத் தடாகம், விஷக்கோப்பை, சாய்ந்த கோபுரம் எனப் பல நாடகங்களை சி.பி.சிற்றரசு எழுதினார்.

முதல் விசாரணை, பேசும் ஓவியம், தந்தையும் மகனும், பாவம் ஆகிய நாடகங்களைத் தில்லை வில்லாளன் எழுதினார். மேலும் எஸ்.எஸ்.தென்னரசு, கே.ஜி.இராதாமணாளன், திருவாரூர் கே.தங்கராசு, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, இராம.அரங்கண்ணல், இரா.செழியன் எனப் பலரும் திராவிட இயக்க நாடகங்களை எழுதியுள்ளனர்.

**பிற நாடகங்கள்**

விடுதலை இயக்கம், திராவிட இயக்கம் ஆகிய கொள்கை உணர்வுகளைக் கடந்து படைப்பாக்க அடிப்படையில் பலர் நாடகங்களை எழுதி நடித்து வந்தனர்.

அமெச்சூர் நாடக சபாக்கள் என்னும் பெயரில் இயங்கும் பல சபைகள் மேடை நாடகங்களை நடத்தி வருகின்றன. திரையுலகில் பல திரைப்படங்களை இயக்கி வரும் கே.பாலச்சந்தரின் பல திரைப்படங்கள் அவரது மேடை நாடகங்களேயாகும். கோமல் சுவாமிநாதனின் தண்ணீர் தண்ணீர், செக்கு மாடுகள், பெருமாளே சாட்சி, கருப்பு வியாழக்கிழமை ஆகிய நாடகங்கள் இரசிகர்களின் வரவேற்பைப் பெற்றவை.

நகைச்சுவை நாடகங்கள் எழுதுவதில் திறமை பெற்றிருந்தவர் கோமதி சுவாமிநாதன். இவர் கல்யாணச் சாப்பாடு, எல்லாம் நன்மைக்கே போன்ற நகைச்சுவை நாடகங்களையும், கலாட்டா கல்யாணம், புயலும் தென்றலும், எதிரொலி, ஆசைக்கு அளவில்லை போன்ற மேடைக்குரிய பெரிய நாடகங்களையும் எழுதினார். அரசியல் எள்ளல் நாடகங்கள் பலவற்றைச் சோ எழுதியுள்ளார். முகம்மது பின் துக்ளக், யாருக்கும் வெட்கமில்லை, உண்மையே உன் விலை என்ன?,மனம் ஒரு குரங்கு எனப் பல நாடகங்களை இவர் எழுதியுள்ளார்.

மௌலி பல நாடகங்களை எழுதி இயக்கி நடித்துள்ளார். ஒரு புல்லாங்குழல் அடுப்பூதுகிறது, அம்மி மிதிக்கப் போலிஸ் வந்தது, மற்றவை நேரில், மத்தாப்பு வாங்க காசு வந்தாச்சு உட்படப் பல நாடகங்களை இவர் எழுதியுள்ளார்.

## உரைநடையின் தோற்றம் வளர்ச்சி

ஒரு மொழியில் முதன் முதலாகச் செய்யுள் தோன்றும் போது, அது பேச்சு வழக்கிலுள்ள மொழி நடையினையும், ஓசைப் பண்பினையும் தழுவியே தோன்றும். இது தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். தமிழில் உள்ள ஓசை வகைகளுள் அகவலே முந்தியது என்பர். இந்த அகவலும், செப்பலும் மக்கள் பேச்சு வழக்கில் காணப்படுபவை. இந்த ஓசைகளில் எழுதப்பட்ட இலக்கியங்கள் உரைநடை போன்ற அமைப்புகளிலேயே அமைந்திருந்தன. அதனால்தான் செய்யுளைத் தொடர்ந்து உரைநடை எழுந்தது என்பர் அறிஞர். உரைநடை தோன்றிய காலத்தில் செய்யுளுக்கும், உரைநடைக்கும் பெரிதும் வேறுபாடுகள் இருந்திருக்க வாய்ப்பில்லை. செய்யுளைப் போலவே உரைநடையும் ‘செப்பமாக’ச் செய்யப்பட்ட ஒன்று. அதனால்தான் உரையினையும் தொல்காப்பியர்

செய்யுள் வகையுள் ஒன்றாகவே கூறினார். தொடக்கக் கால உரைநடையின் தன்மை செய்யுளிலிருந்து பெரிதும் மாறுபடாத நிலையிலேயே இருந்தது.

**தமிழ் பிராமிக் கல்வெட்டு உரைநடை**

தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டன. இவை பெரும்பாலும் சங்க காலத்தைச் சார்ந்தவை என்பர் கல்வெட்டு அறிஞர்கள். இத்தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் தொன்மைக் கால உரைநடையைப் பற்றி அறிவதற்குச் சான்றாக உள்ளன.

**தொல்காப்பியத்துக்கு முந்திய உரைநடை**

மூலபாடம், உரைப்பாடம் என்ற பாகுபாடு தொன்மையானது இரண்டாயிரம் ஆண்டுக்கும் முற்பட்டது. செய்யுள்களுக்கு விளக்கமாக எழுதப்பட்ட உரைகளே உரைநடை வளர்ச்சிக்கு உதவின. தொல்காப்பிய நூற்பாக்களில் என்ப, என்மனார், என்மனார் புலவர், நூல் நவில்புலவர் முதலிய சொற்களும் தொடர்களும் எங்கும் பரந்து கிடக்கின்றன. ஆகவே தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே உரைநூல்களும், உரைநடையும் இருந்ததைத் தொல்காப்பிய நூற்பாக்கள் வழி அறிய முடிகின்றது.

**தொல்காப்பியக் கால உரைநடை**

தொல்காப்பியர் எழுதிய உரை பற்றிய செய்திகளே, நமக்கு அக்கால உரைநடை குறித்து அறிவதற்கு உதவுகின்றன. தொல்காப்பியர், காண்டிகை என்றும், உரை என்றும் இருவகை உரை அமைப்புகளைக் காட்டுகின்றார். இவ்விரு வகை உரை முறைகளும் அவர் காலத்து நிலவிய உரைகூறும் மரபு என்று கருதலாம். தொல்காப்பியர் செய்யுளை ஏழாக வகுத்துக் கூறுகிறார். அவற்றுள் ஒன்று, செய்யுட்பகுதியாகிய பாட்டு. மற்றவை அடிவரையறையில்லாச் செய்யுள் பகுதிகள் ஆறு. அந்த ஆறனுள் ஒன்றாக உரைநடை வகையைக் கூறி, அதனை நான்காகக் கூறுவார்.

**பண்டைக் கால உரைநடை**

சங்க இலக்கியச் செய்யுள்களில் கீழ்க்காணப்பெறும் துறை, திணை விளக்கங்கள் ஆகிய பாடலின் குறிப்புகள் உரைநடையில் அமைந்துள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு,

**"பொருள் வயிற்பிரிந்த தலைவன் பருவம் உணர்ந்த**

**நெஞ்சிற்கு உரைத்தது" (நற்றிணை - 157)**

சங்க கால உரைநடை, செய்யுள் நடை போல் செறிவுடையதாகவும், அருஞ்சொற்கள் நிறைந்ததாகவும் உள்ளது.

**சிலப்பதிகார உரைநடை**

தமிழின் முதல் காப்பியம் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம். இதன் பதிகத்திலேயே, வாழ்த்து வரந்தரு காதையொடு இவ்வா றைந்தும் உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் என்ற குறிப்பு வருகிறது. 'உரை பெறு கட்டுரை', 'உரைப்பாட்டுமடை' என்னும் பெயர்களோடு இக்காப்பியத்தில் இடைஇடையே உரைநடை இடம் பெற்றுள்ளது. தமிழ் உரைநடையின் ஆரம்ப வடிவத்தை நாம் சிலப்பதிகாரத்திலே காணலாம். இக்காப்பியத்தில் உரைநடை இரண்டு காரணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

**உரைநடை வளர்ச்சி**

அச்சு இயந்திரங்களின் வரவால் தமிழில் முதலில் மலர்ச்சி பெற்றது உரைநடையே. பல வகையான கட்டுரை நூல்கள், சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்புகள், திறனாய்வு, உரையாசிரியர்கள் எனப் பல பிரிவுகளுள் உரைநடை வளர்ந்தது. 1904-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற தமிழ் உரைநடையின் வரலாறு என்ற (ர்ளைவழசல ழக வுயஅடை ீசழளந) ஆங்கில நூல் வி.எஸ்.செங்கல்வராய பிள்ளை என்பவரால் எழுதப்பட்டது. இனி, தமிழ் உரைநடை வளர்த்த சான்றோர்களைக் காண்போம்.

**உரைநடை வளர்த்த சான்றோர்கள்**

ராபர்ட்-டி.நொபிலி, அருளானந்த அடிகள், வீரமா முனிவர், கால்டுவெல், போப்ஜயர் என்பவர்களால் வளர்க்கப்பட்ட தமிழ் உரை நடையானது 19ஆம் நூற்றாண்டு முதல் விரைந்து சிறந்தது. ஆங்கிலேயர் ஆட்சி நாட்டில் நிலைபெற்ற பின் நாடெங்கும் அச்சகங்கள் தோன்றின. கிறித்துவ மிஷனரிகளும் இந்துக்களும் போட்டிபோட்டுக் கொண்டு நூல்களை வெளியிட்டனர். சென்னைக் கல்விச் சங்கமும் சென்னைப் புத்தகக் கழகமும் பாட நூல்களையும் மொழிபெயர்ப்புகளையும் வெளியிட்டதால் உரைநடை நல்ல நிலையை அடைந்தது.

**ஆறுமுக நாவலர்**

கற்ற பண்டிதர்க்கு ஒரு நடை, கல்லாத பாமரர் கேட்டு ரசிக்க ஒரு நடை, சமயக் கருத்துக்களைக் கூற ஒரு நடை என மூவகை நடை வீரமாமுனிவர் காலத்திலேயே வழங்கினாலும் இருபதாம் நூற்றாண்டின் உரைநடை வேந்தராக ஒளிர்பவர் ஆறுமுக நாவலர். இலக்கணப் பிழைகள் அற்ற எளிய, இனிய, தெளிந்த நடையைத் தோற்றுவித்ததால் இவரைதமிழ்க் காவலர் என்றும் தற்காலத் தமிழ் உரைநடையின் தந்தைஎன்றும் கூறுவர். இலங்கையைச் சார்ந்த ஆறுமுக நாவலர் உரைநடையை வளர்த்தாலும், தமிழகத்தில் உரைநடைக்கு உயிர் ஊட்டியவர் பாரதியார். என்றாலும் கவிதைத் துறை போல உரைநடையில் அவரால் புகழ்பெற இயலவில்லை. காலத்தின் போக்கிற்கு ஏற்ப, இவரும் வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதத் தயங்கவில்லை.

அச்சு இயந்திர அறிமுகம் தமிழ் உரைநடை வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது. அச்சடித்த உரைநடை நூல்கள் பல வருவதற்குப் பல அறிஞர்கள் காரணமாகத் திகழ்ந்தார்கள். அத்தகைய முன்னோடிகளாகிய தமிழறிஞர்களைப் பற்றி முதலில் பார்ப்போம்.

**வ.உ.சிதம்பரம்பிள்ளை**

வ.உ.சிதம்பரம் பிள்ளை தேச விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர்களும் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிந்திருக்கிறார்கள் பத்திரிகையாசிரியராகத் திகழ்ந்த வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள், மெய்யறிவு, மெய்யறம் என்ற நீதி நூல்களைத் திருக்குறள் கருத்துக்களை ஒட்டி விளக்கி எழுதியுள்ளார். மக்களுக்காகத் தொண்டு செய்ய ஆர்வமும், மேடைப்பேச்சுப் பயிற்சியும் இருந்தபடியால் வ. உ. சி யின் நடையில் நெகிழ்ச்சி காணப்படுகிறது என்கிறார் மு.வரதராசனார்.

**மறைமலையடிகள்**

வேதாச்சலம் என்னும் தமது இயற்பெயரை தமிழின் மீது கொண்ட பற்றினால் மறைமலை என்று மாற்றிக்கொண்டவர். இவரால் இயற்ற பெற்ற பல்வகை உரைநடை நூல்கள் பின்வருமாறு.

1) அறிவியல் நூல்கள் - மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை (2 பாகம்), பொருந்தும் உணவும் பொருந்தா உணவும், யோகநித்திரை அல்லது அறிதுயில், மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி.

2) நாவல் - குமுதவல்லி நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள்.

**திரு.வி.க**

தமிழாசிரியராக இருந்து பின் பத்திரிகை ஆசிரியராகி, தொழிலாளர் தலைவராகவும் விளங்கிய திரு.வி. கல்யாண சுந்தரனாரின் உரைநடை எளியது் இனியது. இவரது பத்திரிகைத் தமிழை, தேசபக்தன், நவசக்திஎன்ற பத்திரிகைகள் மூலம் அறியலாம். மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை,தமிழ்ச்சோலை என்ற நூல்களை எழுதியுள்ளார்.

**செல்வக்கேசவராய முதலியார்**

திருவள்ளுவர், கம்பநாடர், தமிழ்,தமிழ் வியாசங்கள், வியாசமஞ்சரி, கண்ணகிகதை, அவிநவக்கதைகள், பஞ்சலட்சணம் முதலிய நூல்களைப் பழமொழி கலந்த நடையில் எழுதித் தமிழுக்கு அழகும் மெருகும் தந்தார்.

**பேராசிரியர் பூரணலிங்கம்பிள்ளை**

தமிழ்க் கட்டுரைகள்,மருத்துவன் மகள், கதையும் கற்பனையும் என்ற நூல்களை எழுதியுள்ளார்.

**பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார்**

உரைநடைக் கோவை என்ற தனது நூலில் பழைய இலக்கியத்தில் உள்ள சொற்களைப் பயன்படுத்தி எழுதியுள்ளார். நீண்ட வாக்கியங்களை உடையது இவர் நடை.

**சோமசுந்தர பாரதியார்**

தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் தாயமுறை என்ற இரண்டு நூல்களை எழுதியுள்ளார்.

**பேராசிரியர். ரா.பி.சேதுப்பிள்ளை**

அழகான நடையில் 25க்கும் மேற்பட்ட உரைநடை நூல்களை எழுதியவர் . ஊரும்பேரும், வேலும் வில்லும், செந்தமிழும் கொடுந்தமிழும், தமிழின்பம், வீரமாநகர் என்பன அவரியற்றிய சில நூல்கள்.

**உ.வே.சாமிநாத அய்யர்.**

தமிழ்த் தாத்தா என்றழைக்கப்படும் உ.வே. சாமிநாத அய்யர் மணிமேகலை கதைச் சுருக்கம், புத்த தர்மம், உதயணன் கதைச்சுருக்கம் போன்ற பல உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**பேராசிரியர். எஸ்.வையாபுரிப் பிள்ளை**

வையாபுரிப் பிள்ளை தமிழ்ச்சுடர் மணிகள், சொற்கலை விருந்து, காவிய காலம், இலக்கியச் சிந்தனைகள், இலக்கிய உதயம்முதலிய உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**பாவணர்**

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோயிலில் 07.02.1902 -ல் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் ஞானமுத்து. தாயார் பரிபூரணம் அம்மையார் ஆவார். இவர் தந்தையார் ஞானமுத்து ஆசிரியராக இருந்தவர். பெற்றோர் பாவாணருக்கு இட்டபெயர் தேவநேசன் என்பதாகும். பாவாணர் தமிழகத்தில் பல இடங்களிலும் சென்று கல்வி கற்றோர். பல தமிழ்த் தேர்வுகளில் வெற்றி பெற்றார். தமிழில் வித்துவான், முதுகலை ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

## திராவிட வளர்த்த தமிழ்

திராவிட இயக்கத்தின் போராட்டத்துக்கு இதழ்கள் கருவிகளாகப் பயன்பட்டன. எவரும் துப்பாக்கி தூக்கவில்லை எழுதுகோல் தான் அவர்களின் இணையில்லா வேல்! இதழ்களையே போர்க்கருவிகளாகப் பயன் படுத்தி திராவிட இயக்கம் வெற்றி பெற்றது" என்று இதழாளர் அ.மா.சாமி கூறுகிறார்.

1916 நவம்பர் 20 ஆம் நாள் "தென்னிந்திய நல உரிமைச்சங்கம்" என்னும் அரசியல் கட்சி தொடங்கப்பட்டது. அதன் பிரச்சார ஆயு தங்களாக "Justice" எனும் ஆங்கில ஏடும், "திராவிடன்" எனும் தமிழ் ஏடும் "ஆந்திரப் பிரகாசிகா" எனும் தெலுங்கு ஏடும் தொடங் கப்பெற்றன. "துரளவஉைந" எனும் ஆங்கில ஏடு மக் களிடம் பெற்றிருந்த செல்வாக்கு காரண மாகத் தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக்கட்சி என்றே அழைக்கப்பட்டது. நீதிக் கட்சி சார்பாக 1917ஆம் ஆண்டு தோன்றிய நாளிதழே "திராவிடன்" ஆகும். 8 பக்கங் களில் வெளிவந்தது. தொடக்கத்தில் அதன் ஆசிரியர் திரு.என்.பக்தவத்சலம் ஆவார். 1923ஆம் ஆண்டில் திரு.ஏ.சண்முகம்பிள்ளை அதன் ஆசிரியராக இருந்தார். 1927ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் சில காலம்

வரையில் தந்தை பெரியார் ஆசிரியராக இருந்தார். தந்தை பெரியாருக்குப் பிறகு, திரு.சனக சங்கர கண்ணப்பர் ஆசிரியராக இருந்து, பத்திரிகை நிறுத்தப்படும் வரை (1931) அதனை நடத்தி வந்தார்.

பேராசிரியர் மா.ரா.இளங்கோவன் எழுதிய ”முதல் நாளிதழ்கள் மூன்று” என்னும் நூலில், ”திராவிடன் நாளிதழ் சாதிப்பாகுபாடுகளைப் போக்குவதிலும், மக்களிடையே மண்டிக் கிடந்த மூட நம்பிக்கைகளை அகற்றுவதிலும் பேரார்வம் காட்டியது” என்று குறிப்பிடப்பட் டுள்ளது. தமிழில் வெளிவந்த முதல் மூன்று நாளிதழ்களில், ”திராவிடன்” நாளிதழும் ஒன்றாகும்.

”திராவிடன்” நாளிதழ் தோன்றுவதற்கான காரணத்தைக் கூற வந்த தந்தை பெரியார், ”படித்திருந்த பிராமணரல்லாதார் சிலர், .தாங்கள் ஏன் தாழ்த்தப்பட்டுக்கிடக்கின்றோம் என்று யோசனை செய்து பார்த்ததில், இப் பிராமணப் பத்திரிகைகளும், கட்டுப்பாடான பிராமண சூழ்ச்சிகளுமே இதற்குக் காரணம் என்று கண்டுபிடித்து, தாங்களும் மற்றவர் களைப் போல முன்னேறுவதற்குத் தங் களுக்கும் பிரச்சாரத்திற்கு ஒரு பத்திரிகை வேண்டும் என்று கருதி. ”திராவிடன்” பத்திரிகையை ஏற்படுத்தினார்கள்.” - என்று திராவிடன் (மலர் 13 இதழ் 196) இதழில் எழுதியுள்ளார்.

தாம் நடத்திய ”குடியரசு” (30.1.1927) இதழி லும் ”திராவிடனை ஆதரிக்க வேண்டும்” என்ற தலைப்பில் ஒரு வேண்டுகோளையே விடுத்துள்ளார் தந்தை பெரியார்.

**இதழாளர் பெரியார்**

குடிஅரசு, புரட்சி, பகுத்தறிவு, விடுதலை, உண்மை ஆகிய தமிழ் இதழ்களின் மூலம் சுய மரியாதைச் சிந்தனைகளை விதைத்தவர் தந்தை பெரியார். Revolt> The Modern Rationalist என்னும் ஆங்கில இதழ்களையும் கருத்துப் பரவலுக்காக அவர் நடத்தியுள்ளார். 2-5-1925 அன்று ”குடியரசு” மாத இதழை பெரியார் தொடங்கினார். அதன் பதிவு எண்.241 தனிப் பிரதி விலை உள்நாடு 1 அணா. வெளிநாடு 1லு அணா. ”புரட்சி” ஞாயிறு தோறும் 20 பக்கங்களுடன் வெளிவந்தது. அதன் பதிவு எண். வி2992. தனிப்பிரதி விலை ஒரு அணா தொடக்கத்தில் சா.ரா.கண்ணம்மாள் அவர் களால்

வெளியிடப்பட்டது. முதலில் ஈ.வெ. ராமசாமி பின்னர் ஈ.வெ. கிருஷ்ண சாமி ஆசிரியர்களாக இருந்துள்ளனர். உண்மை விளக்க அச்சகத்தில் அச்சிடப்பட் டது. ”பகுத் தறிவு” இதழ், அறிவை வளர்க்கும் ஒரு மாத வெளியீடாகும். தனிப்பிரதி விலை 1லு அணா,

**”அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**

**என் உடைய ரேனும் இலர்”**

என்னும் திருக்குறள் ஒவ்வொரு இதழ் முகப்பிலும் இடம் பெற்றது. உண்மை விளக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஈ.வெ.கிருஷ் ணசாமியால் வெளியிடப்பட்டது.

”உண்மை” பகுத்தறிவு மாத இதழாக வெளிவந்தது. (1970) விலை 25 காசு. ஆண்டுச் சந்தா ரூ.3.00 பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் சார்பாக திருச்சி, புத்தூர் அறிவுக்கடல் அச்சகத்தில் திருமதி. ஈ.வெ.ரா.மணியம்மையார் அவர்களால் அச்சிடப்பட்டு, புலவர் கோ.இமயவரம்பன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது.

”தலையங்கம் என்பது இதழின் உடலும் உயிரும் ஆகும். இதழாசிரியர் சிக்கல்களை ஆய்வதுடன், தெளிவாக, துணிவாக, பயன் விளையும் வகையில் தமது கருத்தினை வெளியிடல் வேண்டும்” என்பார் வினோத் மேத்தா.

**குடிஅரசு (22.8.1928) இதழின் தலையங்கம்**

”ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்ப தைப் பெண்கள் மறந்துவிடக்கூடாது. பெண்களால் ஆண்மை என்ற தத்துவம் அழிக்கப்பட்டால் அல்லாது பெண் விடுதலை இல்லை என்பது உறுதி. .

பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாய் இருக்கிறார்கள். ஏனெ னில், தங்களுடைய இயற்கைத் தத்துவங் களின் தன்மையையே தங்களை ஆண் களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்திருப்

பதின் அறிகுறியாயப் பெண்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்" என்று "பெண் விடுதலை" பற்றிய கருத்தை அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறது.

**'குடிஅரசு' (29.7.1928) இதழின் தலையங்கம்**

"பல்லாவரத்துப் பண்டிதர்" என்னும் தலைப்பில், ஒரு கூட்டத்தில் மறைமலைடிய களார் தந்தை பெரியாரையும் சுயமரியாதை இயக்கத்தையும் கடுமையாகத் தாக்கிப் பேசி யதாக இதழ்களில் வெளிவந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு ஓர் எச்சரிக்கை விடுப்பதாக அமைந்தது. அதற்கு மறைமலை யடிகளார் "தங்களுக்காவது, தங்கள் இயக் கத்தைச் சார்ந்த அன்பர்களுக்காவது எவ் வகையான தீங்கும் செய்ய அல்லது செய் விக்க வேண்டுமென்று யான் எண்ணியதும் இல்லை யாண்டும் சொல்லியதுமில்லை, தாங்கள் என்னை வேறாக நினைத்து என்மீது வருந்துதல் வேண்டாம்" என்று 24.8.1928 நாளிட்ட கடிதம் மூலம் தனது கருத்தைத் தெரிவித்தார். அக்கடிதத்திற்கு குடிஅரசு (2.9.1928) இதழின் தலையங்கத்தில் பதில் தெரிவிக்கப்பட்டது.

"திரு. வேதாசலம் அவர் கள் தமிழ்நாட்டில் செல்வாக்கும் மதிப்பும் பெற்ற பண்டிதர் என்பதாக நாம் கருதி வந்ததால், பத்திரிகைகளிலும் நிரூபங்களிலும் கண்டவற்றுக்குச் சமாதானம் எழுதுவது என்பது நமக்குச் சற்று சங்கடமாகவே இருக்கிறது. .திரு.வேதாசலம் அவர்களிட மிருந்து ஏதாவது ஒரு தகவல் கிடைத்தால் அதை ஆதாரமாக வைத்தே அவ்விஷயங் களை நழுவ விட்டு விடலாம் என்றும் கருதி எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்" என்று அப்பதில் அமைந்தது. "குடிஅரசு" எதிர் பார்த்தது போல, மறைமலையடிகளாரிடமி ருந்து பதிலும் வந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

**குடிஅரசு (17.6.1928) இதழின் தலையங்கம்**

"நவசக்தி முதலியாரின் நாணயம்" என் னும் தலைப்புடன் அமைந்தது. அதற்கு "நவசக்தி" இதழில் "குடிஅரசின் குதர்க்கம்" என்னும் தலையங்கம் திரு.வி.க. அவர்களால் எழுதப்பெற்றது. அதில், நவசக்தியில் தோன் றிய "சீர்திருத்தம்" என்னும்

கட்டுரை பொது நெறி பற்றி எழுதப்பட்டதே தவிர, குடிஅரசின் ஆசிரியரையோ, அதன் இயக்கத்தையோ உளம் கொண்டு எழுதவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார். "இப்படி திரு.முதலியார் எழுதி மறையப்பார்ப்பார் என்று நாமும் நண்பர்களும் முன்னமே நினைத்ததுதான்" என்று "குடிஅரசு" தலையங்கம் கருத்துத் தெரிவித்தது. இவற்றின் மூலம், தனித்தமிழ றிஞர் மறைமலையடிகளார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஆகிய இருவரும் "குடிஅரசு" இதழோடு கருத்துப்போர் நிகழ்த்தியுள்ளார் கள் என்னும் வரலாற்றுப் பதிவு நமக்குத் தெரியவருகிறது. "புரட்சி" (26.11.1933) இதழின் தலையங்கமே, "புரட்சி தோன்றியதற்கான காரணத்தைக் கூறுகிறது. "குடிஅரசை ஒழிக்கச் செய்த முயற்சியால் புரட்சி தோன்ற வேண்டியதாயிற்று. "புரட்சி"யைப் புரட்சியில் பற்றுள்ள மக்கள் யாவரும் வரவேற்பார்கள் என்பதில் சிறிதும் அய்யமில்லை. "சகல முத லாளி வர்க்கமும், சர்வ சமயங்களும் அடி யோடு அழிந்து, மக்கள் யாவரும் சுயமரியா தையுடன் ஆண், பெண் அடங்கலும் சர்வ சமத்துவமாய் வாழச் செய்ய வேண்டும் என்பதற்காக புரட்சி செய்யவே, "புரட்சி தோன்றியிருக்கிறது" என்பதுவே அத்தலை யங்கத்தின் சுருக்கம்.

"உண்மை (4.1.1970) இதழின் தலையங்கம் தந்தை பெரியாரே தீட்டியது. "உண்மை என்னும் பெயரால் ஒரு மாதப்பத்திரிகை 1970ஆம் ஆண்டு முதல் துவக்குகிறேன். அதற்குக்கொள்கை, மக்களைப் பகுத்தறிவு வாதிகளாக ஆக்க வேண்டும் என்பதாகும். உண்மையின் தொண்டு எதிர்நீச்சல் தொண் டேயாகும். உண்மை நாத்திகப் பத்திரிகை தான் அதற்காக யாரும் பயப்படாதீர்கள் நாத்திகம் கூடாததல்ல் இல்லாததல்ல் நடக்க வேண்டாததுமல்ல" என்று "உண்மை" இதழ் பற்றிய உண்மை உரைக்கப்பட்டுள்ளது. 1.1.1973 முதல் சென்னை பெரியார் திடலில் திராவிடன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது.

**"உண்மை" (14.9.1973) இதழின் தலையங்கம்**

தந்தை பெரியாரின் வாக்கு மூலமாகவே அமைந்து சிறக்கிறது. எனக்கு (நான் பிறந்து) நாளது செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி யோடு 93 ஆண்டு முடிவடைந்து, 94 ஆம் ஆண்டு முதல் நாள் தோன்றிவிட்டது. 93 ஆண்டு என்றால் நான் பிறந்து,

மாதங்களில் 1116 மாதங்கள் நாட்களில் 34045 நாள்கள் பிறை களில் (அமாவாசைகளும்) 1635 ஏற்பட்டு மறைந்து விட்டன.

எனவே நான் 93 ஆண்டு வாழ்ந்ததை வீண்வாழ்வு என்று கருதவில்லை என் பணிகளை வீண்பணி என்றும் கருதவில்லை. இனிமேலும் வாழ்வதைத்தான் கஷ்டமாகக் கருதுகிறேன். என் உடல் நிலைமை மிக மோச மாகி விட்டது. நினைவு சரியாக இல்லை. மறதி அதிகம் கண், காது சரியாக இல்லை. கால்கள் நடக்கவே முடிவதில்லை, அசதி அதிகம். மற்றபடி மகிழ்ச்சியோடு இதை முடிக்கிறேன்" என்று அந்தத் தலையங்கம் தந்தை பெரியாரே பேசுவதுபோல அமைந்துள்ளது.

1.1.1976 முதல் "நிறுவனர் தந்தை பெரியார்". உண்மை மாதம் இருமுறை இதழாக வெளி வருகிறது. ஆசிரியர்: கி.வீரமணி. "சமுதாய மாற்றத் துக்கான ஒரு வாழ்வியல் இதழ்" என்னும் குறிப்பு இதழில் இடம் பெற்றுள்ளது. குடிஅரசு (18.11.1928) தலையங்கம், "பாஞ் சால சிங்கம்" என்னும் தலைப்பில் லாலா லஜபதிராய் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தது.

"புரட்சி" (11.2.1934) இதழின் தலையங்கம், "பத்திரிகாசிரியர் ஏ.ரங்கசாமி அய்யங்கார் மரணம்" என்னும் தலைப்பில் "சுதேசமித் திரன்" ஆங்கிலப் பத்திரிகை "தி இந்து" ஆகிய வற்றின் வாயிலாக ஏ. ரங்கசாமி அய்யங்கார் மக்களுக்கு ஆற்றிய மகத்தான தொண்டினை நினைவு கூர்ந்து, அவர்தம் குடும்பத்தார் களுக்கு மனமார்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொண்டது. இந்த இரண்டு இரங்கல் தலை யங்கங்களும் தந்தை பெரியாரின் உயர்ந்த உள்ளத்தை உலகுக்கு உணர்த்துவதாக உள்ளன.

பகுத்தறிவு, புரட்சி, உண்மை ஆகிய இதழ்களின் முகப்புகளில் கவிதைகளைத் தாங்கி வெளிவந்தவையும் உண்டு. "பகுத் தறிவு" (1.4.1938) இதழின் முகப்பில் கைம்மை நீக்கம் என்னும் தலைப்பில் பாரதிதாசன் பாடல் இடம் பெற்றுள்ளது.

**பல்லவி**

**நீ எனக்கும், உனக்கு நானும் -இனி**

**நேருக்கு நேர் தித்திக்கும் பாலும் தேனும் (நீ)**

**சரணம்**

**கைம் பெண் என் றெண்ணம் கொண்டே**

**கலங்கி னாயோ, கற்கண்டே**

**காடு வேகுவதை ஒரு மொழியினில்**

**மூடி போட முடியுமோ? உரையடி (நீ)**

புரட்சி (18.2.1934) இதழின் முகப்பில் ”தொழிலாளர் வாழ்வு” என்னும் தலைப்பில் தோழர் ப.ஜீவானந்தம் கவிதை இடம் பெற்றுள்ளது.

”உண்மை (14.9.1970) இதழின் முகப்பில் ”நம் பெரியார் வாழ்கவே!” என்னும் தலைப்பில் பாவேந்தர் பாரதிதாசன் கவிதை இடம் பெற்றுள்ளது.

**”தமிழன் மானம் தவிடுபொடி ஆகையில்**

**வாழாது வாழ்ந்தவன் வடுச்சுமந்து சாகையில்**

**ஆ! என்று துள்ளி மார்பு தட்டிச்**

**சாவென்று வாழ்வொன்று பார்ப்பேன் என்று**

**பார்ப்பனக் கோட்டையை நோக்கிப் பாயும் இவ்**

**வருஞ்செயல் செய்வார் அல்லால்**

**பெரியர் எவர்? நம்**

**பெரியார் வாழ்கவே”**

பகுத்தறிவு (1.8.1938) இதழின் முகப்பில் “சுதந்திர கீதம்” என்னும் தலைப்பில் கோலா லம்பூர் க.இராஜகோபால் பாடிய பாடல் இடம் பெற்றுள்ளது.

**பல்லவி**

சுயமரியாதை வேண்டும்-மக்கள்

சுதந்திரம் பெற வேண்டும் வேறென்ன வேண்டும்? (சுய)

**அநுபல்லவி**

அடிமை வாழுலகினில்

அகன்றிட வேண்டும்

அறியாமை யொழிய வேண்டும் வேறென்ன வேண்டும்? (சுய)

இவ்வாறு பல இதழ்களின் முகப்புகளில் பலர் எழுதிய கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

குடிஅரசு, புரட்சி இதழ்களில் மக்களை விழிப்படையச் செய்யும் சொற்றொடர்கள் இடம் பெற்று எழுச்சியை ஊட்டுகின்றன.

**சுயமரியாதை பெற்றால்**

**சுயராஜ்யம் பெறலாம்" குடிஅரசு 12.8.1928 பக்கம் 16**

**கடவுளை வணங்கத்**

**தரகர் வேண்டுமா?" குடிஅரசு 4.11.1928 பக்கம் 15**

**புத்தி உடையவனே புத்தன்**

**சிந்திப்பவனே சித்தன்" உண்மை 14.9.1970**

**கடவுளை மற, மனிதனை நினை! (உண்மை 14.6.1971**

அனைத்து இதழ்களிலும் தரமான பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சாமிசிதம்பரனார் எழுதிய "பிறனில் விழையாமையும் திருவள்ளுவரும்" என்னும் கட்டுரை குடிஅரசு 15.7.1928 இதழில் 4ஆம் பக்கம் வெளிவந்துள்ளது. சாமிசிதம்பரனார் எழுதிய "பொறுமையும் திருவள்ளுவரும்" என்னும் கட்டுரை "குடி அரசு" 5.8.1928 இதழில் 6 ஆம் பக்கத்தில் வெளி வந்துள்ளது. இங்ஙனம் சுய சிந்தனை யைத் தூண்டும் வகையில் வெளிவந்துள்ள அரிய கட்டுரைகள் பலவாகும்.

"பகுத்தறிவு" (1.5.1938) இதழில் வெளிவந்த "கிண்டல் துணுக்கு" சிந்திக்கத் தூண்டும் வகை யில் உள்ளது. கே.தில்லை நடராஜன் என்பவர் பிரார்த்தனை, என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். கந்தன்: கடவுளுக்குப் பிரார்த்தனை செலுத்துபவர்கள் மயிரை மட்டும் கொடுப்ப தேன்? கண், காது, மூக்கு, கை, கால் இவை களில் ஒன்றை ஏன் கடவுளுக்குச் சமர்ப்பிக் கலாகாது

குடிஅரசு, புரட்சி இதழ்களில் மாநாட்டு உரைகள் இடம் பெற்றுள்ளன. குடிஅரசு 27.5. 1928 இதழில் (பக்கம்9) "செங்கற்பட்டு ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர் மாநாடு திரு.ஈ.வெ. ராமசாமி நாயக்கரின் அக்கிராசனப் பிரசங் கம்" என்னும் தலைப்பில் பேச்சு வெளி வந்துள்ளது.

திரு.வி.கலியாணசுந்தர னார், "சுயமரியாதை இயக்கத்திற்கு நாயக்கர் அவர்கள் தந்தையாவார் நான் தாயாவேன். நாங்களிருவரும் மாயவரம் சமரச சன்மார்க் கக் கூட்டத்தில் சேர்ந்து பெற்ற பிள்ளையே சுயமரியாதை இயக்கமாகும். அக்குழந்தை தாயுடன் வாழாது, இதுகாறும் தந்தையுடன் சேர்ந்து வாழுகிறது என்றாலும் அதன் வளர்ச் சியைக் கண்டு யான் பெரு மகிழ்ச்சியடை கின்றேன்" என்று குறிப்பிட்டுப் பேசியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

"குடியரசு" இதழ்களில் ஒடுக்கப்பட்ட, அழுத்தப்பட்ட "சாதிகளின்" நிகழ்வுகள் முக்கி யத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டுள்ளன. "குடிஅரசு" 15.1.1928 இதழில் "பதினோறாவது ஆதிதிராவிட மகாநாடு நிறைவேற்றிய தீர் மானங்கள் என்னும் தலைப்பில் செய்தி வெளிவந்துள்ளது.

"குடிஅரசு 14.10.1928 இதழில் "தென்னிந் திய மருத்துவர் மூன்றாவது கான்பரன்ஸ் - மூன்றாவது அறிக்கை" டாக்டர் எம்.பி.சங்கர சுப்பு பிள்ளை, பத்தமடை (சேர்மாதேவி) என்னும் செய்தி வெளிவந்துள்ளது.

"குடிஅரசு 2.9.1928 இதழில் "பினாங்கு மருத்துவ குலசங்கம்" பற்றிய செய்தி வெளி யாகியுள்ளது.

"குடிஅரசு இதழ்களில் நூல் மதிப்புரை களும் இடம் பெற்றன. "குடியரசு 6.5.1928 இதழில் (பக்கம்.17) "சோளர் சரித்திரம் முதற் பக்கம்-கள்ளர் சரித்திரம்" இந்நூல் பண்டிதர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களால் இயற்றப்பட்டது.

"குடிஅரசு 28.10.1928 இதழில் (பக்கம்15)

(1) ”தப்பிலி” இந்நூல் திரு.மு. சி. பூரண லிங்கம் பிள்ளை, பி.ஏ.எல்.டி அவர்களால் எழு தப்பட்டது. இதனை திருக்குறள் ஆராய்ச்சி நூல் என்றே கருதலாம். இதன் விலை 10 அணா.

(2) இராவணன் ஆங்கிலநூல்: இதனை எழுதியவர் திரு.மு.சி.பூரணலிங்கம் அவர்கள். இந்நூல் இராவணன் தமிழ் மகன் என்பற் கான ஆதாரங்களைக் கொண்டுள்ளது.

”புரட்சி 11.2.1934 இதழில் (பக்கம்4) ”ஏழை கள் சிரிக்கிறார்கள். இதயம் எப்படி இருக்கிறது? என்ற சிறுகதை வெளிவந்துள்ளது. அதை எழுதியவர் பாரதிதாசன் ஆவார். பகுத்தறிவு 6.1.1925 இதழில்தான் தமது எழுத்துச்சீர்திருத்தத்தை முதன் முதலாக நடைமுறைக்குக் கொண்டு வந்தார் தந்தை பெரியார்.

1.6.1935 முதல் ”விடுதலை” வாரம் இரு முறை இதழாக நீதிக்கட்சி சார்பில் வெளி வந்தது. அதன் ஆசிரியர் டி.ஏ.வி.நாதன். விலை, அரையணா 3.7.1937 முதல் சென்னை யிலிருந்து நாளிதழாக வெளிவந்தது. அப்போது அதன் ஆசிரியர் பண்டிதர் எஸ்.முத்துசாமிப் பிள்ளை. 1939ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா ”விடுதலை” இதழின் ஆசிரியராக இருந்தார். 1941ஆம் ஆண்டு அண்ணா விலகிக் கொண்டார்.

”விடுதலை” ஆசிரியராக அண்ணா இருந்த காலத்தில்தான், ”மறைந்தாயோ செல்வமே“ என்ற தலைப்பில் ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பற்றித் தலையங்கம் எழுதினார். மேலும் அண்ணா எழுதிய ”அதிர்ச்சி வைத்தியம்” ”கல்கத்தா காய்ச்சல்” போன்ற தலையங்கங்கள் புகழ் பெற்றவை. அண் ணாவின் எழுத்தால் விடுதலை படிப்போர் எண்ணிக்கை பெருகியது.

12.9.1943 முதல் 30.9.1945 வரை யுத்தப் பிரச்சாரத்திற்காக விடுதலை இதழ் வழங்கப் பட்டது. அப்போது அதன் ஆசிரியர் குத்தூசி குருசாமி. யுத்தப் பிரச்சாரத்திற்கு வழங்கப்பட்ட ”விடுதலை” இதழ். மீண்டும் 6.6.1946 முதல் தந்தை பெரியாரின் பொறுப்புக்கு வந்தது. அப்போது அதன் ஆசிரியர் கே.ஏ.மணி

(மணியம்மையார்) பதிவு எண்.4739 தற் பொழுது ”விடுதலை” ஆசிரியர் கி.வீரமணி. கவிஞர் கலி.பூங்குன்றன் பொறுப்பாசிரியராக இருந்து கவனித்துக்கொள்கிறார்.

”பெரியார் பிஞ்சு” என்னும் சிறுவருக் கான பகுத்தறிவு இதழும் பெரியார் திடலி லிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. தந்தை பெரியாரின் இதழ்களில் பல வடசொற்கள் இடம் பெற்றுள்ளன. அக்கி ராசனப் பிரசங்கம், விஜயம், கஷ்ட நஷ்டம், அய்தீகம், ஆக்ஷி முதலானவை சில எடுத்துக்காட்டுகள். ஆனாலும் தந்தை பெரியாரின் தமிழ்நடை ஒரு தனிநடை மக்களுக்குப் புரியும் எளிய நடை.

”பெரியார் அவர்கள் மிகுதியான அளவுக்குத் தமிழை இந்த நூற்றாண்டில் பயன்படுத்திய பெருமைக்குரியவர். அவர் கையாண்ட மொழிநடை தனித்தமிழ் மொழி நடை அல்ல் அது மணிப்பிரவாளமொழி நடையும் அல்ல, அது வேறு ஒரு நடை” என்று தமிழறிஞர் முனைவர் பொற்கோ கூறுவது உளங்கொள்ளத் தக்கதாகும்.

”வாக்கு வன்மையிலும் வாதத் திறமை யிலும் பெரியாருக்கு இணையானவர் தமிழ் நாட்டில் இன்னொருவர் உண்டா என்பது சந்தேகம். எழுதுவதில்தான் என்ன? சில பிழைகளுடன் எழுதினாலும், அவர் எழுது வது நேரே வாசகர்களின் உள்ளத்தில் போய்த் தைக்கும்” என்று ”ஆனந்த விகடன்” இதழ் தந்தை பெரியாரின் எழுத்து வன்மையை எடுத்துக் கூறுகிறது. இதழாளர் பெரியார் என்றென்றும் மக்கள் இதயங்களில் இருப்பார்.

**வினாக்கள்**

1. குறவஞ்சி இலக்கியத்தின் சிறப்புகளை விளக்கிக் கூறுக?
2. கலம்பகம் என்பதன் பொருள் யாது ? விளக்குக?
3. உலா இலக்கியத்தின் சிறப்பியல்புகளை விளக்குக?
4. பரணி என்றால் என்ன? இலக்கணம் தருக?
5. பள்ளு இலக்கியத்தின் தோற்றம் குறித்து விவரிக்க?
7. பிள்ளைத் தமிழின் இலக்கணமும், அதன் அமைப்பும் வகைமைகளையும் விளக்குக?

8. தமிழில் தூது இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரித்து எழுதுக.

9. அந்தாதி என்றால் என்ன? தமிழில் இடம்பெற்றுள்ள அந்தாதி நூல்களை பட்டியலிடுக?

10. மரபுக்கவிஞர்களில் பாரதியார், பாரதிதாசன் குறித்து எழுதுக?

12. நாடக இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக?

13. தமிழின் தொன்மைக் குறித்து விவரிக்க?

14. உரைநடை என்றால் என்ன? அதன் வளர்ச்சி பற்றியும், உரைநடை எழுதிய ஆசிரியர்கள் குறித்தும் எழுதுக?

15. கலைஞர் கருணாநிதி இதழியல் துறைக்கு ஆற்றிய தொண்டினைத் தொகுத்துரைக்க?

# அலகு - 2

## கலிங்கத்துப் பரணி

**பாடல் எண் 1**

**“விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண**
**மேன்மேலும் முகம்மலரும் மேலோர் போலப்**
**பருந்தினமுங் கழுகினமும் தாமே உண்ணப்**
**பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் பார்மின்” (478)**

**விளக்கம்**

விருந்தினர்களும், ஏழைகளும் தொடர்ந்து வந்து உணவு உண்பதைக் கண்ட மேன்மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவர். அதுபோல பருந்துக் கூட்டமும், கழுகுக் கூட்டமும் தம் உடலைக் கொத்தித் தின்பதைக் கண்டு இறந்து கிடக்கும் வீரர்களின் திருமுகங்கள், தாமரை மலர்போல மகிழ்ச்சியால் மலர்ந்திருப்பதைக் காணுங்கள்.

**பாடல் எண் 2**

**“சாம் அளவும் பிறர்க்கு உதவா தவரை நச்சிச்**
**சாருநர்போல் வீரர் உடல் தரிக்கும் ஆவி**
**போம் அளவும் அவர் அருகே இருந்து விட்டுப்**
**போகாத நரிக்குலத்தின் புணர்ச்சி காண்மின்” (479)**

**விளக்கம்**

பிறர்க்கு எதையும் கொடுத்து உதவாதவர் இறக்கும் வரையில் அவரைச் சுற்றிக் காத்திருந்து, அவர் இறந்த பின்பு அவருடைய பொருள்களைக் கவர்ந்து செல்லும் பேதைகளைப் போல, வீரர்கள் உயிரோடு இருக்கும் வரையில் அவர்கள் அருகிலேயே இருந்து விட்டு, உயிர் போன பின்பும் கூட அவர்களை விட்டு அகலாமல் இருக்கின்ற நரிக்கூட்டத்தைப் பாருங்கள்.

## களத்தே வீழ்ந்து கிடக்கும் யானை இயல்பு

**பாடல் எண் 3**

**“மாமழைபோல் பொழிகின்ற தான வாரி**
**மறித்துவிழும் கடகளிற்றை வெறுத்து வானோர்**
**பூமழைபோல் பாய்ந்து எழுந்து நிரந்த வண்டு**
**பொருட்பெண்டிர் போன்றமையும் காண்மின் காண்மின்” (480)**

**விளக்கம்**

யானைகள் உயிருடன் இருந்தவரை, அதன் மதநீரை உண்ட வண்டுகள் மதயானைகள் இறந்ததும், அவற்றை வெறுத்து ஒதுக்கிவிட்டு, வானுலகத்தவர் மன்னன் பெற்ற வெற்றி கண்டு பூ மழை பொழிய, அந்தப் பூக்களில் உள்ள தேனை உண்ண வண்டுகள் எல்லாம் மேலே பறந்து சென்று விட்டன. இது பொருள் உள்ளவரை ஒருவருடன் கூடி இருந்து விட்டு அவன் பொருள் எல்லாம் தீர்ந்தவுடன் அவனை விட்டு நீங்கி வேறு ஒருவனைத் தேடி அடையும் விலைமகளிரைப் போன்றது. அதையும் காணுங்கள்.

## கொடியோடு வீழ்ந்து கிடக்கும் யானைகளைக் கூறியது

**பாடல் 4**

**“சாய்ந்துவிழுங் கடகளிற்றி னுடனே சாய்ந்து**
**தடங்குருதி மிசைப்படியுங் கொடிகள் தங்கள்**
**காந்தருடன் கனல் அமளி அதன்மேல் வைகும்**
**கற்புடைமாதரை ஒத்தல் காண்மின் காண்மின்” (481)**

**விளக்கம்**

போர்க்களத்தில் உயிர் நீத்து விழுந்து கிடக்கும் மத யானைகளுடன், மன்னர்களின் கொடிகள் பிணைந்து கிடக்கின்றன. இக்காட்சி உயிர் நீங்கிய தங்கள் கணவர்களுடன் நெருப்பில் உடன்கட்டை ஏறிய பெண்கள் போல் இருக்கிறது. அதையும் காணுங்கள்.

**கணவரைத் தேடிய மனைவியர் செயல்**

**பாடல் 5**

**"தம் கணவருடன் தாமும் போக என்றே**
**சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்**
**எம் கணவர் கிடந்த இடம் எங்கே என்று என்று**
**இடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின்"** **(482)**

**விளக்கம்**

கற்புடைய மகளிர் போரில் இறந்துவிட்ட தங்கள் கணவருடன் தாமும் வீர சொர்க்கம் போக வேண்டும் என்று எண்ணி, போர்க்களம் முழுவதும் தங்கள் கணவர் உடலைத் தம் கைகளால் தேடவித் தேடுவர். தேடியும் காணா முடியாத நிலையில் பிணங்களைத் தின்னும் இடாகினிப் பேயிடம், எம் கணவர் உடல் கிடக்கும் இடம் எங்கே என்று கேட்பதைக் காணுங்கள்.

## திருக்குற்றாலக் குறவஞ்சி

திருக்குற்றாலக் குறவஞ்சி தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தமிழ்நாட்டின் தென்கோடியில் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து அங்குள்ள ஈசரான குற்றாலநாதரைப் போற்றி, தெய்வக் காதல் பற்றிய கற்பனையை அமைத்துப் பாடப்பெற்ற நூல் ஆகும்.

**நூலாசிரியர்**

குறவஞ்சி நாடகம் என்று போற்றப்படும் இந்நூல் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக்கு அருகில் உள்ள மேலகரம் என்னும் ஊரைச் சார்ந்தவர். திருக்குற்றாலநாதரின் முன்னிலையில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது.

**கதை அமைப்பு**

குறவஞ்சி நாடகத்திற்கென வரையறை செய்யப்பட்ட கதை அமைப்போடே இந்நூலும் விளங்குகிறது. குற்றாலநாதரின் திருவுலா எழுச்சியைக் குறித்து முன்னரே கட்டியங்காரன் கூறுகிறான். திருவுலா தொடங்குகிறது. மூவர் தமிழும் நான்மறைகள் முழங்க குற்றலாநாதர் வீதியில் உலா வருகிறார். குற்றாலநாதாரின் திருவுலாவைக் காண பெண்கள் எழுந்து வருகின்றனர். அப்பொழுது பந்து ஆடிக்கொண்டிருந்த வசந்தவல்லி (கதைத்தலைவி) என்பவளும் திருவுலாக்காண வருகிறாள். தோழியின் வாயிலாக இறைவனைப் பற்றி அறிந்த வசந்தவல்லி இறைவன் மீது காதல்கொண்டு தோழியைத் தூதனுப்புகிறாள். இந்நிலையில் குறிசொல்லும் குறத்தி தெருவழியே வருகிறாள். தோழி அவளைக் குறிசொல்ல அழைத்தவுடன் குறப்பெண் தன்நாட்டு மலைவளமும் தொழில்வளமும் சிறப்பாக எடுத்துக்கூறுகிறாள். பின் வசந்தவல்லி கையைப் பார்த்து அவள் குற்றாலநாதர் காதல் கொண்டுள்ள செய்தியையும், (தலைவனின்) குற்றாலநாதரின் புகழ்பற்றியும் எடுத்துச் சொல்லி வசந்தவல்லியின் எண்ணம் நிறைவேறும் என்று குறி சொல்லிப் பரிசு பெறுகிறாள் குறத்தி தலைவி. அவள் கணவன் தலைவன் அவளைக் காணத் தேடிவருகிறான். குறத்தியைக் கண்ட தலைவன் குறத்தி நடந்ததைச் சொல்ல இருவரும் குற்றாலநாதரைப் பாடி இன்பம் அடைகின்றனர். இவ்வாறு கதை முடிகிறது.

**நூலின் சிறப்புகள்**

குறவஞ்சி நூல்களுள் பாராட்டுக்குரியதாக விளங்கி வருவதும், இன்றும் நாட்டிய நாடகமாக மேடைகளில் நடிக்கப்பட்டு வருவதும், இக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். குற்றாலக் குறவஞ்சியானது இறைவன்மீது பாடப்பெற்றதால் திருக்குற்றாலக் குறவஞ்சி எனும் பெயர் பெற்றது. நாடகச்சுவை நிரம்பிய இந்நூல் சந்த (ஓசை) நயத்தோடு கூடிய பாடல்களையும் கற்பனை நயம் கொண்ட பாடல்களையும் நிரம்பப் பெற்றுள்ளது.

**குறத்தி மலைவளம் கூறுதல்**

**“வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**

**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**

**கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்**

**கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**

**தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்**

**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**

**கூனலிளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்**

**குற்றாலத்திரிகூட மலைஎங்கள் மலையே”**

**விளக்கம்**

ஆண்குரங்குகள் பழங்களைப் பறித்துப் பெண் குரங்குகளுக்குக் கொடுத்துக் கொஞ்சுகின்றன. அவற்றுள் சில பழங்களைப் பெண் குரங்குகள் கீழே சிந்துகின்றன. ஆனால், பழங்களைச் சிந்தாமல் அவற்றை எங்களுக்குத் தரக் கூடாதா என வானுலக மாந்தர்கள் கேட்கின்றனர். அவர்களைப் பார்த்து கானக மக்கள், நீங்கள் விரும்பும் பழங்கள் கனிந்து குலுங்கும் எமது குற்றால மலைக்கு வாருங்கள் என அழைக்கின்றனர். வானத்தில் செல்ல வல்ல சித்தர்கள் குற்றால மலையின் வளங்களைக் கண்டு, அங்கு வந்து தங்கள் சித்து வேலைகளைச் செய்து காண்பித்து கானக மக்களை மகிழ்விக்கின்றனர் ! மலையிலிருந்து கொட்டுகின்ற அருவியின் திவலைகள் எழுந்து வானத்தில் வழிந்து ஓடுகின்றன. இதனால் சூரிய தேவனின் தேரினை இழுத்துச் செல்லும் குதிரைகளுடைய கால்களும் தேர்ச் சக்கரங்களும் வழுக்கிச் சறுக்குகின்றன. .இளம்பிறையைத் தன் திருமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான் கோயில் கொண்டுள்ள இத் திருக்குற்றால மலை இத்தகைய சிறப்புகளை உடையது.

## முக்கூடற் பள்ளு

பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த முக்கூடற் பள்ளு, உழவையும் அத்தொழிலை வாழ்வாகக் கொண்டோரையும் துல்லியமாகக் காட்டுவது. அதிலும்,

அப்பாடல்களில் வரக்கூடிய ஓசையும் நயமும் அற்புதமானவை. திருநெல்வேலி ஜில்லாவில் சீவலப்பேரி என்று வழங்கும் முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகர்மீது பாடப்பட்டது எனச் சொல்லப்படுகிறது. தாமிரபரணி, சிற்றாறு, கயத்தாறு ஆகிய மூன்றும் கலக்குமிடமே முக்கூடல்.

**ஆற்று வெள்ளம் நாளை வரத்**
**தோற்றுதே குறி**
**மலையாள மின்னல், ஈழமின்னல்**
**சூழ மின்னுதே!**
**நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக்**
**காற்று அடிக்குதே - கேணி**
**நீர்ப்படு சொறித் தவளை**
**கூப்பிடுகுதே**
**சேற்று நண்டு சேற்றில் வளை**
**ஏற்று அடைக்குதே - மழை**
**தேடி ஒருகோடி வானம்**
**பாடி ஆடுதே!**
**போற்று திருமால் அழகர்க்கு**
**ஏற்றமாம், பண்ணைச் சேரிப்**
**புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்**
**துள்ளிக் கொள்வோமே.**

**பாடியவர் : தெரியவில்லை**

**விளக்கம்**

ஆற்றில் நாளை வெள்ளம் வரப்போகிறது, அதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன. மலையாள நாடு (கேரள நாடு) இருக்கின்ற மேற்குத் திசையிலிருந்தும், இலங்கை நாடு (ஈழநாடு) இருக்கின்ற கிழக்ககுத் திசையிலிருந்தும் மின்னல்கள் சூழ்ந்து மின்னுகின்றன. நேற்றும் இன்றும் காற்று பலமாகச் சுழன்று அடிக்கிறது.

கிணற்றுத் தண்ணீரில் கிடக்கும் சொறித்தவளைச் சத்தமிட்டு மழை வரப்போகும் செய்தியை மக்களுக்குச் சொல்கிறது. மழை வெள்ளம் வந்து நிரம்பினால் சேற்றில் வாழும் நண்டு என்ன ஆகும்? அதற்காக அந்த நண்டு முன்னெச்சரிக்கையாக அந்தச் சேற்றை கொண்டே தன்னுடைய வளையை (வாசலை) அடைக்கிறது. மழையைத் தேடி ஒரு கோடி வானம்பாடி பறவைகள் விண்ணில் மகிழ்ச்சியாகப் பாடித் திறிகின்றன. எல்லோரும் போற்றி வழிபடுகின்ற அழகர் கோயில் திருமாலை பண்ணையில் வேலை செய்து சேரியில் (சேர்ந்து) வாழ்கின்ற பள்ளர்களாகிய நாம் அனைவரும் மழையை வரவேறறு ஆடிப் பாடுவோம், துள்ளி ஆடுவோமே.

## அபிராமி அந்தாதி

## (பதினாறு பேறுகள்)

**கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்**
**கபடு வாராத நட்பும்**
**கன்றாத வளமையும் குன்றாத இளமையும்**
**கழுபிணியிலாத உடலும்**
**சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்**
**தவறாத சந்தானமும்**
**தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்**
**தடைகள் வாராத கொடையும்**
**தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு**
**துன்பமில்லாத வாழ்வும்**
**துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய**
**அருள்வாமி! அபிராமியே! (அபிராமி பட்டர்)**

கலையாத கல்வி : வெற்றிக்கு வழிகாட்டக் கூடிய கல்வி

குறையாத வயது : நீண்ட ஆயுள்

கபடு வராத நட்பு : நம்பிக்கையான நல்ல நண்பர்கள்

குன்றாத வளமை : வளமான வாழ்க்கைக்குத் தேவையான பொருள்

குன்றாத இளமை : உழைப்புக்குத் தளராத உடல் வலிமை

கழுபிணி இல்லா உடல் : நோயற்ற வாழ்க்கை

சலியாத மனம் : கலங்காத மனத்திண்மை

அன்பகலாத மனைவி : மாறாத அன்பைச் செலுத்தும் மனைவி

தவறாத சந்தானம் : அறிவு, ஆற்றல், ஒழுக்கம், ஆயுள் இவற்றை தவற விடாத குழந்தைகள்

தாழாத கீர்த்தி : மென்மேலும் வளரக்கூடிய புகழும்

மாறாத வார்த்தை : வாய்மை

தடைகள் வராத கொடை : இல்லையென்று சொல்லாத உதவி

தொலையாத நிதியம் : சிக்கனம், சேமிப்பு பழக்கம்

கோணாத கோல் : நேர்மையும் திறமையும் கொண்ட குடும்ப நிர்வாகம்

உதவி பெரிய தொண்டரோடு கூட்டு : பெருமக்கள் தொடர்பு-(பக்தர்களை) என்றும் பிரியாத கூட்டு

துய்ய நின்பாதத்தில் அன்பு : உன் பாதத்தின்மேல் பக்தி (இறை நம்பிக்கை)

**தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா**
**மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா**
**இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே**
**கனம் தரும் பூங் குழலாள், அபிராமி, கடைக்கண்களே,**
**அன்னையை மனமுருகி வேண்டினால் அனைத்தையும் தருவாள்.**

## திருவரங்கக் கலம்பகம் - மறம்

## (பிள்ளைப் பெருமாள் ஐயக்கார்)

**“பேசவந்த தூத செல்லரித்த வோலை செல்லுமோ**
**பெருவரங்களருளரங்கர் பின்னை கேள்வர்தாளிலே**
**பாசம் வைத்த மறவர˙பெண்ணை நேசம் வைத்து முன்னமே**
**பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்துபாரடா**
**வாசலுக்கிடும் படல் கவித்துவந்த கவிகைமா**
**மகுடகோடி தினையளக்க வைத்த காலுநாழியும்**
**வீசுசாமரங் குடிற்றொடுத்த கற்றை சுற்றிலும்**
**வேலியிட்டதவர் களிட்ட வில்லும் வாளும் வேலுமே”**

**விளக்கம்**

எங்கள் பெண்ணை மணம் பேச வந்த தூதனே! செல்லினால் அரிக்கப்பட்ட ஓலை செல்லுமோ? செல்லாது. தம் அன்பர்களுக்குப் பெரிய வரங்களை அருளுகின்ற, திருவரங்கநாதரும், நப்பின்னையின் கணவருமாகிய நம்பெருமானது திருவடிகளில் அன்பு வைத்த, வேடர்களாகிய எங்களது மகளை விரும்பி, முன்னாட்களிலே, பட்டந்தரித்த அரசர்கள் பட்ட பாடுகளை எங்கள் ஊரினுள் வந்து பார். எங்கள் வீட்டு வாசலில் வைத்து மூடும் கதவுகள், அவர்கள் பிடித்துவந்த, குடைகள். தினையரிசிகளை, அளக்கும்படியாக, வைத்த மரக்கால்கள், படி முதலிய அளவுகருவிகள் அவர்கள் தரித்து வந்த பெரிய பெரிய கிரீடங்கள். எங்கள் குடிசைக்குமேல் மூடுகின்ற கற்றை, அவர்களுக்கு வீசி வந்த சாமரங்கள். அவர்கள் தோல்வியடைந்து விட்டுச் சென்ற வில்லும் வாளும் வேலும் எங்கள் வீட்டின் நாற்புறத்திலும் வேலியாகப் போடப்பட்டுள்ளன. ஆகவே, உன்னை ஏவிய அரசனுக்கும் இந்தக் கதியே நேரும் என்று போய்க் கூறுவாயாக.

## தமிழ்விடு தூது

## முதல் பத்து கண்ணிகள்

**நூல் குறிப்பு**

தமிழ் மொழியில் காணப்படும் 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்று தூது இலக்கியமாகும். அகத்துறை சார்ந்த இவ்விலக்கியம். கலிவெண்பா என்னும் செய்யுளில் பாடப்படும். தலைவன் தலைவியர்கள் காதல் காரணமாகத் துன்புறும்போது, ஒருவர் மற்றொருவரிடம் தம் வருத்தத்தைத் தெரிவிக்கும் படி உயர்திணைப் பொருட்களையோ, அ·றினைப் பொருட்களையோ தூது அனுப்பும் நிலையில் பாடப்படுவது தூது இலக்கியம் ஆகும்.

**தமிழ்விடு தூது**

மதுரைச் சொக்கநாதரிடம் காதல் கொண்ட தலைவி தன் காதலைத் தெரிவித்து அவர் இசைவறிந்து வருமாறு தமிழைத் தூதனுப்பி வைப்பதாகப் பாடப்பெற்றது தமிழ்விடு தூது என்னும் நூலாகும். 268 கண்ணிகளைக் கொண்ட இந்த நூலின் ஆசிரியர் யார் என தெரியவில்லை. இந்நூலில் தூது பொருளான தமிழ் மொழியின் சிறப்புகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

**1. சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்**

**தேர்கொண்ட சங்கத் திருந்தோரும் - போர்கொண்**

சிறப்புப் பொருந்திய கூடலென்ற சிவராசதானியைக் காத்து அழகு பொருந்திய சங்கத்திற் புலவராயிருந்தவரும், பல திசைகளிலுஞ் சென்று போர்புரிந்து.

**2. இசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு**

**விசையஞ் செலுத்திய மின்னும் - நசையுறவே**

வாய்ந்த தமிழரசி யென்று பலரும் வாழ்த்தித் துதிப்பத் திசைதோறும் தன் வெற்றியைத் தோற்றுவித்த பெண்ணரசியும், விருப்பமுறும்படி..

**3. செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு**

**கையி லெடுத்த கணபதியும் - மெய்யருளாற்**

திருத்தமான சிவஞானத் தொகுதியுடைய ஏட்டுச் சுவடிகளில் ஓர் ஏட்டினைக் கையிலெடுத்தெறிந்த கணபதியும், உண்மையருளால்.

**4. கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்**

**பாடலறி வித்த படைவேளும் - வீடகலா**

மதுரையை அரசு புரிந்து ஒருகாலத்தில் மதுரைச் சங்கப் புலவரெதிரமர்ந்து பாடலின் சிறப்பையுணர்த்திய வேற்படையுடைய முருகக்கடவுளும், மனையை விட்டு நீங்காத.

**5. மன்னுமூ வாண்டில் வடகலையுந் தென்கலையும்**

**அன்னைமுலைப் பாலி னறிந்தோறும் - முன்னரே**

இளமைவாய்ந்த மூன்றாண்டுப் பருவத்தின் வடமொழி நூல்களும் தென்மொழி நூல்களும் தாயாகிய உமையம்மையா ரூட்டிய ஞானத்தோடு கலந்த முலைப்பாலானறிந்தவரும்.

**6. மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்**

**ஈன்றுதரச் சொல்லி னிசைத்தோருந் - தோன்றயன்மால்**

மூன்றாண்டுக்கு முன்னர் முதலையுண்ட பிள்ளையை மூன்று விழியார்முன் கவிபாடிப் பின்பெற்றுத் தரும்படி தமிழாலுரைத்தவரும்.

**7. தேடிமுடி யாவடியைத் தேடாதே நல்லூரிற்**

**பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி**

பிரமனும் திருமாலும் தேடியும் அடைய முடியாத சிவனின் திருமுடியையும், திருவடியையும் தேடாமலேயே திருநல்லூரில் தேவாரம் பாடித் தன் தலை மீது முடியாகப் பெற்றுக் கொண்ட திருநாவுக்கரசர்.

**8. மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்த்தெழுதிப்**

**பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் – முட்டாதே**

ஆய்ந்து தம் முடியில் மணமுள்ள தாழம்பூவைச் சூடாதவராகிய சிவபெருமான் ஓலையை வாரிச் சேர்த்துத் தம் பட்டோலையில் எழுதிக் கொள்ளுமாறு செய்யுள் பகர்ந்தவரும்.

**9. ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருண் மாமுனியும்**

**தொல்காப் பியமொழிந்த தொன்மொழியும் – மல்காச்சொற்**

தடைபடாமல் குறையாத பெருமைத் தமிழ் மூன்றினையும் ஓதிய பெரிய முனிவனும், தொல்காப்பியம் என்ற இலக்கணத்தைக் கூறிய பழைய முனிவனும்.

**10. பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசு வைப்பன்னிரண்டு**

**சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும் - நேத்திரமாம்**

குறையாத சொல்லமைந்த பாவின் நிலைமையைக் கொண்டு முதல்வன்பாற் செல்லும் உயிர்களை (அவற்றின் இயலை) பன்னிரண்டு நூற்பாவைக் கொண்டு முடித்த தூய்மையுடையவரும்.

## தனிப்பாடல்

## வான் குருவியின் கூடு

## (ஔவையார்)

**"வான் குருவியின் கூடு வல்லரக்குத் தொல்கறையான்**

**தேன்சிலம்பி யாவருக்கும் செய்யரிதால் – யாம் பெரிதும்**

**வல்லோமே என்று வலிமை சொல் வேண்டாங்காண்**

**எல்லார்க்கும் ஒவ்வான்று எளிது"**

**விளக்கம்**

ஔவையார் கம்பரைப் பழித்துப் பாடல் பாடினார். அதைக் கேட்ட சோழ மன்னன் வருத்தமடைந்து, "கம்பனைப் போல பெரிய காவியம் செய்து சிறப்புற்றவர்

வேறு யார் இருக்கின்றனர்'' என்று கேட்டார். அதற்கு ஔவையார், ''சோழனே! தூக்கணாங்குருவியின் கூடு குளவிகள் கட்டுகின்ற அரக்குக்கூடு, கரையானின் புற்று, தேனீக்களின் கூடு, சிலந்தியின் வலை இவற்றைப்போல எவராவது செய்ய முடியுமா? யாராலும் செய்ய முடியாது. அதனால் அவர்களை மட்டும் தொழில்நுட்பத்தில் தலைசிறந்தவர்கள் என்று பாராட்டலாமா? அ∴தன்றி வேறு எதுவும் அந்தச் சிற்றினங்களுக்குத் தெரியாது. அது போலவேதான் கவிதையும். ஒவ்வொரு புலவர்க்கும் ஒவ்வொன்று எளிதாக இருக்கும். அந்தந்த வல்லமையினை அறிந்துதான் பாராட்டுதல் வேண்டும். அதுதான் சிறப்பு'' என்று கூறினார்.

**சிலேடையாகப் பாடுயாவை**

(மேற்போக்கான சொல் அமைப்பிலே ஒன்றாகவும், ஆனால் அமைதியினாலே இரண்டு மூன்றாகப் பொருள் விளங்குவதாகவுமுள்ள சுவையான செய்யுட்கள் இந்தப் பகுதியில் தரப்படுகின்றன. செய்யுளில் வரும் சொற்களை நன்றாக ஆராய்ந்து பொருள் நயத்தை உணர்ந்து இன்புறுதல் வேண்டும். இவற்றையும் தண்டிகைப் புலவர் கொடுத்த சமிக்ஞைப்படியே காளமேகம் பாடினார் என்பது வரலாறு.)

**ஆமணக்கும் யானைக்கும்**

**''முத்திருக்கும் கொம்பசைக்கும் மூரித்தண்டேந்திவரும்**
**கொத்திருக்கும் நேரே குலைசாய்க்கும்--எத்திசைக்கும்**
**தேமணக்குஞ் சோலைத் திருமலை ராயன்வரையில்**
**ஆமணக்கு மால்யானை யாம்'' (காளமேகப் புலவர்)**

எத்திசைக்கும் தேமணக்கும் சோலைத் திருமலைராயன் வரையில் - எல்லாத் திசைகளிலும் இனிய மணம் கமழ்ந்து கொண்டிருக்கும் திருமலைராயனுடைய மலைச்சாரலில், ஆமணக்கு மால் யானை யாம் - ஆமணக்கும் பெரிய மதயானை ஆகும். (அது எவ்வாறெனில்,)

ஆமணக்கு: முத்திருக்கும் கொம்பு அசைக்கும் - வித்துகள் விளங்கும், கிளைகளை அசைத்துக் செபண்டிருக்கும் மூரித்தண்டு ஏந்தி வரும் - பெரிய தண்டுகள்

மேலேந்தியபடி வளர்ந்திருக்கும் நேரே குலைசாய்க்கும் - வரிசையாகக் காய்க் குலைகளைத் தொங்கவிட்டவாறு விளங்கும்.

மால் யானை: முத்திருக்கும் கொம்பசைக்கும் - முத்துக்கள் அமைந்திருக்கக்கூடிய தந்தங்களானதன் கொம்புகளை அசைத்துக் கொண்டு நிற்கும் ஈரித்தண்டு ஏந்தி வரும் - அந்தக் கொம்புகளில் பருத்த கட்டைகளை ஏந்தியவாறு அது வந்து கொண்டிருக்கும் கொத்து இருக்கும் - மத்தகத்திலே பாகர்கள் அங்குசத்தாற் கொத்திய வடுக்கள் இருக்கும் நேரே குலைசாய்க்கும் - நேராக மலையிடத்துள்ள வாழைக்குலையினைச் சாய்த்து உண்ணு தலையும் அது செய்யும்.

**"இம்பர் வான் எல்லை இராமனையே பாடி**
**என் கொணர்ந்தாய் பாணா நீ ",என்றாள் பாணி**
**வம்பதாம் களபமென்றேன். – பூசுமென்றாள்!**
**மாதங்கமென்றேன்.- யாம் வாழ்ந்தோமென்றாள்!**
**பம்பு சீர் வேழமென்றேன் .- தின்னுமென்றாள்!**
**கம்பமா என்றேன்.-நற்களியாமென்றாள்!**
**கைம்மா என்றேன்.-சும்மா கலங்கினாளே! (வீர்ராகவர்)**

இங்கு பாணி புரிந்து கொண்ட, களபம் (சந்தனம்), மாதங்கம் (நிறைய தங்கம்), வேழம் (கரும்பு), கம்பமா (கம்பின் மாவு), கைம்மா என்னும் அனைத்துச் சொற்களும் இந்தப் பொருள் மட்டுமல்லாமல் யானையையும் குறிப்பன.

பாணன் யானை எனப் பொருள்படும் பல்வேறு சொற்களைச் சொல்லிக்கொண்டே வர, பாணி அதன் வேறு பொருளினைப் புரிந்து கொள்வது போலச் சுவைபட இந்தப் பாடலை அமைத்தவர், அந்தகக் கவி வீரராகவ முதலியார். இவர் ஒரு குருடர். ஆனாலும் இவரைப் பார்த்து யாரும் "குருடர் கண்ட யானை கதை" எனக் கூறி விட முடியாதுதானே.

ஏனென்றால் பார்வையுள்ள நம்மைவிட யானையைப் பற்றி அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்.

இப்பக் கொஞ்சூண்டு இலக்கணம்,

தமிழில் உரிச்சொல் உரிச்சொல் என்று சொல்கிறார்கள் அல்லவா? அது இரண்டு வகை,

ஒரு சொல்லுக்கு இருக்கக் கூடிய பல பொருட்களைக் குறிப்பிடல்.

சான்றாக இம்மி என்ற சொல்லுக்குரிய பல பொருட்களாக – ஒரு அளவு, மத்தங்காய்ப்புல்லரிசி, பொய், புலன் எனப் பல பொருள்களைக் குறிப்பதைக் கூறலாம். அடுத்து,

ஒரு சொல்லைக் குறிக்கக் கூடிய பல சொற்களைக் குறிப்பிடல்.

இந்தப் பாடலில் யானை எனும் ஒரு சொல்லைக் குறிக்கக் களபம், மாதங்கம், வேழம், கம்பமா, கைம்மா ஆகிய பல சொற்களைப் பயன்படுத்தி இருப்பதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சரி ஏன் இவ்வளவு கஷ்டப்படனும் இதெல்லாம் நமக்கெதுக்கு என்கிறீர்களா?

உண்மைதான். இதல்லாம் நமக்கெதுக்கு..?

பெரிய பெரிய புலவர்களின் தேவைக்கு உரிய சொல்லாக இருப்பதால் தானே அதற்கு உரிச்சொல் என்று பெயர்.

அப்புறம் இதில் பாணன் போய்க் கேட்கிறான் இல்லையா, அவன் இரவலன்.

அவனுக்குக் கொடுப்பவன் புரவலன். கொடுப்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு திருக்குறள் இருக்கிறது

**“இலனென்னும் எவ்வம் உரையாமுன் ஈதல்**

**குலனுடையான் கண்ணே உள”**

இந்த ஒரு குறளுக்கு மூன்று பொருள் காட்டுகிறார் பரிமேலழகர்.

**முதற்பொருள்**

தான் எவனிடத்தும் போய் இல்லை என்று இரக்காமலும், (இலன் என்னும் எவ்வம் உரையாமை) தன்னிடம் வந்து இல்லை என்று கேட்பவருக்குத் தன்னிடம் இருப்பதைக் கொடுத்தலும் (முன் ஈதல்) ஆகிய இரண்டு பண்புகளும் நல்ல குலத்தில் பிறந்தவர்க்கே உரிய குணங்களாம்.

**இரண்டாவது பொருள்**

தன்னிடம் ஏதேனும் வேண்டி வருபவர்கள் , “ இது எம்மிடத்தில் இல்லை ஏதேனும் கொடுத்து உதவுங்கள் “ என்ற துன்பம் தரக் கூடிய சொற்களைக் கூறும் முன்பாகவே (இலன் என்னும் எவ்வம் உரையாமுன்) அவனுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் பண்பானது நல்ல குலத்தில் பிறந்தவரிடத்தில் மட்டுமே இருக்கக் கூடிய குணமாகுமாம். (ஈதல் குலனுடையான் கண்ணே உள)

**மூன்றாவது பொருள்**

ஒருவனிடம் யாசகம் பெற்றுவிட்டால் அப்படிப் பெற்றுக் கொண்ட இரவலனது வாயிலிருந்து, அதற்குப் பின்னர் “ இல்லை “ என்ற துன்பம்தரும் வார்த்தையே வரக்கூடாதாம். அந்த அளவிற்குக் அவனது வாழ்க்கைக்குத் தேவையான அளவு கொடுத்தல் (“ இலனென்னும் எவ்வம் உரையாமுன் ஈதல்) நல்ல குலத்தில் பிறந்தவரிடத்தில் மட்டுமே இருக்கக் கூடிய குணமாகுமாம்.

திருவள்ளுவர் எதை நினைத்து எழுதினாரோ என்னமோ உரையாசிரியர்கள் எப்படியெல்லாம் யோசித்திருக்கிறார்கள் பாருங்கள்! பரிமேலழகர் உரை சிறந்தது பலரும் சொல்வதற்கு இது போன்ற பல நயங்களை அவர் சொல்லிச் செல்வதுதான் காரணம்.

சிக்கல் என்னவென்றால் அவரது உரையை விளங்கிக் கொள்ள வேண்டுமானால் அதற்கும் ஒரு உரை இன்று தேவைப்படும் என்பதுதான். முயல்வோம்.

## **நாரை விடு தூது**

**நாராய் நாராய் செங்கால் நாராய்**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய் செங்கால் நாராய்**
**நீயும் நின் பெடையும், தென் திசைக் குமரியாடி**
**வடதிசைக்கு ஏகுவீராயின்**
**எம்மூர் சத்திமுத்த வாவியுள் தங்கி**
**நனைசுவர் கூரை கனைகுரல் பல்லி**
**பாடு பாத்திருக்கும் எம் மனைவியைக் கண்டு**
**எங்கோன் மாறன் வழுதிக் கூடலில்**
**ஆடையின்றி வாடையில் மெலிந்து**
**கையது கொண்டு மெய்யது பொத்தி**
**காலது கொண்டு மேலது தழீஇப்**
**பேழையில் இருக்கும் பாம்பென உயிர்க்கும்**
**ஏழையாளனைக் கண்டனம் எனுமே**

**(சத்திமுத்தப் புலவர்)**

நாரையே நாரையே, செந்நிற கால்களை உடைய நாரையே.. பழங்களை உடைய பனையின் கிழங்கு பிளந்ததை ஒத்த, பவழம் போன்ற நிறத்தினை கொண்ட, கூரிய அலகுகளை கொண்ட செங்கால் நாரையே.. நீயும் உன் மனைவியும் தென் திசையில் உள்ள குமரியில் நீராடி வட திசைக்குச் செல்வீர்களாயின் எனது ஊரான சத்திமுத்தத்தில் உள்ள குளத்தில் தங்கி, நனைந்த சுவர்களை உடைய தன் வீட்டின் கூரையில் இருந்து கனைக்கும் பல்லியின் குரலை கேட்டு பாடு பார்த்திருக்கும் என் மனைவியை கண்டு, ”மாறன் அரசாளும் கூடலில் - ஆடையின்றி, வாடைக்காற்றில் மெலிந்து, கைகளை கொண்டு மார்பினை மறைத்து, கால்களை கொண்டு உடலை

தழுவி, பேழைக்குள் இருக்கும் பாம்பினைப் போலச் சுருண்டு உயிர்த்திருக்கும் இந்த ஏழையை கண்டேன்” என உரைக்குமாறு நாரையை தூது விடுகிறார்.

இப்புலவரின் இயற்பெயர் தெரியவில்லை. எனவே அவரது ஊராகிய சத்திமுத்தத்தின் பெயரால் அறியப்படுகிறார். புலவர் தன் வறுமை காரணமாய் வேறோர் ஊருக்குச் சென்றிருந்த வேளையில் அங்கோர் நாரையை தன் மனைவிக்கு தூதாய் அனுப்புவதாக அமைந்துள்ள தனிப் பாடல். கவித்துவமும் அழகும் நிறைந்த இப்பாடல் பிற மரபுச் செய்யுள் போலன்றி நேரடியாகப் பொருள் தருகிறது. சொல்லப்படாத பல செய்திகளையும் சொல்கிறது.

குழந்தையை குழந்தாய் என்றழைப்பதைப் போல, மிகுந்த அன்புடன், நாரையை நாராய் என்றழைக்கிறார். வடதிசை நோக்கி செல்லும் இப்பறவையை, தன்னை பிரிந்து வாடும் தன் துணைவிக்கு தூதாக அனுப்புகிறார். எங்கோன் மாறன் என்று புலவர் உரைப்பதன் மூலம் அவர் தற்போது இருக்கும் நாடு பாண்டிய நாடு என்பது புலனாகிறது. (மாறன்: பாண்டிய மன்னர்களுக்கு வழங்கப்படும் பெயர். கூடல் நகர் - மதுரை) அவரது ஊராகிய சத்திமுத்தம் வடதிசையில் சோழ நாட்டில் உள்ளது. (சக்தியாகிய உமை சிவனை தழுவி முத்தமிட்டதால் இப்பெயர் வழங்கப்படுவதாக தல வரலாறு உரைக்கிறது) வாடைக்காற்று உடலை வாட்டும் கூதிர் காலத்தில் இப்புலவர் அங்கிருக்கிறார். செங்கால் நாரை (ராவைந ளவழசம) தமிழகத்துக்கு வரும் காலம் நவம்பர் முதல் மார்ச் வரை. கூதிர் காலமாகிய பின்பனிக்காலம் இத்துடன் பொருந்துகிறது.

நாரையின் அலகினை பிளந்த பனங்கிழங்குக்கு ஒப்பு நோக்கிய அப்புலவரின் உவமைக்கு மகிழ்ந்து அவரின் வறுமையை போக்கினான் நகர்வலம் வந்த பாண்டிய மன்னன் மாறன் வழுதி. மன்னன்

**வினாக்கள்**

1. பாரத சமுதாயம் தழைக்க பாரதியார் கூறும் வழிமுறைகள் யாவை?

2. வாழும் இளைஞர்களுக்கு பாரதிதாசன் அறைகூவல் யாது? விளக்குக.

3. நாமக்கல் கவிஞர் “அகிம்சை வழியில்“ சுதந்திரம் பெறக்கூறும் வழிமுறைகள் யாவை?

4. வறுமையில் உழல்வோரின் எண்ணப் பதிவுகளை “தமிழ்ஒளி கவிதைகள் வழி விளக்குக.

5. திருக்குறளில் “எட்டாவதுசீர்“ எழுதுவது பற்றி தமிழன்பன் கூறும் கருத்துக்களை விளக்குக.

# அலகு - 3

# இக்கால இலக்கியம்

## 1. பாரத சமுதாயம்

## (பாரதியார்)

**ஆசிரியர் குறிப்பு**

இயற்பெயர் சுப்பிரமணியம். பெற்றோர் பெயர் - சின்னசாமி. - இலக்குமி அம்மாள். டிசம்பர் 11, 1882இல் எட்டயபுரத்தில் பிறந்தார். இவருக்கு மகாகவி என பட்டம் கொடுத்தவர் வ.இராமசாமி அய்யங்கார். பாரதி என்பதன் பொருள் "கலைமகள்" ஆகும். பாரதியின் முதல் பாடல் தனிமை இரக்கம். வெளியிட்ட பத்திரிக்கை விவேக பானு.

**பாரதியார் எழுதிய நூல்கள்**

"குயில் பாட்டு", "கண்ணன் பாட்டு", "பாஞ்சாலி சபதம்","பாப்பா பாட்டு", "சுயசரிதை", "தேசிய கீதங்கள்", "பாரதி அறுபத்தாறு". "ஞானப்பாடல்கள்", "தோத்திரப் பாடல்கள்", "விடுதலைப் பாடல்கள்", "விநாயகர் நான்மணிமாலை", "பாரதியார் பகவத் கீதை " "பதஞ்சலியோக சூத்திரம்", "நவதந்திரக் கதைகள்", "இந்தியா", "உத்தம வாழ்க்கை", "சுதந்திரச் சங்கு", "ஹிந்து தர்மம்" (காந்தி உபதேசங்கள்), "சின்னஞ்சிறு கிளியே", "ஆறில் ஒரு பங்கு". "பகவத் கீதை", "சந்திரிகையின் கதை", "புதிய ஆத்திச்சூடி".

**பாரத சமுதாயம் வாழ்கவே!-ஜய ஜய ஜய**
**முப்பது கோடி ஜனங்களின் சங்கம்**
**முழுமைக்கும் பொது உடைமை**
**ஒப்பி லாத சமுதாயம்**
**உலகத் துக்கொரு புதுமை-வாழ்க**

மனித ருணவை மனிதர் பறிக்கம்

வழக்கம் இனியுண்டோ?

மனிதர் நோக மனிதர் பார்க்கும்

வாழ்க்கை இனியுண்டோ-புலனில்

வாழ்க்கை இனியுண்டோ?-நம்மி லந்த

வாழ்க்கை இனியுண்டோ?

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்

எண்ணரும் பெருநாடு

கனியும் கிழங்கும் தானி யங்களும்

கணக்கின் றித்தரு நாடு-இது

கணக்கின் றித்தரு நாடு-நித்த நித்தம்

கணக்கின் றித்தரு நாடு-வாழ்க!

இனியொரு விதிசெய் வோம்-அதை

எந்த நாளும் காப்போம்

தனியொருவனுக் குணவிலை யெனில்

ஜகத்தினை அழித்திடு வோம்-வாழ்க!

"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்"

என்றுரைத்தான் கண்ண பெருமான்

எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை

இந்தியா உலகிற் களிக்கும்-ஆம்

இந்தியா உலகிற் களிக்கும்-ஆம் ஆம்,

இந்தியா உலகிற் களிக்கும்-வாழ்க!

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்

எல்லாரும் இந்தியா மக்கள்,

எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர் விலை

எல்லாரும் இந்நாட்டு மன்னர்-நாம்

எல்லாரும் இந்நாட்டு மன்னர்-ஆம்

## எல்லாரும் இந்நாட்டு மன்னர்-வாழ்க

### பாரதியின் வாழ்த்து

பாரத சமுதாயம் என்ற தலைப்பில் பாரதியார் பொதுவுடைமைக் கொள்கை குறித்து விளக்கமுரைக்கின்றார். பாரத நாட்டில் வாழும் மக்களை ‘‘வாழ்க வாழ்க‘‘ என்று வாழ்த்துகின்றார். பாரத சமுதாயம் என்றென்றும் வெற்றிப் பாதை நோக்கியே செல்லும் என்பதை அறிவிக்க ‘‘ஜய ஜய’’ என்று இசை பாடி மகிழ்கின்றார்.

### பொதுவுடைமைக் கொள்கை

தான் வாழ்ந்த காலத்தில் பாரதத்தில் வாழ்ந்திருந்த 30 கோடி மக்களும் பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்பதே அவரின் விருப்பம். அக்கொள்கையைப் பின்பற்றும் சமுதாயம் ஒப்பில்லாத சமுதாயமாக, உலகத்திற்குப் புதுமையான சமுதாயமாக விளங்கும் என்று எடுத்துரைக்கின்றார். பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றினால்,

1. ஒரு மனிதனின் உணவை இன்னொரு மனிதன் தட்டிப் பறிக்கும் வழக்கம் இருக்காது எனவும்,

2. ஒரு மனிதனைத் துன்பப்படுத்தித் தான் மட்டும் சுகமாக வாழும் பழக்கம் இருக்காது எனவும், குறிப்பிடுகின்றார்.

### இயற்கை வளம் நிறைந்த நாடு

இனிமையான சோலைகளாலும், நெடிய வயல்களாலும் சூழப்பட்ட இயற்கை வளம் பொருந்திய நம் பாரத நாட்டில் கனியும், கிழங்கும், தானியங்களும் கணக்கின்றி கிடைக்கின்றன. எனவே, ஒரு மனிதனின் உணவை இன்னொரு மனிதன் பறித்து உண்ணும் வழக்கம் இருக்கத் தேவையில்லை என்று கூறுகின்றார்.

### புதிய கொள்கை

‘‘தனி மனிதன் ஒருவனுக்கு உணவில்லை என்றால், நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டால் இந்த உலகத்தினை அழித்திட வேண்டும் என்ற விதியைப்

புதிதாக இயற்றுவோம். அதை எப்போதும் கடைபிடிப்போம் ” என்று சினமுடன் உரைக்கின்றார்.

**சமத்துவம்**

“எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்” என்பது இறைத் தத்துவம். ஆகையால் சாதி, இனம், மதம் என்ற கட்டுக்களை அறுத்தெறிய வேண்டும் என்பது பாரதியின் கனவு.

**வேற்றுமையில் ஒற்றுமை**

மக்கள் அனைவரும் மன அமைதியுடன் வாழ்ந்து, இறைவனை அடைகின்ற வழியை இந்தியா இந்த உலகிற்கே கற்றுக் கொடுக்கும். ஏனெனில், இந்திய நாடு வேற்றுமையில் ஒற்றுமை கண்ட நாடு. சாதி, மதம், இனம் என வெவ்வேறாக இருப்பினும் மனதளவில், இங்கு வாழும் மக்கள் அனைவரும்,

- ஒரு குலத்தைச் சேர்ந்தவர்களே!
- ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களே!
- எல்லோரும் ஒரு எடை கொண்டவர்களே!
- அனைவருக்கும் ஒரு விலையே!

என்று சமதர்மக் கொள்கையை அறிமுகம் செய்கின்றார்.

**எல்லோரும் இந்நாட்டு மன்னர்**

இந்திய நாட்டில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் சுதந்திர மனப்போக்குடன் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே தீர்மானிக்கும் மனநிலை கொண்டவர்களாக, ஒவ்வொருவரும் தங்களை மன்னர்களாக எண்ணி வாழ வேண்டும் என்று சூளுரைக்கின்றார்.

## 2. சிறுத்தையே வெளியே வா

### பாரதிதாசன்

பிறந்த ஊர் பாண்டிச்சேரி. பெற்றோர் கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள். பிறப்பு – ஏப்ரல் 29, 1891. இறப்பு – ஏப்ரல் 21, 1964. இயற்பெயர் கனகசுப்புரத்தினம். சிறப்புப் பெயர் - புரட்சிக் கவிஞர், பாவேந்தர், கிறுக்கன், கண்டழுதுவோன், கிண்டல்காரன் எனப் பல புனைப் பெயர்களில் எழுதி வந்தார். குயில் என்னும் திங்களிதழை நடத்தி வந்தார். கவிஞருடைய படைப்பான பிசிராந்தையார் என்ற நாடக நூலுக்கு 1969இல் சாகித்ய அகாடமியின் விருது கிடைத்தது. இசையமுது, அழகின் சிரிப்பு, அமிழ்து எது?, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், குடும்ப விளக்கு, குயில் பாட்டு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், பாண்டியன் பரிசு முதலானவை பாரதிதாசன் படைப்புகள். விதவைத் திருமணம், கலப்புத் திருமணத்தை ஆதரித்தவர். குழந்தை மணத்தை எதிர்த்தவர். பெண்களின் உரிமைக்காகப் பாடுபட்டவர். திராவிட இயக்கத் தலைவர்களுள் திரைத்துறையில் முதன்முதலாக நுழைந்தவர்.

**பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு**
**திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில்வா.!**
**எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்**
**புலிஎனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்.!**
**நம்பினை பகலினை நள்ளிருள் என்றே**
**சிம்புட் பறவையே சிறகைவிரி! எழு!**
**சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி!**
**இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?**
**கைவிரித் துவந்த கயவர், நம்மிடைப்**
**பொய்வி ரித்துநம் புலன்கள் மறைத்துத்**
**தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி**
**நமக்குள உரிமை தமக்கென் பார்எனில்,**

**வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?**

**மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!**

**இகழ்ச்சி நேர்ந்தால் இறப்போம் என்றும்**

**புகழ்ச்சி யேஎம் பூணாம் என்றும்**

**வையம் ஆண்ட வண்டமிழ் மரபே**

**கையி ருப்பைக் காட்ட எழுந்திரு..!**

**குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?**

**மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!**

**நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!**

**பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!**

**மக்களை ஒன்றுசேர்.! வாழ்வை யுயர்த்துக.!**

**கைக்குள திறமை காட்ட எழுந்திரு!**

**வாழ்க இளைஞனே, வாழ்க நின்கூட்டம்!**

**வாழ்க திராவிட நாடு!**

**வாழ்கநின் வையத்து மாப்புகழ் நன்றே.**

**பாடல் விளக்கம்**

தமிழரின் உரிமை காக்க, தமிழ் மொழியை மேம்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று பாவேந்தர் பாரதிதாசன் இப்பாடலில் வலியுறுத்துகின்றார். இளைஞர்களைப் பார்த்து,

‘‘இதுவரை அடிமைத்தளத்தில் இருந்த கதவுகள் எல்லாம் திறக்கப்பட்டு விட்டது. அதனால் சிறுத்தை போன்ற இளைஞர்களே வெளியே வாருங்கள்! எலி என நினைத்து இகழ்ந்தவர்களுக்கு முன்பாக, புலி என காட்டிட செயல் வீரர்களாக புறப்படுங்கள்!

நள்ளிரவை பகல் என நம்பியது போதும். பறவை போல சிறகை விரித்து உயர பறக்க முயற்சி செய்யுங்கள்! சிங்கம் போன்ற இளைஞர்களே! உங்கள்

சிந்தனைகளை, தாய் நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்கச் செயல்படுத்துங்கள்! உங்கள் அறிவுக் கண்களைத் திறந்து பாருங்கள்!

தாய்நாட்டைக் கழுதை போன்ற சிந்தனை கொண்டவர்கள் ஆட்சி செய்ய அனுமதிக்கலமா? வெறும் கையை ஏந்தி வந்த கயவர் கூட்டத்தினர், பொய்களை உரைத்து, அறிவை மழுங்கச் செய்து, தமிழ் மொழிக்குத் தடை விதித்து, நாட்டைக் கைப்பற்றி விட்டனர்.

நம் உரிமைகளைப் பறித்துக் கொண்டு, அவற்றை அவர்களுடையது என்று கூறினர் என்றால், காலங்காலமாக வீரத்துடன் வாழ்ந்த நாம் அதைக் கேட்டுக் கொண்டு இருக்கலாமா? உங்கள் மொழிப் பற்றைப் புதுப்பித்துக் கொண்டு விழித்தெழுங்கள்!

மானத்திற்கு அஞ்சி வாழ்ந்த தமிழினம், புகழ்ச்சியை மட்டுமே தங்கள் வாழ்க்கையில் அனுமதிக்கும். அப்படிப்பட்ட வலிமை மிகுந்த மரபில் வந்த இளைஞர்களே! உங்கள் கைகளின் செயல்திறனைக் காட்ட வாருங்கள்! உயர்ந்த குறிக்கோள்கள் நிறைந்த இளைஞர் கூட்டத்தைக் கூட்டுங்கள்!

கடல் போல பகை வளர்ந்துள்ளது. ஆகவே, தாய்மொழிக்கு விடுதலை தரவும், தமிழ் மொழிக்குப் புதுமை சேர்க்கவும் மக்களை ஒன்று சேர்த்து இணைத்து வாருங்கள்! அதன் மூலம் தமிழர்களின் வாழ்வை உயர்த்திடுங்கள்!" என்று இளைஞர்களைத் தம் பாடல் மூலம் வீறு கொள்ளச் செய்கின்றார் பாரதிதாசன்.

## 3. கத்தியின்றி ரத்தமின்றி

## நாமக்கல் கவிஞர்

### ஆசிரியர் குறிப்பு

நாமக்கல் மாவட்டம் மோகனூரில் அக்டோபர் 19, 1988 ஆம் ஆண்டில் அம்மணி அம்மாள், வெங்கட்ராமன் தம்பதியினருக்கு மகனவாகப் பிறந்தார்.

**நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்கள்**

‘‘மலைக்கள்ளன்‘‘ (நாவல்), ‘‘கானாமல் போன கல்யாணப் பெண்‘‘ (நாவல்), ‘‘பிரர்த்தனை‘‘ (கவிதை), ‘‘நாமக்கல் கவிஞர் பாடல்கள்‘‘, ‘‘திருக்குறளும் பரிமேலழகரும்‘‘, திருவள்ளுவர் திடுக்கிடுவார்‘‘, ‘‘திருக்குறள் புது உரை‘‘, ‘‘கம்பனும் வால்மீகியும்‘‘, ‘‘கம்பன் கவிதை‘‘, ‘‘இன்பக் குவியல்‘‘, ‘‘என்கதை‘‘ (சுயசரிதம்)‘‘, ‘‘ அவனும் அவளும்‘‘ (கவிதை), ‘‘சங்கொலி‘‘ (கவிதை), ‘‘மாமன் மகள்‘‘ (நாடகம்), ‘‘அரவணை சுந்தரம்‘‘ (நாடகம்).

**கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்! . .(கத்தி)**
**ஒண்டி அண்டிக் குண்டு விட்டிங்குயிர் பறித்தலின்றியே**
**மண்டலத்தில் கண்டிலாத சண்டையன்று புதுமையே! .(கத்தி)**
**குதிரையில்லை யானையில்லை கொல்லும் ஆசையில்லையே**
**எதிரியென்று யாருமில்லை எற்றும் ஆசையில்லதாய் . .(கத்தி)**
**கோபமில்லை தாபமில்லை சாபங்கூறல் இல்லையே**
**பாபமான செய்கையன்றும் பண்ணு மாசையின்றியே . .(கத்தி)**
**கண்டதில்லை கேட்டதில்லை சண்டையிந்த மாதிரி**
**பண்டு செய்த புண்ணியந்தான் பலித்ததே நாம் பார்த்திட! . .(கத்தி)**
**காந்தியென்ற சாந்தமூர்த்தி தேர்ந்து காட்டும் செந்நெறி**
**மாந்தருக்குள் தீமைகுன்ற வாய்ந்த தெய்வமார்க்கமே . .(கத்தி)**

**விளக்கம்**

மகாத்மா காந்தியின் கருத்துக்களில் ஈடுபாடு கொண்டு பல பாடல்களை எழுதிய காந்தியக் கவிஞர் என்றழைக்கபடும் நாமக்கல் கவிஞர் எழுதியப் பாடல் இது. கத்தியும் ரத்தமும் இல்லாமல் ஒரு யுத்தம் வருகின்றது. சத்தியத்தை நம்புகின்ற யாவரும் இதில் கலந்து கொள்ள வாருங்கள் என்கிறார். ஓடி ஒளிந்து குண்டுகளை எறிந்து மற்றவர்களின் உயிரைப் பறிக்காமல் நடக்கும் யுத்தம் ஆகும்.

இதுவரை யாரும் பார்க்காத புதுமை ஆகும். குதிரை யானை என்று எந்த வித படையும் இல்லாத ஒரு போர் ஆகும். எதிரிகள் என்று யாரும் இலாததால் இதில் கொல்லும் ஆசையும் இல்லை. யார் மீதும் கோபமும் வெறுப்பும் சாபமும் கூறாமல் போடப்படும் யுத்தம் ஆகும்.பாவமான செயல்களை செய்யும் ஆசை இல்லாமல் நடக்கக் கூடியதும் ஆகும் . இப்படி ஒரு யுத்தத்தை யாரும் இதுவரை கண்டோ கேட்டோ இருக்க மாட்டார்கள். நாம் முன் செய்த புண்ணியத்தின் பலனாகவே இப்போது இதனைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்று இருக்கிறோம. காந்தி என்னும் சாந்த மூர்த்தி மக்களுக்குள் தீமை குன்றி நன்மை பெருக கண்டு அடைந்த செம்மையான நெறி என்கிறார்.

## மீன்கள்

## தமிழ் ஒளி

தென்னாற்காடு மாவட்டத்தில் ஆரூர் என்னும் சிற்றூரில் 21.9.1924 அன்று சின்னையா, செங்கேணி அம்மாள் என்னும் இணையருக்கு மகனாகப் பிறந்தார். விஜயரங்கம் என்பது தமிழ்ஒளியின் இயற்பெயர். இவர் 24.3.1965 அன்று இயற்கை எய்தினார். பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கிக் கவிதைகளைப் படைத்தார். கவிதைகள் மட்டுமல்லாது கதைகள், கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வுகள், மேடை நாடகங்கள், குழந்தைப் பாடல்கள் எனப் பலவும் இயற்றினார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் இழிநிலை கண்டு அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் சாதி சமய வேறுபாடுகளையும் தனது படைப்புகளில் வெளிப்படுத்தியவர். நிலைபெற்ற சிலை, வீராயி, மேதின ரோஜா ஆகிய மூன்று காவியங்களை இயற்றியுள்ளார். ஐந்து சிறுகதைத் தொகுதிகளை எழுதியுள்ளார். முன்னணி, புதுமை இலக்கியம், சாட்டை போன்ற இதழ்களில் பணியாற்றியுள்ளார். திரைப்படங்களில் பாடல்கள் எழுதியுள்ளார். சக்தி நாடக சபாவிற்காகச் சிற்பியின் காதல் என்னும் நாடகம் எழுதினார். அது “வணங்காமுடி’ என்னும் பெயரில் திரைப்படமாக உருவாகியது.

வான்கடல் தோன்றிடும் முத்துக்களோ-ஏழை
வாழும் குடிசையின் பொத்தல்களோ?
மாநில மீதில் உழைப்ப வர்கள்-உடல்
வாய்ந்த தழும்புக ளோஅவைகள்?

செந்தமிழ் நாட்டினர் கண்களெல்லாம்-அங்குச்
சேர்ந்து துடித்துக் கிடந்தனவோ?
சொந்த உரிமை இழந்திருக்கும்-பெண்கள்
சோக உணர்ச்சிச் சிதறல்களோ?

இரவெனும் வறுமையின் கந்தல்உடை-தனில்
எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?
அருந்தக்கூ ழின்றியே வாடுபவர்-கண்ணீர்
அருவித் துளிகளோ வான்குன்றிலே?

காலம் எழுதும் எழுத்துக்களோ-பிச்சைக்
காரர் இதயத்தின் விம்மல்களோ?
நீலக் கண்ணாடியின் கோட்டையிலே-மின்னல்
நெளிவை இறைத்திட்ட அற்புதமோ?

வெய்யில் அரசாங்கம் வாட்டிடினும்-இருள்
வேலிகட்டி யிங்கு வைத்திடினும்
பொய்யில் தொழிலாளர் எண்ணமெலாம்-அங்குப்
பொங்கிக் குமுறி இறைத்தனவோ?" (கவிமலர்" 1946)

**விளக்கம்**

வானம் என்னும் கடலில் தோன்றும் முத்துக்களா இந்த விண்மீன்கள். ஏழை எளிய மக்களின் குடிசைகளில் காணப்படும் ஓட்டைகளா இந்த நட்சத்திரங்கள். இந்த

பெரிய நிலத்தில் உழைப்பவர்களின் உடலில் ஏற்பட்ட தழும்புகள் தான் அங்கே நட்சத்திரங்களாகி விட்டதா என்கிறார். விண்மீன்கள் அங்கே மின்னிக்கிடப்பது பார்ப்பதற்கு நம் நாட்டு மக்களின் கண்கள் எல்லாம் சேர்ந்துத் துடிப்பது போல் இருக்கிறது எனக் கூறுகிறார். தங்களின் உரிமைகளை இழந்து காலம் காலமாக தவித்திருக்கும் பெண்கலின் உணர்ச்சிகளின் சிதறல்கள் தான் விண்மீன்கள் ஆகி விட்டதா என்கிறார். இரவு என்னும் வறுமையின் கந்தல் உடையில் இருக்கும் கண்கள் போல் காட்சி அளிக்கிறதாம் விண்மீன்கள். ஏழை எளிய மக்கள் அருந்தக் கூழ் இன்றி வடிக்கும் கண்ணீர்த் துளிகள் அருவியாகி வானம் என்னுமிகுன்றில் இருந்து வழிவது போன்று காட்சி அழிக்கிறதாம் நட்சத்திரங்கள். கால தேவனின் எழுத்துகளா பிச்சைக் காரர்களின் இதயத்தில் இருந்து வெளிப்படும் விம்மலகளா எனக் கேள்வி எழுப்புகிறார். வானம் என்னும் நீல நிறக் கண்ணாடியில் மின்னல் இரத்த அற்புதங்கள் தான் இந்த விண்மீன்களாம். வெயில் என்னும் அரசாங்கம் மக்களை வாட்டி வதைத்தாலும் இருளலால் வேலியைக் கட்டி வைத்தாலும் தொழிலாளர்களின் உண்மையான எண்ணங்கள் அங்கு இறைந்து கிடக்கிறதா என்று முடிக்கிறார்.

## வணக்கம் வள்ளுவ

## தமிழன்பன்

இயற்பெயர் செகதீசன், பெற்றோர் - செ.இரா.நடராசன், வள்ளியம்மாள். பிறப்பு 28.9.1940.. இவர் ஆசிரியர், மரபுக் கவிஞர், கவியரங்கக் கவிஞர், புதுக்கவிதைக் கவிஞர், சிறுகதை ஆசிரியர், புதுக்கவிஞர், நாடக ஆசிரியர், சிறார் இலக்கியப் படைப்பாளி, வாழ்க்கை வரலாற்றாசிரியர், திறனாய்வாளர், கட்டுரையாளர், ஓவியர், சொற்பொழிவாளர், திரைப்பட இயக்குநர், திரைப்பட பாடலாசிரியர் எனப் பன்முக ஆளுமைகளைக் கொண்டிருப்பவர்.

சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றியவர். தமிழ்நாடு அரசின் இயல் இசைந நாடக மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் தமிழ்நாடு அரசின் அறிவியல் தமிழ் மன்றத்தின் உறுப்பினராகவும் பணியாற்றி உள்ளார்.

வணக்கம் வள்ளுவ என்ற கவிதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதெமி விருதை 2004 ஆம் ஆண்டில் பெற்றார். தமிழக அரசின் கலைமாமணி விருதையும் இவர் பெற்றுள்ளார். நெஞ்சின் நிழல் என்ற புதினத்தையும். தீவுகள் கரையேறுகின்றன, தோணிகள் வருகின்றன, அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், காலத்திற்கு ஒரு நாள் முந்தி உள்ளிட்ட பல்வேறு கவிதை தொகுப்புகளையும் என்னைக் கவர்ந்த பெருமானார் (ஸல்) என்ற சொற்பொழிவு நூலையும் பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள் என் கட்டுரைத் தொகுப்பையும், மதிப்பீடுகள் என்ற திறனாய்வு நூலையும் வெளியிட்டுள்ளார். ஹைக்கூ மற்றும் லிமரிக் என்ற இருவகைக் கவிதை வடிவங்களையும் இணைத்து லிமரைக்கூ என்ற வடிவத்தை டெட் பாக்கர் என்னும் கவிஞர் உருவாக்கினார். இவ்வகைக் குறும்பாக்களைத் தமிழில் படைத்து 138 பாக்களைத் தொகுத்து சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள் என்ற பெயரில் ஈரோடு தமிழன்பன் வெளியிட்டிருக்கின்றார்.

**ஏழாவது சுரம்**
**கதவை இழுத்து மூடியதால்**
**எட்டாவது சுரம்**
**ஏமாந்து திரும்பியிருக்கலாம்**

**ஆனால் இசை தேவதை**
**ஆலாபனை நிறுத்திவிட்டுக்**
**கதவைத் திறக்க**
**ஓடியிருக்க மாட்டாளா?**

**ஏழு வண்ண வில்**
**எழுதி வைத்திருக்கலாம் வாசலில்**
**“எட்டாவது வண்ணத்திற்கு**
**இங்கு இடம் இல்லை!“**

அதற்காக

உறங்க முடியாத வானம்

நிறங்கள் நீங்கிய இரவுப் படுக்கையில்

வருந்தி அழுதிருக்காதா?

வாரத்திற்குள் வந்துவிடத் துடித்த

எட்டாவது கிழமை

ஞாயிறு அந்தியில் தீக்குளித்திருக்கலாம்

அதனால்

மாதத்தின் மார்பு துடித்து

வெடித்திருக்காதா?

வள்ளுவ!

எட்டாவது சீர்

உன்னைத் தேடி வந்தபோது

என்ன செய்தாய்?

“போடுவதற்கு ஒன்றுமில்லை

போ“

என்று

வாசல் யாசகனை

வீடுகளில் விரட்டுவதுபோல்

விரட்டி விட்டாயா?

எட்டாவது சீர்

ஏன் உனக்குத் தேவைப்படவில்லை?

யாப்பு

கூப்பிட்டு மிரட்டியதால்

ஏற்பட்ட அச்சமா?

ஏழு சீர்களிலேயே

ஒளி தீர்ந்து போனதா? - ஈற்று

முச்சீரடியில் உனக்கும்

மூச்சு முட்டியதா?ட

“காசும்“ “பிறப்பும்“

உன்முன் வந்து கண்களைக்

கசக்கினவா?

“நாளும்“ “மலரும்“

நச்சரித்தனவா?

இல்லை,

எட்டாவது சீர்தான்

அடுத்த குறளின் முதற் சீரா?

அப்படியே ஆனாலும்

கடைசிக் குறளின் காலடியே

எட்டாவது சீர் ஒன்று

தோளில் என்னைத் தூக்கிக்கொள்

என்று கெஞ்சியிருக்குமே!

கடலின்

கடைசி அலையின்

தாகத்தைத் தணிப்பது என்வேலை
இல்லை என்கிறாயா?
சிந்தனைகளை எண்ணியவனே
நீ
சீர்களை எண்ணவில்லையோ?

உனக்கு
எண்ணங்களே முக்கியம்
எங்களுக்கோ
எண்ணிக்கையே முக்கியம்.

ஏழு சீர்களில்
சொன்னதே எதற்கு என்று
எண்ணிக் கொண்டிருக்கிறேன்...
ஏன்
எட்டாவது சீர்க் கவலை உங்களுக்கு
என்கிறாயா?
போதைப் “பொருளுக்கு“
அறத்தையும் இன்பத்தையும்
அவசரமாய் அடகு வைப்பவர்கள்
நாங்கள்
அப்படித்தான் இருப்போம் .

வீடு தேடுகிற
வெறியில்
அறம் பொருள் இன்பத்தை
மிதித்துக் கொண்டு

ஒடுகிறவர்கள் நாங்கள்
அப்படித்தான் இருப்போம்

இலக்கணக்காரன்
இப்போது எப்படி ஏங்குகிறான்
தெரியுமா?

“எட்டாவது சீருக்கு
இடம் தந்திருந்தால் இன்னும் ஏதேனும்
சொல்லியிருப்பாயே!“

“வாய்ப்புள்ளவன்
அந்த ஒரு சீரில் சிந்தித்து
வரிகளைச் சமப்படுத்தட்டும்
என நான்தான்
விட்டு வைத்திருக்கிறேன் “ என்கிறாயா?

என்னோடு
நிறைவடைந்து விடவில்லை...
சிந்திக்க இடம்
இன்னும் உண்டு என்பதைக்
கோடி காட்டுகிறாயா?

உண்மையின்
உள்ளத்திலிருந்து பேசுபவர்
எவரோ அவரே - நீ
எழுதாது விட்ட எட்டாவது சீரா?

ஆனால்

வள்ளுவ!

எட்டாவது சீர்கள் எல்லாம்

இப்போது உன் சிலை முன்

உண்ணாவிரதம் இருக்கின்றன.

என்ன கோரிக்கை தெரியுமா?

திரும்பவும்

நீ வந்து இன்னொரு திருக்குறள்

எழுதும்போது

ஏழு சீர்களுக்குள் இடம் தரவேண்டுமாம்!

வள்ளுவர் வழங்கும் விடுதலை

தாயாய், தந்தையாய்,

மகனாய், மகளாய், மாமனாய்,

அத்தையாய் மானுடத்தை

வளர்த்தெடுக்க வந்தவரில்லை

வள்ளுவர்.

இவ்வுறவுகளில் எல்லாம்

இருப்பதும் இல்லாமல் இருப்பதுமான

மனுசியை , மனிதனைக் கண்டெடுக்க,

வளர்த்தெடுக்க வந்தவர் அவர்.

ஆள்பவனாய், ஆளப்படுபவனாய்,

காவலனாய், நீதிபதியாய்,

உழைப்பவனாய், உறிஞ்சுபவனாய்

மானுடத்திலிருந்து

பதவியர்களை, பாட்டாளிகளை

உரித்தெடுத்து வைப்பதற்கு

வந்தவரில்லை வள்ளுவர்....

வள்ளுவர்

வந்தது மானுடத்தை விடுதலை செய்ய!

உறவுகளால் ஆகும் அன்பைவிட

அன்பினால் ஆகும் உறவே

உயர்ந்தது!

வள்ளுவர்

மனிதனை மீட்டெடுக்கப் போராடினார்.

கடவுளையே கோயில்களிலிருந்து

விடுதலை செய்தவர் அவர்

குருக்கள், குடமுழுக்குகள், தட்சிணை,

பிரசாதம், உண்டியல், உற்சவம் எல்லாவற்றையும்

பொறுத்துக் கொண்டு

கோயிலில் சிறைபட்டுக் கிடந்த

கடவுளை வள்ளுவர் விடுதலை செய்தார்.

செம்பிலிருந்தும் கல்லிலிருந்தும்,

வள்ளுவர்

கடவுளை விடுதலை செய்தார்.

ஆனால்

திருந்தாத மக்கள்

கடவுளைக்

கைதியாக்கித்

தண்டித்துக் கொண்டிருக்கின்றனர்

இன்னும்...

வள்ளுவர்

மலைகளோடு போராடவில்லை

உயரங்களை விடுதலை செய்ய்

பூமியோடு போராடவில்லை

விதைகளின் கதைகளை விடுதலை செய்ய்

வானத்தோடு போராடவில்லை

திசைகளை விடுதலை செய்ய்

முப்பதாயிரம் விளக்குகள்

வள்ளுவர் மூளையில் எரிந்து கொண்டிருந்தன்

உறங்க முடிந்ததில்லை அவரால்.

தெருக்களிலேயே

ஊர்களைப் புதைப்பதுபோல்

விளக்குகளிலேயே

வெளிச்சத்தைப் புதைப்பதுபோல்

மனிதனை

மனிதனுக்குள்ளேயே

வாழ்க்கை புதைத்தது

பார்த்த

வள்ளுவர் உள்ளம் பதைத்தது.

**விளக்கம்**

வள்ளுவம் ஏழுசீர்களைக் கொண்டது. ஏழு சீர்களுக்குள்ளே வள்ளுவர் தான் கூற வந்த கருத்துக்கள் யாவற்றையும் திறம்பட எடுத்தாண்டுள்ளார். ஆனால், எட்டாவதாக ஒரு சீர் சேர்த்து வள்ளுவர் எழுதாமல் விட்டதைப் பற்றி தமிழன்பன் புனைந்துள்ள கவித்துவம் நிறைந்த கவிதை வரிகளின் பொருளாவது,

சுரங்கள் ஏழு என்பார்கள். அதில் ஏழாவது சுரம் கதவை இழுத்து சார்த்தியதால் எட்டாவது சுரம் வராமல் ஏமாற்றம் அடைந்து திரும்பி இருக்கலாம் என்கிறார் கவிஞர்.

ஆனால் இசைகளுக்கான பெண் தெய்வம் தன் பாடலை நிறுத்திவிட்டு மூடப்பட்ட கதவினைத் திறக்க ஓடிச் சென்றிருக்க மாட்டாளா? என்ற வினாவினை எழுப்புகின்றார்.

ஏழு நிறங்களுக்கான வானவில் வாசலில் வரைந்து வைத்திருக்கலாம். எனினும் எட்டாவதாக ஒரு வண்ணத்திற்கு அங்கே இடமில்லை அதற்காக இரவில் உறங்காமல் வானம் “வருந்தி அழுதிருக்காதா? என்று கவிஞர் கூறுகின்றார்.

வாரத்தின் நாட்கள் ஏழு, எட்டாவதான கிழமை ஞாயிறு தன்னை வேண்டாமென்று எண்ணி தானே தீக்குளித்திருக்கலாம். அப்படி செய்தால் மாதங்களின் மனம் வெடித்திருக்காதா? என்று “எட்டாவது நாள்“ ஏன் தேவையற்ற ஒன்றா? என்கின்றார்.

அடுத்து வள்ளுவரே! எட்டாவதாக ஒரு சீர் (வார்த்தை திருக்குறளில் தன்னையும் சேர்த்துக் கொள்ள என்னை நோக்கி வந்ததா? என்று கேட்டுவிட்டு அவரே விடை பகர்கின்றார். எட்டாவது சீர்

சேர்த்து எழுதுவதற்கு ஒன்றுமில்லை என்று கூறி, அதனை விரட்டி விட்டாயா? உனக்கு எட்டாவது சீர் பயன்படவில்லையா? என்று வள்ளுவரை நோக்கி கேட்கும் நோக்கில் பாடியுள்ளார்.

இலக்கணக்கட்டு என்று சொல்லப்படும் யாப்பு உன்னை அழைத்து எட்டாவது சீர் சேர்க்கக் கூடாது என்று மிரட்டியதால் வள்ளுவனே! உமக்கு அச்சம் ஏற்பட்டதோ? ஏழு சீர்களில் பொருள் தீர்ந்து போனதா? ஈற்றடி முச்சீராய் வரும் வெண்பா இலக்கணத்தைப் பயின்ற உனக்கும் இலக்கணத்தை பார்த்து மூச்சு முட்டிவிட்டதா?

காசு, பிறப்பு என்ற யாப்பின் வாய்ப்பாட்டை பிடித்து கண்கள் கசக்கிக்கொண்டாயோ? நாள். மலர், இவைகள் தங்களைப் பயன்படுத்திக்கொள்ள தொல்லை செய்தனவா? அடுத்தடுத்த குறளின் முதற்சீர்தான் எட்டாவது சீரா? அப்படியென்றால் கடைசிக் குறளின் எட்டாவது சீர் ஒன்று வந்து தோன்றியிருக்க வேண்டுமே! புதியசீர் வந்து தன்னை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்குமே !

கடலில் தோன்றும் கடைசி அலையின் ஆசையை நிறைவேற்றுவது என்னுடைய வேலை இல்லை என்று கூறுகின்றீரா? நிறைய சிந்தனைகளை எண்ணியவனே நீ தானே! ஏன் குறளின் சீர்களை எண்ணவில்லையா? என்று கவிஞர் கூறுகின்றார்.

வள்ளுவரே! உமக்கு உம்முடைய எண்ணங்கள் முக்கியம். ஆனால், எங்களுக்கு அப்படியல்ல எண்ணிக்கைதான் முக்கியம்.

குறளினை ஏழு சீர்களில் எதற்காகச் சொன்னீர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். எட்டாவது சீர் பற்றிய கவலை உங்களுக்கு ஏன் என்று கேட்கின்றீர்களா? அறத்தையும், இன்பத்தையும் போதைப் பொருட்களுக்காகப் பயன்படுத்தும் எண்ணம் கொண்ட மக்களினம் நாங்கள். எங்களது சிந்தனைப்போக்கு அவ்விதமே இருக்கும்.

வீடு பேற்றைத் தேடிச் செல்கின்றேன் என்ற பெயரால் அறம், பொருள், இன்பத்தை மிதித்துக்கொண்டு செல்பவர்களாகயி மக்களினம் எண்கள் பற்றியே சிந்திக்கும்.

இலக்கணம் அறிந்தவர்கள் எல்லாம் இப்பொழுது மிகவும் வருந்தி ஏங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எட்டாவது சீருக்கு இலக்கணம் இடம் தந்திருந்தால் இன்னும் ஏதாவது குறளில் சேர்த்து பாடியிருப்பாய்.

எட்டாவது சீரினைப் போட்டு அந்த சீரில் சொற்களை சிந்தித்துப் பயன்படுத்த தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் வாரிகளை சரிசமமாக்கிக் கொள்ளட்டும் என்று நீ விட்டு வைத்திருந்தேன் என்று கூறுகின்றாயா?

வள்ளுவத்தோடு குறள் நிறைவடைந்துவிடவில்லை. இன்னும் சிந்தித்து எண்ணங்களை கொட்டித் தீர்க்க நிறைய கருத்துக்கள் தன் மனதில் என்ன எண்ணங்கள் இருக்கின்றதோ அந்த உண்மையைப் பேசுபவரே எட்டாவது சீராக எடுத்துக் கொள்ளலாமா

ஆனால் வள்ளுவரே! எட்டாவது சீர்கள் எல்லாம் உன்னுடைய சிலைகளுக்கு அருகில் உண்ணாவிரதம் இருக்கின்றன. கைடெம் என்னவென்றால்,

மீண்டும் நீ வந்து குறளை எழுதும்போது ஏழுசீர்களுக்குள் இடம் தரவேண்டும் என்று கூறுவதாக ஈரோடு தமிழன்பன் கற்பனை வளம் ததும்ப ‘எட்டாவது சீர்“ என்ற கவிதையைப் புனைந்துள்ளார்.

மனித இனத்தை தாய், தந்தை, மகன், மகள், மாமன், அத்தை என்ற உறவுகளால் வளர்த்தெடுக்க வள்ளுவர் வரவில்லை. இந்த உறவுகளுக்குள் இருக்கும் மனிதனைக் கண்டெடுக்கவே தோன்றினார்.

பதவிகளாகக் கருதப்படும், உலகத்தை ஆள்பவன், பிறரால் ஆளப்படுபவன், காவல் காப்பவன், அறம் கூறும் நீதிபதி, உழைக்கும் உழைப்பாளி, அவனைச் சுரண்டும் தொழிலாளி என்ற பதிவிகளில் இருப்பவரையும், பாட்டாளி வர்க்கத்தினரையும் தனித்தனியே பகுத்துப்பார்த்து வரவில்லை. போராட்ட களமாக உலக நினைக்கச் செய்யும் எண்ணங்களில் இருந்து மானுடத்தை விடுதலைச் செய்ய வந்தவன். உறவுகளால் ஏற்படும் அன்பைக் காட்டிலும், அன்பினால் ஏற்படும் உறவு மேலானது என்று மனிதனை மீட்டெடுக்க வந்தவர் வள்ளுவர். கடவுளையும் விடுதலைச் செய்து

அவருக்கும் சுதந்திரம் தரவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர். கோவில்களில் நடைபெறும் குடமுழுக்கு, தட்சிணை,பிரசாதம், எனவே, உண்டியல், உற்சவம் என அனைத்தையும் பொருத்திக்கொண்டு கோவிலில் சிறைபட்டுக் கிடந்த கடவுளை விடுதலைச் செய்தவர்: ஆனால், அவற்றை மக்கள் புரிந்துக்கொள்ளாமல் கடவுளை மீண்டும் கைதியாக்கி தண்டனைக் கொடுக்கிறார்கள். அவர் உயரங்களை விடுதலை செய்ய மலைகளோடு போராடவில்லை. விதைகளை விடுதலை செய்ய பூமியோடும் சண்டையிடவில்லை. திசைகனால் விடுவிக்க வானத்தோடு பூசலிட வில்லை. இவரின் அறிவுத்திறனால் உறங்க இயலவில்லை. தெருக்களுக்குள் ஊர் புதைந்துபோனது போதை விளக்குக்குள்ளே வெளிச்சருக்கதைகள் புல, மனித வாழ்க்கை அவனுக்குள்ளே புதைந்ததை எண்ணி பரிதவித்தார்.

## சிறுகதைகள்

## 1. கடிதம்

## (புதுமைப்பித்தன்)

**ஆசிரியர் குறிப்பு**

புதுமைப்பித்தன் ஏப்ரல் 25, 1906 அன்று கடலூர் மாவட்டத்தில் திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ.விருத்தாசலம். தந்தை சொக்கலிங்கம் பிள்ளை, தாயார் பர்வதத்தம்மாட

**சிறுகதைகள்**

“அகல்யை“, “செல்லம்மாள்“, “கோபாலய்யங்காரின் மனைவி இது மிஷின் யுகம்“, “கடவுளின் பிரதிநிதி“. “கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்“, “படபடப்பு“. “ஒரு நாள் கழிந்தது“. “தெரு விளக்கு“ “காலனும் கிழவியும்“, “பொன்னகரம்“, “இரண்டு உலகங்கள்“. “மனித யந்திரம்“. “ஆண்மை“, “ஆற்றங்கரைப் பிள்ளையார்“. “அபிநவ் ஸ்நாப், “அன்று இரவு“, “அந்த முட்டாள்“, “வேணு அவதாரம்“, “பயம்“. “டாக்டர் சம்பத்“, “எப்போதும் முடிவிலே இன்பம்“, “ஞானக் குகை“, “கோபாலபுரம்“, “கடிதம் போன்ற“ எண்ணற்ற சிறுகதைகளை எழுதி உள்ளார்.

சிங்கார வேலு ஓர் இலக்கிய கர்த்தா. வாழ்க்கையின் இலட்சியங்களை, வாழ்க்கையின் சிக்கல்களை – ஏன், வாழ்க்கையையே – திறந்து காண்பிக்கும் ஜன்னல்கள்தாம் சிறுகதைகள் என்றால் அவைகளுக்கு உதாரணம் சிங்கார வேலுவின் கதைகள்.

‘பேனாவை வைத்துக்கொண்டு கோனாகிவிடுவோம்!’ என்று அவர் ஒரு நாளும் கனவு காணவில்லை ஆனால் பேனாவை வைத்துக் கொண்டு பிச்சையெடுக்க வேண்டும் என்று நினைக்கவும் இல்லை.

அவருடைய சிறுகதைகளைப் பொறுத்தவரை சமூகம் நூறு பேரில் அவரை ஒருவராக மதித்தது. முக்கால்வாசிப் பேருக்கு அழகு என்பது என்ன என்று தெரியாது. சிலருக்கு அழகாயிருக்கிறது என்று முதலில் சொல்லுவதற்குத் தைரியமில்லை.

இந்த மாதிரியான சமூகத்தினிடையே சிங்காரவேலு உயிர்வாழ வேண்டுமென்றால் வாழ்க்கை உண்ணாவிரதத்தில் முக்தியடைந்திருக்க வேண்டும். அல்லது ஏதாவது கருணை மிகுந்த தெய்வம் அட்சய பாத்திரம் ஒன்றைக் கொடுத்து வைத்துவிட்டுப் போயிருக்க வேண்டும். இயற்கையின் சட்டத்தை மீறவும், தெய்வத்தின் கருணையைப் பெறவும் முடியாத இந்தக் கலிகாலத்தில் பிறந்ததைப் பற்றி சிங்கார வேலு நொந்து கொள்வதில் பயன் இல்லை.

அவருடைய சமூகமாகவும் ரஸிகர்களாகவும் சில நண்பர்கள் இருந்தார்கள். அதனால் அவருக்குப் பசி என்ற கவலை ஏறக்குறைய இல்லையெனலாம். ஏனென்றால் அவருடைய தேவைகள் வெகு கொஞ்சம். குடும்ப பாரம் கிடையாது. கனவு கண்டுகொண்டிருப்பதற்குப் போதிய அவகாசம் இருந்தது. எனினும் அதை இலக்கியமாக வடிவெடுக்க வைக்கும் ஊக்கம் குறைந்துவர ஆரம்பித்தது.

புகழ் இல்லாமல் இலக்கிய கர்த்தா உயிர் வாழ முடியாது. முகஸ்துதி வேண்டாம். இல்லாததை நீங்கள் சொல்லிவிட வேண்டாம். செய்வது சரிதான், நன்றாயிருக்கிறது என்று சொல்லவாவது வேண்டாமா? நேர்மையான புகழ் இலக்கிய கர்த்தாவுக்கு ஊக்கமளிக்கும் உணவு. இதைக் கொடுக்கக் கூடச் சக்தியற்ற

கோழையான ஒரு சமூகத்திற்கு என்ன எழுதிக் கொட்ட வேண்டியிருக்கிறது! இதில் வாழும் கிரந்த கர்த்தா மனமிடிந்து பாழாய்ப் போவான் ஆனால் சிங்காரவேலு இப்படி நாசமாவதற்குக் கோழையல்லர். தைரியத்தினால் ஏற்பட்ட மனக் கசப்பு அவரை ஒன்றும் எழுதவிடவில்லை.

அவர் சமூகத்தில் நம்பிக்கை வைத்த மனிதர். ஓடித் தளர்ந்த சிந்தனைகள் எல்லாம், ஈட்டி குத்தும் மாதிரி, கதைகளைச் சிருஷ்டித்தன.

அன்று…

எப்பொழுதும்போல் அந்தத் தனியறையில் பாயில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். வெற்றிலையை மென்று மென்று துப்பியாகிவிட்டது. என்ன செயற்கை ஊக்கம் கொடுத்தாலும் அந்தக் கதையைத் தொட முடியவில்லை. ஏழு நாட்களாக இந்தக் கதிதான். கையிலிருந்த பேனாவையும் காகிதத்தையும் கீழே பொத்தென்று போட்டார்.

பின்புறமிருந்த தலையணையில் சாய்ந்துகொண்டு, வெற்றிலைச் செல்லத்தைப் பக்கத்தில் இழுத்து வைத்துக்கொண்டு, வெற்றிலை போட ஆரம்பித்தார்.

அதுவும் ஒரு கலை – அவருக்கு. தெரு வாசற்படியில் யாரோ வருவதுபோல் காலடிச் சப்தம்.

‘‘சிங்காரம்!’’ என்ற குரல்.

‘‘சுந்தரமா? வா!’’

அவருடைய நண்பர் சுந்தரம் வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, ‘‘என்ன வெளியே போகலாமா? மணி ஐந்திருக்குமே!’’ என்றார்.

‘‘வெற்றிலையைப் போடு, முதலில்!’’

‘‘என்ன, இன்னும் கதையை முடிக்கவில்லையே! ஆரம்பம் வெகு ஜோராய் இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்!’’

“ஆமாம், வேலையில்லை! எழுதித் தூக்கி நிறுத்துகிற அவசரம் ஒன்றுமில்லை. என்னடா, நல்ல கதையை ரஸிக்கிறதற்கு ஒரு பயலும் இல்லை. சும்மா எழுது எழுது என்றால்! நான்கு பகுத்தறிவற்ற குயில் இல்லை. எனக்கு நான் எழுதுவதைச் ‘சரி, நன்றாயிருக்கிறது’ என்று சொல்ல நான்கு பேர்கள் வேண்டும். சுற்றி ஒன்றுக்குமற்ற கழுதைகளை வைத்துக்கொண்டு என்ன செய்கிறது?” என்றார் சிங்காரம்.

“ரஸிக்கிறதற்கு நாங்கள் எல்லாரும் இல்லையா?” என்றார் சுந்தரம்.

“நீ எனது சிநேகிதன். உனக்கு என்மேல் பிரேமை. நான் என்ன எழுதினாலும் உனக்கு நன்றாகத்தான் தெரியும். மூன்றாவது மனிதன் எவனாவது இதுவரை என் கதை நன்றாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறானா? அதிருக்கட்டுமப்பா! நான் கதை எழுதுகிறேன் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? வா, போகலாம்! கதை எழுதி…” என்று சொல்லி எழுந்து வெளியே புறப்படத் தயாரானார்.

மௌனமாகக் கையிலிருந்த புகையிலையை வாயில் போட்டுக் கொண்டு நண்பரும் எழுந்தார்.

அன்று பேச்சு எங்கெல்லாமோ சுற்றியும் கடைசியில் இதில்தான் வந்து விழுந்து கொண்டிருந்தது.

ஐந்தாறு நாட்கள் கழித்து… இரவு ஏழு மணி இருக்கும்.

சிங்கார வேலு தமது அறையில் உட்கார்ந்து ஏதோ வாசித்துக் கொண்டிருக்கிறார்.

அந்தக் கதை அதுவும் அப்படியே அரைகுறையாகத்தான் கிடக்கிறது.

“ஸார், தபால்!” என்ற சப்தம்.

சிங்காரவேலுவுக்குக் கடிதம் வருவது விதி விலக்கு. முக்கால்வாசி வேறு யாருக்காவது போகவேண்டிய கடிதம் தவறுதலாக இங்கு வந்துவிடுவது உண்டு. துணைத் தபால்காரனாக இவரும் சிரமப்படவேண்டியதிருக்கும்.

ஜன்னல் வழியாக விழுந்த கடிதத்தை எடுத்து விலாசத்தைக் கவனித்தார். அதில் தவறு ஒன்றுமில்லை. விலாசம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் கையெழுத்து அவருக்கு அறிமுகமானதாக இல்லை. தபால் முத்திரை எப்பொழுதும்போல் ஒரே கறுப்புமயமாக இருந்தது. பிரித்து வாசித்தார்.

விசாகப்பட்டி,

10.9.33

இலக்கிய கர்த்தரான திரு.சிங்காரவேலு அவர்கள் திவ்விய சமூகத்திற்கு, நான் பெரிய படிப்பாளி ஒன்றுமில்லை ஆனால் கலையில் எனக்கு ஆர்வம் மிகுதியும் உண்டு.

தங்கள் சிறுகதைகளுக்கு நிகராகத் தமிழ் இலக்கியத்தில், ஏன், உலக இலக்கியத்திலேயே – எனக்கு ஆங்கிலத்திலும் சிறிது பயிற்சி யுண்டு – பெரும்பான்மையாகக் கிடையாது என்றே சொல்லுவேன். தங்கள் ‘சாலாவின் சங்கடங்கள்’ என்ற சிறுகதை வாழ்க்கையின் உயிர்பெய் ஓவியமாக இருக்கிறது.

அது ஒரு புதிய மானத உலகத்தையே திறந்து காண்பிக்கிறது. அதைப் பற்றிப் புகழ்வதற்கு, நானும் ஓரளவு எழுதும் பயிற்சி பெற்றவனாக இருந்தால் எனது உள்ளத்தில் தோன்றியதை அப்படியே எடுத்துரைப்பேன். ஆனால் அந்தோ, அவ்வளவும் மூங்கையன் கண்ட கனவாகவே இருக்கின்றன. இன்னும் தங்கள் எண்ணிறந்த கதைகளை விடாது படித்துவந்தவர்களில் நானும் ஒருவன். இன்னும் புதிய கற்பனைகளை, கனவு லோகங்களைச் சிருஷ்டிக்க இறைவன் தங்களுக்குப் போதிய சக்தி அருளுவானாக.

இப்படிக்கு,

தங்கள் விதேயன்,

நாகப்பன்.

கடிதத்தை வாசித்ததும் முகம் மலர்ச்சியடைந்தது. உள்ளம் பூரிப்படைந்தது. குதூகலம் பிறந்தது. மறுபடியும் வாசித்தார். இன்னொரு முறையும் வாசித்தார். அந்தக் கடிதம் அவருடைய ஒரு பெரிய தாபத்தைத் தீர்த்தது.

“நீ ஒருவன் தான் – எண்ணிறந்தவர்களில் ஒருவனல்லன்! சமூகத்தில் கொஞ்சம் நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது. முழுமோசமில்லை!” என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

கடிதத்தைச் சுந்தரத்திற்குக் காட்ட வேண்டும் என்ற ஆசை. ஆனால் அதில் என்னதான் இருக்கிறதோ? மறுபடியும் படிக்க ஆரம்பிக்கிறார். நாகப்பனுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதவேண்டும் என்று நிச்சயித்தாகிவிட்டது.

மறுபடியும் படிக்க ஆரம்பித்த பிறகு மனது திடீரென்று மாறுகிறது. சில சில எழுத்துக்கள் தமக்கு அறிமுகமான யாரோ ஒருவரின் கையெழுத்து மாதிரித் தெரிகின்றன. ஆமாம்! யாரோ நமக்குத் தெரிந்த பயலுடைய வேலைதான். இல்லாவிட்டால் என் விலாசத்தை விசாகப்பட்டிக்கு யார் கொண்டுபோய்க் கொடுக்கப்போகிறார்கள். இந்தப் புளுகு மூட்டையை என்னிடமா அவிழ்க்க வேண்டும்? சீச்சீ! முட்டாள்! கோழை! தைரியமிருந்தால், உண்மையில் ரஸித்தால், பகிரங்கமாகப் பத்திரிகைக்கு ஏன் எழுதக் கூடாது? அவன் ரஸித்தது என் சிநேகத்திற்காகத்தான். சீ! இதை எழுதிவிட்டால் எனக்குத் திருப்தி, சாந்தி, எல்லாக் குட்டிச்சுவரும் வந்துவிடுமென்று எண்ணினானாக்கும்! முட்டாள்! அவனும் இந்தச் சமூகத்தில் ஒரு ஜந்துதானே! இந்த முட்டாள் கூட்டத்திற்குக் கதை எழுத வேண்டுமாம், கதை! அதைவிடக் கசையடி கொடுப்பேன்! முட்டாள்கள்! தரித்திரக் கழுதைகள்! நாளைக்கு வரட்டும்! கதை வேண்டுமாம், கதை!

இந்தப் பயல்கள் சாவகாசமே வேண்டாம். தொலைந்தால்தான் இந்தப் பீடை ஒழியும். உண்மைப் பற்றுதலைக் காண்பிக்க தைரியமில்லாத கோழைகள்! கடிதம் எழுதினானே கடிதம், என்னை முட்டாள் என்று நினைத்துக் கொண்டானா? சீச்சீ!

முட்டாள்! அவனை என்ன சொல்ல?... பெற்று வளர்த்த சமூகம் இப்படிப்பட்டது. இதற்காக எழுதாமலும் இருக்கிறதில்லை.

காகிதம் எரியும் நாற்றம் அறை முழுவதும் பரந்தது.

விளக்கும் கரி பிடித்து எரிந்து, எண்ணெயற்றுச் சோர்ந்து மங்கிக் கொண்டே வந்தது. வெற்றிலைப் பெட்டியை எடுக்கும் சப்தம். சிங்காரவேலு வெற்றிலை போட்டுக்கொண்டார்.

விளக்கு அணைந்தது.

அவர் மனத்தில் புழுங்கிய தணலும் அவிந்தது.

அன்று அவர் வெகு நேரம் தூங்கவில்லை.

இந்த மாதிரி அசட்டுத்தனமான சமூகத்தை எப்படித் தூக்குவது?

கோழைத்தனம் பிறப்புரிமையாக இருக்கிற இந்தப் புழுக்களை மனிதர்கள் ஆக்குவது எப்படி?

இருள் இருந்தால்தானே ஒளி? ஒளி வராமல் போய்விடுமா?

அதுவரை காத்திருக்க வேண்டியதுதான்.

எத்தனை காலமோ?

ஒளி வரும்பொழுது நாம் இருக்க வேண்டும் என்ற அவசியமுண்டா? எனது சிருஷ்டிகள் இருந்தால் போதும்!

## 2. வாய்சொற்கள்

### ஜெயகாந்தன்

**ஆசிரியர் குறிப்பு**

ஜெயகாந்தன் ஏப்ரல் 24, 1934 கடலூரில் பிறந்தார். இவர் எழுத்தாளர், பத்திரிகையாளர், திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் விமர்சகர் என்று பன்முகம்கொண்ட ஆளுமையாக ஆவார்.

**நாவல்கள் மற்றும் குறுநாவல்கள்**

“வாழ்க்கை அழைக்கிறது“ (ஆகஸ்ட் 1957), “கைவிலங்கு“ (ஜனவரி 1961), “யாருக்காக அழுதான்?“ (பெப்ரவரி 1962), “பிரம்ம உபதேசம்“ (மே 1963) “பிரியாலயம்“ (ஆகஸ்ட் 1965), “கருணையினால் அல்ல“ (நவம்பர் 1965). ”பாரீசுக்குப் போ!“ (டிசம்பர் 1966), “கோகிலா என்ன செய்துவிட்டாள்?“ (நவம்பர் 1967), “சில நேரங்களில் சில மனிதர்கள்“ (ஜூன் 1970), “ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்“ (ஜனவரி 1971), “ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்) (ஏப்ரல் 1973), “ஜெய ஜெய சங்கர...“ (செப்டம்பர் 1977), ”கங்கை எங்கே போகிறாள்“ (டிசம்பர் 1978), “ஒரு குடும்பத்தில் நடக்கிறது.... (ஜனவரி 1979), “பாவம்“, “இவள் ஒரு பாப்பாத்தி“ (மார்ச் 1979), “எங்கெங்கு காணினும்...“ (மே 1979), “ஊருக்கு நூறு பேர் (ஜூன் 1979), “கரிக்கோடுகள்“ (ஜூலை 1979), “மூங்கில் காட்டினுள்ளே“ (செப்டம்பர் 1979), “மூங்கில் காட்டு நிலா“ (கல்பனா இதழ்), “ஒரு மனிதனும் சில எருமை மாடுகளும்“ (டிசம்பர் 1979), “ஒவ்வொரு கூரைக்கும் கீழே...“ (ஜனவரி 1980), “பாட்டிமார்களும் பேத்திமார்களும்“ (ஏப்ரல் 1980), “அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள்“ (ஆகஸ்ட் 1980), “இந்த நேரத்தில் இவள்...“ (1980), “காத்திருக்கா ஒருத்தி“ (செப்டம்பர் 1980), “காரு“ 1981

***********

சத்திரத்துத் திண்ணையில் கவிந்திருந்த இருளில் யாருடைய வருகைக்காகவோயாருடைய காலடிச் சத்தத்தைக் கிரகிப்பதற்காகவோ தன் காதுகளை வழி மீது வைத்துக் காத்திருக்கிறாள் ருக்குமணி.

அந்தச் சத்திரம் ஊருக்கு வெளியே – கிராமத்தின் எல்லையில் தலைகாட்டிவிட்டுப் பிறகு திசை மாறிச் செல்லும் – டிரங்க் ரோடின் ஓரத்தில் ரொம்ப காலம் வாழ்ந்து இப்போது பாழடைந்து கிடக்கிறது.

பகல் நேரத்தில் அந்தச் சத்திரத்தின் அருகே இருகு்கும் ஆலமரத்துப் பிரதேசம் மிகவும் கலகலப்பாக இருக்கும். வழிப்போக்கர்களும் பஸ் பிரயாணிகளும்

சத்திரத்துக்கு நேர் எதிரே இருக்கும் அரசங்குடி ரயில்வே ஸ்டேஷனில் இருந்து வரும் ரயில் பிரயாணிகளும் அங்கு வந்து சாப்பிடுவதற்கும், இளநீர் குடிப்பதற்கும் வசதியாய் ஒரு டீக்கடை உண்டு. அந்த டீக்கடையும் வெற்றிலை பாக்குக் கடையும் இரவு நேரத்தில் சத்திரத்துக்குப் பின்னால் பர்லாங்கு தூரத்தில் உள்ள பொட்டைத் திடலில் அமைந்திருக்கும் டூரிங் டாக்கீஸ் கொட்டகை அருகே வியாபாரம் செய்தவற்காக ஆலமரத்துப் பிரதேசத்தைக் காலி பண்ணிவிட்டுப் போய்விடும்.

பகலில் ஆலமரத்தடியில் முறுக்கு மசால்வடை விற்கும் முனியம்மாளிடம் புகையிலை அடைத்த வாயோடு சிரித்துச் சிரித்துக் கதை பேசியவாறு கூடைகள் முடைவதிலும் தடுக்குகள் பின்னுவதிலும் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பாள் ருக்குமணி. அவளருகே ஒரு கட்டுப் பனை ஓலையும், மூங்கில் கம்புகளும் இருக்கும். அநேகமாக எப்பொழுதும் அவளைச் சுற்றி ஒரு கூட்டம் அவள் கூடை முடைவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும். யாருடன் என்ன பேசிக் கொண்டிருந்தாலும் அவள் விரல்கள் ஓய்வில்லாமல் பின்னிக் கொண்டே இருக்கும். அவள் கையிலிருக்கும் அந்தக் கத்தி.. மூங்கிலைப் பிளக்கும்போதோ, ஓலைகளைக் கிழிக்கும்போதோ சற்றே விரல் மீது பட்டால்போதும்! இரண்டு துண்டுதான். அத்தனை கூர்மை. ஆனால் அவள் ஒரு போதும் லேசாகக்கூட விரல்களை வெட்டிக் கொண்டதில்லை. அவளுக்கு விரலில் கண் உண்டு. விரலில் மட்டும்தானா? செவியில், நாவில், உடலெங்கும் கண்கள்தான். ஆனால் முகத்தில் எல்லோருக்கும் கண்கள் இருக்கின்ற இருக்க வேண்டிய இடத்தில் இமைகள் மட்டுமே..

அவள் பிறவிக் குருடு.

பத்து வருஷங்களுக்கு முன் பத்து வயதுச் சிறுமியான ருக்குமணியை அழைத்துக் கொண்டு ஆலமரத்துச் சத்திரத்தில் குடிபுகுந்த செங்கேணி என்கிற நெல்லிக் குப்பத்தான், தன்னைத் தவிர வேறு ஆதரவு இல்லாத ருக்குமணியின் எதிர்காலத்தைப் பற்றி மிகவும் கவலைப்பட்டு “இந்தாம்மா ருக்கு.. நீயோ கண்ணில்லாத கொழந்தை..எனக்குப் பிறகு ஒனக்கு யாரும் ஆதரவு கிடையாது. கண்ணே இல்லாத ஒனக்கு யாரு இருந்து என்ன பிரயோசனம். அவங்களுக்கு நீ

சொமையாத் தான் இருப்ப. நாளைக்கி இந்தக் கிழவன் மண்டையெப் போட்டுட்டா,“ஐயா கண்ணில்லாத கபோதிங்க”ன்னு நீ கையேந்தக்கூடாது. கஷ்டப்பட்டு இந்தத் தொழிலைக் கத்துக்க.. உசிர் உள்ளவரைக்கும் கால் வயித்துக் கஞ்சியாவது குடிக்கலாம்” என்று தினசரி புலம்பிப் புலம்பி அவளது சின்னஞ்சிறு விரல்களுக்கு ஒரு தொழிலைப் பழக்கிக் கொடுத்திருந்தான்.

ருக்குமணிக்குப் பகலெல்லாம் ஆலமரத்தடியில் தொழில். டீக்கடையில் சாப்பாடு. இரவில் ஜனசந்தடி அடங்கிக் கடைகள் அனைத்தும் இடம் மாறிய பின் சத்திரத்துக் தனிமையில் படுக்கை. இருளும் தனிமையும் தானே அவளுக்குப் பழக்கமானவை. அவளுக்குப் பயம் தெரியாது. இருட்டில் தனியாய் இருந்தால் என்ன? இன்னொருவர் துணையுடன் இருந்தால் என்ன? ஆனால் போன வாரத்தில் ஏதோ ஒரு நாள் இரவில் பேச்சுத் துணையாக இருந்த அவன் – கண்ணப்பன் – அதன் பிறகு வரவே இல்லை. அதன் பிறகு அவளுக்கு இந்த இருளும் தனிமையும் பயம் தராவிட்டாலும், வெறுப்பைத் தந்தன.

இன்று முன்னேரத்திலேயே ஏதேதோ நினைத்துக் கொண்டே படுத்து உறங்கிப்போன ருக்குமணி ஒரு கனவு கண்டு திடீரென்று விழித்துக் கொண்டாள்.

கனவா?

ஆமாம். பிறவிக் குருடியும் கனவு காண முடியும். தூக்கமும் விழிப்பும் இருக்கிறதே, கண்கள் இல்லாதிருந்தும் கனவு மட்டும் இல்லாதிருக்குமா? ஆனால் அவளது கனவுகள் ஒலி மயமானவை..சப்த ஜாலங்கள் தான். யாராருடைய குரல்கள் எல்லாமோ கேட்கும்.! குரலும் மெய்யுணர்வும் தான்.. குரலைக் கொண்டுதான் ஆட்களைக் காணமுடியும் அவளுக்கு. தாத்தா செங்கேணிக் கிழவன் சில சமயங்களில் கனவில் வந்து ஆதரவோடு தலையைத் தடவிக் கொண்டு கொஞ்சுவார். இன்றைக்கு அவள் புதுவிதமான கனவு ஒன்று கண்டாள்…

தூரத்திலிருந்து மெல்லெனப் புல்லாங்குழலின் நாதம்…கொஞ்சம் கொஞ்சம் அருகே நெருங்கி ஒலித்தும், திடீரென விலகி மெல்லன மங்கியும், சப்த விளையாட்டு!

அந்த ஜாலம் அதிகமாகி, பிறகு மறைந்த பின் காதருகே நெருங்கி கணீரென்ற குரலில்,‘‘ஞானக் கண் ஒன்று இருந்திடும் போதினிலே’’.. என்ற பாட்டு!

‘‘யாருடைய குரல்‘‘? என்று சந்தேகம் பிறக்கவே இல்லை.

ஆமாம்.. கண்ணப்பாதான் வந்திட்டியா, ஏன் நீ அன்னிக்கு அப்புறம் வரவே இல்லை… புல்லாங்குழல் செஞ்சுட்டியா… எனக்குப் பயமா இருந்திச்சு. நீ எங்கே வராமலே இருந்துடுவியோன்னு. இந்தக் குருடியைக் கட்டிக்கிட்டு நாம்ப எதுக்கு அழணும்னு போயிட்டீயோன்னு நெனச்சேன்..கண்ணப்பா நீ வந்துட்டியா? என்று அவன் முகத்தை, தலையை, தோளை, மார்பெல்லாம் தடவித் தடவி மகிழ்கிறாள்.

குருடியா..யார் குருடி? என்று கேட்டுவிட்டு மறுபடியும் பாடுகிறான் அவன், உள்ளங்கைகளில் அவள் முகத்தை ஏந்திக் கொண்டு….

‘‘ஆன பிருந்தாவனமும் அதோ தெரியுதே, ஆனந்தக் கண்ணன் உருவம் அதோ தெரிவதாலே..’’ என்ற கண்ணப்பனின் இனிமையான குரல் அவளைச் சுற்றிலும் சூழ்ந்து முழங்குகிறது.

‘‘எங்கே தெரியுது? கண்ணப்பா…கண்ணப்பா.’’ என்று அழைக்கிறாள். – விழிப்பு! யாரையும் காணோம். தூரத்தில் டூரிங் டாக்கீஸில் பாண்டு வாத்திய இசைதான் ஒலிக்கிறது.

‘‘இன்னம் நேரம் ஆகலே….ஆட்டம் ஆரம்பிக்கலியே.’’

‘‘இன்னைக்காவது கண்ணப்பன் வருமா.’’ என்ற யோசனை, ஏக்கம்!

அதன் பிறகு அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.

அரசங்குடி ரயில்வே ஸ்டேஷனில் இரவு பத்து மணிக்குக் கடைசிப் பாசஞ்சர் வரும். இரண்டு நிமிஷத்திற்கும் குறைவாகத்தான் நிற்கும். போகும்போது ஷ்டேஷனில் உள்ள வெளிச்சத்தைக் கூட வாரிச் சுருட்டிக் கொண்டு போய்விடும். ஆலமரப் பொந்திலிருந்து ஆந்தைகள் அலறும். சுடுகாட்டிலிருந்து நரிகள் ஊளையிட

ஆரம்பிக்கும். சில சமயங்களில், டிரங்க் ரோடில், சத்திரம் அதிர்வதுபோல் பேரிரைச்சலிட்டுக் கொண்டு லாரிகள் ஓடும். டூரிங் டாக்கீஸில் ஆட்டம் ஆரம்பிப்பதற்காகப் பாண்டு வாத்தியம் முழங்கும்.

ஒரு வாரத்துக்கு முன் இந்த இரவு நேரச் சப்தம் எதுவும் காதில் விழாதவாறு, திடீரென்று பெருகி வந்த கோடை மழை ஒரு மணி நேரம் விளாசி நின்ற பிறகு, சத்திரத்துக் கூரையிலிருந்தும் திண்ணையோரமாய் மண்டியிருந்த அரளிச் செடியின் இலைகளிலிருந்தும், சொட்டுச் சொட்டாய் நீர் முத்துக்கள் பூமியில் தேங்கி நின்ற நீர்க்குட்டத்தில் விழுந்து எழுப்பும் ஓசையில் லயித்தவாறு புடவைத் தலைப்பால் போர்த்திக் கொண்டு அவள் உட்கார்ந்திருந்தபோது மழையில் நனைந்து வந்த நாய் ஒன்று ஆதரவோடு அவள் காலடியில் உரசிக்கொண்டு படுத்ததும், மூலையில் கிடந்த மூங்கில் கம்பை எடுத்து ‘‘சீ‘‘ ‘‘ஓடு‘‘ என்று அடித்து விரட்டினாளே..அப்போது அவன் வந்தான்.

கொட்டுகின்ற மழையில் நனைந்து எந்தப் பக்கம் போவது என்று புரியாமல் எதிலும் போய் மோதிக் கொள்ளக் கூடாதே என்று ஜாக்கிரதை உணர்வோடு இரண்டு கைகளையம் முன்னால் நீட்டி இருளைத் துழாவியவாறு மெல்லத் தடுமாறிக் கொண்டே வந்தான் அவன்.

ருக்குமணி நாயை விரட்டிய சப்தம் கேட்டு, ‘‘பாரம்மா அது? இங்கே ஒரு சத்திரம் இருக்குதாமே இதுதானா.? என்ற கேள்வியோடு சத்திரத்துப் படிகளைப் பாதத்தால் தடவித் தடவிப் பார்த்து மேலே ஏறி வந்தான் அவன்.

‘‘ஆமா. இதுதான் நீ எந்த ஊரு? என்று விசாரித்தாள் ருக்குமணி.

‘‘எனக்கு விழுப்புரம். உம்.. ஊரென்ன ஊரு? எல்லா நம்ம ஊருதான் டிக்கட்டில்லாம ரயில்லே வந்தேன். இங்கே புடிச்சி எறக்கி உட்டுட்டான்.. இப்ப இதான் சொந்த ஊரு. டேசன்லே ஒரு புண்ணியவான் சொன்னாரு. இங்கே சத்திரம் இருக்குதுன்னு. இராப் பொழுதே இங்கே கழிக்கலாமில்லே’’ என்று கேட்டுக் கொண்டே நனைந்திருந்த சட்டையை அவிழ்த்துப் பிழிந்து தலையைத் துடைத்துக் கொண்டான்.

‘‘ராப்பொழுதென்ன? நாளு பூராத்தான் இரேன். யாரு கேக்கப்போறா? என்று ரொம்ப அசுவாரசியமாகப் புகையிலையைத் திருகி வாயிலிட்டுக் கொண்டு சுவரோரமாகச் சாய்ந்து உட்கார்ந்தாள் ருக்குமணி.

அவன் தூணில் சாய்ந்து கொண்டு மடியிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைப்பதற்காகத் தீக்குச்சியை உரசினான்.

தீக்குச்சியிலிருந்து எழுந்து பீடிக்குத் தாவிய நெருப்பின் மங்கிய வெளிச்சம். இருவரும் பார்கக் முடியாத இருவர்தம் முகத்தையும் பாரத்துவிட்டு, ஒரு நொடிக்குள் இருளில் மறைந்தது.

புகையையே ஆதாரமாக உட்கொள்வதுபோல் வாய் நிறையப் புகையை இழுத்து இரண்டு ‘‘தம்‘‘ அடித்தவுடன் குளிருக்கு இதமாக இருந்தது. மூன்றாவது இழுப்புக்கு அந்தத் துண்டுப் பீடியின் லேபிள் கரிந்து மொடமொடவென ஒலி எழுப்பியதும் அவன் அதை அணைத்து அடுத்த வேளைக்காகத் தீப்பெட்டிக்குள் வைத்துவிட்டு, தீப்பெட்டியில் தாளமிட்டவாறு குஷியாகப் பாட ஆரம்பித்தான்.

‘‘ஞானக் கண் ஒன்று இருந்திடும் போதினிலே’’.. அந்த அமைதியான இரவில் அவன் குரல் கணீரென்று ஒலித்தது. ருக்குமணி நிமிர்ந்து உட்கார்ந்து பாட்டைக் கேட்டாள். பாட்டும், பாடுகின்ற குரலும் அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

அவன் தன்னை மறந்து பாடிக்கொண்டிருந்தான். பாட்டு முடிந்ததும் தொண்டையைச் செருமினான். அந்தச் செருமலைக் கேட்டுத்தான் ருக்குமணி இந்த உலகிற்குத் திரும்பி வந்தாள். ‘‘நீ நல்லாப் பாடுறியே.. ரொம்ப நல்லா இருந்திச்சு. இன்னொரு பாட்டுப் பாடேன்?‘‘ என்று கொஞ்சம் நெருங்கி வந்து உட்கார்ந்தாள்.

அவள் புகழ்ச்சி – அவள் புகழ்ந்த விதம், உணர்ச்சி மயமாகித் தடுமாறிய குரல் – அவனுக்கு ஒரு தெம்பையும் பெருமையையும் தந்தது.

‘‘இன்னொரு பாட்டா? உம் – கொஞ்சம் தண்ணி இருந்தா குடுக்கிறியா? – இங்கே கிடைக்குமா?’’

‘‘தண்ணியா? அந்த மூலையிலே இருக்கு. எடுத்துக் குடியேன் ..அது சரி நீ என்ன சாதி?

படையாச்சிம்மா. எந்த மூலையில் இருக்கு தண்ணி? என்று தரையைத் துழாவினான்.

‘‘தோ வர்ரேன்’’ என்று பழகிய பழக்கத்தால் தடுமாற்றம் சிறிதும் இல்லாமல் மூலையில் வைத்திருந்த தகர டப்பாவை எடுத்து அவனிடம் நீட்டினாள். ‘‘இதோ நாங்களும் படையாச்சிதான்’’.

குரல் வந்த திக்கில் இருகைகளையும் அவன் ஏந்த, அவள் நீட்டிய தகரக் குவளை கைமாறும்போது இருவரின் விரல்களும் ஸ்பரிசித்தின.

‘‘உம் சாதி என்ன சாதி’’ என்று முணுமுணுத்தான் அவன்.

‘‘ஆமா. நீ என் டிக்கட் இல்லாம ரயில்லே வந்தே.. எந்த ஊருக்குப் போறே’’ என்றாள் ருக்குமணி.

‘‘நாலு வருசமா நா அப்படித்தான்.. ரயில்லே பாட்டுப் பாடுவேன். சில நாளு ஒரு ரூவா கூடக் கெடைக்கும். அப்பல்லாம் விழுப்புரத்துக்கு வடக்குதான். தெக்கே வந்ததில்லே. அங்க இருக்கிறவங்களுக்கு என்னை நல்லாத் தெரியும். விட்டுடுவாங்க. இவன் யாரோ ஒரு புது ஆளு எறக்கி விட்டுட்டான்.

‘‘ஆமா ஒனக்கு ஊடு வாச பொண்டாட்டி புள்ளு ஒண்ணும் கிடையாதா?‘‘

அவன் அதற்குப் பதில் சொல்லாமல் சிரித்தான். வறண்ட கைத்த சிரிப்பு. அவன் சிரித்த சிரிப்பிலிருந்து, அவன் சிரித்த தோரணையிலிருந்து,‘‘ஒரு வேளை ரொம்பச் சின்னப் பிள்ளையோ? இவன் கிட்ட போயி பொண்டாட்டி பிள்ளைன்னு பேசினா? என்று நினைத்த அவளுக்கும் சிரிப்பு வந்தது. சிரித்துக் கொண்டே கேட்டாள்.

‘‘ஒனக்கு என்னா வயசாச்சி’’

‘‘வயசுக்கென்ன கொறச்சல்? அது ஆகுது கழுதை வயசு?‘‘

“நான் உன் வயசைக் கேட்டா நீ கழுதை வயசைச் சொல்றியே?

“வயசானால் போதுமா? இருவத்திரண்டு வயசாச்சு.. பெத்தவ இல்லாம..வீடு இருந்து என்னா..வாச இருந்து என்னா? அம்மா செத்தப்பறம் சித்தாத்தாக்காரி ஒருத்தி வந்தா…கொடுஞ் சூலி..அவளுக்கும் பிள்ளைக் குட்டின்னு ஆயிடுச்சி..அப்பாவுக்கு நியாயாம் தெரியலை..சரி இந்த வீட்டிலே நமக்கு இன்னா இருக்குன்னு தெய்வத்தைத் துணையா நம்பிப் பொறப்பட்டுட்டேன். வருஷம் நாலாச்சு. இன்னக்கி இங்கே இருக்கணும்னு இருக்கு. நாளைக்கி எங்கயோ? எல்லாம் நமக்குச் சொந்த ஊருதான். எல்லாரும் நம்ம சாதிதான்.. ஒலகத்திலே யாரை நம்பி யாரு இருக்கா? ஆனா பாரு எல்லாரையும் நம்பித்தான் எல்லாரும் இருக்காங்க” என்று கூறிப் பெருமூச்செறிந்தான் அவன்.

“நீ ஏதாவது சாப்பிட்டியா?“

“இல்லே மடியிலே ரெண்டனா இருகு்கு..எங்கு போயி என்ன வாங்கிச் சாப்பிடறது. இந்த வனாந்தரத்திலே?

“இந்தா.. கொஞ்சம் மல்லாக் கொட்டை இருக்கு.. தின்னுப்பிட்டு இன்னொரு பாட்டுப் பாடு. நீ ரொம்ப நல்லாப் பாடறே” என்று கந்தல் துணியில் முடிந்து வைத்திருந்த வேர்க்கடலையைக் கையில் கொட்டி அவன் முன் நீட்டினாள். அவன் இருளில் நீண்ட அவள் கைகைளப் பிடித்து கடலை சிதறாமல் தன் கையில் கொட்டிக் கொண்டான்.

“சரி என்னா பாட்டு வேணும்“?

“எதனாச்சும்.”

“உன்னழகைக் காண இரு கண்கள் போதாதே” என்று தீப்பெட்டியில் தாளம் தட்டியவாறு பாட ஆரம்பித்தான் அவன்

பாட்டில் லயித்திருந்த ருக்குமணியின் காலடியில் மறுபடியும் அந்த நாய் வந்து ஒண்டியது. பாட்டுச் சத்தத்தில் தன்னை மறந்திருந்த அவள் எரிச்சலுற்று மூங்கில் கம்பை எடுத்து வீசினாள். இந்தத் தடவை அடி நாயின் மீது விழுந்தது. நாய் அலறிக் கொண்டே ஓடிற்று.

“அது என்னா? மூங்கில் கம்பா, எங்கே காட்டு” இருட்டில் கையை நீட்டினான் அவன்.

“ஒனக்கு எதுக்கு இது..” என்று அவனிடம் கம்பைக் கொடுத்தாள் ருக்குமணி.

“நல்ல மூங்கில்தான் என்று..“ மூங்கிலைத் தடவிப் பார்த்தான்.

“என்ன செய்யறதுக்கு நல்ல மூங்கில்தான்னு சொல்றே“?

அவன் மெல்லச் சிரித்தான்.

“ஏன் சிரிக்கிறே?“

“ஒண்ணுமில்லே, ஒவ்வொருத்தன் கையிலேருந்தா அது ஒவ்வொண்ணுக்கு உபயோகப்படும். குருடன் கையிலேதான் அது ஒண்ணும் ஆகறதில்லை”

அவன் தனக்காகத்தான் அப்படிச் சொல்லுகிறானோ என்று நினைத்த ருக்குமணி,“மூங்கில்லே என்னென்ன செய்யலாம்னு நாளைக்குப் பாரு, நான் செஞ்சி காட்றேன்” என்றாள்.

“என்ன செய்வே”

“கூடை, முறம், தடுக்கு..”

“அப்படியா எனக்குக் கூடப் புல்லாங்குழல் செய்ய வருமே”

“புல்லாங்குழலா? நீ செய்வியா, ஊதுவியா?” என்று ஆர்வத்தோடு கேட்டாள் ருக்குமணி.

“இப்பப் பாடினேனே பாட்டு, இதெல்லாம் அப்படியே வாசிப்பேன்”

‘‘அப்ப சரி அந்தக் கம்பைக் குடு. வேற நல்லதாப் பார்த்துத் தரேன். நாளைக்கு நீ புல்லாங்குழல் செஞ்சி எனக்கு ஊதிக் காட்டணும். என்ன சரியா? ஏன் மல்லாக் கொட்டையைத் தின்னாமக் குந்தி இருக்கே? இந்தா இந்தக் கம்பை வெச்சிக்க’’ என்று மூங்கில் கட்டிலிருந்து நல்ல மூங்கிலாக ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

இந்த இரவு நேரத்தில் தன் பசியறிந்து, வேர்க்கடலையும், ஊன்றுகோலும் தந்த இந்தப் புண்ணியவதியை மனசிற்குள் வாழ்த்திக் கொண்டே வேர்க்கடலையைத் தரையில் தட்டி உரித்துத் தின்றவாறு மௌனமாய்ச் சாய்ந்திருந்தான் அவன்.

சற்றுநேர மௌனத்திற்குப் பின் அவள் கேட்டாள். ‘‘ஆமா ஒன் பேரு என்னா?’’

‘‘கண்ணப்பன். ஓம் பேரு?’’

‘‘ருக்குமணி’’

‘‘அது சரி, நீ ஒரு வயசுப் பொம்புளைதானே? யாரும் துணை இல்லாம இந்தச் சத்திரத்திலே நீ ஏன் தனியாக் குந்தியிருக்கே?’’

‘‘நான் சின்னப் புள்ளையா இருக்கிறபோதே இங்கே வந்துட்டேன். எனக்கு ஒலகத்திலே இந்த ஒரு இடம் தான் பழக்கம். எங்க தாத்தா இருந்தது அப்போ.. நாலு வருசத்துக்கு முன்னே அது செத்துப் போச்சு’’.. தாத்தாவின் நினைவு வந்தபோது அழுகையும் வந்தது. இரண்டு விம்மலில் வந்த துயரம் அடங்கியும் போயிற்று.

‘‘எங்காவது கண்ணாலம் கட்டிகினு போனாலும் ஒனக்கு ஆத்தா வூடு இந்தச் சத்திரம்தான்னு சொல்லு. நீயும் என்னைப்போல் அநாதைதானா?’’ என்றான் கண்ணப்பன். அவள் குரலிலிருந்து அவள் வயசைக் கணித்த கண்ணப்பன், தன் கணிப்பு சரிதானா என்று தெரிந்து கொள்ளவே கலியாணத்தைப் பற்றிப் பேசினான்.

‘‘நீயாவது ஆம்பளை. நான் பொம்பளை. ரெண்டு கண்ணுமில்லாத குருடி. எனக்கு யாரு இருக்கா? யாரு இருந்தாலும் கண்ணில்லாத நான் அவங்களுக்கு ஒரு சுமைதானே? அதனாலேதான் அனாதையாக இருக்கேன்‘‘.

அவன் உடலெல்லாம் மின்னலைப்போல் ஓர் உணர்ச்சி விசிறிப் பாய்ந்து அவனைத் துள்ளியெழ வைத்தது.

அவன் அதற்குப் பிறகு ஒரு வார்த்தை பேசவில்லை. அவள் எத்தனையோ பேச்சுக் கொடுத்துங்கூட, அவன் பதில் சொல்லாதது கேட்டு ''தூக்கம் வந்திடுச்சி போலிருக்கு'' என்று எண்ணி அவளும் தூங்க முயன்றாள்.

அன்று இரவு வெகு நேரம் வரை அவர்கள் இருவரும் தூங்கவும் இல்லை. பேசவும் இல்லை.

மறுநாள் காலை தூக்கத்திலிருந்து எழுந்ததும் ''கண்ணப்பா, கண்ணப்பா'' என்று கூப்பிட்டாள். பதிலில்லை. அவன் படுத்திருந்த இடத்தைத் தடவிப் பார்த்தாள். இடந்தான் இருந்தது. ''அவன் தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் கூடப் போய் விட்டானே'' என்று நினைக்கையில், ஆத்திரமும் அழுகையும் அடைத்துக் கொண்டு வந்தது. சற்று நேரம் செத்துப் போன தாத்தாவை நினைத்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுதாள். சத்திரத்துக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் ஜனசந்தடி பெருக ஆரம்பித்தது. டீக்கடையில் டீ வாங்கிக் குடித்துவிட்டு ருக்குமணியும், தனது தொழிலில் முதல் நாள் செய்து வைத்திருந்த கிலு கிலுப்பை, விசிறி முதலியவற்றிற்கு வர்ணம் பூசும் வேலையில் முனைந்தாள்.

நிறங்களையே பார்த்தறியாத.. அப்படியென்றால் என்னவென்றுகூடத் தெரியாத ருக்குமணி, தான் பின்னும் கிலுகிலுப்பைகளுக்கும், தடுக்குகளுக்கும் அழகழகாக வர்ணம் பூசுவாள். பூசப்படும் நிறங்களைப் பற்றிப் பூசிக்கொள்ளும் பொருள்களுக்கு என்ன தெரியுமோ அதைவிடக் கொஞ்சம் அதிகமாக அவளுக்குத் தெரியும். அதாவது ருக்குமணியைப் பொறுத்தவரை பச்சை என்றால் அது கண்ணாடிக் குப்பியில் இருப்பது. நீலம் என்பது தகர டப்பாவில் இருப்பது. கொட்டாங்கச்சியில் இருப்பது சிவப்பு. அவ்வளவுதான்.

மனம்போன போக்காய்த் தன் மனத்திலிருக்கும் உணர்ச்சிகளை அவற்றின் மீது கிறுக்கி மகிழ்வாள். அவற்றிற்கு அர்த்தமில்லையா என்ன? அழகாக இருப்பதாய்க் கண்படைத்த புண்ணியவான்கள் கூறுகிறார்கள்.

அன்று கண்ணப்பன் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்ட தினம் – அவள் சரியாகவே தனது வேலைகளைச் செய்து முடிக்கவில்லை. பக்கத்தில் உட்கார்ந்து வியாபாரம் செய்யும் முனியம்மாளிடம் கூடச் சரியாக ஒன்றும் பேசவில்லை. அவளையறியாமல் மெல்லிய குரலில் ''உன்னழகைக் காண இரு கண்கள் போதாதே'' என்று பாடிக் கொண்டாள். அதைக் கேட்டு முனியம்மா அவளைக் கேலி பேசினாள். முனியம்மாவுடன் ருக்குமணியும் சேர்ந்து சிரித்தாள்.

ஆமாம். ருக்குமணிக்கு வெட்கப்படக் கூடத்தெரியாது. அன்று பகல் பொழுதும் அவன் நினைவிலேயே நகர்ந்தது அவளுக்கு.

அந்த இரவு சம்பவத்திற்குப் பின் பகலும் இரவும் கண்ணப்பனைப் பற்றிய நினைவுகளிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் ருக்குமணி. மானசீகமாய் அவன் குரலையும் பாட்டையும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தாள். வாழ்க்கை முழுதும் அவன் பாடிக் கொண்டே இருக்க, பக்கத்தில் உட்கார்ந்து தான் கேட்டுக் கொண்டே இருப்பதைக் காட்டிலும் உலகத்தில் வேறு ஒரு இன்பம் இருப்பதாக அவளால் நம்ப முடியவில்லை.

ஆனால் அந்தக் கண்ணப்பன்-அவனைத்தான் காணோமே!

அவன் எப்பொழுதாவது நிச்சயம் வருவான் என்று அவளுக்குத் தோன்றியது. அவனுக்காக அவள் காத்திருந்தாள்.

திடீரென்று கனவு கண்டு விழித்தெழுந்து, அவன் நினைவில் சத்திரத்துத் திண்ணையில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கையில், டூரிங் டாக்கிஸில் ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது. டூரிங் டாக்கீஸ் பாண்டு வாத்திய ஓசையும், பழைய காலத்தில் புகழோடு விளங்கிய கிட்டப்பாவின் சங்கீதத்தை மானபங்கப் படுத்திக் கொண்டிருந்த டீக்கடை கிராமபோனின் கூச்சலும் அடங்கிவிட்டன.

அந்த நிசப்தமான நேரத்தில் தூரத்திலிருந்து புல்லாங்குழல் ஓசை கேட்டது.

‘‘அந்தப் பாட்டுத்தான்! கண்ணப்பன் வருதோ?’’ அவளுக்கு உடல் முழுவதும் சந்தோஷத்தில் பதறிற்று.

குழலின் ஓசை வரவர அதிகமாகி நெருங்கி வருவதுபோல் கேட்டது. பிறகு குழலின் நாதம் நின்று மூங்கில் கம்பொன்றின் ஓசை மட்டும் ‘‘டக் டக்’’ கென்று கேட்டது. சத்திரத்துப் படிகளில் காலடிச் சப்தம் கேட்கும்போது,

‘‘யாரது கண்ணப்பாவா? ’’ என்று கேட்டாள் ருக்குமணி.

‘‘ஆமாம்’’

‘‘எங்கே இத்தினி நாளாக் காணோம்? சொல்லாமல் கூடப் போயிட்டியேன்னு எனக்கு வருத்தமா இருந்துச்சி’’ என்று அவள் சொல்லும்போது அவனுக்குத் துக்கமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டுத் தொண்டை அடைத்தது. பதில் பேசாமல் மௌனமாய் அன்று உட்கார்ந்திருந்த இடத்திலேயே வந்து அமர்ந்தான்.

‘‘இவ்வளவு நாள் எங்கே போயிருந்தே? ஏதாவது சாப்பிட்டியா? சோறு கூட வெச்சிருக்கேன். தண்ணி ஊத்தி..வேணுமானா சாப்பிடேன்’’

‘‘இல்லே ருக்குமணி. நான் இப்பத்தான் சாப்பிட்டேன். அன்னக்கி அந்தப் பசி நேரத்துக்கு வேர்க்கடலை குடுத்தியே, இன்னிக்கு ஒனக்கு நான் பலகாரம் வாங்கிக்கிட்டு வந்திருக்கேன். இந்தா.’’ என்று ஒரு பொட்டணத்தை அவளிடம் நீட்டினான்.

‘‘ஒனக்கு ஏதாவது வேலை கெடச்சிருக்கா என்ன? அதான் நல்லது. ஒரு வயசு ஆம்பளை பிச்சையெடுக்கிறதாவது! எங்கே வேலை? என்ன வேலை?’’

‘‘நீ ஒரு தொழில் செஞ்சி பொழக்கல்லே. அந்த மாதிரி நானும் ஒரு தொழில் செய்ய ஆரம்பிச்சிட்டேன்’’

‘‘என்ன தொழில்‘‘

‘‘அன்னிக்கு நீ குடுத்தியே மூங்கில், அதிலே ஒரு புல்லாங்குழல் செஞ்சேன். அதை எட்டணாவுக்கு வித்தேன். அப்புறம் ரெண்டனாவுக்கு மூங்கில் வாங்கிச் சின்னப்பிள்ளைகளுக்கு ஊதல், புல்லாங்குழல் எல்லாம் செஞ்சி ஒரு ரூவா சம்பாதிச்சேன். அப்புறம் ஒரு பேனா கத்தி, இரும்பு ஆணி எல்லாம் வாங்கினேன். இப்ப நல்லா ஊதல் செய்யப் பழகிக்கிட்டேன். உன்னைப் பார்த்துத்தான் எனக்கும் புத்தி வந்தது’’ அவன் சொல்தைக் கேட்கக் கேட்க அவள் கைகள் அவனை அணைத்துக் கொள்ளத் துடித்தன. அவன் அருகே நெருங்கி நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டாள்.

‘‘நான் சொல்றதைக் கேக்கிறியா? வந்து.. எனக்கு உன் பாட்டு, உன் குரல், நீ.. எல்லாம் ரொம்பப் புடிச்சிருக்கு. அதனாலே நீயும் நானும்…வந்து வந்து…

ஆமாம் அவளுக்கு வெட்கப்படக் கூடத் தெரியாது. அவள் உலகத்தையே மனிதர்களையே கண்ணால் பார்த்ததில்லை. அதனால் உலகத்தின் மனிதர்களின் பொய்யான வெட்கமும் நாணமும் என்னவென்று கூட அவளுக்குத் தெரியாது. மனத்தால் உணர்ந்ததை வாயால் கொட்டிக் கொண்டிருந்தாள்.

கண்ணப்பன் மௌனமாக பீடி புகைக்க ஆரம்பித்தான்.

‘‘கண்ணப்பா, என்ன பேசாம இருக்கே? ஏதாவது பேசேன்.. பாட்டுப் பாடேன். உன் பேச்சையும், பாட்டையும் கேக்கணும்னு ஒரு வாரமா நான் காத்துக் கெடக்கேனே.. ஆமா, கண்ணப்பா நீ சினிமா பார்த்திருக்கியா?’’ என்று வலுவில் ஒரு கேள்வி கேட்டு அவனைப் பேச வைத்தாள்.

‘‘உம் பார்த்திருக்கேன்.. அதெல்லாம் ரொம்ப நாளைக்கு முன்னே’’

‘‘இப்பெல்லாம்?‘‘

‘‘சினிமாப் பார்க்க காசு வேணாமா?‘‘

‘‘என்கிட்டே காசு இருக்கு. வர்ரியா? நான் பாட்டு கேட்டுக்கிட்டுக் குந்தி இருக்கேன். நீ படம் பாரு’’

‘‘படம் பார்க்க காசு மட்டும் போதுமா? கண்ணு வேணாம்? ருக்குமணி.. நானும் உன்னை மாதிரிதான். நாலு வருசத்துக்கு முந்தி அம்மை வார்த்துக் கண்ணு போயிடுச்சி. இவ்வளவு ஆசையா இருக்கியே.. உன் முகத்தைக் கூடப் பார்க்க முடியாத பாவி நான். உனக்குக் கண்ணு தெரியாதுன்னு நீ சொல்றவரைக்கும், நீ நெனச்சது போலத்தான் நானும் நெனச்சேன். ஆனா நாம ரெண்டு பேரும் ஒண்ணா எப்படி வாழ முடியும்? யாருக்கும் யாரும் உதவியா இருக்க முடியாதுன்னு நெனச்சிதான் நான் சொல்லிக்காம போயிட்டேன். ஆனா உன்கிட்டே சொல்லிக்காமப் போக மனசு இடம் கொடுக்கல்லே. விடியகாலை வண்டிக்கு நான் ஊருக்குப் போறேன். எனக்குக் கண் இருந்தா உன்ன விட்டுட்டுப் போக மாட்டேன். என்ன பண்றது? நான் போறேன்! நீ என்னை மறந்திடு’’ என்று அழுதான் கண்ணப்பன்.

அவன் வருத்தம் அவளுக்குப் புரிந்தது.

‘‘இதுக்கா அழுறே? கண்ணில்லாட்டி என்ன? எனக்கு ஒரு குறையும் தெரியலையே! சனங்களெல்லாம் என்னமோ கண்ணு கண்ணுன்னு பேசிக்கிறாங்களே அது நமக்கு இல்லேன்னு சொல்றாங்களேன்னு தோணுமே ஒழிய, அதனாலே எனக்கு ஒண்ணும் கெட்டுப் போகல்லே. நீயும் என்னை மாதிரித்தான்னா ரொம்ப சந்தோஷம்-இதுக்காகவா உன்னை நா மறந்துடணும்னு சொல்றே? ஆமா நெசமாச் சொல்லு உனக்குத்தான் எப்பவோ கண்ணு இருந்திருக்குன்னு சொல்றியே? கண்ணுன்னா என்னான்னு நீயாவது சொல்லேன். பாக்கறது பாக்கறதுன்னு சொல்றாங்களே அப்படின்னா என்னா? சொல்லு?’’ என்று அவன் தோள் மீது கை வைத்து அவன் முகத்தருகே நெருங்கினாள். அவன் தேகாந்தமும் சிலிர்த்தது.

‘‘ருக்கு.. கண்ணுன்னா என்னா தெரியுமா?

கண்ணுன்னா நீதான்! நீதான் எனக்கு கண்ணு இனிமேலே..'' என்று பேசமுடியாமல் திணறினான் கண்ணப்பன்.

அவள் அவனது முகத்தை, தலையை, மார்பை, புஜங்களைத் தடவிப் பார்த்து மகிழ்ந்தாள்.

அந்தச் சத்திரத்து இரவின் தனிமையில் இருவரும் தங்கள் கதைகளை, ஆசைகளை ஒருவர் மீது ஒருவருக்கு இருக்கும் காதலை, இத்தனை நாள் பிரிந்திருந்த பிரிவின் சோகங்களைப் பற்றி எல்லாம் பேசிக்கொண்டே இருந்தார்கள். பேச்சு…பேச்சு…விடியும் வரை ஒரே பேச்சுத்தான்.

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும்இல''

என்று காதலுக்கு இலக்கணம் வள்ளுவர் கூறிவிட்டால் போதுமா? இவர்களுக்கு? வாய்ச்சொற்கள்தான்!

## அந்நியர்கள்

## (ஆர். சூடாமணி)

**ஆசிரியர் குறிப்பு**

ஆர். சூடாமணி என்கிற பெண் படைப்பாளி 1954 முதல் தமிழில் சிறுகதைகள் எழுதி வருகிறார். இவர், 10.01.1931இல் சென்னையில் பிறந்தவர். பள்ளிக்கல்வி நிறைவு செய்யவில்லை என்றாலும் தன் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் அளவு ஆங்கில மொழித்திறம் உடையவர். ஆங்கிலத்தில் நேரடியாகச் சிறுகதை படைத்தலும் உண்டு. இவருடைய சிறுகதைப் படைப்புகள் தினமணி கதிர், தினமலர், தீபாவளி மலர், அமுதசுரபி, கல்கி, புதிய பார்வை, கணையாழி, சௌராஷ்டிர மணி, மஞ்சரி, சதங்கை, இந்தியா டுடே ஆகிய இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்துள்ளன.

**படைப்புகள்**

ஆர்.சூடாமணி மொத்தம் 600 சிறுகதைகளுக்கு மேல் படைத்துள்ளார். இவர் படைத்த சிறுகதைகள் 19 தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. இவர் சிறுகதைத் தொகுப்புகளில் சிலவற்றைக் கீழே காணலாம்.

அந்த நேரம் (1969), இழந்த மகுடம் (1973), ஓர் இந்தியன் இறக்கிறான் (1975), ஆர். சூடாமணியின் சிறுகதைகள் (1978), உலகத்தினிடம் என்ன பயம் (1978), சுவரொட்டி (1985), அம்மா (1987), கிணறு (1991), அஸ்தமனக் கோலங்கள் (1993), காவலை மீறி (1996), ஆர். சூடாமணியின் கதைகள் (2001). இறுதியாகக் குறிப்பிட்டுள்ள இந்த நூலுக்குத் தமிழ்வளர்ச்சித் துறை சிறந்த சிறுகதைப் படைப்புக்கான பரிசு வழங்கியுள்ளது.

சிறுகதை, புதினம், குறும்புதினம், நாடகம் ஆகிய நான்கு துறைகளிலும் இதுவரை 37 நூல்கள் படைத்துள்ளார். இவருடைய சில சிறுகதைகள் ஆங்கிலம் மற்றும் பிற இந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பாகி வெளிவந்துள்ளன. சில கதைகளை இவரே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். 1962 முதல் மொழி பெயர்ப்பாக அன்றி நேரடியாகவும் ஆங்கிலத்தில் சிறுகதை படைத்து வருகிறார்.

*******

“வா… வா…” என்பதற்கு மேல் ஏதும் சொல்ல முடியவில்லை, மகிழ்ச்சி வாயை அடைத்து மூச்சுத் திணற வைத்தது. பார்வையும் புன்சிரிப்புமே பேசின.

“ஹலோ ஸவி, என்ன ப்ளெசண்ட் ஸர்ப்ரைஸ் நீ ஸ்டேஷனுக்கு வருவேன்னு நான் எதிர்பார்க்கலே” என்று முகமலர்ச்சியுடன் கூறியவாறு ஸெளம்யா அவளிடம் விரைந்து வந்தாள்.

“எவ்வளவு வருஷம் ஆச்சிடி நாம சந்திச்சு! என்னை நீ ஸ்டேஷனில் எதிர்பார்க்கலேன்னா உன்னை மன்னிக்க முடியாது” என்றாள் ஸவிதா.

ஸௌம்யா சிரித்தாள். ‘‘அப்பாடா! நீ இப்படிப் பேசினால்தான் எனக்கு வீட்டுக்கு வந்தமாதிரி இருக்கு.’’

இரண்டு நிமிஷங்கள் வரையில் மௌனமுகங்களாய்ச் சகோதரிகள் எதிரெதிரே நின்றார்கள் பேச்சுக்கு அவசியமற்றா அர்த்தமயமான, இதயமயமான நிமிஷங்கள். சாமான்களுடன் சென்ட்ரல் ரெயில் நிலையத்திலிருந்து வெளிவந்து டாக்சியில் ஏறிக் கஸ்தூரிபா நகர் வந்து சேரும் வரை பரஸ்பரம், ‘‘எப்படியிருக்கே? உங்காத்துக்காரர், குழந்தைகளெல்லாம் சௌக்கியமா?’’ என்பதற்குமேல் உரையாடவே இல்லை. டாக்ஸியில் அவ்வளவு இடம் இருந்தபோது தம்மையறியாமல் நெருக்கமாய் ஒட்டி உட்கார்ந்த செயல் ஒன்றே எல்லாமாய்ப் பொலிந்தது.

ஸவிதாவின் கணவர் மைத்துனியை வரவேற்றுக் குசலம் விசாரித்த பின், ‘‘நீ வரது நிச்சயமானதிலேருந்து உன் அக்காவுக்குத் தரையிலே கால் நிக்கலே!’’ என்று சிரித்தார்.

ஸௌம்யாவின் பார்வை சகோதரியிடம் சென்றது. மீண்டும் மௌனத்தில் ஒரு பாலம், புன்னகையில் மின்னும் ஆந்தரிகம்.

‘‘இத்தனை வருஷம் ஆனாப்பலேயே தோணலே. ஸவி தலை கொஞ்சம் நரைக்க ஆரம்பிச்சிருக்கு. வேறெதும் வித்தியாசமில்லே’’ என்றாள்.

நரை! ஸவிதா லேசாய்ச் சிரித்துக் கொண்டாள். ‘காலம் செய்யக்கூடியதெல்லாம் அவ்வளவுதான். பாவம் வருஷங்கள்!’ என்று சொல்வதுபோல் இருந்தது. அந்தச் சிரிப்பு. பிரிந்திருந்த காலமெல்லாம் இந்தச் சந்திப்பில் ரத்தாகிவிட்டது. பரஸ்பரம் பாசமுள்ளவர்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பின் ஒன்று சேர்ந்தாலும் எவ்வளவு எளிதாய்த் தொடர்ச்சியை மேற்கொண்டுவிட முடிகிறது! ஸௌம்யா சொன்னதுபோல், இத்தனை வருஷங்கள் ஆனதாகவே தெரியவில்லை. மனத்தளவில் அவர்களுள் வித்தியாசம் ஏது? எனவே பதினோரு ஆண்டுகளின்

இடைவெளி கணப்போதில் தூர்ந்து விட்டது. பிரிவே இல்லாமல் எப்போதும் இப்படியே தாங்கள் இருவரும் ஒன்றாய் வாழ்ந்து கொண்டிருந்தது போலவே தோன்றியது.

விதவைத் தாய் இறந்தபோதுதான் அவர்கள் கடைசியாகச் சந்தித்தார்கள். அந்தச் சூழ்நிலையே வேறு. வெவ்வேறு இடங்களிலிருந்து பறந்து வந்து ஒன்று சேர்ந்ததெல்லாம் ஒரு துக்கத்தில் பங்கு கொள்ள. அப்போது நிலவிய நெருக்கமும் ஒருமையும் அந்தத் துக்கத்தின் அம்சங்கள். பேச்செல்லாம் அம்மாவும் அவள் இறுதியின் விவரங்களுந்தான். காரியங்கள் முடிந்தபின் அவரவர்களின் இடத்துக்குத் திரும்பி விட்டார்கள்.

அதன்பின் இப்போதுதான் உண்மையான நெருக்கம். சிறிது காலமாக ஒருவித ரத்தச் சோகையால் பலவீனமுற்றிருந்த செளம்யாவை அவள் கணவர், ஸவிதா குடும்பத்தினரின் அழைப்பின்பேரில், தாமும் குழந்தைகளும் வீட்டைக் கவனித்துக் கொள்வதாய்ச் சொல்லிவிட்டு ஒரு மாறுதலுக்காக அவளுடைய அக்காவிடம் பம்பாயிலிருந்து அனுப்பிவைத்தார்.

இப்போது சென்ற காலத்தைச் சகோதரியர் இருவருமாய் மீண்டும் பிடித்துக்கொண்டு வந்துவிட்டாற்போல் இருந்தது. முதல்நாளின் மௌனத்துக்குப் பிறகு ஆந்தரிகமும் தோழைமையும் பேச்சில் உடைப்பெடுத்துக் கொண்டன. ‘‘அக்காவுக்கும் தங்கைக்கும் பேசி மாளாது போலிருக்கே!’’ என்று ஸவிதாவின் கணவர் பரிகசிப்பார். அவள் மக்கள் கிண்டலாய்ச் சிரிப்பார்கள். அது ஒன்றுமே ஸவிதாவுக்கு உரைக்கவில்லை. பேச்சு என்றால் அதில் தொடர்ச்சி கிடையாது. அல்லது, அத்தொடர்ச்சி தனி வகைப்பட்டது ஒருநாள் பேசியிருந்த விஷயத்தைப் பற்றி அடுத்த நாளோ மூன்றாம் நாளோ வேறொரு சந்தர்ப்பத்தினிடையே திடீரென்று, ‘‘அதுக்காகத்தான் நான் சொல்றேன்…’’ என்று தொடரும்போது இழைகள் இயல்பாய்க் கலந்துகொள்ளும். அவர்களுக்குத் தொடர்ச்சி விளங்கிவிடும். மேலே தெரியும் சிறு பகுதியைவிடப் பன்மடங்கு பெரிய அளவு நீரின் கீழே மறைந்திருக்கும் பனிப்பாறையைப் போல் இருந்தது உடன்பிறப்பின் பந்தம் வெளியே தலை நீட்டும் சிறு தெறிப்புகளுக்கு ஆதாரமாய் அடியில் பிரம்மாண்டமான புரிந்து கொள்ளல்.

மற்றவர்களுக்கு உறைப்புச் சமையலைப் பரிமாறிவிட்டுத் தானும் தங்கையும் மட்டும் காரமில்லாத சாம்பாரை உட்கொள்ளும்போது அந்த ஒத்த ருசி இன்னும் ஆழ்ந்த ஒற்றுமைகளின் சிறு அடையாளமாய்த் தோன்றியது. அவ்விருவருக்கும் காபியில் ஒரே அளவு இனிப்பு வேண்டும். இருவருக்கும் அகலக் கரை போட்ட புடைவைதான் பிடிக்கும். மாலை உலாவலைவிட விடியற்காலையில் நடந்துவிட்டு வருவதில்தான் இருவருக்கும் அதிக இஷ்டம். உறக்கத்தினிடை இரவு இரண்டு மணிக்குச் சிறிது நேரம் கண்விழித்து நீர் அருந்திவிட்டு, மறுபடி தூங்கப் போகும் வழக்கம் இருவருக்கும் பொது. இப்படி எத்தனையோ! ஒரே வேரில் பிறந்த சின்னச் சின்ன இணக்கங்கள். ஒவ்வொன்றுமே ஒவ்வோர் இனிமை. ஸவிதா நாற்பது வயதாகப் போகிறது. ஸௌம்யா அவளைவிட மூன்றரை வயது இளையவள். ஆனால் அந்த இனிமைக்குச் சிரஞ்சீவி யௌவனம். ஏனென்றால் அவர்கள் இருவரும் ஒன்று.

வைத்தியமும் நடந்தது, ஒரு கடமையைப் போல.

ஸவிதா சகோதரியை உற்றுப் பார்த்தாள். ‘‘உனக்கு ரத்தம் கொஞ்சம் ஊறியிருக்குன்னு நினைக்கிறேன். முகம் அத்தனை வெளிறினாப்பல இல்லே.’’

‘‘உன் கைபாகந்தான்! இல்லேன்னா பம்பாயில் பார்க்காத வைத்தியமா?’’ என்று ஸௌம்யா சிரித்தாள்.

தயிரில் ஊறவைத்துச் சர்க்கரை சேர்த்த வற்றலை ஸ்பூனால் எடுத்துச் சாப்பிட்டவாறு இருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த டிபன் அவர்கள் பிறந்தகத்தில் பழக்கம்.

‘‘இங்கே யாருக்கும் இது பிடிக்கிறதில்லே. இப்போதுதான் எனக்கு ஜோடியாய்ச் சாப்பிட நீ வந்திருக்கே’’ என்று கூறி மகிழ்ச்சியுடன் தயாரித்திருந்தாள் ஸவிதா.

மாலை நாலரை மணி இருக்கும். ஸவிதாவின் மூத்த மகன் பத்தொன்பது வயதான ராஜூ, எம்.எஸ்.ஸி. முதல் ஆண்டு மாணவன், கல்லூரியிலிருந்து திரும்பி வந்தான்.

“அம்மா, நாளைக்கு எங்க காலேஜில் எம்.எஸ்.ஸி. முடிச்சுட்டுப்போற ஸ்டுடண்ட்ஸுக்கெல்லாம் ‘ப்ரேக் – அப்’ பார்ட்டி நடக்கிறது.நான் நாளைக்குச் சாயங்காலம் வீட்டுக்கு வரமாட்டேன். ராத்திரி தங்கிட்டு அடுத்த நாள்தான் வருவேன்” என்றான்.

“சரி” என்றாள் ஸவிதா. ஸௌம்யா அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

“நீ முதல் வருஷ ஸ்டுடண்ட்தானே ராஜு? ஓவர்நைட் இருந்துதான் ஆகணுமா?”

“ஆகணும்னு ஒண்ணுமில்லே சித்தி. ஆனா எனக்கு ஆசையாயிருக்கு. என் ஃப்ரெண்ட்ஸ் ரொம்பப் பேர் இருக்கப் போறா.”

அவன் அங்கிருந்து சென்றபின் ஸௌம்யா, “இதையெல்லாம் அத்திம்பேர் அனுமதிக்கிறாரா ஸவி?” என்றாள்.

“ஆமாம்.”

“நீயும் வேணாம்னு சொல்றதில்லையா?”

“எதுக்குச் சொல்லணும்?”

“இப்படியெல்லாம் வீட்டை விட்டு வெளியே தங்க ஆரம்பிச்சுதான் இந்தநாள் பசங்க எல்லா வழக்கங்களையும் கத்துக்கறா. இல்லையா? சுருட்டு, கஞ்சா, குடி அப்புறம் கோ-எட் வேற.. நான் இப்ப ராஜுவை ஏதும் பர்சனலாய்ச் சொல்லலே.”

“புரிகிறது ஸௌமி. ஆனா காலம் மாறரதை நாம் தடுத்து நிறுத்திட முடியுமா?”

“குழந்தைகளை நாம் தடுத்துக் காப்பத்தலாமே?”

“உலகம்னா இப்படியெல்லாம் இருக்குன்னு தெரிஞ்சுண்டுதான் இந்த நாள் பசங்க வாழ்ந்தாகணும். அதுக்குமேல ஒழுங்காகவோ ஒழுக்கங்கெட்டோ நடந்துக்கறது அவா கையில இருக்கு.”

‘‘பெரியவாளுடைய கன்ட்ரோலே அவசியம் இல்லைங்கறயா?’’

‘‘கன்ட்ரோல் பண்ணினா இன்னும் பிச்சுண்டு கிளம்பும், அவ்வளவுதான்.’’

‘‘குழந்தைகளுக்கு உதவி தேவை. அப்பா அம்மா வேற எதுக்குத்தான் இருக்கா?’’

‘‘தங்களுடைய அன்பு என்னிக்கும் அவாளுக்காகத் திறந்தே இருக்கும்னு குழந்தைகளுக்குக் காட்டத்தான். வேறு எப்படி உதவ முடியும்?’’

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. ஒரே சீராய்ப் போய்க் கொண்டிருந்த ஒன்றில் சிறு இடலுணர்வா? ஸௌம்யா தன் டிபன் தட்டை மேஜைமேல் வைத்தாள். வற்றல் இன்னும் மீதம் இருந்தது. ஸவிதா கண நேரம் அமைதி இழந்தாள். பிறகு கையை நீட்டித் தங்கையின் கையை மெல்லப் பற்றி அமுக்கினாள்.

‘‘இதைப் பற்றிக் கவலைப்படாதே ஸௌமி. அடிபட்டுக்காமல் யாரும் வளர முடியாது. குழந்தைகளைப் பொத்திப் பொத்தி வைச்சுக்க முடியுமா? முதல்லே, அவ அதை ஏத்துப்பாளா? சொல்லு. போகட்டும், புதுசா ஒரு ஹிந்திப்படம் வந்திருக்கே, போகலாமா? நீ அதை ஏற்கனவே பம்பாயில் பார்த்துட்டியா?’’

‘‘இன்னும் பார்க்கலே, போகலாம்.’’

புதிய திரைப்படத்தைப் பார்த்துவிட்டு வந்த அன்று சகோதரிகள் வெகுநேரம் அதைப் பற்றி விவாதித்தார்கள், ஸௌம்யாவுக்குப் படம் பிடிக்கவில்லை. ‘‘இப்படிப் பச்சையாய் எடுத்தால்தான் நல்ல படம்னு அர்த்தமா? இப்போதெல்லாம் சினிமா, இலக்கியம் எல்லாத்திலேயும் இந்தப் பச்சைத்தனம் ரொம்ப அதிகமாகி அசிங்கமாயிண்டு வரது. உனக்கு அப்படித் தோணலே?’’ என்றாள்.

‘‘நாம அசிங்கத்தை விட்டுட்டு அதிலெல்லாம் இருக்கக்கூடிய கதை, கலை முதலான நல்ல அம்சங்களை மட்டும் எடுத்துண்டு ரசிப்போம்.’’

‘‘முதல்லே விஷத்தைக் கொட்டுவானேன்? அப்புறம் அதில் நல்லது எங்கேன்னு தேடிண்டிருப்பானேன்? தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்கிற சமாசாரந்தான்.’’

அன்று இரவு ஸௌம்யா தன் பெட்டியிலிருந்து இரண்டு ஆங்கில சஞ்சிகைகளை எடுத்துக் குறிப்பிட்ட பக்கங்களில் திருப்பிச் சகோதரியிடம் கொடுத்தாள்.

ஸவிதாவின் கண்கள் விரிந்தன. ‘‘அட, உன் பேர் போட்டிருக்கே! கதையா? நீ கதை கூட எழுதறியா! எப்பலேருந்து? எனக்குச் சொல்லவே இல்லையே?’’

‘‘வெக்கமாயிருந்தது. மெள்ளச் சொல்லிட்டுக் காட்டலாம்னுதான் எடுத்துண்டு வந்தேன். இப்போ ஒரு வருஷமாய்த்தான். எப்பவானும், சும்மா ஆசைக்கு படிச்சுப் பாரேன்.’’

படித்ததும் ஸவிதாவுக்கு உற்சாகம் தாங்கவில்லை.

‘‘ரொம்ப அருமையாய் எழுதியிருக்கே ஸௌமி! நீ காலேஜில் இங்கிலீஷ்லே மெடலிஸ்ட்னு ஒவ்வொரு வரியும் சொல்றது. அற்புதமான நடை.’’

‘‘நடை கிடக்கட்டும். விஷயம் எப்படி?’’

ஸவிதா ஒரு கணம் தயங்கினாள். பிறகு, ‘‘நல்ல கதைதான், ஆனா… நவீன ஃபேரி டேல்ஸ் மாதிரி இருக்கு’’ என்றாள்.

‘‘நம்மைச் சுத்தி எங்கே பார்த்தாலும் ஆபாசமும் பயங்கரமும் இருக்கறதனால எழுத்திலேயாவது நல்லதையும் தூய்மையையும் காட்டணுங்கிறது என் லட்சியம்.’’

இருவரும் மௌனமானார்கள். அந்த மௌனம் ஸவிதாவின் நெஞ்சில் உறுத்தியது. மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கு வழக்கம்போல் தங்கையுடன் அடையாறு பாலம் வரை நடந்து உலாவிவிட்டு வந்த பிறகுதான் அந்த உறுத்தல் மறைந்தது. அப்பாடா! எல்லாம் முன்புபோல ஆகிவிட்டது.

ஒன்பது மணிக்கு நூலகத்திலிருந்து சேவகன் புதிய வாராந்தரப் புத்தகங்களைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் பழையவற்றை வாங்கிக்கொண்டு போனான். ஸௌம்யா

புதிய புத்தகங்களை எடுத்துப் பார்த்தாள். இரண்டில் மெலிதாயிருந்ததன் தலைப்பையும் ஆசிரியர் பெயரையும் கண்டதும், ''ஓ இந்தப் புஸ்தகமா? நான் படிச்சிருக்கேன். ஸவி, நீ இதை அவசியம் படி. உனக்கு ரொம்பப் பிடிக்கும்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

ஸவிதா அப்புத்தகத்தைப் படித்து முடித்தபின் வெகுநேரம் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். எவ்விதமான இலக்கியத் தரமோ மானிட ரீதியான வெளிச்சமோ இல்லாத வெறும் மஞ்சள் குப்பை அந்த நூல். இதையா அவளுக்குப் பிடிக்கும் என்றாள் ஸௌம்யா? அவள் சொன்னதிலிருந்தெல்லாம் ஸௌம்யா புரிந்து கொண்டது அவ்வளவுதானா?

''ஈராஸ் தியேட்டரில் வர ஒவ்வொரு தமிழ்ப்படத்துக்கும் அவளை அழைச்சுண்டு போயிடறியே. ஸௌமி மேலே உனக்கு என்ன கோபம்?'' என்றார் அவள் கணவர்.

''பம்பாயில் அவளுக்கு அடிக்கடி பார்க்க முடியாதது தமிழ்ச் சினிமா தானே? அவள் இஷ்டப்பட்டுத்தான் நாங்க போறோம். இல்லையா ஸௌமி?''

''ஓரா'' என்றாள் ஸௌம்யா. மற்றவர்கள் அர்த்தம் புரியாமல் விழித்தபோது ஸவிதாவுக்கு மட்டும் மகிழ்ச்சியாக இருந்தது. சிறுமிப் பருவத்தில் அவ்விருவரும் பெரியவர்களுக்குப் புரியாமல் தமக்குள் பேசிக்கொள்ள ஒரு ரகசிய மொழியை உருவாக்கியிருந்தார்கள். அவர்களாக ஏற்படுத்தும் பதங்களுக்கும் ஒலிச்சேர்க்கைகளுக்கும் தனித்தனியே அர்த்தம் கொடுத்த அந்த பிரத்தியேக அகராதியில் 'ஓரா' என்றால் ஆமாம் என்று பொருள். திடீரென அந்தரங்க மொழியை ஸௌம்யா பயன்படுத்தியபோது தம் ஒருமை மீண்டும் வலியுறுத்தப்படுவதுபோல் ஸவிதாவுக்குத் தோன்றியது. சகோதரிகள் புன்சிரிப்போடு ஒருவரையொருவர் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினார்கள்.

''சாயங்காலம் லேடீஸ் கிளப்புக்குப் போகணும். ஞாபகமிருக்கா?'' என்றாள் ஸவிதா.

அவள் அங்கம் வகித்த மாதர் சங்கத்துக்கு அதுவரை சிலமுறைகள் சகோதரியை அழைத்துப் போயிருந்தாள். இன்று மற்ற உறுப்பினர்களிடம் தன் தங்கை கதை எழுதுவாள் என்று சொல்லிக்கொண்டபோது கண்களிலும் முகத்திலும் பெருமை ததும்பியது.

மன்றத் தலைவி ஸவிதாவிடம் அருகாமையில் உறைந்த ஓர் ஏழைப் பையனைப் பற்றி அன்று கூறினாள். கால் விளங்காத அவனைக் குடும்பத்தார் கைவிட்டார்களாம். பையன் படிக்க வேன்டும். அதைவிட முக்கியமாய்ச் சாப்பிட்டாக வேண்டும். அருகிலிருந்த ஒரு பள்ளிக்கூடக் காம்பவுண்டுக்குள் நாலைந்து நாட்களாகப் படுத்துக்கொண்டு அங்கிருந்து நகரமாட்டேனென்று அடம்பிடிக்கிறான். அவனது உடனடி விமோசனத்துக்காக மன்றத்தலைவி நிதி திரட்டிக் கொண்டிருந்தாள். ‘‘உங்களாலானதைக் கொடுங்க’’ என்று அவள் கேட்டபோது ஸவிதா பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்தாள். ‘‘நீங்க…?’’ என்று அப்பெண்மணி ஸௌம்யாவைப் பார்த்துக் குரலை நீட்டினாள். கணநேரம் தாமதித்த ஸௌம்யா ஒருதரம் சகோதரியை ஏறிட்டு விட்டுத் தன் பங்காக ஐந்து ரூபாயைக் கொடுத்தாள்.

வீடு திரும்பும் வழியில் ஸவிதா, ‘‘பாவம், இல்லே அந்தப் பையன்?’’ என்றபோது ஸௌம்யா உடனே பதில் சொல்லவில்லை.

‘‘என்ன ஸௌமி பேசாமலிருக்கே?’’

‘‘என்ன பேசறது? பாவம். எனக்கு மட்டும் வருத்தமாயில்லேன்னு நினைக்கிறியா? ஆனா..’’

‘‘ஆனா…?’’

‘‘இதெல்லாம் பெரிய பெரிய நிறுவன அடிப்படையில் சமாளிக்க வேண்டிய பிரச்சினை. தனி மனுஷா உதவியில் என்ன ஆகும்? நம்ம நாட்டில் வறுமை ஒரு அடியில்லாத பள்ளம். அதில் எத்தனை போட்டாலும் நிரம்பாது. அதனால், போட்டு என்ன பிரயோசனம்?’’

‘‘அடியில்லாத பள்ளந்தான். போட்டு நிரம்பாதுதான். அதனால் போட்டவரைக்கும் பிரயோசனம்.’’

சட்டென்று பேச்சு தொய்ந்தது. இருவரும் மௌனமாகவே வீடு வந்து சேர்ந்தனர். இப்போதெல்லாம் மௌனம் பேச்சின் மகுடமாக இல்லை.

ஹாலுக்கும் அவர்கள் நுழைந்தபோது அங்கு ஒரே கூச்சலாக இருந்தது. ஸவிதாவின் பதினான்கு வயதான மகளின் கையிலிருந்து அப்போதுதான் வந்திருந்த பத்திரிக்கையைப் பிடுங்குவதற்காக அவளைவிட இரண்டு வயது இளையவனான தம்பி ஓடித் துரத்திக் கொண்டிருந்தான்.

‘‘குட்ரீ அதை எங்கிட்ட!’’

‘‘போடா தடியா, நான் பாத்துட்டுதான்.’’

‘‘அமிதாப்பச்சனை ஒடனே பாக்காட்டால் தலை வெடிச்சுடுமோ?’’

இருவரும் கத்திக்கொண்டே விடாமல் ஓடினார்கள். சோபாவுக்குப் பின்னிருந்து வேகமாய் மூலை திரும்பிப் பாய்ந்தபோது பையன் சுவர் அலமாரியில் மோதிக் கொண்டான். அதன் கண்ணாடிக் கதவு உடைந்து உள்ளே வைக்கப்பட்டிருந்த ஓர் உயரமான ‘கட்கிளாஸ்’ ஜாடி பக்கவாட்டில் சரிந்தது. அது கீழேவிழுமுன் ஸவிதா ஓடிப்போய் அதைப் பிடித்துக் கொண்டாள். அவள் முகம் சிவந்திருந்தது. ‘‘கடங்காரா, அதென்ன கண்மூடித்தனமாய் ஓட்டம்? இப்போ இது உடைஞ்சிருந்தா என்ன ஆயிருக்கும்?’’ என்று மகனைப் பார்த்து மூச்சிரைக்கக் கோபமாய்க் கத்தினாள்.

பையன் தலை கவிழ்ந்தது. ‘‘ஸாரிம்மா!’’ வேகம் அடங்கி அவனும் அவன் அக்காவும் அறையை விட்டு வெளியேறினார்கள்.

ஸவிதாவின் படபடப்பு அடங்கச் சிறிது நேரம் ஆயிற்று. ஸௌம்யா அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“பாரேன் ஸௌமி, நம் அப்பா அம்மா கொடுத்ததுன்னு நான் இதை ஒரு பொக்கிஷம் மாதிரி காப்பாத்தி வச்சுண்டிருக்கேன். அது தெரிஞ்சும் இந்தக் குழந்தைகளுக்கு எத்தனை அஜாக்கிரதை?”

ஸௌம்யா ஏதும் சொல்லவில்லை.

“இது உடைஞ்சிருந்தால் எனக்கு உயிரே போனாப்பல இருந்திருக்கும். இதன் ஜோடியை உனக்குக் கொடுத்தாளே, நீயும் பத்திரமாய்த்தான் வச்சிருப்பே, இல்லையா,”

“பத்திரமாய்த்தான் இருக்கு.”

“இதே மாதிரி ஹால்லேதான் பார்வையாய் வச்சிருக்கியா நீயும்,”

“வச்சிருந்தேன்.”

“அப்படின்னா?”

“மேல் ஃப்ளாட் பொண்ணு அதைப் பார்த்து ரொம்ப அழகாயிருக்குன்னு பாராட்டினாள். அதனாலே அவள் கல்யாணத்துக்குப் பரிசாய்க் கொடுத்துட்டேன்.”

ஸவிதா அதிர்ந்து நின்றாள்.

“என்ன! கொடுத்துட்டயா? அதை விட்டுப் பிரிய உனக்கு எப்படி மனசு வந்தது?”

“ஏன் வரக்கூடாது?”

“அப்பா அம்மா நினைவாய்...”

“அப்பா அம்மாவை நினைவு வச்சுக்க நினைவுச் சின்னங்கள் வேணுமா என்ன?”

மீண்டும் கத்தி முனையில் விநாடி இடறியது. சகோதரிகள் ஒருவரையொருவர் தீவிரமாய் வெறித்தார்கள். பார்வையில் குழப்பம்.

“நான்போய் நமக்குக் காபி கலக்கிறேன் ஸவி. ஜாடியை ஜாக்கிரதையாய் வச்சுட்டு வா.”

ஒரே அளவு இனிப்புச் சேர்த்த காபியை அவள் எடுத்துவர, இருவரும் பருகினார்கள். நழுவிப்போகும் ஒன்றை இழுத்துப் பிடித்துக்கொள்ளும் செயலாய் அது இருந்தது.

அதற்குள்ளாகவா இரு மாதங்கள் முடியப்போகின்றன? அந்த ஏக்கம் இருவர் பார்வையிலும் தெரிந்தது. அடிக்கடி ஒருத்தி தோழமையை மற்றவள் நாடிவந்து உட்கார்ந்துகொள்வதிலும் ‘இது அவளுக்குப் பிடிக்கும்’ என்று பார்த்துப் பார்த்துச் செய்வதிலும், ‘அடுத்த சந்திப்பு எப்போதோ?’ என்ற தாபம் தொனித்தது. எனினும் அத்தனை ஆந்தரிகத்திலும் இப்போதெல்லாம் பேச்சில் ஒரு கவன உணர்வு. சிரித்துக்கொண்டே அரட்டையடிக்கும்போது, பழைய நினைவுகளையோ இத்தனை வருஷக் கதைகளையோ பகிர்ந்து மகிழும்போது, சட்டென்று எழும்பிவிடக்கூடிய சுருதி பேதத்தைத் தவிர்க்க முனைந்து கொண்டே இருக்கும் ஒரு ஜாக்கிரதை. விளிம்புக்கு இப்பாலேயே இருக்க வேண்டுகிற கவலையில் நிழலாடும் ஒரு தயக்கம்.

அண்மையில் எடுத்துக்கொண்ட புகைப்படத்தின் பிரதியைத் தபால் மூலம் பார்த்துவிட்டு ஸௌம்யாவின் கணவர், “அடையாளம் தெரியாமல் குண்டாகிவிட்டாயே! ‘நான்தான் ஸௌம்யா’ என்று நெற்றியில் அச்சடித்துக் கொண்டுவா” என்று எழுதியிருந்தார். அவரும் குழந்தைகளும் எழுதும் கடிதங்கள் மேற்போக்கில் உல்லாசமாயும் இயல்பாகவும் தொனித்த போதிலும் அவளுடைய இல்லாமையை மிகவும் உணர்கிறார்களென்ற ஜாடை புரிந்தது. விரைவில் கிளம்பிவிட வேண்டியதுதான்.

தாம் இனி இப்படி வருஷக்கணக்காகப் பிரிந்திராமல் ஆண்டுக்கொரு தடவை ஒருவரையொருவர் முறை வைத்துப் போய்ப் பார்க்க வேண்டுமென்று சகோதரிகள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

“நியூ இயர் ரெஸொல்யூஷன் மாதிரி ஆயிடக்கூடாது இது!” என்று ஸௌம்யா கூறிச் சிரித்தபோதே அவள் கண்கள் பனித்தன. ஸவிதாவின் மோவாய் நடுங்கியது. எதுவும் சொல்லாமல் ஓர் அட்டைப்பெட்டியை எடுத்து வந்து நீட்டினாள். அதனுள் ஓர் அடையாறு கைத்தறி நூல் சேலை. சிவப்பு உடல், மஞ்சளில் அகலமான கோபுரக்கரை.

“எதுக்கு இதெல்லாம் ஸவி?”

“பேசப்படாது. வைச்சுக்கோ.”

“உன் இஷ்டம். எனக்கு மட்டுந்தானா?”

“இதோ எனக்கும்.”

மயில் கழுத்து நிறம். ஆனால் அதே அகலக்கரை.

மீண்டும் புன்னகைகள் பேசின.

நாட்களின் தேய்வில் கடைசியாக இன்னொரு நாள். ஸௌம்யா ஊருக்குப் புறப்படும் நாள். ரெயிலுக்குக் கிளம்பும் நேரம். சாமான்கள் கட்டி வைக்கப்பட்டுத் தயாராயிருந்தன.

“கிளம்பிட்டாயா ஸௌமி?” ஸவிதாவின் குரல் கம்மியது.

“நீயும் ஸ்டேஷனுக்கு வரயோன்னோ ஸவி?”

ஆவலுக்கு ஆவல் பதிலளித்தது. “கட்டாயம்.”

“எப்போ எந்த ஊருக்குக் கிளம்பறதுக்கு முந்தியும் சுவாமிக்கு நமஸ்காரம் பண்றது என் வழக்கம்.”

ஸவிதா மௌனமாய் இருந்தாள். ஸௌம்யாவின் கண்களில் கலக்கம் தெரிந்தது.

“ஆனா இங்கே பூனை அறையே இல்லையே?” என்றாள் தொடர்ந்து.

“இல்லாட்டா என்ன? மனசிலேயே வேண்டிக்கோயேன். நம்பிக்கை இருந்தால் அது போதாதா?”

“நம்பிக்கை இருந்தால்னா? உன் நம்பிக்கை அந்த மாதிரின்னு சொல்றயா?” திடீரென்று ஸௌம்யாவின் முகம் மாறியது. “அல்லது உனக்கு நம்பிக்கையே இல்லைன்னு அர்த்தமா?”

“நான்… நான் அதைப்பத்தி ஏதும் யோசிச்சுப் பார்த்தது கிடையாது” ஸவிதாவுக்கு சங்கடம் மேலோங்கியது. “இப்போ எதுக்கு விவாதம் ஸௌமி, ஊருக்குக் கிளம்பற சமயத்திலே?”

“என்ன ஸவி இது! இவ்வளவு பெரிய விஷயத்தைப் பத்தி உனக்கு ஏதும் தீர்மானமான அபிப்ராயம் இல்லையா?”

“இதை ஒரு பெரிய விஷயம்னு நான் நினைக்கலே.”

ஸௌம்யாவின் கண்கள் அதிர்ச்சியில் பிதுங்கின. அவர்களுடைய சிறுமிப் பருவத்தின் சூழ்நிலை எத்தனை பக்திமயமானது! அம்மா அன்றாடம் பூஜை செய்வாள். சாயங்காலமானால், ‘போய்ச் சுவாமி அறையிலும் துளசி மாடத்திலும் விளக்கு ஏத்துங்கோடி’ என்று பணிப்பாள். அவர்களை வெள்ளிக்கிழமை தவறாமல் கோயிலுக்கு அழைத்துப் போவாள். தோத்திரங்களெல்லாம் சொல்லிக் கொடுப்பாள். ‘வாழ்க்கையில் எந்தக் கஷ்டத்திலும் துணை இருக்கிறது ஆண்டவன் பெயர் ஒண்ணுதான்’ என்று போதிப்பாள். தான் அந்த வழியிலேயே நடந்து வந்திருக்க, இவளுக்கு மட்டும் என்ன ஆயிற்று?

“தெய்வ நம்பிக்கையை இழக்கற மாதிரி உனக்கு அப்படி என்ன அனுபவம் ஏற்பட்டது ஸவி?”

“அந்த நம்பிக்கை இழந்துட்டேனா இல்லையான்னு எனக்கே நிச்சயமாய்த் தெரியாது. ஆனா, அனுபவம்னு நமக்கே ஏற்பட்டால்தானா? கண்ணும் காதும் மனசும் திறந்துதானே இருக்கு? போகட்டும், உலகத்தின் பிரச்சினைகளையெல்லாம் பார்க்கறபோது இந்த விஷயம் ஒரு தலைபோகிற பிரச்சினையாய் எனக்குத் தோணலேன்னு வச்சுக்கோயேன்.”

“எத்தனை அலட்சியமாய்ச் சொல்லிட்டே? ஆனா நான், தெய்வத்தை நம்பலேன்னா என்னால் உயிரோடயே இருக்க முடியாது.”

பார்வைகள் எதிரெதிராய் நின்றன. அவற்றில் பதைப்பு, மருள். ஸௌம்யாவின் அதிர்ச்சி இன்னும் மாறவில்லை. தமக்கையைப் பார்த்த அவள் பார்வை ‘இவள் யார்?’ என்று வியந்தது. பிறகு கண்கள் விலகின.

ஸவிதா தவிப்பும் வேதனையுமாய் நின்றாள். என்ன சொல்வதென்று தெரியவில்லை. எதைச் சொன்னாலும் அர்த்தம் இருக்கும் போலவும் தோன்றவில்லை. ஒன்றாய்ப் பிறந்து வளர்ந்தவர்கள்தான். ஒரே மரபினாலும் ஒரே வகையான பராமரிப்பாலும் உருவானவைதான் அவர்களுடைய எண்ணங்களும், கண்ணோட்டங்களும், மதிப்புகளும்! ஆனால் வளர வளர அவற்றில் எவ்வளவு மாறுபாடு? ஒவ்வொரு மனித உயிரும் ஓர் அலாதியா? அதன் தனிப்பட்ட தன்மையை ஒட்டித்தான் வாழ்க்கை எழுப்பும் எதிரொலிகள் அமைகின்றனவா? ஒருவரையொருவர் தெரியும் புரியும் என்று சொல்வதெல்லாம் எத்தனை அறிவீனம்? எவ்வளவு நெருங்கிய உறவாயிருந்தாலும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொருத்தரையும் ஒரு புதிய இருப்பாகத்தான் கண்டு அறிமுகம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. காலம் கொண்டுவரும் மாற்றம் வெறும் நரை மட்டுமல்ல…

அன்பு… அது அடியிழை, உள்ளுயிர்ப்பு. அது இருப்பதாலேயே, வேறுபாடுகளினால் அழிவு நேர்ந்துவிடாதிருக்கத் தான் அது இருக்கிறது.

மன்னிக்கவும். ஹெரால்ட்ராபின்ஸ்! வாழ்நாள் முழுவதும் அந்நியர்களைத்தான் அன்பு செய்து கொண்டிருக்கிறோம்.

‘‘நாழியாறதே! பேசிண்டேயிருந்தால் ஸ்டேஷனுக்குக் கிளம்ப வேணாமா? வாசலில் டாக்ஸி ரெடி’’ என்றவாறு அங்கு வந்த அவள் கணவர் அவர்களைப் பார்த்து, ‘‘உங்க பேச்சுக்கு ஒரு ‘தொடரும்’ போட்டுட்டு வாங்கோ. அடுத்த சந்திப்பில் மறுபடியும் எடுத்துக்கலாம்’’ என்றார் சிரித்துக்கொண்டே.

‘‘இதோ வரோம். வா ஸௌமி!’’ ஸவிதா தங்கையின் கையைப் பற்றிக் கொண்டாள். சகோதரிகள் வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். கைப்பிணைப்பு விலகவில்லை. ஆனால் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளவில்லை.

## மு.வ. கடிதங்கள்

## ”தம்பிக்கு முதல் இரண்டு கடிதங்கள்

மு.வ எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு.வரதராசன் (ஏப்ரல் 25, 1912 - அக்டோபர் 10, 1974) 20ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள் போன்றவை மட்டுமின்றிப் பல சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார். இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைமைப் பொறுப்பில் இருந்ததுடன், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றினார். அன்றைய வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் முனுசாமி அம்மாக்கண்ணு தம்பதிக்குப் பிறந்தார். திருவேங்கடம் என்பது இவரது இயற்பெயர்

மு.வ.வின் அகல் விளக்கு எனும் புதினத்திற்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது.கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்தது. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம். மொழிநூல்,கள்ளோ காவியமோ் அரசியல் அலைகள், விடுதலையா, ஓவச் செய்தி ஆகிய ஆறு நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றன.

1. **அன்புள்ள எழில்,**

நீ எழுதிய கடிதங்கள் எனக்கும் சுவையாக இருந்தன. அன்னைக்கு எழுதிய கடிதங்களை அண்ணன் எப்படிப் பார்த்தான் என்று நீ எண்ணி வியப்பு அடையலாம். உன் கடிதங்கள் அன்னை மட்டும் அல்லாமல் அண்ணனும் படிக்க வேண்டிய கடிதங்கள்தான்.

அன்னையைக் கேட்டுத்தான் படித்தேன். "எழில் எழுதியவை" என்று அவற்றை எல்லாம் ஒருகட்டாகக்கட்டி அன்னை பீரோவில் வைத்திருந்தார். " இது என்ன அம்மா?" என்று கேட்டேன். உன் கடிதங்கள் என்று சொல்லி," நீயும் படிக்கலாமே" என்றார். பிறகுதான் படித்துப் பார்த்தேன். நீ ஒன்றும் கவலைப் படாதே. நானும் உன் கருத்து உடையவனே. நீ வயதில் இளையவன் அஞ்சாமல் உன்கருத்தைச் சொல்கிறாய் எழுதுகிறாய். நான் உன்னைவிட உலக அனுபவம் மிகுந்தவன் அதனால் உலகத்தைப் பற்றிய அச்சமும் மிகுந்தவன். ஆகையால் எதையும் சொல்லவும் எழுதவும் தயங்குகிறேன் நீ உள்ளத்தில் உணர்ந்ததைக் கொட்டுகிறாய் நான் உணர்ச்சி இல்லாதவன் போல் நடிக்கிறேன். இதுதான் வேறுபாடு நீயே என்னைவிட ஒருவகையில் நல்லவன்.

நல்லவனாக இருந்தால்மட்டும் போதாது. வல்லவனாகவும் இருக்கவேண்டும் அல்லவா? நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு.

நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கிறார்கள் மாய்ந்துவருகிறார்கள். வல்லமை மட்டும் பெற்றவர்களும் எதிர்பாராதவகையில் நசுக்குண்டு அழிகிறார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள் வரையில் இதற்குச் சான்றுகள் காணலாம். தமிழ்நாட்டில் இருந்த பழங்காலத்து நல்லரசுகள் கலங்கி அழிந்ததை வரலாறுகளில் காணவில்லையா? ஜெர்மனி, ஜப்பான் முதலான வல்லரசுகள் அழிவுற்றதைக் கண்கூடாகக் காணவில்லையா? நல்ல மருமகளாக வந்து வாழத் தொடங்கிக் குடும்பத்தாரின் இன்னலைப் பொறுக்க முடியாமல் தற்கொலையோ மனவேதனையாலோ மாண்ட கதைகளை ஊர்களில்

கேட்டதில்லையா? மகனையும் மருமகளையும் விருப்பம்போல் ஆட்டி வைத்து வல்லமை பெற்ற மாமியார், சில ஆண்டுகளுக்குப் பின் வாயும் கையும் அடங்கி மூலை வீடும் வேளைக் கஞ்சியும் கிடைத்தால் போதும் என்று ஏங்கும் கதைகளையும் கேட்டதில்லையா? இந்த விதியை நாம் இனியும் மறந்து வாழக்கூடாது. தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித்தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாகவும் அழிந்தது போதும். இனிமேல் வல்லவர்களாகவும் வாழக் கற்றுக்கொள்ல வேண்டும். நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப்பெற்று வாழவேண்டும்.

தம்பி! இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பகுதிகளில் ஒன்றை மட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் பொற்றி உரமாக வைத்திருப்பவனும் அழிகிறான்.அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத் தீயவழியில் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தைமட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனும் இடைநடுவே அல்லல்படுகிறான் அவனுடைய உடல் பல நோய்க் கிருமிகளுக்கு இடம் கொடுத்து அவனுடைய உள்ளத்தில் அமைதியைக் கெடுத்து அல்லல் படுகிறது. உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயரவேண்டியதாக இருக்கலாம் ஆனால் தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது. இந்த உண்மையை நன்றாக உணர்ந்தவர் திருவள்ளுவர். அறநெறியும் வேண்டும். பொருள்வளமும் வேண்டும். இன்ப வாழ்வும் வேண்டும் என்று உணர்த்தும் நூல் திருக்குறள் தான். அறத்தை நினைந்து பொருளை மறக்கும்படியாகத் திருவள்ளுவர் கூறவில்லை. பொருளையோ இன்பத்தையோ போற்றி அறத்தை மறக்கும்படியாகவும் அந்தப் பெருந்தகை கூறவில்லை. உலகத்து நூல்களில் பல அறம் பொருள் இன்பம் மூன்றில் ஒவ்வொன்றை மட்டுமே வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். வாழ்க்கையின் பல பகுதிகளையும் போற்றி வாழவேண்டும் என்பதை உணர்த்த வந்த திருவள்ளுவர் இந்த மூன்றையும் தெளிவுறுத்தியுள்ளார். தமிழராகிய நாம் திருவள்ளுவரைப் பெற்றிருக்கிறோம் திருக்குறளைப் பெற்றிருக்கிறோம்.நம்மில் சிலர் அந்த நூலைக்

கற்றும் இருக்கிறோம். ஆனால் திருவள்ளுவர் கூறியபடி வாழவில்லை நல்ல தன்மை தேடுகிறோம் வல்லமை தேடவில்லை. அதனால்தான் தாழ்வுறுகிறோம்.

நீ உடனே இதை மறுக்க முன்வரக் கூடும். அதற்கு முன்பே நான் காரணம் சொல்லி விளக்கிவிடுகிறேன்.

தமிழ்மொழி நல்ல மொழி தான் ஆனால் அதை வல்ல மொழியாக ஆக்கினோமா? பெரும்பாலோர் போற்றும் மொழியாக ஆக்கினோமோ? இன்று எதை எடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப் பேசப்படவில்லையா? தமிழ் மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? நீதிமன்றங்களில் உரிமை நல்கினோமா? ஆட்சிக் கூடங்களில் வாழ்வு வழங்கினோமா? இல்லையானால் வெறும் பேச்சு ஏன்?

வல்லமை இல்லாத நல்ல தன்மை வாழாது தம்பி! அது பொருட்பால் இல்லாத திருக்குறள் போன்றது தான்.

நம் முன்னோர் இதை மறந்த காரணத்தால்தான், எத்தனையோ இழந்தனர் ஒன்று சொல்லட்டுமா?

தமிழ்க்கலை நல்ல கலை தான் அதிலும் யாழிசை நல்ல இசைதான் ஆனால் வாழ்ந்ததா? இல்லை, ஏன்? முன்னே செல்வாக்கைப் பெற்றவர்கள் யாழைப் புறக்கணித்தார்கள் பிறகு பொதுமக்கள் மறந்தார்கள். இன்று தமிழுக்கும் ஏறக்குறைய அதே நிலை இருப்பதை எண்ணிப்பார் உன் மனம் புண்படும்.

நீ இதை மறுக்கலாம். அன்று அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் என்ற நிலைமை இருந்ததை நீ எடுத்துக் காட்டலாம். இன்று பொதுமக்கள் எவ்வழி அவ்வழியே ஆட்சியாளர் என்று எடுத்துக் கூறலாம்.

இப்படி உன்னை நீ ஏமாற்றிக்கொள்ள வேண்டாம் என்றுதான் உனக்குச் சொல்கிறேன். பொதுமக்களின் விருப்பம் போல் ஆட்சி நடப்பதாகச் சொன்னால், பொது மக்கள் போரை விரும்புகிறார்களா, அணுக்குண்டையும் பிற குண்டையும் விரும்புகிறார்களா, வேலையில்லாத் திண்டாட்டத்தை விரும்புகிறார்களா, குடியிருக்க

வீடும் அறிவு வளர்க்கக் கல்வியும் உடல் வளர்க்கக் கஞ்சியும் இல்லாத கொடிய வறுமையை விரும்புகிறார்களா என்று மெல்ல எண்ணிப்பார். உனக்கே தெரியும்.

பொதுமக்களுக்குத் தங்கள் எதிர்காலத்தையும் நிகழ் காலத்தையும் சேர்த்து எண்ணித் தேவையை உணர இன்னும் தெரியவில்லை அவர்கள் களிமண்ணாய்த் திரண்டு கிடக்கிறார்கள் யார் யாரோ நீர் சேர்த்துப் பிசைந்து தமக்கு வேண்டியவாறெல்லாம் உருவங்களைச் செய்து கொள்கிறார்கள்.

சரி, நீ சொல்கிறபடியே பார்ப்போம். இன்று ஆட்சி எல்லாம் ஓட்டுப் போடும் மக்களின் கைகளைப் பொறுத்தது என்று வைத்துக் கொள்வோம்.அவர்கள் ஓட்டுப் போடும் போது தங்களைப் பற்றியாவது தமிழ்நாட்டைப் பற்றியாவது தமிழைப் பற்றியாவது கவலைப்படுகிறார்களா? அவர்கள் கவலைப்படாத நாடும் மொழியும் யாருடைய வல்லமையை நம்பி வாழ முடியும்? வறுமையால் வாடும் அறிஞர் சிலருடைய துணை மட்டும் போதுமா?

நான் சொல்கிறபடியும் கொஞ்சம் பார். களிமண் பிசைகிறவர்களின் கைகளாவது நாட்டையும் மொழியையும் பற்றிக் கவலைப்படுவது உண்டா? அவர்களை மாற்றுவதற்காக, அல்லது அவர்களுடைய மனத்தில் நல்லெண்ணம் ஏற்படுவதற்காக, நீயும் நானும் ஏதாவது செய்தோமா? ஒன்றும் செய்யாமல், தமிழ்நாடும் தமிழும் வாழ்ந்துவிடும் என்று எண்ணிக்கொண்டு காலம் கழிப்பது குற்றம் அல்லவா? மறைந்துபோன அந்த யாழைப் பற்றிப் பழங்காலத்துப் பாணரும் விறலியரும் பொருநரும் கூத்தரும் நம்மைப் போல்தான் ஏமாந்த எண்ணம் எண்ணிக் கொண்டு, நல்லவர்களாக வாழ்ந்திருக்கவேண்டும். அந்த யாழின் அருமை பெருமைகளை மட்டும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதை வாழவைக்கும் வல்லமைபற்றி அவர் கள் எண்ணத் தவறினார்கள். அதனால்தான் அந்த அருமையான கருவி அழிந்தது. அதை நினைத்துப் பார்க்கவும் இன்று ஒரு விபுலாநந்தர் தேவையாகிவிட்டது.

தம்பி! மேடையில் முழங்குவதைக் கொஞ்ச காலம் நிறுத்தி வைத்தாலாவது, இதை எண்ணிப் பார்க்க ஒரு வாய்ப்பு உண்டாகும் என்று எனக்குச் சில வேளைகளில் தோன்றுகிறது. இது பைத்தியக்கார எண்ணமாக உன்போன்ற இளைஞருக்குத்

தோன்றலாம். ஆனால் அனுபவத்தால் சொல்லுகிறேன் மேடை மகிழ்ச்சி நமக்குக் கடமை மறதியை உண்டாக்குகிறது. சிறந்த பேச்சு, நல்ல கைத்தட்டு இரண்டும் சேர்ந்தால் உணர்ச்சித் தணிவு, அடுத்த நிலையாகப் பழைய பிற்போக்கு வாழ்வு - இவைதான் இது வரையிலும் கண்டவை.நம்மை எண்ணித்தான் திருவள்ளுவர் சொன்னாரோ என்னவோதெரியவில்லை. நமக்காகவே சொன்னதுபோல உள்ளது அந்தக் குறள். நம்மைப்பற்றி நாமே மகிழ்ந்து அந்த மகிழ்ச்சியில் மயங்கியிருக்கும்போது, கடமையைப் புறக்கணித்துக் கெட்டழிந்தவர்களை நினைத்துக்கொள்ள வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னது எவ்வளவு பொருத்தம்! மேடைப் பேச்சைக் கேட்டுக் கைதட்டுவோரைக் காணும் போதெல்லாம், ”இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக” என்ற அந்தக் குறள் என் நினைவுக்கு வந்துவிடுகிறது, என்னை அறியாமல்.

தம்பி! இன்றைய உலகம் வல்லமை மிகுந்த மாமியார்போல் உள்ளது. நம் அருமைத் தமிழகம் மிக நல்ல மருமகளாக உள்ளது. ஆனால் தற்கொலையோ மனவேதனையோ எதிரே வந்து நிற்காதவாறு காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது.என் கருத்தில் எந்தப்பகுதி யாவது உனக்குத் தெளிவில்லாமல் இருந்தால் அதைக் குறித்து அதைக் குறித்து எழுது் தெளிவுபடுத்துவேன். ஏதாவது உனக்கு உடன்பாடு இல்லாமல் கருத்து வேறுபாடாக இருந்தால் எண்ணிப்பார் அல்லது விட்டுவிடு. நான் என்ன செய்வேன்? நீ எவ்வளவு உண்மையாக உணர்கிறாயோ அவ்வளவு உண்மையாகவே நானும் உணர்கிறேன். இந்தத் தமிழகத்தில் நாம் இருவராவது ஒன்றுபட முடியாதா, பார்ப்போம்.

**அன்புள்ள எழில்,**

உன்னுடைய தமிழ்ப் பற்றையும் தமிழ்நாட்டுப் பற்றையும் போற்றுகிறேன் வாழ்த்துகிறேன். ஆனால், இன்றைய கடிதத்தில் நீ எழுதியது போன்ற வீண் கனவு மட்டும் வேண்டாம். மேடைப் பேச்சு நம்முடைய உணர்ச்சி வெள்ளத்திற்குப் பெரிய வாய்க்காலாக இருந்து ஆத்திரத்தைத் தணித்து வற்றச்செய்து நம்மைச் சோம்பேறிகளாக ஆக்குவது போல், இப்படிப்பட்ட வீண்கனவுகள் நம்மை வீணர்களாக

ஆக்காமலிருக்க வேண்டும் என்ற எண்ணத்தால் இதைக் குறிப்பிடுகின்றேன். வேறொன்றும் தவறாக எண்ணவேண்டாம்.

”நான் சர்வாதிகாரியாக ஏற்பட்டால், திருக்குறள் ஓதாத திருமணம் தமிழ்நாட்டில் செல்லுபடி ஆகாது என்றும், தேவாரம் திருவாசகம் பிரபந்தம் முதலான தமிழ்மறை ஓதாத கோயில்கள் தமிழ்நாட்டில் திறந்திருக்கக் கூடாது என்றும், தமிழில் உத்தரவு அனுப்பத் தெரியாத பட்டதாரிகள் தமிழ்நாட்டில் அதிகாரிகளாக இருக்கக் கூடாது என்றும், தமிழ்நாட்டுக் கவர்னரும் தமிழில் கையெழுத்து இடவேண்டும் என்றும் ஆணையிடுவேன்” என்ற வீரமான எழுத்துக்களை உன் கடிதத்தில் பார்த்ததும் நானும் சோர்வு நீங்கியவனாய்த் தலநிமிர்ந்த தமிழனாய் எழுந்து உட்கார்ந்தேன். ஆனால் சிறிதுநேரம் எண்ணிப் பார்த்த பிறகுதான், உனக்கு ஏன் இந்த வீண் கனவு என்ற எண்ணம் வந்தது. மறுபடியும் சொல்கிறேன், உன் மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் போற்றுகிறேன். ஆனால் உணர்ச்சி வெள்ளம் மட்டும் இருந்தால் போதாது. அது என்றைக்கேனும் ஒருநாள் வடிந்து வற்றிவிடும், வற்றாத ஊற்று உன் உள்ளத்தில் இருக்கட்டும் செயல்திறன் வளரட்டும்.

நான் எதை வீண் கனவு என்று குறிப்பிடுகிறேன், தெரியுமா? திருக்குறள் ஓதியே திருமணம் நிகழவேண்டும், தமிழ்நாட்டுக் கோயில்களில் உத்தமர்களின் தமிழ்ப்பாட்டு முழங்க வேண்டும்,அதிகாரிகள் தமிழை மதிப்பவர்களாக இருக்க வேண்டும், கவர்னர் தமிழில் கையெழுத்து இட வேண்டும் என்னும் இவைகளை ஒருகாலும் வீண்கனவு என்று ஒதுக்கவே மாட்டேன். இது உனக்கே தெரியும். தமிழுக்கோ தமிழ்நாட்டுக்கோ பகைவனாக இருப்பவன் தான், இந்த நல்லெண்ணங்களை வீண் கனவு என்று குறைகூறுவான். நம் தாயை நாம் வழிபட்டு, நம் குடும்பக் கடமையை நாம் ஆர்வத்தோடு செய்யும்போது, இதைத் தவறு என்றும் குறுகிய நோக்கம் என்றும் ஒருவன் குறுக்கிடுவானானால், அவனைப் பகைவன் என்று ஒதுக்குவதே கடமையாகும்.

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து மாணாத செய்வான் பகை. என்று நம் தலைவர் திருவள்ளுவர் ஆணையிட்டது இப்படிப்பட்ட பகைவர்களைக் கருதித்தான். அறத்துப்பால் மட்டும் எழுதினால் தமிழர்கள் வாழத் தெரியாதவர்களாய்த்

திகைத்துச் சீரழிவார்கள் என்று எண்ணித்தான். திருவள்ளுவர் பொருட்பாலையும் எழுதினார் அறத்துப்பாலை விட விரிவாக, இரண்டு மடங்கு உள்ளதாகப் பொருட்பாலை எழுதினார். “இன்னா செய்யாமை“ என்று “அஹிம்சை“யை அறத்துப்பாலில் வற்புறுத்தியவர், “பகைமாட்சி“ “உட்பகை“ என்ற பகுதிகளைப் பொருட்பாலில் விளக்கிய காரணம் அதுதான். உலகம் எப்படிப்பட்டது என்பது திருவள்ளுவர்க்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் இவ்வளவு தெளிவாகப் பொருட்பாலை எழுத முடிந்தது.

தம்பி! நீ இன்னொன்று கவனித்திருப்பாய். தமிழராகிய நம்மிடம் ஒரு பெருங் குறை இருந்துவருகிறது. அது வேறொன்றும் அல்ல் பிறருடைய சொல்லால் மயங்கும் பேதைமை நமக்கு மிகுதியாக இருக்கிறது. மற்றவர்கள் இதைத் தெரிந்துகொண்டுதான், உயர்ந்த சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லித் தமிழரை ஏமாற்ற முடிகிறது. மக்களுக்குள் எந்த வகையான வேறுபாடும் வேண்டாம். கடவுள் படைப்பில் எல்லோரும் சமம் என்ற உயர்ந்த பேச்சைத் தமிழரிடம் ஒருவர் பேசட்டும் கேட்ட தமிழர் பற்றை உடனே வெறுப்பார், துறப்பார் எந்த வேறுபாடும் இல்லாத தூய வாழ்க்கையைத் தொடங்கிவிடுவார். காரணம் என்ன, தெரியுமா? தமிழர்நெஞ்சம் உயர்ந்த கொள்கைகளை உணர்ந்து உணர்ந்து தலைமுறை தலைமுறையாகப் பண்பட்டுவந்தது. அதனால், சொல்கிறவர் யார், உண்மையாக உணர்ந்து சொல்கிறாரா, நம்மை ஏமாற்றச் சொல்கிறாரா, அவர் எந்த வேறுபாடும் பார்க்காமல், வாழ்கிறாரா என்றெல்லாம் ஆராய்ந்துபார்க்காமல், உடனே தாம் அந்தக் கொள்கையை நம்பி உணர்ந்து வாழத் தொடங்கிவிடுவார். இது நல்லதுதான். சொல்லப்பட்ட உண்மையை எடுத்துக் கொள்வது எப்போதும் நல்லதுதான்.

ஆனால் சொன்னவர் யார், அவருடைய வாய்க்கும் வாழ்க்கைக்கும் ஏதாவது உறவு உண்டா என்பதையும் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இல்லையானால் ஏமாந்த வாழ்வுதான் வாழவேண்டும். இந்த ஏமாந்த தன்மையைப் பகைவர்கள் பயன்படுத்திக்கொண்டு, ஒன்றில் நன்மை செய்து மற்றொன்றில் நஞ்சு ஊட்டி விடுவார்கள். சாதி வேறுபாடு முதலியவை ஒழிய வேண்டியதுதான். ஆனாலும், நமக்கு

அதை எடுத்துச் சொன்னவர் சாதிப்பித்தராக இருந்தால் அதையும் ஒருவாறு நினைவில் வைத்துக்கொண்டு, வாய்க்கும் வாழ்க்கைக்கும் உறவு வைக்காமல் பற்றின்றி வாழ வல்லவர் அவர் என்பதைத் தெளிய வேண்டும். இந்தத் தெளிவு இருந்தால், அவரே மற்றொரு நாள் பொய் சொல்லி நம்மை ஏமாற்ற முடியாது. இன்றைக்குச் சாதி முதலான வேறுபாடு வேண்டாம் என்று உபதேசம் செய்தவர், மற்றொரு நாள் மெல்ல வந்து, ”மொழி வேறுபாடு வேண்டாம் தமிழ் என்றும், தமிழ்நாடு என்றும் பேசுகிற குறுகிய நோக்கம் வேண்டாம்” என்று உபதேசம் செய்வார். அதைக்கேட்ட பேதைத் தமிழர் சாதியைத் துறப்பது போலவே மொழிப்பற்றையும் நாட்டுப் பற்றையும் துறந்து நிற்பார் உடனே அடுத்த மேடையில் ஏறி உன்னையும் என்னையுமே தூற்றத் தொடங்குவார். அந்த எழிலும் அவருடைய அண்ணனும் குறுகிய நோக்கம் உடையவர்கள் என்று நம்மைப் பற்றி எவ்வளவோ சொற்களைப் பொழிவார் வீர முழக்கம் செய்வார் உடனே அவருக்கு ஒரு படை திரளும். முதலில் உபதேசம் செய்தவர் இத்தனை மாறுதலையும் திண்ணைமேல் இருந்தபடியே காண்பார் உள்ளத்தில் எக்களிப்பார் நம் எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்வார். ”புறமுதுகு காட்டாத தமிழராம் இதோ என் சொல்லால் அவர்களை வீழ்த்தி விட்டேன். எதனாலும் கலங்காத தமிழரை என் சொல்லால் மயக்கிவிட்டேன். ஒற்றுமையாக இருந்தவர்களைப் பிரித்துவிட்டேன். இனிமேல் வெற்றி எனக்குத் தான். இனித் தமிழர்களே தமிழர்களை அழித்துக்கொள்வார்கள். நமக்குக் கவலை இல்லை” என்று அவர் தம் உபதேசத்தின் பயனைக் கண்டு களிப்பார்.

இப்படிப்பட்டவர்களால் தமிழர்கள் ஏமாந்து போகக் கூடாது. கொள்கை எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், சொல்கின்றவர்கள் யார் என்ற ஆராய்ச்சியும் செய்யவேண்டும். யாழின் கொம்பு வளைவானது அம்பு நேரானது. ஆனால் யாழை வெறுத்து அம்பைப் போற்றுவது அறியாமை அல்லவா? திருவள்ளுவர்தான் இந்த உவமையைச் சொன்னவர். வாய்ச்சொல் நேர்மையானதாக இருக்கலாம் அதைக் கொண்டு ஒருவரை நம்பிவிடக்கூடாது அவருடைய வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை ஆராய்ந்த பிறகே நம்பவேண்டும். குறுகிய நோக்கம் வேண்டாம் என்று நமக்குச் சொல்கிறவர்கள் நம்மைவிடப் பரந்த நோக்கம் உடையவர்களா என்று பார்க்க

வேண்டும். நாம் எவ்வளவொ பரந்த நோக்கமும் இரக்கமும் உடையவர்கள் நம் பற்றெல்லாம் சில நல்ல நூல்களைப் பற்றி, சில பெரியோர்களின் பாடல்களைப் பற்றி, நம்மைப் பற்றி இருக்கும். அவர்களுடைய பற்று மிக மிகக் குறுகியது் தன்னலமான பல துறைகளில் அழுத்தமான பற்று அவர்களுக்கு இருப்பதை எண்ணினால் வியப்பாக இருக்கும்.

சாதி முதலிய வேறுபாடுகள் உண்மையானவை அல்ல் பொய்யானவைவ் அவற்றை ஒழிப்பது கடமை தான்.ஆனால் மொழி வேறுபாடும் நாட்டு வேறுபாடும் அப்படிப்பட்டவை அல்ல் பொய் அல்ல. மொழி உண்மையாக உள்ள ஒன்று அது கண்ணுக்கும் தெரியும். காதுக்கும் தெரியும். மூளைக்கும் தெரியும். மொழியால் இனம் அமைவதும், நாகரிகம் அமைவதும், நாடு அமைவதும், நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள். இவற்றை எல்லாம் பொய் என்றும் வேண்டாதவை என்று உபதேசம் செய்கிறவர்கள் நம்மைப் பற்றி நல்லெண்ணம் இல்லாதவர்கள். அவர்களுக்கு வேலை நம்மிடம் இல்லை. வல்லரசுகளிடம் சென்று அவர்கள் அந்த உபதேசம் செய்யட்டும். நாட்டுப்பற்றையும் இனப்பற்றையும் பொருட்பற்றையும் வல்லரசுகள் முதலில் கைவிட்டால், உலகம் ஒரு குடும்பமாக வாழும் குறுகிய நாட்டுப்பற்று அங்கே ஒழிந்தால், அடுத்த நொடியிலேயே தமிழன் தன் முதல் பாடத்தை, ”யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பழைய பொதுப் பாடத்தை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டத் தயங்கமாட்டான். அதை விட்டுவிட்டு, நம்மிடம் செய்யப்படும் போலி உபதேசம் ஏமாற்றும் நோக்கம் உடையதே ஆகும். பெருஞ்செல்வன் தன்னுடைய இரும்புப் பெட்டியை ஏழெட்டுச் சாவிகளால் பூட்டி, அந்த அறையையும் சில பூட்டுக்களால் பூட்டிவிட்டு, தன் மாளிகையின் முன்புறத்தில் அகலமான திண்ணைமேல் சாய்ந்து கொண்டு, எதிர்வீட்டு ஏழையைப் பார்த்து, ”டே! என்னடா! எப்போது பார்த்தாலும் அந்தப் பொத்தல் கதவை மூடியே வைத்திருக்கிறாய்! எங்கள்மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?” என்று கேட்பதுபோல் இருக்கிறது இது. அந்த ஏழையும் அவருடைய பரந்த நோக்கப் பேச்சைக் கேட்டு மயங்கித் தன் குடிசைக்கு இருந்த அந்த ஒரே கதவையும் எடுத்து அப்பால் வைத்தான் என்றால், அவனைப் பேதை என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது? தமிழர்கள்

அப்படிப்பட்ட பேதைகள் ஆகக்கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. உலகம் ஒரு குடும்பமாய் அன்பாக வாழக் கற்றுக்கொள்ளும் வரையில் தமிழனுக்குத் தற்காப்பு உணர்ச்சி கட்டாயம் வேண்டும்.

அதற்கு வழி இதுதான் தமிழர்களை சிறிது நேரம் உணர்ச்சிவெள்ளத்தில் மூழ்கடித்துப் பிறகு வறண்ட பாலையில் திகைக்கவிடும் போக்கைவிட்டு, அவர்களைக் கடமைப் பற்று உடைய செயல்வீரர்களாக ஆக்க வேண்டும். உன்னுடைய எழுத்தில் அந்த உணர்ச்சிவெள்ளத்தைக் கண்ட தால்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். நீ சர்வாதிகாரியாக ஆவதுபற்றி எனக்குத் தடை இல்லை. ஆனால், அந்தப் போதையில் மயங்கி அன்றாடக் கடமையை மறந்து விடாதே் மற்றவர்களையும் மறக்கவிடாதே.

நீ சர்வாதிகாரி ஆவதையே வீண்கனவு என்று குறிப்பிட்டேன். தமிழரின் திருமணங்களில் திருக்குறள் ஓதுவது கனவு அல்ல் தமிழரின் கடமை. கோயில்களில் தேவாரம் முதலியன முழங்குவது கனவு அல்ல. அந்தக் கோயில்களைத் தமிழால் பாடி அவற்றின் பெருமையைக் காத்த சான்றோர்களுக்கு நன்றியுணர்வோடு ஆற்ற வேண்டிய கடமை அது. அதிகாரிகள் தமிழில் எழுத வேண்டியதும் கனவு அல்ல் காந்தியடிகளின் கருத்துப்படி மொழிவாரி மாகாணம் கட்டாயமாக ஏற்படும்போது கவர்னர் தமிழில் கையெழுத்து இடுவதும் கனவு அல்ல. வங்காளத்திற்குத் தொண்டுசெய்யச் சென்ற முதுமையில் எழுபத்தெட்டாம் வயதில், அந்த நாட்டு மொழியில் கையெழுத்து இடவேண்டும் என்று வங்காளி எழுத்தைக் கற்றுக் கொண்ட காந்தியடிகளின் பெருந்தன்மையான நெறி அது.

ஆகவே, இன்று தமிழர்க்கு வேண்டியது, அன்றாடக் கடமையைப் பற்றிய ஆராய்ச்சியே் மொழிப்பற்றையும் நாட்டுப் பற்றையும் செயலில் காட்டும் முறையே. நான் இப்படியானால் அப்படிச் செய்வேன், அப்படியானால் இப்படிச் செய்வேன் என்று “ஆனால்“ போட்டுப் பேசுவது இப்போது வேண்டாம். அது வெறும் போதை் உண்மை நெறி அல்ல. எண்ணிப்பார் விளங்கும்.

**வினாக்கள்**

1 . எழுத்தாளன் பற்றிய மதிப்பீட்டை“ புதுமைப்பித்தனின் கடிதம் சிறுகதை வழி

ஆராய்க.

2. ஜெயகாந்தனின் “வாய்சொற்கள்“ சிறுகதையை ஆராய்க.
3. உடன்பிறந்த சகோதரிகள் அந்நியமானவர்களாக மாறும் சூழ்நிலையை சூடாமணியின் கதை வாயிலாக வெளிப்படுத்துக.
4. தமிழின் மேன்மைகள் மு.வரதராசனார் எடுத்துரைக்கும் தன்மையை மு.வ.கடிதங்கள் வழி எழுதுக.
5. தமிழ் மொழியின் மீது பற்றுடையவர்களாக மாறுவதற்கு மு.வரதராசனார் கூறும் அறவுரைகளை கட்டுரைக்க.

# அலகு - 4

## பெரியார் நடத்திய திருக்குறள் மாநாடு

## திருக்குறள் மாநாடு

### பெரியார் பேருரை

ஆரியத்தை ஒழிக்கும் ஒப்பற்ற ஆயுதம் திருக்குறளே!

சொற்பொழிவின் தொடக்கத்திலேயே, தான் எப்போதுமே தன் அறிவு ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு நடந்து வந்தவன் என்பதையும் அது ஒரு வேளை தவறாக முடியுமோ என்ற அச்சம் சில சமயங்கள் ஏற்பட்ட போதிலும், நாம் தொடர்ந்து உறுதியோடு அதையே ஆதாரமாகக் கொண்டு நடந்து வந்தமையையும் எடுத்துக் கூறி, அதையே காலையில் தலைவர் திரு.சக்ரவர்த்தி நயினார் அவர்கள் ஒப்புக் கொண்டமை, தான் நடந்து கொண்ட வகையே சாலச் சிறப்புடைத்து என்பதைத் தெரிந்து கொண்டதாகவும், மனிதன் ஒவ்வொருவனும் தன் வாழ்வுக்குத் தானே எஜமானன் என்பதை உள்ளபடி உணர்ந்து செயலாற்றி வருதலே நன்மை பயக்கத் தக்கது என்றும், தன்னறிவு தனக்கு காட்டிக் கொடுக்கும் வரை சற்று சங்கடம் ஏற்படினும் அதனால் கேடொன்றும் நேர்ந்து விடாதென்றும், இன்று திருக்குறளை தாம் புகழ்ந்து கூறுவதற்கும் தம்முடைய கருத்துகள் அதில் காணப்படுவதால்தானே ஒழிய, அது வள்ளுவரால் கூறப்பட்டது என்பதற்காகவோ அல்லது அதில் கூறப்பட்டுள்ளது யாவுமே பகுத்தறிவுக்கு ஏற்றது என்ற கருத்தினாலுமே அல்ல என்றும், அதில் தம் முன்னேற்றக் கருத்துக்கு ஒவ்வாதன இருப்பின் அவற்றை விலக்க தாம் எப்போதும் தயங்கப் போவதில்லை என்றும் தெரிவித்துக் கொண்டார்.

### குறளும் சுயமரியாதையும்

மேலும், அவர் பேசுகையில், திருக்குறளின் மேன்மை நம் அருமை நண்பர் மாணிக்க நாயக்கர் காலத்திலேயே நமக்கு ஓர் அளவுக்குப் புலப்பட்டது என்றாலும், இன்றைய நாள் வரை அதைப்பற்றி அதிகம் பேசாமல் இருந்தமைக்குக் காரணம், நீண்ட நாள்களாகவே நம்மிடையே ஆரியத்தால் புகுத்தப்பட்டு நம் வாழ்வைக்

கெடுத்துக் கொண்டு வரும் கடவுள், மதம், இவை சம்பந்தப்பட்ட மூட நம்பிக்கைகள், அறவே ஒழிக்கப்படும் வரை திருக்குறளை மக்களிடையே பரப்புவதால் பயனில்லை என்பதை தெளிவாக உணர்ந்ததன் காரணத்தினால்தான் என்றும் இன்று சுயமரியாதைப் பிரச்சாரத்தால் மூட நம்பிக்கைகளும், ஆரிய முறையும் பெருமளவுக்கு நீங்கி நாம் எடுத்துக் கூறும் சீர்திருத்தக் கருத்துகளை ஒப்புக்கொள்ளவும் அவற்றை மக்களிடையே பரப்பவும் போதுமான ஆதரவாளர்கள் ஏற்பட்டு விட்டனர். நமது பிரசாரம் வெற்றி பெற்றுவிட்டது. ஆரியம் அழியும் காலம் மிக நெருக்கத்திற்கு வந்து விட்டது என்பதை உள்ளபடி அறிந்த பிறகே அதைப் பரப்பத் துணிவு கொண்டு மாநாட்டைக் கூட்டு முயற்சியில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டார்.

**குறளைக் கொண்டு வாழ்க்கையை நிர்ணயிப்போம்!**

மேலும் பேசுகையில், சமுதாயத்தின் ஒழுக்கமும், நாணயமும் மிகவும் கெட்டுவிட்டதென்றும், மனிதனை மனிதன் வஞ்சித்து வாழும் கொடுமை மிகமிக மலிந்துவிட்ட தென்றும், இத்தகைய ஒழுக்கக் கேட்டிற்குக் காரணமான கடவுளும், மதமும் மாற்றப்பட்டாக வேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டதோடு, காந்தியார் வணங்கிய கடவுளும், போற்றிய அகிம்சையும், சத்தியமும், மதமும் அவருக்கே பயன்படாது போய் விட்டமை காரணமாகவேனும் இவ்வுண்மை மக்களுக்குப் புலப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் குறளை யார் எழுதியது, அவர் காலமென்ன என்ற விசாரத்தை யயல்லாம் ஆராய்ச்சி வல்லுநர்களான சரித்திரப் பேராசிரியர்களுக்கே விட்டு விட்டோம். குறளில் கூறப்பட்டுள்ள கருத்துகளை மட்டுமே கவலையோடு ஆராய்ந்து பார்த்து அவற்றின் படி நம் வாழ்க்கையை செப்பனிட்டுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

**உருவக் கடவுளைக் குறிப்பிட்டாரா வள்ளுவர்?**

‘கடவுள் வாழ்த்தி’ல் என்ன கூறப்பட்டுள்ளது என்று எடுத்துக் கூறுமுகத்தான் வள்ளுவர் எங்கும் உருவக் கடவுளைப் பற்றிக் குறிக்கவே இல்லை என்றும், அவர் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் மனிதன் இன்னின்ன உயர்வான குணங்களைப்

பெறுதல் வேண்டும் என்று மட்டுமே குறிப்பிடுகிறார் என்றும், உயர்வான மனிதத் தன்மை எதுவென்பதே அவ்வதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற தென்பதையும் தெளிவாக எடுத்துக் கூறினார்.

அடுத்த அதிகாரமாகிய ‘வான் சிறப்பை’ப் பற்றிப் பேசுகையில், மக்கள் ஒழுக்க மாயிருந்தால் மழை பெய்யும் என்ற இன்றைய மதவாதிகளின் கருத்தைக் கண்டித்து வள்ளுவர் மழை பெய்தால் தான் மக்கள் கஷ்டமின்றி வாழ்தல் கூடும். கஷ்டமின்றி வாழ்தல் கூடுமானால்தான் மக்களிடையே ஒழுக்கம் நிலவ முடியும் என்று குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் காட்டினார்.

திருவள்ளுவர் பெண்களைப் பற்றி ‘பெண் வழிச் சேரல்’ என்ற பகுதியில் கூறியி ருப்பது சிலரின் கண்டனத்திற்கு ஆளாகியிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டு, திருவள்ளுவர் பெண்களை அய்ந்து வகையாக அதாவது தாய் தகப்பன் பாதுகாப்பில் கல்யாண மாகாமல் கன்னிகளாக இருந்துவரும் பெண்கள், கல்யாணமாகி இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு வாழும் பெண்கள், விபச்சாரத்தைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்துவரும் விலைமகள், கல்யாணம் செய்து கொள்ளாமல் தான் தோன்றித்தனமாக சுதந்தரமாக வாழ்ந்து வரும் பெண் என்று பிரித்தே பேசியிருக்கிறார் என்றும் பெண் வழிச்சேரல் என்ற பகுதியில் குறிப்பிடப் பட்டிருக்கும் பெண்டிர் கடைசியாகக் கூறப்பட்ட சுதந்தரர்கள் என்றும் அவர் வழி சேர்ந்த ஆடவர்களுக்கு கேடு சம்பவிக்கும் என்றுதான் திருவள்ளுவர் கூறியிருக்கிறாரே ஒழிய பெண்களைப் பற்றி இழுக்காக ஒரு வார்த்தை கூட திருவள்ளுவர் பேசவில்லை என்றும் குறிப்பிட்டார்.

**திருவள்ளுவர் பொதுவுடைமைக்காரர்**

மேலும் அவர் திருவள்ளுவர் காலம் பொது உடைமைக்காலமோ, சமதர்மக் காலமோ அல்ல. ஆனால், வள்ளுவர் சிறந்த பொது உடைமைக்காரராகவே விளங்குகிறார். அதனால்தான் நம் போற்றுதலுக்கு ஆளாகிறார் என்று குறிப்பிட்டு விட்டு இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்த திருக்குறளை அனைவரும் போற்றி அதன்படி நடந்து நல்வாழ்வு வாழ வேண்டுமென்றும், நாட்டின் மூலை முடுக்குகள் தோறும்கூட திருவள்ளுவர் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டு, திருக்குறள் கருத்துகள் பரப்பப்பட

வேண்டுமென்றும், ஆண்டுதோறும் இது போன்ற வள்ளுவர் மாகாண மாநாடுகளும், ஒவ்வொரு ஜில்லாவிலும் தனி மாநாடும் கூட்டப்பட வேண்டும். குறள் ஆரியத்தை ஒழிக்க ஒப்பற்ற நல்லாயுதம் என்று திருக்குறள் பிரச்சாரக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, விரைவில் செயலாற்றத் தொடங்கும். அதற்கான ஆதரவைப் பொது மக்கள் தந்துதவ வேண்டும் என்று கூறி மாநாட்டில் கலந்து கொண்ட புலவர்களுக்கும், அறிஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் தம் நன்றியறிதலை தெரிவித்துக் கொண்டார்.

**அண்ணாவின் நாடகம்**

16.1.1949 இரவு 10 மணிக்குத் தோழர் அண்ணாதுரை அவர்கள் குழுவினரால் ‘சந்திரமோகன்’ என்கிற நாடகம் வள்ளுவர் மாநாட்டுப் பந்தலில் இனிது நடிக்கப் பெற்றது. நாடகத்தைக் காண வேண்டி மக்கள் 7.30 மணி முதற்கொண்டே வந்து குழும ஆரம்பித்து விட்டனர். 9 மணிக்குள்ளாகவே பந்தல் நிறைந்துவிட்டது. இதுவரை இம் மாதிரி பெருந்திரளான மக்களிடையே சென்னையில் நாடகம் நடைபெற்றிருக்க முடியாது என்பது வெளிப்படை. நாடகம் சுமார் 2 மணிக்கு முடிந்தது.

**பெரியார் பாராட்டு**

இதுவரை, இந்நாட்டில் பெருமையோடு நிலவி வருகின்ற அரசர்கள் யாவரும், தமிழ்நாட்டு மூவேந்தர் உள்பட யாவருமே சிவாஜியைப் போன்றே ஆரியத்துக்கு அடிபணிந்தே, ஆரியக் கொள்கைகளை ஆதரித்து அவற்றை பிரச்சாரம் செய்தே தம் ஆட்சியை நடத்தி வந்திருக்கின்றனர்.

இது போன்ற சீர்திருத்தக் கருத்துகளை உண்மையான சரித்திர ஆதாரங்களோடு எடுத்துக்காட்டப்படும் நடிப்புகளைப் பெரிதும் ஆதரிக்க வேண்டுமென்றும் புராணப் புரட்டுகளை மறைத்துக் காட்டும், புராண சம்பந்தமான நடிப்புகளை ஆதரிக்கக் கூடாதென்றும் பெரியார் தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக தோழர் க. அன்பழகன் நன்றி கூறினார். மாநாடு நள்ளிரவு 2.30 மணிக்கு முடிவுற்றது.

## 2. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு உரை

## தயங்காதே தமிழா - பேரறிஞர் அண்ணா

(இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் சென்னைப் பூம்புகாரில் தீவுத்திடலில்)

உள்ளமெல்லாம் தமிழ் நிறைந்திருக்கும் வேளை எனும் உயிரும் தமிழோடு கலந்திருக்கும் வேளை எதைப்பற்றிப் பேசினாலும் தமிழைப் பற்றியே பேசிடும் வேளை - எதையும் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வேளை.

இந்த வேளையில் நான் ஆற்றும் பேருரை - பேருக்குத்தான் உரையாக அமையுமே யல்லாது, பேருரையாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

இங்குப் பூம்புகாரில் பத்து நாள்களாக நாம் கண்ட காட்சி - கேட்ட கருத்துகள் - உற்சாகத்தோடும், உள்ள எழுச்சியோடும் இங்கும் காணப் போகிறோமா என்றால் காணமுடியாது.

ஏதாவது ஒரு முறையில் இந்த மாநாடு தொடர்ந்து நடக்காதா? பத்து நாள் நிலவிய தமிழ் நாதம் நிரந்தர நாதமாக இருக்காதா? இந்த மாநாடு போல் எல்லா ஊர்களிலும் மாநாடு நடத்தக் கூடாதா? தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் தமிழ் எழுச்சி எழச் செய்யக்கூடாதா? என்று அனைவரும் நினைக்கத்தக்க அளவில் பூம்புகார் மாநாடு அமைந்தது.

### வெளிநாட்டார் வியந்திடும் மாநாடு!

பூம்புகார் மாநாடு இவ்விதம் அமையும்: இவ்வளவு ஏற்றமுடன் அமையும் என்று நாங்கள் தொடக்கத்தில் நினைக்கவில்லை.

மொழிக்காக ஒரு மாநாடு கூட்டமுடியும் அதற்கு இலட்சக்கணக்கில் மக்கள் வருவார்கள் மணிக்கணக்காக - நாள் கணக்காக உட்கார்ந்திருப்பார்கள் என்று நாங்கள் அவ்வளவு அதிகமாக எதிர்பார்க்கவில்லை.

ஆனால் தமிழ்மொழிப் பற்று எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை மக்கள் காட்டிவிட்டார்கள். மக்களின் இந்த ஆர்வத்தைக் கண்ட வெளிநாட்டார் தத்தமது நாட்டிற்குச் சென்று கூறப்போகிறார்கள்.

”எந்தத் தமிழைப் பற்றி ஆராயத் தமிழகம் சென்றோமோ அந்த தமிழகத்தில் உள்ள மக்கள், எங்களுக்கு முன்பே நெடுங்காலம் தொட்டு ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சியால் அகமகிழ்ந்து, அந்தர தங்கள்கும் எல்லாம் சாதனங்கள் தங்களுக்கு இன்பம் அனிற்கும் எ வம் தங்கள் தமிழை நினைக்கிறார்கள். தமிழ்மொழியின் மாண்பை சிகாவு தங்கள் மகிழ்கிறார்கள். அந்தத் தமிழுக்கு எந்தப் பக்கமிருந்து எவரிடமிருந்து - எந்த வகையான ஊறு வந்தாலும் ஊறு வரும் என்று ஐயப்பட்டாலும், தமது இன்னுயிரைத் தந்தேனும் தமிழைச் காப்போம் என்கிற உறுதி பூண்டவர்கள் தமிழர்கள்” இப்படியெல்லாம். அந்த வெளிநாட்டு வித்தகர்கள் தமது நாடுகளான இரஷ்யாவிலும், ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், இலங்கையிலும், மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், இந்தோநேஷியாவிலும், மொரீசியஸ் தீவிலும், பிஜித் தீவிலும் பேச இருக்கிறார்கள். பேச வாய்ப்பும், உரிமையும் உள்ள இடங்களில் எல்லாம் அவர்கள் பேசவிருக்கிறார்கள். நேசிக்கிறார்கள்

**மாநாட்டு மேடையில் சேர - சோழ - பாண்டியர்!**

இந்தப் பூம்புகார் மாநாட்டில் எந்த வகையில் - எந்த முறையில் யார் பங்கு கொண்டிருந்தாலும் - வாழ்நாளிலேயே எண்ணி எண்ணிப் பெருமிதம் அடையும் நாளாக இந்தப் பத்து நாள்களும் அமையும்.

இந்த மாநாட்டில் பெரும் புலவர்களைக் கண்டீர்கள் அவர்தம் கவியுள்ளங்களைக் கண்டீர்கள். தமிழையும், தமிழ் நாட்டைப் பற்றியும் அவர்கள் பாடிய பாடல்களையும் பேசிய பேச்சுகளையும் கேட்டீர்கள். உரை வல்லுநர் பொருள் கூறியதையும், அவர்களது பொருள் உரையில் ஓடிய கருத்துக்கும் காலத்துக்கும் உள்ள தொடர்பு பற்றியும் கேட்டிருப்பீர்கள்.

ஒரு நாள் தாய்மார்ளுக்கு என்றே “மகளிர் நாள்“ என ஒதுக்கப்பட்டது. தாய்த் திருக்குலம் தமிழ்மொழி பற்றி ஆற்றிய தமிழ் உரைகளையும் கேட்டிருப்பீர்கள்.

இந்த மாநாட்டு மேடையில் - சேரன் ஒரு நாள் நின்றிருப்பான் சோழன் இன்னொரு நாள் உலவியிருப்பான் பாண்டியன் மற்றொரு நாள் தோன்றியிருப்பான்! இளங்கோவடிகள் வந்திருப்பார். இலக்கண ஆய்வாளர்கள் வருகை புரிந்திருப்பார்கள்!

**வெளியிலே நிலவொளி வீட்டிலே இருள்**

பூம்புகார் என்ற இந்தத் திருப்பெயரைக் கேட்டபோதோ, நம் நினைவு எங்கோ சென்றிருக்கும்.

அன்று எத்துணைச் சிறப்பாக வாழ்ந்தோம் இப்போது எத்துணை இடர்ப்பாடுகளில் சிக்கித் தவிக்கிறோம்!

அன்று வளமாக வாழ்ந்தோம்: இன்று வறுமைப் பள்ளத்தில் வீழ்ந்திருக்கிறோம். அன்று உலகத்தார் பாராட்டிட வாழ்ந்தோம் இன்று நம்மிடம் உள்ளதைப் பறிக்க, பிறர் வரும் நிலையையும் பார்க்கிறோம்.

வானத்தில் பால் நிலவு காய்கின்ற வேளை - அந்த நிலவொளி பட்டதால் கவிதை உணர்ச்சி உள்ளத்தில் பொங்கி எழுகிறது! யாப்புத் தெரியாவிடினும், இலக்கணம் புரியாவிடினும் பால் நிலவொளி மேனியில் பட்டு இன்பம் பெருக்கிய காரணத்தால் - அந்தப் பசுமை நினைவு மாறாத காரணத்தால் - கவிதை உணர்ந்து நமது வாழ்வு. விளக்காம் தமிழைப் பாடிட நினைக்கிறோம்.

அது முடிந்து இல்லத்தில் உள்ளே செல்லும்போது இல்லத்தில் இருக்கும் ஒரே விளக்கும் எண்ணெய் இல்லாத காரணத்தால் ஒளி குன்றி அணைந்திட.. இல்லத்தில் இருள் சூழ்ந்தால் உள்ளம் என்ன பாடுபடும்!

வெளியிலே நிலவொளி உள்ளே இருள்! வெளியே உணர்ச்சிப் பெருக்கு · உள்ளே மனம் உடைந்த நிலை! தத்தளிப்பு! தவிப்பு!

பத்து நாள்களும் தமிழ்ப் பெருமக்கள் தந்த விளக்கம் கேட்டு, பால் நிலவு ஒளியில் தோன்றிய பெருமித உணர்ச்சியை அடைகிறோம்.

நிகழ்காலம் பற்றி நினைக்கும்போது விளக்கு அணைந்த வீடுபோல் நம் உள்ளம் மாறுகிறது.

உன்னதத் தமிழைப் பெற்ற உங்களை வாழ்த்துவதா? அத்தகைய தமிழ் இருந்தும் வாழ்வில் வளம் அடைய முடியாத நிலை குறித்து வருந்துவதா? எனத் தெரியவில்லை.

ஐம்பெருங் காப்பியங்களும் காவியங்களும் படைத்த தமிழ்மொழியின் இருப்பது கண்டு வருந்துவதா? எனத் தெரியவில்லை.

**மழலைக் குழந்தைளுடன் மாநாட்டில் தாய்மார்கள்**

தமிழ்ச் சமுதாயம் தமிழ் மொழியின் அடிப்படையில்தான் இயங்குகிறது. இதை உணர்ந்திருந்தாலும், எடுத்துச் சொல்ல முடியாமல் எடுத்துச் சொல்லும் வகை அறியாது நாம் இருக்கலாம்.

ஆனால், தமிழ் வாழ்ந்தால் தான் தமிழர் வாழ முடியும் தமிழர் வாழ்ந்தால் தான் தமிழ்ச் சமுதாயம் வாழமுடியும் என்று உள்ளூர நாம் உணர்ந்திருக்கிறோம். அதனால் தான் மொழிக்காக ஒரு மாநாடு மட்டுமா புட்டுக்குள் வரவில்லை என்றால்னர் மட்டும் இந்த மாநாட்டுக்கு வரவில்லை. தமித் அனைவரும் வந்திருக்கிறார்கள்.

அவர்களே ஒரு கவிதையாக விளங்குகிறார்கள் அவர்கள் பேச்சிலே ஒரு பட்டொளி அவர்கள் மூச்சிலே தமிழ் எழுச்சி! அவர்கள் நபசாடும் போது, வீரத் தமிழகமே நடமாடுவது போன்ற ஓர் உணர்வு இங்கே தோன்றுகிறது.

இங்கே ஆடவரும் வந்திருக்கிறார்கள் ஆரணங்குகளும் வந்திருக்கிறார்கள் இளைஞர்களும் வந்திருக்கிறார்கள் முதியவர்களும் வந்திருக்கிறார்கள் தாய்மார்கள் தாங்கள் பெற்றெடுத்த வெற்றியான குழந்தைகளுடன் வந்திருக்கிறார்கள்.

தமிழ் இன்பத்தைத் தாங்கள் செவிமடுப்பதோடு தங்கள் குழந்தைகளுக்குக் கருத்து விளங்கினாலும், விளங்காவிட்டாலும், தமிழ் ஓசை இன்பம் அந்தக் குழந்தைகளின் செவிவழிப் புகுந்து, இரத்தத்தோடு இரத்தமாய் மழலையோடு மழலையாய் - மாறட்டும் என்ற நினைப்பில், இடுப்பில் குழந்தைகளுடன் வந்திருக்கிறார்கள் தாய்மார்கள்.

**"ஒளிவெள்ளம் பாய்ச்சும்**

**உயரிய காட்சிகள்**

**அரும்பும் மலரும் பூத்திடும் பூங்காலை**

**ஓவியமாகத் தீட்ட நினைக்கலாம் ஓர் ஓவியன்.**

**அதைக் கவிதை ஆக்கிடத் துணியலாம் கவிபாடக் கற்றவன்.**

நான் ஓவியன் அல்லன்: அதைக் கற்றுத் தோற்றவன். கவி பாடிட நினைத்திருந்தும் நேரம் இல்லாதவன் எனினும் உள்ளத்தில் பதிந்ததை என்றும் மறவாமல் நினைவில் வைத்திருப்பவன்!

ஆகவே, இங்கு நான் கண்ட காட்சியைக் கண்கள் திறந்திருக்கிற நேரத்தில் மட்டும் அல்ல் கண்களை மூடியிருக்கின்ற நேரத்திலும் மறக்க முடியாது.

"பூம்புகார் என்ற நகரையும் - இந்த நகரில் அந்நாளில் அமைந்த கட்டம் போல் எழுந்துள்ள பழங்காலக் கோட்டையையும் - இங்கு ஒளிவிடும் சூழல் விளக்குகளையும் - அந்த ஒளி வெள்ளத்தையும்

மிஞ்சும் வகையில் உங்கள் கண்களிலிருந்து ஒளிக்கதிர் கிளம்பி, அந்த என்னால் மறக்க என்றும் மறையமாட்டா! னி விரவிப் பரவி நிற்கும் காட்சிகளையும் முடியாது: இவை என் மனத்தைவிட்டு

இந்த உணர்ச்சி எனக்கு மட்டும் அல்ல - உங்களுக்கும் இருக்கும். இந்த மாநாடு நடந்த பிறகும் பல மாநாடுகள் நடக்கலாம் ஆனால் அந்தப் பூம்புகார் மாநாடுபோல் ஆகுமோ?" என்று நீங்கள் கேட்கப் போகிறீர்கள்.

எங்கள் ஊருக்கு ஒரு தமிழ்ப் புலவர் வருகிறார் என்று கூறினால் "பூம்புகார் மாநாட்டில் பார்க்காத புலவரா?" என்று நீங்கள் கேட்கப் போகிறீர்கள். அந்த அளவுக்குப் பூம்புகாருக்கும் உங்களுக்கும் இடையே நெருங்கிய உறவை நீக்க முடியாத பாசத்தைத் - தமிழ் எழுச்சியை - உணர்வை உண்டாக்கிக் கொண்டுவிட்டீர்கள்.

**எம்.ஜி.ஆர். ஒரு கவிதை**

இன்றிரவு நான் சொல்வதற்காகவாவது கவிதை எழுதத் தொடங்குங்கள். தமிழ் உணர்வு உள்ளத்தில் உள்ள காரணத்தால் கட்டாயம் கவிதை வரும். அதைக் கவிதை இல்லை என்று புலவர்கள் கூறலாம். ஆனால் நான் கவிதை இல்லையென்று கூறமாட்டேன். இலக்கணத்தை அடிப்படையாக வைத்து அதைக் கவிதை இல்லை என்று புலவர்கள் கூறலாம். நான் உணர்ச்சியை வைத்து அதைக் கவிதைதான் என்கிறேன்.

**"இன்னும் சொன்னால்?**
**உங்கள் பார்வையே ஒரு கவிதைத்**
**உங்கள் பேச்சே ஒரு கவிதைத்**
**உங்கள் கையொலியே ஒரு கவிதைத்**
**உங்கள் வாழ்த்தொலியே ஒரு கவிதைத்**
**இங்கே எங்கும் நிறைந்திருக்கும்**
**நாதமே ஒரு கவிதை!**
**இதைப்பற்றி எந்தக் கவிஞன்**
**முழுமையாகப் பாடிட முடியும்?**
**அன்றலர்ந்த மலரைத்தான்**
**கவிஞன் பாடிட முடியும்.**
**பத்து நாள்களும் மலர்ந்திருக்கும்**
**உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்துகொண்ட**
**மக்களின் முகமலர்களைப்பற்றி**
**எந்தக் கவிஞன் பாடிட முடியும்?**
**ஒரு பெண்ணிலவைத்தான்**
**கவிஞன் பாடிட முடியும்**
**இந்த இலட்சக் கணக்கான**
**வெண்ணிலவுகளை எந்தக் கவிஞன்**

**பாடிட முடியும்? நீங்களே கவிதையாகி விட்டபிறகு**

**யார் உங்களைக் கவிதையில் வடிக்க முடியும்?"**

**புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பேசும்போது**

**"கவிதை என்பது அழகும்**

**உள்ள உணர்ச்சியும் உள்ளது**

**கவிதை என்றார்.**

**அப்போது நீங்கள் கை தட்டினீர்கள்.**

**கைத்தட்டலுக்குப் பொருள் என்ன**

**என்று சிந்தித்துப் பார்த்தேன்.**

**உள்ளவர் எம். ஜி. ஆர்.**

**எனவே அவரே ஒரு கவிதை**

**என்பதால் - நீங்கள் கைதட்டினீர்கள்**

**என்பதைக் கண்டேன்!"**

கவிதையின் அளவுகோல் என்னைப் பொறுத்தவரை உணர்ச்சிதான். அந்தக் கவிதையில் சந்தம் இல்லாமல் இருக்கலாம் ˙ இலக்கணம் இல்லாமல் இருக்கலாம் இப்படி நான் சொல்வதால் கவிதைக்கு இலக்கணம் கூடாது என்று நான் கூறவில்லை. ஆனால் இலக்கணத்திற்கும் மேலாக ஈடாக இணைந்தோடும் உணர்ச்சியும், அழகும், தூய்மையும், நல்ல திறமையும் கொண்டு செய்யப்படும் செயலும் அந்தச் செயலுக்குக் காரணமான சிந்தனையும் ஒரு கவிதை!

**தமிழனின் தனிப்பண்பு**

"முன்பு மாநிலம் ஆண்ட தமிழர் மீண்டும் அரசாளும் நாள் வருமா?" எனக் கேட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், "தமிழர் அரசு வரும்" என்று தித்திப்பான சேதியைக் கூறினார்.

தமிழர்கள் தங்கள் அரசைப் பெற்றிருக்கிறார்களா? என்பது விரிவாக விவாதிக்க வேண்டிய பொருள். ஆனால் ஒன்றை நீங்கள் ஒப்புக் கொள்ளவேண்டும் தமிழர்கள்

தங்களை உணரத் தொடங்கிவிட்டார்கள். தமிழனின் பண்பு - யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பது அல்ல: யாரையும் தாழ்த்துவது அல்ல.

தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒருநாளும் ஒருப்பட மாட்டோம்!

முன்பிருந்த மன்னர்கள் அலை கடலை வென்றார்கள். நம்முடைய வணிகர்கள் நாவாய்களில் (கப்பல்களில்) ஏறிக்கொண்டு, மாரீஸ் தீவுக்கும், பிஜித் தீவுக்கும், மடகாஸ்கருக்கும் சென்று தமிழ் மணம் பரப்பினர் என்று இப்போது ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால் இந்தச் செய்தியை நமது பழம்பெரும் இலக்கியங்கள் **வெகுநாள்களுக்கு முன்பே கூறியிருக்கின்றன.**

**”தாரணி மெச்ச வாழ்ந்தோம் ஒருநாள்!**

**தாரணியிலிருந்து யார் - என்ன**

**கொடுப்பார்கள் என்று ஏங்குகிறோம் இன்று**

**ஞாயிறாகத் திகழ்ந்தோம் அன்று**

**இருட்குகையில் சிக்கித் தவிக்கிறோம் இன்று!**

**அதற்காக “அந்த ஞாயிறு மறைந்துவிட்டது**

**என்று பொருள் அல்ல“**

**நமது கண் கொஞ்சும் மங்கலாகிவிட்டது**

**பழுதாகிவிட்டது - என்றுகூடக் கூறமாட்டோன்.**

**மங்கலாகிவிட்ட கண்களைக் கொஞ்சும்**

**துடைத்துவிட்டுக் கொண்டு பார்த்தால்**

**ஞாயிறு தெரியும்.**

**நாமும் ஏறிட்டுப் பார்த்து,**

**நெஞ்சு நிமிர்த்தி**

**“ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்“**

**என்று இளங்கோவடிகளைப் போலப் பாடிடலாம்!**

**தயங்காதே தமிழா! மயங்காதே தமிழா!”**

தமிழகம் இன்று தனது இயல்பான மாண்புகளை மறந்து துயில் கொள்கிறது என்று கூறமாட்டேன் மயங்கிக் கிடக்கிறது என்று கூற மாட்டேன். ஆனால் தயக்கம் இருக்கிறது என்றுதான் கூறுவேன்.

“நம்மால் முடியுமா?“ என்ற தயக்கம் நமக்கு இருக்கிறது. சேரன் வடநாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது “நம்மால் முடியுமா?” என்று அவன் தயங்கவில்லை.

சோழன் நாவாய்களைச் செலுத்தி அலைகடலுக்கு அப்பால் உள்ள நாடுகள் வென்றபோது ““நம்மால் முடியுமா?” என்று அவன் தயங்கவில்லை.

காட்டுப்புறத்தில் தினை பொறுக்கச் சென்ற தமிழ்ச் சீமாட்டி யொருத்தி மீது புலி பாய்ந்து வந்தபோது -“நம்மால் முடியுமா? என்று அவள் நினைக்கவில்லை. கையில் கிடைத்த முறத்தால் அடித்து விரட்டினாள்.

“காட்டுக்கு அரசன் ஆயிற்றே நாம்“ இவள் வீட்டுக்கு அரசிதானே வேலை எடுக்காமல் வாளை எடுக்காமல் குப்பை கொட்டும் முறத்தால் நம்மைத் தாக்க வருகிறாளே! இது தமிழ்நாடு அல்லவா? இது தமிழச்சியின் ஆற்றல் திறம் அல்லவா?“ என்று எண்ணி அந்தப் புலி வெட்கத்தால் ஓடியிருக்கும் என்றே கருதுகிறேன்.

அன்று தமிழ்ப் பெண்கள் புலியை முறத்தால் அடித்துத் துரத்தினர். இன்றும் தமிழ்ப் பெண்கள் நமது பகையை முறத்தால் அடித்து விரட்டத் தயார் எனினும், அந்த முறம் கிடைத்தால் அதை எங்கு விலைக்கு விற்றுக் காசாக்கலாம் எனக் கருதுகிற மனம்தான் நமக்குப் பகை.

முதலில் நமக்கு இருக்கிற தயக்கத்தைப் போக்கும் மாநாடுதான் இந்தப் பூம்புகர் மாநாடு!

“தயங்காதே தமிழா“ என்று அடிப்படைப் பாடத்தைத் தருகிற மாநாடு இது“

அந்தப் பாடத்தோடு, “மயங்காதே, தமிழா!““

என்ற பாடத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

மயக்கம் ஏனென்றால் பத்து நாள்களாக நாம் தமிழின் பெருமை கேட்டு அந்த மயக்கத்திலே இருக்கிறோம். ஆனால் இந்த மயக்கம் கெடுதல் செய்யாத மயக்கம்! தமிழன் ஒருவன்தான் இவ்விதம் கெடுதல் தராத மயக்கத்தை மொழிதரும் இன்பத்தால் மயக்கத்தைப் பெறுபவன்.

அந்த மயக்கத்திலிருந்தும் நாம் விடுபட்டாக வேண்டும் ஏனெனில் வேலை இருக்கிறது நிரவ்வொரு நாரூருக்கிறது ஒவ்வொருவருக்கும்! வேலை

**பறவை இனமும் தமிழினம் ஆகும்**

காடு திருத்திட வேண்டும் வளம் பெருக்கிட வேண்டும். வேலையற்றோருக்கு வேலை தந்தா அவர்களைச் செய்தொழில் நேர்த்தி கொண்டவர்களாக மாற்றிட வேண்டும்.

நிலத்தைத் தோண்டிக் கனிப்பொருள்களை எடுத்திட வேண்டும் சாதாரணப் பொருள்களை மட்டும் அல்லாமல் வரலாற்றுப் பொருள்களையும் தோண்டி எடுக்க வேண்டும்.

தூர்ந்து போன துறைமுகங்களைக் கண்டறிந்து, அவற்றின் எழில் முகத்தைச் சீர்திருத்தி அவற்றிலிருந்து தமிழ் தூத நாவாய்களை கப்பல்களைச் செலுத்தியவாறு தமிழகத்து மாலுமிகள் தமிழ்க் கவிதைகளை இசைத்துக்கொண்டு செல்ல வேண்டும்.

வானத்தில் பறக்கும் புள்ளினம், வேறு பக்கம் பறந்துகொண்டு இருப்பினும் இனிய கானத்தில் ஈர்க்கப்பட்டுக் கப்பல் இருக்கும் திசை நோக்கி வரும்.

கப்பல்மீது புள்ளினம் சிறகடித்துப் பறப்பது கப்பலுக்கு வானக் குடை விரித்ததுபோல் அக் காட்சி அமையவேண்டும்.

தமிழரின் இசையை அந்தப் புள்ளினம் கேட்டு, அவை பாடி, புள்ளினத்தின் பாட்டை மாலுமிகளாகிய இவர்கள் பாட வேண்டும்.

"பறவைகளாகிய எங்களுக்குத் தூய உள்ளம். ஆகவே நாங்களும் தமிழினம்தான். உயர உயரப் போகிறோம் - இதுதான் தமிழன் மாண்பு! ஆகவே நாங்களும் தமிழினம்" என்று கூறிட வேண்டும் அந்தப் பறவையினம்! இந்த நாளை எண்ணிப் பார்க்கிறோம்."

**கண்ணகியின் வீரம் எங்கே?**

எண்ணியது நடக்கும் நாம் திண்ணியர் ஆகப் பெற்றால் - என் வள்ளுவர் கூறுகிறார். வள்ளுவரின் வாய்மொழியை நாவலர் போ மிடுக்காகக் கூறிட என்னால் முடியாது. எனினும் பிழிந்து எடுத்த உங்கள்முன் தெரிவிக்கிறேன்.

உலகத்தில் நாம் எண்ணியது நடக்கும் - நாம் இண்ணியர் ஆகப் பெற்றால்!

"தயங்காதே தமிழா" மயங்காதே தமிழா! என்ற பாடங்களோடு. தமிழர் திண்ணியர் ஆகவும் வேண்டும். அவ்விதம் திண்ணியரானால் உலகில் அவர்கள் எடுக்கின்ற காரியங்கள் அனைத்தும் வெற்றியோடும் முடியும் என்ற நம்பிக்கையை - நாதம் நிறைந்த பாடத்தைப் பெற்றால். நம்மை உலகிற்கு யார் என்று அறிவிக்கும் நாளும் வரும்.

அந்த உறுதியைப் பெறப் பழம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் தலைவி கண்ணகியைப் பார்த்தால் தெரியும்!

நீதி கேட்டுக் கண்ணீர் உகுத்தவாறு கையில் காற்சிலம்போடு அரசவை சென்று வாயிலோனை அழைத்து - "அறிவு அறை போகிய அரசனே " என்று நெடுஞ்செழியப் பாண்டியனையே அறைகூவி அழைத்தாள் - உள்ள உறுதி இருந்த காரணத்தால்!

இத்தனைக்கும் அவள் கணவனை இழந்த காரிகைதான்! கணவன் இறந்தான் என்றதும் அழுது புலம்பாமல் - இன்னும் சிறிதுகாலம் பிழைத்திருக்கலாம் மறுவாழ்வு வாழலாம் என்று நினையாமல் நீதிக்குப் போராடிய சோழ வளநாட்டின் பத்தினித் தெய்வம் அல்லவா கண்ணகி!

கணவனை இழந்தபோதும் அவன் பெயருக்கு மட்டும் மாசு சூழ்ந்திட விடமாட்டேன் என வஞ்சினம் பூண்டு, அரசவை சென்று அறிவு அறை போகிய மன்னா! என்று முரசறைந்தானே - அந்தத் தமிழினத்தின் பத்தினித் தெய்வம் தரும் வீர உணர்ச்சி நாம் பெறாத காரணம் என்ன?

இதைத்தான் கடற்கரையில் கண்ணகியின் சிலை திறந்த காட்சியும் மாட்சியும் நமக்குப் போதிக்கின்றன. கணவனை இழந்த ஒரு பெண் அறிவைத் தவிர - வேறொன்றும் துணையில்லாதவள் - மன்னனையே பார்த்து “அறிவு அறை போகிய மன்னா! என்று அழைக்கும் அத்தாள் உணர்ச்சியை -எழுச்சியை -நாம் மீண்டும் பெறவேண்டும்.

நாம் உலகிற்குத் தர முடிந்தது இந்த அறிவுச் செல்வத்தைத்தான். அதுதான் கொடுக்க குறையாத செல்வம்!

இந்தப் பத்து நாட்களாகக் கண்ட எழில்மிகு காட்சிகளையும் உலாவையும் விழாவையும் அதனால் ஏற்பட்ட அகம் பொலிவையும் முகப்பொலிவையும் நல்லோர்க்கெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள்.

எல்லோருக்கும் இந்தத் தமிழ் மாநாடு தரும் இனிய செய்தியை எடுத்துச் சொல்லுங்கள். இதனைக் கேட்டு நல்லவர்கள் ஆகிறவர்களும் ஆகலாம்.

இத்தகைய நற்செய்தியை எடுத்துச் செல்லும் திருத்தூதர்களாய் நீங்கள் சென்று வாருங்கள் - வென்று வாருங்கள், தமிழகத்திற்குளம். சேர்த்துத் தாருங்கள்!

## 3. தொல்காப்பியப் பூங்கா எழுத்து - முதல் நூற்பா கட்டுரை

### கலைஞர் மு.கருணாநிதி

எம்மான்! தொல்காப்பியர் எழுத்து என ஓலையில் தலைப்பு எழுதிவிட்டு சிந்தனை உறக்கத்தில் ஆழ்ந்தார். அவர் எழுதப் போகும் இலக்கண கரு உள்ளத்திற்கான கனவில் மிதக்க இமைகள் மூடி இருந்தன. எனினும், நெடுநேரம் மழை நீரில் உரிய நெல்லுக்குள் இருந்து அரிசி தலை காட்டுவது போல வெள்ளை வெளிகள் இமைகளின் இடுக்குகளில் ஒளிகாட்டிய வண்ணம் இருந்தன. ஏட்டில் பதிந்து

உழவு செய்வதற்கு முன்பு கையில் இருந்த எழுத்தாணியை காத்திருக்கச் செய்துவிட்டு அவர் இதயத்தில் ஆழ உழுதிடும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. செதுக்கிய சிலை வடிக்க ஒளிரும் ஓவியம் திட்ட தூரிகையும் போல எழுத்து தேவை என்பது நூல் படைக்க எல்லா மொழிகளுக்கும் ஒலி தான் மூலம் என்பதாலும் மிகுதி. எழுத்ததிகாரம் என்பதாலும் முதல் நூற்பா எழுத்து என தொடங்குகிறது. தொல்காப்பியரைப் பின்பற்றி தான்போலும் - ஐயன் வள்ளுவரும் “அகர முதல எழுத்தெல்லாம்“ என்று திருக்குறளை எழுத்தில் தொடங்கி இருக்கிறார் தமிழ் மொழியில் உள்ள பல்லாயிரக்கணக்கான சொற்களை அலசி ஆய்ந்து பார்க்கும் போது அவை அனைத்தும் 30 எழுத்துகளில் எழுத்துக்களை அடக்கிவிடும் என்ற வரம்பு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வழி வழியாக வந்த ஒன்றாகும். அதனால் தான் காப்பியரின் அந்த கனவில் ஒலி எழுப்பியவாறு எழுத்துக்கள் அணிவகுத்து வீர நடை போட்டு வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு முதல் எழுத்தும் அவரும் நடந்து வந்து வணக்கம் தெரிவித்து விட்டு வரிசையில் நின்றன. ஒரு முன் வரிசை அமைந்தது பின் வரிசையில் இக், ங், இச்சு, இட், இன்னு, இத்துகள் அணிவகுத்தன. அப்போது சுவர் ஓரமாக ஒரு நிழல் தென்பட்டது அதைத் தொடர்ந்து. இன்னொரு நிழலும் தென்பட்டது அந்த இரு நிழல்கள் எழுப்பிய ஒலி சற்று குறுகியதாகக் கேட்டமையால் அந்த வேறுபாட்டை உணர்ந்த தொல்காப்பியரின் விழி திறந்து நோக்கினார். ஒரு நிழல் என் பெயர் இகரம் என்றது இன்னொரு நிழல் என் பெயர் உகரம் என்றது. தொல்காப்பியர் அந்த நிழல்களைப் பார்த்து நீங்கள் குற்றியலிகரம் குற்றியலுகரம் என்ற வரிசையில் தான் இடம்பெறுவீர்கள்

உங்களை முதல் எழுத்துக்கள் 30 வரிசையில் வைக்க முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அப்போது, கையில் ஒரு கம்புடன் ஒரு புதுமையான எழுத்து உரு அங்கே தோன்றி இந்த 30 எண்ணை இணைக்க ஒப்புகிறீர்களா என்று கேட்டது? உடனே தொல்காப்பியர் எண்ணே என்னை என்ன மிரட்டுகிறாயா? நீ ஆயுதமேந்தி ஆய்த எழுத்தாக வந்தால் நான் அஞ்சி நடுங்கி உன்னை முதலெழுத்துகள் வரிசையில் நிற்க வைத்து விடுவேன் என்று நினைத்தாயா? அவரது சீற்றம் உணர்ந்த ஆயுத எழுத்து ஐயனே! என்னை தங்கள் விருப்பம்போல் அமர

வைக்கலாம். முதல் எழுத்து வரிசையில் எனக்கு இடமளிக்காவிடினும் தேவைப்படும் முக்கியமான சமயங்களில் நான் உதவிக்கு வருவேன் என்று அடக்கமாகக் கூறியது. தொல்காப்பியர் கேலியாக சிரித்துக் கொண்டு எழுத்ததிகாரத்தின் முதல் நூற்பாவை எழுதி முடித்துவிட்டு நீ எனக்கு உதவிட வருகிறேன் என்கிறாய் நல்ல வேடிக்கை என்று புன்னகை புரிந்தவாறு கூறினார். ஆமாம், தாங்கள் எழுதிய முதல் நூற்பாவிலேயே எனக்கு இடம் கொடுத்து விட்டீர்கள். என் திறமையைப் பார்த்தீர்களா! என்று ஆயுத எழுத்து மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. தொல்காப்பியர் அவர் எழுதியதை திரும்ப படித்துப் பார்த்தார் "எழுத்தெனப்படுப அகர முதல னகர இறுவாய் மு.ஃ.பது என்ப சார்ந்து வரல் மரபின் மூன்றாலங் கடையே" முப்பது என்னும் தொடரில் ஆயுத எழுத்து வந்து அமர்ந்து கொண்டதை அவரும் வியப்புடன் நோக்கி நிறைவான மகிழ்ச்சி கொண்டார். தமிழ் எழுத்துக்கள் அ முதல் ன இறுதியாக 30 எழுத்துக்கள் எனக் கூறுவர். சார்பெழுத்துகள் ஆன குறுகிய ஒலியை உடைய இகரம் குறுகிய ஒலியை உடைய உகரம் ஆயுத எழுத்து ஆகிய மூன்றும் இல்லாமல் 30 எழுத்துக்கள் அவை தான் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆயுதம் என்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோர் அன்ன, சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே அல்லாத இடத்து குறிப்பு மூன்று எழுத்துக்கள் இல்லாமல் 30 எழுத்துக்கள் தமிழில் முதல் எழுத்துக்கள் என்பதால் அவ்வாறு விடப்படும் அந்த மூன்று எழுத்துக்களை குற்றியலுகரம் என்றும் குற்றியலிகரம் என்றும் ஆயுத எழுத்து என்றும் இந்த நூற்பா குறிப்பிடுகின்றது.

## நாடகம் - திரைத்தமிழ்

### 1. வேலைக்காரி - திரைப்படம்

**கதாபாத்திரங்கள்**

1. வேதாசல முதலியார் – வட்டியூர் ஜமீன்தார்
2. சரசா – வேதாசல முதலியாரின் மகள்
3. மூர்த்தி – வேதாசல முதலியாரின் மகன்

4. அமிர்தம் – வேலைக்காரி

5. சொக்கன் – வேலைக்காரன்

6. முருகேசன் – அமிர்தத்தின் தந்தை

7. சுந்தரம்பிள்ளை – அவ்வூரில் வாழ்பவர்

8. ஆனந்தன் – சுந்தரம்பிள்ளையின் மகன்

9. மணி – ஆனந்தனின் நண்பன்

10. முத்தாயி – அமிர்தத்தின் அம்மா

11. பாக்கியம் – 55 வயது மாப்பிள்ளையின் தங்கச்சி

**கதைச் சுருக்கம்**

வேலைக்காரி 1949 ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம். 1947 ஆம் ஆண்டு அண்ணாவால் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமிக்காக எழுதப்பட்ட இந்த நாடகம் பிற்காலத்தில் திரைப்படமாகி இருக்கிறது. 1844 ஆம் ஆண்டு வெளியான, அலெக்ஸாண்டர் டுமாஸ் (Alexandre Dumas) எழுதிய புதினமான தி கவுண்ட் ஆ.்.ப் மான்டே கிறிஸ்டோ (The Count of Monte Cristo) விலிருந்து இப்படத்தின் கரு உருவாகி இருக்கிறது.

A. S. A. சாமி என்னும் அருள் சூசை ஆரோக்கிய சாமியால் இயக்கப்பட்டு, ஜூபிடர் பிக்சர்ஸின் M. சோமசுந்தரம் மூலம் தயாரிக்கப் பட்ட இப்படம் பெரு வெற்றி பெற்று இருக்கிறது.

திரைப்படம் பிப்ரவரி 1949 இல் வெளியிடப்பட்டது. அதாவது ஒரே மாதத்தில் அண்ணாவின் நல்லதம்பி, வேலைக்காரி என இரு திரைப்படங்கள் வெளியாகி உள்ளன. இப்படம் தெலுங்கில் சந்தோஷம் எனவும், இந்தியில் நயா ஆத்மி எனவும், கன்னடத்தில் மல்லி மதுவே எனவும் மறு ஆக்கம் செய்யப்பட்டது.

வேதாச்சலம் பணக்காரர். சரசாவும் மூர்த்தியும் அவரது பிள்ளைகள். மூர்த்தி நல்லவர். சரசா ஆணவம் கொண்டவர். இவர்களின் வீட்டுப் பணிப்பெண் அமிர்தம். அமிர்தத்தின் தந்தை முருகேசன், வேதாச்சலம் குடும்பத்திற்கு நம்பிக்கையான வேலையாள்.

முருகேசன், அமிர்தத்திற்கு மாப்பிள்ளை பார்த்திருக்கிறார். மாப்பிள்ளைக்கு வசதி உண்டு ஆனால், வயதானவர். அதனால் அமிர்தம் மறுக்கிறார். ஆனால், முதலாளி, அவரது மகள் வயதானால் என்ன எனக் கேட்கிறார்கள். மூர்த்தி, அமிர்தத்திற்குப் பரிந்து பேசுகிறார். மாப்பிள்ளையின் தம்பியும் தங்கையும் பெண் பார்க்க வருகிறார்கள். மூர்த்தி கொடுத்த யோசனையின் பேரில், அமிர்தம், தனது முகத்தை அலங்கோலம் செய்துகொள்கிறார். மாப்பிள்ளையின் அக்கா, இதுவா பெண் எனக் கோபித்து செல்கிறார். திருமணம் நின்று போகிறது.

மூர்த்தி, அமிர்தத்திற்கு வேறு யார் மீதும் விருப்பம் இருக்கிறதா எனக் கேட்க, அமிர்தம் இல்லை என்கிறார். மூர்த்தி, தனது காதலைச் சொல்கிறார். மூர்த்தியும் அமிர்தமும் காதலிக்கிறார்கள்.

இன்னொரு பக்கம், வேதாச்சலத்திடம் சுந்தரம் கடன் வாங்கியிருக்கிறார். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத அவரை வேதாச்சலம் அவமானப்படுத்துகிறார். இதனால், சுந்தரம் தற்கொலை செய்துகொள்கிறார். அதே நாள், மிகுந்த பணத்துடன் வரும், சுந்தரத்தின் மகன் ஆனந்தன், தூக்கில் தனது தந்தையைப் பார்த்து, வேதாச்சலத்தைக் கொல்வதற்காகக் கத்தியைக் கூர்மையாக்கும் போது, அவரது நண்பன் மணி, பழிவாங்க கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு எனச் சொல்கிறார்.

ஆனந்தன், வேதாச்சலத்தைப் பழிவாங்க காளி தேவிதான் உதவ முடியும் என நினைத்து கோயிலில் சென்று வேண்டுகிறார். ஆனால், வேதாச்சலத்திடம் மேலும் மேலும் செல்வம் குவிகிறது. இதனால் கோபம் கொண்ட ஆனந்தன், தேவியின் சிலை முன் நின்று திட்டுகிறார். இதனால் கோபம் கொண்ட மக்கள் அவரைத் துரத்துகின்றனர். ஆனந்தன் ஓடுகிறார். அப்போது அந்த வழியாக மணி வருகிறார்.

இருவரும் ஓர் இடத்தில் ஒளிந்து இருக்கிறார்கள். அங்கு ஒரு மூட்டையில் இறந்த உடல் ஒன்று இருக்கிறது. பார்த்தால், அந்த ஆள் ஆனந்தன் மாதிரியே இருக்கிறார். கூடவே அவரது நாட்குறிப்பும் உள்ளது. அவர் பெயர் பரமானந்தம். பெரிய பணக்காரர்.

ஆனந்தன், பரமானந்தம் வேடத்தில் அவரது ஊருக்குச் செல்கிறார். கூடவே மணியும் செல்கிறார். பணக்காரர் என நம்பி, அவருக்கு சரசுவை, அவரது அப்பா வேதாச்சலம் மணமுடித்து வைக்கிறார். ஆனந்தன் மனைவியைக் கொடுமைப்படுத்துகிறார். மாமனாரின் நற்பெயரைக் கெடுக்கிறார். மூர்த்திக்கும், மாமனாருக்கும் இடையே பிளவை ஏற்படுத்துகிறார். இதனால் மூர்த்தி வீட்டைவிட்டு வெளியேறுகிறார். சென்னை சென்று, தனது நண்பரின் உதவியைப் பெற்ற பிறகு அமிர்தத்தைத் திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து செல்கிறார்.

அமிர்தத்தை கிராமத்திற்கு அழைத்துச் சென்று யாருக்காவது மணமுடிக்கலாம் என அவரது அப்பா திட்டமிடுகிறார். அதனால், அமிர்தம் வீட்டை விட்டு வெளியேறுகிறார். சென்னை சென்ற மூர்த்தியிடம் பணம் இல்லை எனத் தெரிந்ததும், நண்பர்கள் நிராகரிக்கிறார்கள்.

மகளின் இறப்பினால் மனப்பிறழ்விற்கு ஆளான பணக்காரரான பாலு, அமிர்தத்தைத் தன் மகள் என நினைக்கிறார். அமிர்தத்தின் உதவியால் குணம் பெற்று அவரைத் தன் வீட்டில் வாழச் செய்கிறார்.

அமிர்தம் இறந்துவிட்டதாக மூர்த்தி தவறான தகவலைப் பெறுகிறார். இதனால் அமைதி பெற, யோகி நடத்தும் ஆசிரமம் செல்கிறார். யோகியின் மோசடிகளைக் கண்டுபிடிக்கிறார். அதனால் ஏற்பட்ட கைகலப்பில், யோகி இறந்துவிடுகிறார். மூர்த்தி கொலைக் குற்றம் சாட்டப்படுகிறார். ஆனந்தன் வட இந்திய வழக்கறிஞராக மாறுவேடத்தில் வந்து வழக்கை நடத்துகிறார். யோகி காவல்துறையினரால் தேடப்படும் குற்றவாளி என்பதை நிறுவுகிறார். அது கொலை அல்ல தற்காப்புக்காக நடந்தது என்கிறார். நீதிமன்றம் மூர்த்தியை விடுவிக்கிறது.

ஆனந்தன் தனது கட்டணமாக மூர்த்தி பாலுவின் மகளைத் திருமணம் செய்ய வேண்டும் என்கிறார். வேறு பெயரில் இருக்கும் அமிர்தம், மூர்த்தி திருமணம்

நடைபெறுகிறது. ஆனந்தன், வேதாச்சலத்திடம், மூர்த்தி ஒரு வேலைக்காரனின் மகளான அமிர்தத்தை மணந்துகொண்டார் என்பதையும், தான் யார் என்பதையும் வெளிப்படுத்துகிறார். வேதாச்சலம் தன் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்கிறார். ‘‘ஒன்றே குலம் ஒருவனே தேவன் என உலகிற்கு எடுத்துச் சொல்வேன்’’ என்பதுடன் திரைப்படம் நிறைவு பெறுகிறது.

திரைப்படத்தில் லலிதா பத்மினி ஆடும் ஓரிடம் தனிலே பாடல் மிகவும் புகழ் பெற்ற பாடல்.

**ஓரிடம் தனிலே – நிலை**
**இல்லாதுலகினிலே**
**உருண்டோடிடும் பணம் காசெனும்**
**உருவமான பொருளே**
**ஊரும் பேரும் தெரியாதவரை**
**உயர்ந்தோராக்கிடுமே**
**காசு நல்ல காரியம் செய்யாது**
**கண்மூடி தூங்க கருணை காட்டாது**
**களவு கொலையும் உண்டாக்கும்**
**கவலை மிகவும் சேர்க்கும்**
**காமுறு இன்பம் சொந்தம்**
**எல்லாமே நீக்கும்**

‘குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு, வளைந்து வளைந்து நடப்பது போலல்லவா வளைந்து வளைந்து பேசுகிறாய் என்கிற கேள்விக்கு மனதில் பாரம் இருந்தால் நாக்கு வளையத்தானே செய்யும்’ என்கிற பதில் போன்ற பல வரிகள் அண்ணாவின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டுகள்.

கதையில் தந்தையைப் பழிவாங்க மகளைத் துன்புறுத்துவது என்பது எந்த வகையான செயல் எனப் புரியவில்லை. இதை நாயகன் செய்வது என்பது எனக்கு ஏற்பில்லாததாகத் தோன்றியது.

நம்பியார் நல்லவராக வரும் சில படங்களில் இதுவும் ஒன்று. மூர்த்தியாக அவ்வளவு பாந்தமாகப் பொருந்துகிறார். அவர் எப்போது வில்லன் என்கிற முத்திரை குத்தப்பட்டார் எனத் தெரியவில்லை. வில்லன் என்றாலே அவன் பெரிய நம்பியார் என்று சொல்லும் சொல்லாடல் மக்களிடம் இருக்கும் அளவிற்கு அவர் வில்லனாகவே பார்க்கப்படுகிறார். நாயகனாகவும் வருவதற்கான முழுத்தகுதியும் பெற்றவர் என இதைப் போன்ற சில திரைப்படங்கள் சொல்கின்றன. யோகியாகவும் அவரே வருகிறார். இருவரும் ஒருவருக்கு இன்னொருவர் சண்டை போட்டு ஒருவர் இறக்கிறார்.

ஆனந்தன் வடநாட்டு வக்கீலாக வரும்போது மாறுவேடத்திற்காக தாடி மீசையுடன் மச்சம் வைத்து இருக்கிறார். மச்சம் என்பதுதான் மாறுவேடத்தில் அடையாளம் என அப்போதிருந்தே இருந்து இருக்கிறது.

இணையத்தில் திரைப்படம் இருக்கிறது என்றாலும், அதன் பிரதி அவ்வளவு தரமாக இல்லை. சிரமப்படுத்தான் பார்க்க வேண்டி உள்ளது. சிறிது புதுப்பித்தால் நன்றாக இருக்கும்.

## 2. இராஜா ராணி - சாக்ரடீஸ்

### ஓரங்க நாடகம்

இராஜா ராணி 1956 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். ஏ. பீம்சிங் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் சிவாஜி கணேசன், பத்மினி, எஸ். எஸ். ராஜேந்திரன் மற்றும் பலரும் நடித்துள்ளனர். மு. கருணாநிதி திரைக்கதை வசனம் எழுதிய இப்படத்தில் கருணாநிதியால் எழுதப்பட்ட சேரன் செங்குட்டுவன், சாக்ரடீஸ் போன்ற பல ஓரங்க நாடகங்கள் இடம்பெற்றன.

**கதைச் சுருக்கம்**

இராஜா ராணி திரைப்படத்தில் கிரேக்க ஞானி சாக்ரடீஸ் ஓரங்க நாடகமாக இடம் பெற்றிருக்கிறது. சாக்ரடீஸாக சிவாஜி கணேசன் நடித்திருப்பார் கிரேக்க வீதியொன்றில் சாக்ரடீஸ் “உன்னையே நீ அறிவாய்“ என்று அறிவுரை ஆற்றுகின்றார். அப்போது அனிடெஸ், மெலிடெஸ் இருவரும் சாக்ரடீஸை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துகின்றனர் நீதிபதி, சாக்ரடீஸ் விஷம் தின்று உயிர்விட வேண்டும் என மரண தண்டனை விதிக்கிறார் சிறையில் இருக்கும் சாக்ரடீஸ் தம் மனைவியை எண்ணிப் பேசுகிறார். கிரிட்டோ என்பவர் சாக்ரடீஸை எண்ணி வருந்துகிறர். காவலன் விஷக்கிண்ணத்துடன் வருகிறான். விஷமருந்தி சாகும்முறை பற்றி காவலன் கூற, சாக்ரடீஸ் கிண்ணத்தை வாங்குகிறார். கிரிட்டோ சிறிது நேரம் கழித்துக்கூட சாக்ரடீஸ் விஷமருந்தலாம் எனக் கூறுகிறார். அது அற்ப ஆசை என்று கூற, சாக்ரடீஸின் உடல் எப்படி அடக்கம் செய்ய வேண்டும் என கிரிட்டோ கேட்க, சாக்ரடீஸ் விளக்கமளிக்கிறார்.

**முதல் காட்சி**

**சாக்ரடீஸ்**

உன்னையே நீ அறிவாய்!!

உன்னையே நீ அறிவாய்!!

கிரேக்கத்தின் கீர்த்தி புவனம் அறியாததல்ல

அதற்காக இங்கே விழுந்திருக்கும் கீறல்களை மறைத்திட முயலுவது புண்ணுக்கு புனுகு தடவு வேலையை போன்றது

அதனால் தான் தோழர்களே சிந்திக்க கற்றுகொள்ளுங்கள் என்று சிரம் தாழ்த்தி உங்களை அழைக்கிறேன்

அறிவு! அறிவு! அகிலத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அதை தேடி பெறுவதற்காக உங்களை அழைக்கிறேன்

உன்னையே நீ அறிவாய்!!

இந்த உபதேசத்தின் உண்மைகளை உணர்வதர்க்காகத்தான் என் உயிரினும் இனியவர்களே உங்களையெல்லாம் அழைக்கிறேன்

ஏற்றமிகு ஏதன்சு நகர எழில்மிக்க வாலிபர்களே!

நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமிழ்விக்க இதோ சாக்ரடீஸ் அழைக்கிறேன் ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்!

வீரம் விலை போகாது விவேகம் துணைக்கு வராவிட்டால்

தீட்டிய வாளும் தினவெடுத்த தோள்களிலே தூக்கிய ஈட்டியும் மட்டும் போதாது தீரர்களே

இதோ நான் தரும் அறிவாயுதத்தையும் எடுத்து கொள்ளுங்கள்

அறிவாயுதம்! அறிவாயுதம்! அகிலத்தின் அணையாத ஜோதி

**மெலிடஸ்**

ஹஹ ஹஹ.. அறிவாயுதமாம் அனைத்துலகும் அடிபணியும் அஸ்திரமாம்

குமுறும் எரிமலை கொந்தளிக்கும் கடல் இவைகளை விட பயங்கரமானவன் **சாக்ரடீஸ்**

அவன் தரும் அறிவாயுதம் கிரேக்கத்திலே தயாரகுமானால் நாமெல்லாம் தலை தூக்கவே முடியாது அணிடஸ்

என்ன சொல்கிறீர்

**அணிடஸ்**

மெலிடஸ் நாம் கீறிய கோட்டை தாண்டாத இந்த கிரேக்க மக்களுக்கு அந்த கிழவன் அறிவுக்கண் வழங்குவதற்குள் அவனை நாம் அழித்துவிட வேண்டும்

**மெலிடஸ்**

ஆமாம் அது தான் சரி

சாக்ரடீஸ் நீ கைது செய்யப்படுகிறாய் ம்..

## இரண்டாம் காட்சி

**மெலிடஸ்**

சாக்ரடீஸ்

**அணிடஸ்**

நாட்டிலே நடமாடக்குடாத ஒரு ஆத்மா

ஜனநாயக அரசாங்கத்தை குறைகூறும் அந்த ஐந்து உடல் முழுதும் விஷம் கொண்டது

கேட்டார் பிணிக்கும் சொற்களால் கேளாரும் வேட்பமொழி வார்த்தைகளால் கேடு விளையும் கருத்துக்களை அள்ளி வழங்கி அரசாங்கத்துக்கு விரோதமாக ஆண்டவனுக்கு விரோதமாக சட்டத்துக்கு விரோதமாக இளைஞர்களை தூண்டிவிடும் இழிகுண கிழவன்

**சாக்ரடீஸ்**

ம்ம்ம்ம்....

**நீதிபதி**

என்ன சிரிப்பு!! என்ன காரணம்!!

**சாக்ரடீஸ்**

ஒன்றுமில்லை தலைவா ஒன்றுமில்லை

ஆத்திரத்திலே அணிடஸ் தன்னை மறந்து என்னை பார்த்து கிழவன் என்று கேலி செய்கிறான் ம்ம்ம்ம் கேலி செய்கிறான் ம்ம்ம் அதை நினைத்தேன் சிரித்தேன்

கடல் நுரை போல் நரைத்துவிட்ட தலை எனக்கும் அணிடசுக்கும் இல்லையா சகோதரர்களே?

என்ன அணிடஸ் உண்மை தானே?

**மெலிடஸ்**

சாக்ரடீஸ் வழக்கும் விசாரணையும் உங்கள் இருவரின் தலையை பற்றியதல்ல அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்

ம்ம்ம் மிகவும் நன்றி மெலிடஸ் மிகவும் நன்றி

ஆனால் ஒன்று எண்சான் உடம்புக்கு தலையே பிரதானம் போல் இந்த வழக்கிற்கும் தலை தான் பிரதானம்

என் தலையிலே இருந்து சுடர்விட்டு கிளம்பும் அறிவு

அதை அழிக்க கவிஞனாகிய உன் தலையிலே இருந்து புறப்படும் அர்த்தமற்ற கற்பனைகள் அரசியல்வாதி அனிடஸின் தலையிலே இருந்து பீறிட்டெழும் அதிகார ஆணவம்

இந்த மூன்றுக்கும் இடையே நடக்கும் மும்முனை போராட்டம் அதன் விளைவு தான் மெலிடஸ் இந்த வழக்கு

**மெலிடஸ்**

பார்த்தீர்களா!! சட்டத்தையும் சபையையும் அவமதிக்கிறான் இப்படித்தான் இளைஞர்களையெல்லாம் கெடுத்தான்

**சாக்ரடீஸ்**

ஒரு கிழவன் எப்படியப்பா இளைஞர்களை கெடுக்க முடியும்

நான் என்ன வாலிபருக்கு வலைவீசும் விலைமாதா

பருவ விருதளிக்கும் பாவையா

**மெலிடஸ்**

ம் மாதரிடமில்லாத மயக்குமொழி

வாலிபருக்கு வலைவீசும் வனிதையரும் பெற்றிடாத வசீகர சொல்லலங்காரம் வார்த்தை ஜாலம் அடுக்கு தொடர் இப்படி பல மாயங்கள் கற்றவர் நீர்

**சாக்ரடீஸ்**

மந்திரவாதி என்றுகூட சொல்வாய்

அன்புள்ள இளைஞனே ஏதன்சு நகரிலே நான் ஒருவன் மட்டும் தான் இளைஞர்களை கெடுக்கிறேன் அப்படித்தானே

**மெலிடஸ்**

ஆமாம்

**சாக்ரடீஸ்**

நீ கெடுக்கவில்லை

**மெலிடஸ்**

இல்லை

**சாக்ரடீஸ்**

அணிடஸ்

**மெலிடஸ்**

இல்லை

**சாக்ரடீஸ்**

டித்திலைகன்

**மெலிடஸ்**

ஹஇல்லை

**சாக்ரடீஸ்**

இந்த நீதிபதி

**மெலிடஸ்**

இல்லை

**சாக்ரடீஸ்**

யாருமே இளைஞர்களை கெடுக்கவில்லை எல்லோருமே இளைஞர்களுக்கு நன்மையே செய்கிறார்கள் என்னை தவிரஅப்படித்தானே

**மெலிடஸ்**

ஆமாம் ஆமாம்

சாக்ரடீஸ்

ஹஹஹா அத்தனை பேரும் ஏன் ஏதன்சு நகரமே அவர்களை திருத்தும்போது நான் ஒருவன் எப்படியப்பா அவர்களுடைய பாதையை திருப்ப முடியும்?

**அணிடஸ்**

ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்

**சாக்ரடீஸ்**

ஏன் இப்படியும் சொல்லலாமே இருண்ட வீட்டிற்க்கு ஒரு விளக்கு

என்ன மெலிடஸ் திகைக்கிறாய்

சபையோர்களே! வாலிபர்கள் என்னை சுற்றி வானம்பாடிகள் போல் வட்டமிட காரணம் என்னுடைய வார்த்தை அலங்காரமல்ல வளம் குறையா கருத்துக்கள் தரம் குறையா கொள்கைகள் இந்த தரணிக்கு தேவையான தங்கம்நிகர் எண்ணங்கள் ம்ம்ம்...

அழகுமொழியால் அலங்கார அடுக்குகளால் அரும்பு உள்ளங்களை மயக்குகிறேன் என்று சொல்கிறார்களே அவர்களை நான் கேட்கிறேன்!

அந்த மொழி எனக்குமட்டும் சொந்தமல்லவே

அவர்கள் அதை பேசக்கூடாது என்று நான் தடை போட்டது கிடையாதே

பேசிப்பார்க்கட்டுமே அவர்களும் ஆம் பேசித் தோற்றவர்கள் ம் பேசி தோற்றவர்கள்

**நீதிபதி**

சாக்ரடீஸ் பேச்சை நிறுத்தும் விளக்கம் தேவையில்லை

இந்த நீதிமன்றத்தின் அதிகப்படியான உறுப்பினர்களின் வாக்களிப்பின்படி நீர் விஷம் சாப்பிட்டு மரணதண்டனைக்கு ஆளாக வேண்டுமென்று தீர்ப்பளிக்கிறேன்

## மூன்றாம் காட்சி

**சாக்ரடீஸ்**

பார்த்தாயா பயனற்ற தத்துவ விசாரணையில் காலத்தை கழிக்கிறேன்

வீண் வாதம் புரிந்து தொல்லை படுகிறேன் என்றெல்லாம் கோபித்து கொண்டாயே

இப்போது பார் உனது கணவன் அகிலம் புகழும் வீரனாக தேசம் புகழும் தியாகியாக மாறிவிட்டான்

அன்புள்ள எக்ஸ்சேந்துபி நீ மிகவும் பாக்கியசாலி

பணபலம் படைபலம் அத்தனை பலத்தையும் எதிர்த்து நின்று யாருக்குமே பணியாத பெருமையோடு கடைசியாக விழிகளை மூடப்போகும் இந்த கர்ம வீரனுக்கு நீ மனைவி ஹஹஹா...

குழந்தைகளை ஜாக்கிரதையாக பார்த்துகொள்

அவர்கள் பெரியவர்களாக மாறியதும் நேர்மை தவறி நடப்பார்களேயானால் நான் உங்களை திருத்த முயன்றதுபோலவே நீங்களும் அவர்களை திருத்த முயலுங்கள்

நேரமாகிறது காவலர்கள் கோபிப்பார்கள் நீ போய் வா

கிரீடோ இவர்களை அனுப்பி வை

கிரீடோ உனக்கு தெரியுமல்லவா இன்றோடு முப்பதுநாள் சிறைவாசம் முடிந்து நீதிமன்றத்தின் உத்தரவுப்படி விஷம் சாப்பிட்டு சாக வேண்டிய நாள் இதுதான்

**கிரீடோ**

அருமை நண்பா

**சாக்ரடீஸ்**

அழாதே அதோ வந்துவிட்டது அமுதம்

சிறைக்காவலா இதை என்ன செய்யவேண்டும் முறைகளை சொல்

**சிறைக்காவலன்**

பெரியவரே விஷத்தை முழுவதும் குடிக்க வேண்டும்

பிறகு இங்குமங்கும் நடந்துகொண்டே இருக்க வேண்டும்

கால்கள் மறத்து போகும் வரையிலே அப்படியே நடக்க வேண்டும்

பிறகு உட்காரலாம் கொஞ்சம் கொஞ்சமாக உடம்பு ஜில்லிட்டு கொண்டே வரும் பிறகு படுத்துவிட்டால்

**சாக்ரடீஸ்**

ஆனந்தமான நித்திரை

கனவுமங்கையாலும் கலைக்க முடியாத நித்திரை

சிறைக்காவலா கொடு இப்படி

**கிரீடோ**

நண்பா சிறிது நேரம் பொறுத்துக்கூட சாப்பிடலாம்

சிறைச்சாலையிலே அதற்க்கு அனுமதி உண்டு

**சாக்ரடீஸ்**

ம்ம்ம்... ஹ ஹ.. கிரீடோ கிரீடோ உனக்கு மிகமிக அற்ப ஆசை மிகமிக அற்ப ஆசை

இந்த விஷத்தை நான் இரண்டு நாழிகை கழித்து சாப்பிடுவதாக வைத்து கொள்

அதற்குள் என் இருதயம் வெடித்து நான் இறந்தது விட்டால் பிறகு கிரேக்க நாட்டு நீதிமன்றத்தின் தண்டனையை யார் நிறைவேற்றது?

புதிய சாக்ரடீஸ்ஆ பிறந்து வரப்போகிறான் கூடாது கூடாது

இப்போதே சாப்பிட்டு விடுகிறேன்

கிரீடோ இந்த விஷம் அழிக்கப்போவது என்னையல்ல இந்த உடலைத்தான்

**கிரீடோ**

ஏதன்சின் எழுச்சிமிக்க சிங்கமே எங்கள் தங்கமே கிரேக்க பெரியாரே

உம்மையும் எம்மையும் இந்த விஷம் பிரிக்கபோகிறதா ஐயகோ நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே

நண்பா எனக்கு கடைசியாக ஏதாவது சொல்லு

**சாக்ரடீஸ்**

புதிதாக என்ன சொல்லப்போகிறேன்

உன்னையே நீ எண்ணி பார்!

எதையும் எதற்க்காக? ஏன்? எப்படி? என்று கேள்

அப்படி கேட்டால்தான் இந்த சிலைவடிக்கும் இந்த சிற்பி சிந்த்தனை சிற்பியாக மாறினேன்

அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்

எவர் சொன்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப்பார்பாய்

அதைத்தான் உனக்கும் இந்த நாட்டுக்கும் நான் சொல்ல விரும்புவது

விஷம் அழைக்கிறது என்னை

இந்தக்கிழவன் கிரேக்க நாட்டு இளைஞர்களை கெடுத்ததாக யாராவது உண்மையாக உளமாக நம்பினால் அவர்கள் என்னை மன்னிக்கட்டும் அவர்கள் என்னை மன்னிக்கட்டும்

வருகிறேன் வணக்கம்! ஏ ஜகமே! சிந்திக்க தவறாதே!

உன்னையே நீ அறிவாய்! உன்னையே நீ அறிவாய்! வருகிறேன்

## இதழியல் தமிழ் முரசொலி கடிதம்

### 1. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்

உடன்பிறப்பே,

ஓய்வுக்காக வந்திருக்கிறேன் என்று நீ எண்ணிக் கொண்டிருப்பாய். ஓய்வுக்காக அல்ல் அல்ல! ஒப்பற்ற முறையில் நடக்கவிருக் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்குக் கடிதங்களைக் கொண் ஒரு தோரணவாயில் அமைக்கின்ற ஆர்வத்தோடுதான், இந்த ஓய்வை பயன்படுத்திக்கொள்கிறேன். தோரணவாயில் அமைக்க ந கொட்டிவைக்கும் கற்களின் குவியல் இது!

அறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டும் தமிழகத்தி முதலமைச்சராக முன்னின்று நடத்திய இரண்டாம் உலகத் தட மாநாட்டினையும் சேர்த்து, இதுவரை உலகத் தமிழ் மாநாடு எ பெயரில் எட்டு மாநாடுகள் நடந்தேறியுள்ளன.

சென்னையில் சிறப்புறவும், கண்டோர் வியப்புறவும் நடைபெ இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தமிழர்களின் உள்ள உணர்விலு அறிவுத் திறனிலும் விதைத்த மிகப்பெரிய மாற்றத்தின் காரணமா அறிஞர் அண்ணா அவர்கள்,

திராவிடர்தம் மொழியாம் செந்தமிழ் மொழியின் மேன்மைய மேம்பாடும் சீரும் சிறப்பும் உலகப் பார்வையில் சிறப்பிட பெற்றுவருகின்றன.

தமிழின் சிறப்பியல்புகளை செம்மொழிக்கேற்ற சீரி இயல்புகளை மொழிவல்லார் பலரும் மெத்தவு மெச்சிடுகின்றனர்.

தமிழ்மொழி, காலத்தால் மிகமிகத் தொன்மையானது இலக்கண இலக்கிய விதிகளையும் வரைமுறைகளையு செவ்வனே பெற்றுள்ளது. தூயது தூய்மையானது. துல்லியமா

எண்ணங்களை வெளிப்படுத்திடும் சொல்வளம் மிகவும் படைத்தது. உணர்வுகளை நுட்பமாகவும், நுண்ணியமாகவும், நேர்மையாகவும், நேர்த்தியாகவும் ஊட்டிடும் நயம் மெத்தவும் மிக்கது. எண்ணங்களை, ஏற்பாடுகளை - கொள்கை கோட்பாடுகளை வழுவாமல், பிறழாமல் குறித்துணர்த்திக் கூறிடும் சொல்லாட்சியும் உடைத்தானது.

சூடு, சுவை, சூட்சுமம், மதிநுட்பம் வாய்ந்த குறிப்புரை, விரிவுரை, விளக்கவுரை அத்துணையும் ஆற்றிடவல்ல சொல்லாரம் தமிழ்க் களஞ்சியத்தில் ஏராளம், ஏராளம், மிக மிக ஏராளம் எடுக்க எடுக்கக் குறையாதது, கொடுக்கக் கொடுக்க மாளாதது நம் தமிழ்மொழியின் வளம் - வல்லமை.

தமிழ் இனியது, அழகியது, ஆற்றல் மிக்கது, வற்றாத ஊற்றான சொற்செறிவும் பொருட்செறிவும் நாகரிக நயமும் நேர்த்தியும் கொண்டது. அது தொன்மையானது, தூயது! என்றும் அழியாத வியத்தகு சீரிளமைத் திறம் உடைத்தானது என்பதெல்லாம் உண்மை-வெறும் புகழ்ச்சியல்ல என்பதை ஊரும் உலகும் ஒப்பிடத் தொடங்கியுள்ள காலக்கட்டத்தில் நாம் வாழ்கின்றோம்! என்று பீடும் பெருமையும் கொண்டு பேசினார்கள்.

இப்போது, 2010ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை 5 நாட்களுக்குக் கொங்குப் பகுதியின் கோலமிகு திருநகரமாம் கோவையில் நடைபெறுமென நாம் அறிவித்திருப்பது, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு ஆகும். மாநாட்டுக்கான தொடக்கக் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மாநாடு தடைபெறவுள்ள நாட்கள்- மாநாடு தடைபெறவுள்ள இடம்- மாநாட்டை அழகு மிளிர்ந்திடவும். ஆய்வரங்கங்கள், பொருளாழம் கொண்டதாகவும்- அடுத்துவரும் தலைமுறையினர்க்கு அறிவூட்டுவதாகவும்- அன்னைத் தமிழுக்கு மேலும் பொலிவுதரும் புத்தம்புதிய அணிகலன்கள் பூட்டுவதாகவும் அமைந்திடவும். பொது அரங்கங்கள்,

இதுவரை கண்டிராத உணர்ச்சியையும் ஊக்கத்தையும் வெள்ளமெனப் பெருக்கி உலகெங்கணும் உள்ள தமிழர் களிடைப் பாய்ச்சுவதாகவும்- கண்காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக- கண்களின் நினைவுகளில்- காலமெலாம் நின்று நிலைத்து ஒளி உமிழ்வதாகவும்- ஊர்வலம்- தமிழர் நாகரிகம், பண்பாடு, பன்முகத் தோற்றம். தொன்மை தரணி போற்றிடும் தமிழிலக்கியத்தின் மேன்மை, மென்மை ஆகியவற்றைப் பேசும் சித்திரப் பாவைகளாக உருக்கொண்டு- ஊர்வலமாக மட்டுமன்றி, உலகவலமாகப் பிரமிப்பூட்டுவதாகவும்- நடத்துவதற்குத் தக்கவகையில் சான்றாண்மை மிக்கோர் பலரையும் இணைத்து 21 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளபடியே சொல்லப்போனால், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்ற வகையில், நாம் நடத்திடப்போவது, முதல் மாநாடாகும். நமது தமிழ்மொழி, “செம்மொழி“ என்பதற்கான அனைத்துத் தகுதிகளையும் நிரம்பவே பெற்றிருப்பதால், அதனைச் செம்மொழியென அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இன்று, நேற்றல்ல ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பே குரலெழுப்பப்பட்டது.

அன்று எழுப்பப்பட்ட அந்தக் குரல் - தமிழ்க் குரல் மெல்ல மெல்ல ஆணல் உறுதியாக, காலப்போக்கில் தமிழறிஞர்களின் குரலாக தமிழ் ஆர்வலர்களின் குரலாக தமிழ்ச் சமுதாயத்தின் குரலாக அரசியலரங்கத்தில் ஆற்றல் செறிந்த குரலாக உருப்பெற்று, அந்தக் இரலை, கேளாக் காதினர் மதித்திடத் தவறிவிட்டாலும், செவித்திறனும், சீர்ந்த பண்பும் உடையோர் அதனை மதித்துப் போற்றி, அந்தக் குரலின் மாண்பமைந்த நியாயத்தை உணர்ந்து, தமிழ், செம்மொழியே என, இந்தியத் திருநாட்டளவில் அங்கீகாரம்செய்து பிரகடனப்படுத்தப்பட்ட நாள் 12.10.2004.

அந்த நாள், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நடைபெற்ற உரிமைப் போராட்ட வரலாற்றில், உயர்ந்த நாள், உன்னதமான நாள் மாத்தமிழர் என்றென்றும் மறந்திடவியலாத மரகதத் திருநாள்! முன்னைப் பழைமைக்கும் பழைமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய், என்று பிறந்ததென்ற இயல்பறியாததாய், சீரிளமைத் திறம் கொண்டதாய் வளர்ந்து செழித்திருக்கும் செந்தமிழ், செம்மொழியெனப் பிரகடனப்படுத்தப்பட்ட பரிணாம வரலாற்றை, உலகத் தமிழ்ச்

செம்மொழி மாநாடு அறிவிக்கப்பட்டுள்ள இந்தச் சரியான தருணத்தில், நான் நினைவுகூர்ந்து உளக்குச் சொல்வதும், நீ அதனை அறிந்துகொள்வதும், அறிந்துகொண்டவற்றை நினைவிலே தேக்கி, உனது உற்றார் உறவினர்க்கும், மற்ற உடன்பிறப்புக்களுக்கும் எடுத்துரைப்பதன் மூலம் புதிய எழுச்சியும் இன்பமும் கொள்வதும், நாம் கொண்டிருக்கும் பொருள் பொதிந்த உறவின் காரணமாகப் பொருத்தமானதே!

1902இல் பண்டைத் தமிழறிஞர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி எனும் பரிதிமாற்கலைஞர் அவர்கள், மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட ”செந்தமிழ்” முதல் இதழில், ”உயர்தனிச் செம்மொழி” என்று தலைப்பிட்ட கட்டுரையில்,

> **”தென்னாட்டின்கட் சிறந்தொளிராநின்ற நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றானாராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயா மென்பது திண்ணம். இத்துணையுயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த தம் அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோ டொருங்கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற்போலத் தென்னாட்டுயர்தனிச் ”செம்மொழி”**
>
> தமிழெலக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம்.

என்று விளக்கி உரைத்தார்.

ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின், தாம் மேற்கொண்ட இதே நிலையைத்தான் இறுதிவரை பரிதிமாற்கலைஞர் வலியுறுத்தி வந்தார்.

1903இல் ”தமிழ்மொழியின் வரலாறு” என்ற தமது நூலின் முடிவுரையில்: வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ் மொழியும் உயர்தனிச் செம்மொழி யாமாறு சிறிது காட்டுவாம். தான் வழங்கும் நாட்டின்கணுள்ள பலமொழிகட்குந் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே உயர்மொழி. இவ்விலக்கணத்தான் ஆராயுமிடத்துத் தமிழ் - தெலுங்கு முதலியவற்றிற்

கெல்லாந் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவும் உடைமையால் தானும் உயர்மொழியே யென்க. தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி என்னப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யும் உதவி மிகுந்தும், அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ் மொழியினுதவி களையப்படின், தெலுங்கு முதலியன இயங்குதலொல்லா மற்றுத் தமிழ்மொழி அவற்றி னுதவியில்லாமலே சிறிது மிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையின் இயங்கவல்லது. இ∴து இந்திய மொழிநூற் புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின் தமிழ் தனிமொழியேயென்க. தலைமையும் அவற்றிலு

**இனிச் செம்மொழியாவது யாது?**

என்று தமிழை உயர்மொழி என்றும் தனிமொழி என்றும் வலியுறுத்திய பின்னர் பரிதிமாற்கலைஞர் அவர்கள், செம்மொழியாவது யாது? என்ற வினாவுக்கு விடையளித்திடும்போது:

திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம். இம்மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின்கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன்முடிபுகளும் பொருண்முடிபுகளுமின்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதி னுணர வல்லதாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ்மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க, நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிற பாஷைச் சொற்களன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ் மொழிக்குப் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய்மொழியுமாம். எனவே தமிழ், செம்மொழியென்பது திண்ணம். இதுபற்றி யன்றே தொன்று தொட்டுத் தமிழ்மொழி செந்தமிழ் என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே தென்னாட்டின்கட் சிறந்தொளிராநின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி

எவ்வாற்றானாராய்ந்த வழியும், உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது நிச்சயம். இவ்வளவுயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோ டொருங்கெண்ணுதல் தவிர்த்து, வடநாட்டுயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர் தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம் என்று தமிழ்மொழியைச் செம்மொழி என நூறாண்டுகளுக்கு முன்பே அறுதியிட்டு, உறுதியாக நிலைநாட்டிக் குரல் கொடுத்தார்.

அதனால்தான், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்திற்கு அருகில் விளாச்சேரி எனும் கிராமத்தில் கதவு எண்.4-219 -இல், 2508 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ள தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி, நினைவில்லமாகப் பராமரித்திட 16.11.2006 ∴அன்று ஆணையிட்டுத் தனியார் பொறுப்பிலிருந்த அந்த இல்லத்தைக் கையகப்படுத்திட, 1.12.2006இல் 3 இலட்சத்து 84 ஆயிரத்து 534 ரூபாய் அனுமதிக்கப்பட்டு - அந்தப் பழைய இல்லம் கழக அரசால், 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்ச் செலவில் புதுப்பிக்கப்பட்டு - புதிய பொலிவுடன் நினைவில்லமாக்கப்பட்டு - நினைவில்லத்திள் முகப்பில் பரிதிமாற்கலைஞர் அவர்களின் மார்பளவு சிலை ஒன்றும் நிறுவப்பட்டு 31.10.2007 அன்று பழைமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பரிதிமாற்கலைஞரின் நினைவில்லத்தைத் திறந்து வைத்து, வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள அவரது மார்பளவு வெண்கலச் சிலையைத் திறந்துவைத்துப் பின்னர் நினைவில்லத்தில் அவரது வரலாற்றுக் குறிப்புகள், அரிய புகைப்படங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர்கள் புத்தகத்தில்,

**தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரிக் குரல்கொடுத்த முதல்**

**தமிழன் பரிதிமாற்கலைஞர் புகழ் வாழ்க!**

என நான் எழுதிக் கையெழுத்திட்டேன்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரிய முதல் தமிழன் பரிதிமாற்கலைஞர் என்பதால்தான், கழக அரசு வேறுசில சிறப்புகளையும் அவருக்குச் செய்திருக்கிறது. பரிதிமாற்கலைஞர் படைத்துள்ள நூல்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கி, அவரது

மரபுரிமையர்க்கு 2.12.2006 அன்று 15 இலட்ச ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக அரசின் கோரிக்கை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் ஏற்கப்பட்டு, 17.8.2007 அன்று பரிதிமாற்கலைஞர் நினைவு சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

தமிழில் நாடக இலக்கண நூல் இல்லாத குறையைப் போக்க விரும்பி, தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் ஆராய்ந்து, நாடகவியல் என ஒரு நூல் எழுதி வெளியிட்டவர் பரிதிமாற்கலைஞர்.

இவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில், சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்மொழி உட்பட உள்நாட்டு மொழிகளைப் பாடப் பகுதியிலிருந்து நீக்கிடத் திட்டமிட்டபோது, பரிதிமாற் கலைஞரும், திரு. பூர்ணலிங்கம் பிள்ளையும், தமிழறிஞர்களின் வீடுதோறும் சென்று. முயன்று பல்கலைக்கழகத்தின் திட்டத்தைத் தடுத்தனர். தமிழ்மொழி தொடர்ந்து பல்கலைக்கழகப் பாடமொழியாக நீடித்தது.

தமிழ்மொழியைச் செம்மொழியென்று பிரகடனப்படுத்துவதற்கு அடித்தளம் அமைத்த பரிதிமாற்கலைஞர் - நூறாண்டுக்கால மொழி உரிமை வரலாற்றைத் தொடங்கி வைத்த தமிழறிஞர் - ஏறத்தாழ 33 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த அப்பெருமகனார் - தமிழ் மொழி வரலாற்றில் நிலைத்த புகழைக் கொண்டுள்ளார்.

சூரியநாராயண சாஸ்திரியார் எனும் பரிதிமாற்கலைஞர் அவர்கள் வடமொழியாளரின் ஏமாற்று வேலைகள் எப்படிப்பட்டவை என்பதை அவர்களது முகத்திரையைக் கிழித்து, அணிந்திருந்த முகமூடியைக் கழற்றி அவர்களது வேஷத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார். தமிழ்மொழியின் வரலாறு என்ற அவரது நூலில் உள்ள அந்தப் பகுதி, தமிழர்கள் அனைவரும் குறிப்பாகப் பெரியார், அண்ணா வழி வந்தவர்கள் - தவறாது நினைவுகூரத்தக்கதாகும். அது பின்வருமாறு:

வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை உணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்மநூற் பயிற்சிக்கு உடையராயும், கலையுணர்ச்சி சான்றவராயு மிருந்தமை பற்றித் தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர் தமிழர்களிடத்தில்லாதிருந்த “அந்தணர்“,

அரசர், வணிகர், வேளாளர்“ என்ற நால்வகைச் சாதி முறையை மெல்ல மெல்ல நாட்டிவிட்டனர்.

**முற்படைப் பதனில்வேறாகிய முறைமைபோல்**

**நால்வகைச் சாதியிந் நாட்டில் நீர், நாட்டினீர்**

என்று ஆரியரை நோக்கி முழங்குங் “கபிலரகவ“ லையுங் காண்க. இன்னும் அவர்தம் புந்தி நலங்காட்டித் தமிழரசர்களிடம், அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர் தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர்.அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர். என்று பரிதிமாற்கலைஞர் அவர்கள் நூறாண்டுகளுக்கு முன்னரே எடுத்துக்காட்டுகளுடன் இயம்பியிருப்பது, பெரியார் அண்ணா எண்ண ஓட்டங்களைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறதல்லவா? அதனால்தான், சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களை, முதல் தமிழன் பரிதிமாற்கலைஞர் என்று அழைத்து, அவர் புகழ் வாழ்க என்று எனது நெஞ்சத்து உணர்வு கலந்து வாயார வாழ்த்தி எழுதிவேன்!

**வினாக்கள்**

1. திருக்குறள் பற்றி பெரியார் உரைக்கும் சிறப்புத் தன்மைகளை விளக்குக.
2 பொதுவுடைமை கருத்துகளின் கருவூலம் திருக்குறள்“ என்பதை பெரியாரின் கருத்து வழி நிறுவுக.
3. பேரறிஞர் அண்ணா “தயங்காதே தமிழா“ என்ற தலைப்பில் இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டில் நிகழ்த்திய பொழிவினை சுருக்கி எழுதுக.
4. உலகத்தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டோர் குறித்து அண்ணா கூறும் கருத்துக்கள் யாவை? விளக்குக.
5. பூம்புகார் பற்றி அண்ணா கூறும் கருத்துகளை எழுதுக.
6. தமிழின் தனிப்பண்புகளை விளக்குக.
7. வேலைக்காரி நாடகத்தின் கதை மாந்தர்களை ஆராய்க.
8. சாக்ரடீஸ் - ஓரங்க நாடக கதைமாந்தர்கள் பற்றி எழுதுக.

# அலகு - 5

# மொழிப் பயிற்சி

## 1. சொல் வேறுபாடு, பிழை தவிர்த்தல்

**ரகர றகர வேறுபாட்டுக் குறிப்புகள்: பிழை கடிதல்**

பெரும்பாலும் எழுத்துப் பிழைகளும் சொற்பிழைகளும் கீழ்காணும் பிரிவுகளில் அடக்கி விடலாம். அவையாவன

1. ரகர றகர வேறுபாடு (எ.டு - கருப்பா? கறுப்பா? பயிற்ச்சியா பயிற்சியா? பயிர்ச்சியா? வரையரையா? வறையரையா? வரையறையா? என்பன போன்ற குழப்பங்களால் வரும் பிழைகள்.

2. லகர ழகர ளகர வேறுபாடு: (எ.டு: கலை, களை, கழை...)

3. நகர னகர ணகர வேறுபாடு: (என்னாள் என்பதா எந்நாள் என்பதா?)

4. மரபு வழுக்கள் (எ-டு: தென்னங்கன்றா? தென்னஞ்செடியா? தென்னம்பிள்ளையா?)

5. புணர்ச்சி (எ-டு: கயிறு கட்டிலா? கயிற்றுக்கட்டிலா? கயிறுக்கட்டிலா?)

6. ஒருமை பன்மைப் பெயர்கள் (கிளிக்களா, கிளிகளா, கிளிகள் பறந்தது சரியா, கிளிகள்

பறந்தன சரியா?)

7. சமற்கிருதச் சொற்களால் வரும் குழப்பங்கள் (எ-டு: கர்ப்பம் கர்பம், கருப்பம் எது சரி?...)

இவ்வேழு பிரிவுகளில் பெரும்பான்மை பிழைகளை வகைப்படுத்திக் கொள்வோம். பின்னர் ஒவ்வொன்றாக விரிவாகப் பார்ப்போம் என்பதே வரும் கிழமைக்கான திட்டம் என்க...

**ரகர றகர வேறுபாடு குறிப்புகள்**

(ரகரம் - இடையினம்

றகரம் - வல்லினம்)

**குறிப்பு 1.**

றகர மெய் தன் உயிர்மெய்யோடு (றகர உயிர்மெய்யோடு) சேர்ந்து வரும் ரகர மெய் தன் உயிர்மெய்யோடு (ரகர உயிர்மெய்யோடு) சேர்ந்து வாரா.

**எ-டு:** குற்றம், விற்றான், புற்று, நெற்றி....

**குறிப்பு 2.**

றகரம், னகர மெய்க்குப் பின் வரும் ரகரம் னகர மெய்க்குப் பின் வாரா.

**எ-டு:** குன்றம், தின்றான், பன்றி, கன்று, கொன்றை, சான்றோர்

றகரத்திற்கு னகரம் இனம் ஆகும். அதனால்தான் நெடுங்கணக்கில் றகரமும் னகரமும் அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அதாவது, றகரமும் னகரமும் அக்காள் தங்கை என்று நினைவிற் கொள்க... இனவெழுத்துக்களைப் பற்றி எழுத்ததிகாரத்தில் நாம் கண்டதை ஓர்க..

**குறிப்பு 3.**

றகரமும் சரி ரகரமும் சரி சொல்லின் முதல் எழுத்தாக வாரா.

**எ-டு:**

(பிழை? திருத்தம்/// பற்றுக்கோடு)

ரங்கன்? அரங்கன்/// அரங்கம்

ராமன்? இராமன்///

ரோமம்? உரோமம்///

**குறிப்பு 4.**

றகர மெய் ஒரு சொல்லின் ஈற்றெழுத்தாக வாரா. ரகர மெய் வரும்.

**எ-டு:** நீர், வேர், பார்,...

ரகர றகர வேறுபாடு குறிப்புகள்:

(ரகரம் - இடையினம்றகரம் - வல்லினம்)

**குறிப்பு 1.**

றகர மெய் தன் உயிர்மெய்யோடு (றகர உயிர்மெய்யோடு) சேர்ந்து வரும் ரகர மெய் தன் உயிர்மெய்யோடு (ரகர உயிர்மெய்யோடு) சேர்ந்து வாரா.

எ-டு: குற்றம், விற்றான், புற்று, நெற்றி....

**குறிப்பு 2.**

றகரம், னகர மெய்க்குப் பின் வரும் ரகரம் னகர மெய்க்குப் பின் வாரா.

**எ-டு:** குன்றம், தின்றான், பன்றி, கன்று, கொன்றை, சான்றோர்

றகரத்திற்கு னகரம் இனம் ஆகும். அதனால்தான் நெடுங்கணக்கில் றகரமும் னகரமும் அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அதாவது, றகரமும் னகரமும் அக்காள் தங்கை என்று நினைவிற் கொள்க... இனவெழுத்துக்களைப் பற்றி எழுத்ததிகாரத்தில் நாம் கண்டதை ஓர்க..

**குறிப்பு 3.**

றகரமும் சரி ரகரமும் சரி சொல்லின் முதல் எழுத்தாக வாரா.

**எ-டு:** (பிழை? திருத்தம்/// பற்றுக்கோடு)

ரங்கன்? அரங்கன;/// அரங்கம்

ராமன்? இராமன்///

ரோமம்? உரோமம்///

**குறிப்பு 4.**

றகர மெய் ஒரு சொல்லின் ஈற்றெழுத்தாக வாரா. ரகர மெய் வரும்.

**எ-டு:** நீர், வேர், பார்,...

**குறிப்பு 5.**

னகர மெய்யை ஈற்றிலுடைய சொற்களும் லகர மெய்யை ஈற்றிலுடைய சொற்களும் நிலைமொழியாய் நிற்க, வல்லெழுத்து வருமொழியாய் வரின் றகரம் தோன்றும். ரகரம் தோன்றா.

**எ-டு:** பொன் + கொல்லன் = பொற்கொல்லன்

கல் + சட்டி = கற்சட்டி

பல் + பொடி = பற்பொடி

**குறிப்பு 6**

றகர மெய்க்குப் பின் (ற் எனும் மெய்யெழுத்துக்குப் பின்), க, ச, ப, ற என்னும் நான்கு உயிர்மெய்கள் மட்டுமே வரும். மற்றவை வாரா.

**எ-டு:** நிற்க, முயற்சி, வெற்பு, உற்றார்

ரகர மெய்க்குப் பின் (ர் எனும் மெய்யெழுத்துக்குப் பின்) க, ங, ச, ஞ, த, ந, ப, ம,ய,வ எனும் இப்பத்து உயிர்மெய்களும் வரும். மற்றவை வாரா...(ட, ண, ர, ல, ழ, ள, ற, ன எனும் உயிர்மெய்கள் வாரா)

**எ-டு**: வேர்கடிது, வேர்சிறிது, வேர்தீது, வேர்நீண்டது, வேர்பெரிது, வேர்மாண்டது, வேர்வலிது, வேர்யாது.

ரகர றகர வேறுபாட்டுக் குறிப்புகள்:

**குறிப்பு 7**

ரகர மெய், தனி உயிர்க் குற்றெழுத்தின் பின்னாவது, தனி உயிர்மெய்க் குற்றெழுத்தின் பின்னாவது நில்லாது. றகரம் அவ்வாறு நிற்கும்

தனி உயிர்க் குற்றெழுத்து - அ, இ, உ, எ, ஒ

தனி உயிர்மெய் குற்றெழுத்து - க, கி, கு, கெ, கொ, ச, சி, சு.....முதலியன

**எ-டு:** உற்றார், சுற்றார்

அர்ச்சனை, கர்ப்பம், தர்ப்பை என்பன இவ்விதிப்படி தவறு என்பது காண்க. இவை தமிழல்ல என்பதை தமிழே காட்டிவிட்டதென்க...

அர்ச்சனை? அருச்சனை

கர்ப்பம்? கருப்பம்

தர்ப்பை? தருப்பை

**குறிப்பு 8**

றகர மெய்க்குப் பின் மெய்யெழுத்து வராது. வராது. வராது. உயிர்மெய் மட்டுமே வரும்.

பயிற்ச்சி? பயிற்சி

வரவேற்ப்பு? வரவேற்பு

வரவேற்பிற்க்கு? வரவேற்பிற்கு

அதற்க்கு? அதற்கு

ரகர மெய்க்குப்பின் மெய்யும் வரும், உயிர்மெய்யும் வரும்

**எ-டு:** ஆர்க்கும், அயர்ச்சி, தேர்வு

**குறிப்பு 9**

றகரம் தமிழ் மொழிக்கே சிறப்பானது. ரகரம் பல மொழிகளில் உண்டு

எ-டு: பிராமணர் (வடமொழி)

அலமாரி (போர்த்துக்கேசியம்)

கரம் ஶ்ரீ சூடு (இந்துசுதானி)

பிரின்சிபால் ஸ்ரீ தலைவர் (ஆங்கிலம்)

எனவே ரகரம் கொண்ட பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுத வேண்டி வந்தால் றகரம் இடாது ரகரமே இட வேண்டும்.

**குறிப்பு 10**

றகரம் வரப்பெற்ற தமிழ்ச்சொற்கள் அழுத்தமான ஓசையை உடையனவாய் இருக்கும். ரகரம் வரப்பெற்ற தமிழ்ச்சொற்கள் வன்மையோசையும் மென்மையோசையும் அல்லாத நடுத்தர ஓசையினை உடையதாக இருக்கும்

**எ-டு:** அரு - அருமை அறு - துண்டி

அரை - பாதி அறை - அடி

இரத்தல் - யாசித்தல் இறத்தல் - சாதல்

இரங்கு - மனமிரங்கு் இறங்கு - கீழே இறங்கு

**ரகர றகர வேறுபாடு**

அரம் - ஓர் ஆயுதம்

அறம் - நன்மைகளின் மொத்தவுருவாகத் தமிழர் மேற்கொள்ளும் வாழ்க்கைமுறை (இல்லறம், துறவறம்)

அரமனை - அரசன் வீடு

அறமனை - அறச்சாலை

அரி - திருமால்

அறி - அறிந்துகொள்

அரிவை - பெண்

அறிவை - அறிவாய்

அரு - அருமையான்

அறு - துண்டி

அருகு - நெருக்கம்

அறுகு - அறுகம்புல்

அருவி - மலையருவி

அறுவி - அறச்செய்

அரை - பாதி

அறை - வீட்டின் அறை, கன்னத்தில் அறை

அலரி - ஒருவகைப் பூ

அலறி - கதறி

ஆர - நிறைய்

ஆற - தணிய

ஆரல் - ஒருவகை மீன்

ஆறல் - தணிதல்

இர - யாசி

இற - சாகு, கட

இரகு - ரகு என்ற பெயர்

இறகு - பறவையின் சிறகு

இரங்கு - மனமிரங்கு்

இறங்கு - கீழிறங்கு

இரத்தல் - பிச்சையெடுத்தல்

இறத்தல் - சாதல், கடத்தல் (கட என்றால் தாண்டிச் செல் என்பது பொருள்)

இரவு - இராத்திரி,

இறவு - சாதல்

இரு - உட்கார்

இறு - வடிகட்டு, ஒடி (இரண்டும் வினைச்சொற்கள்)

இரு - இரண்டு

இருக்கு - ஆரிய வேதம்

இறுக்கு - அழுந்தக் கட்டு

இருப்பு - நிலைமை (கையிருப்பு)

இறுப்பு - குடியிறை, தங்குதல், கடன் செலுத்துதல்.

இரும்பு - இரும்பு

இறும்பு - சிறுமலை, வியப்பு (இறும்பூது)

இரை - உணவு

இறை - கடவுள், அரசன், வரி

ஈர் - இழு (ஈர்ப்பு)

ஈறு - முடிவு, கடைசி எழுத்து

உரல் - உரல்

உறல் - அடைதல்

உரவு - வலிமை

உறவு - சொந்தம்

உரி - பட்டை

உறி - பண்டங்கள் வைக்கும் தூக்கு (உறியடித்தல்)

உரிய - உரிமையான்

உறிய - உறிஞ்ச

உரு - உருவம்

உறு - பொருந்து, ஓர் உரிச்சொல்

உருக்கு - இளகச்செய்

உறுக்கு - கோபி

உருமு - இடி

உறுமு - உறுமுதல், அரிமா எழுப்பும் ஒலி (அரிமா - சிங்கம்)

உரை - சொல், தேய் (உரைகல்), பாட்டுரை

உறை - பை, மூடிவைக்கும் பொருள்.

ஊர - நகர, பரவ்

ஊற - சுரக்க (ஊற்று)

எரி - தீ எறி - வீசு

ஏரி - பெரிய குளம்

ஏறி - மேல் ஏறி

கரி - அடுப்புக்கரி,

கரிய - கருப்பு நிறத்ததான, கருமை, கரிக்கட்டை , கரிதல் - தீய்ததல், கரிச்சாங்குருவி, கரி நாள், கரிபூசு, கரிசல், கரும்பு, கரிய, கரியமான், கருகல், கருக்கம் - கார்மேகம், கருங்குரங்கு, கருநாகம், கருமணி - கணணின் கருப்பு விழி, கருமயிர், கருமுகில் என கருமையைக் குறிக்கும் எண்ணற்ற சொற்கள் இடையின ரகரத்தையே ஆண்டு வருதல் காண்க...

ஆயினும், கறுப்பு என்று சொல்வது பெருவழக்கு ஆகிவிட்டமையால் கறுப்பு என்பதை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டோம். எனவே கறுப்பு என்பதும் சரி என்றே கொள்க....

வேறு அனைத்து கருமை சார்ந்த பயன்பாட்டுக்கும் றகரம் இடாது ரகரமே இடவேண்டும் என்றோர்கள்

## ணகர - னகர சொற்களின் வேறுபாடுகள்

| | | | |
|---|---|---|---|
| அண்ணம் | - மேல்வாய் | அணை | - வரப்பு |
| அன்னம் | - பறவை | அனை | - அத்தனை |
| அணல் | - தாடி | அரண் | - மதில் |
| அனல் | - நெருப்பு | அரன் | - சிவன் |
| ஆணி | - இரும்புத்துண்டு | ஆணை | - கட்டளை |
| ஆனி | - மாதம் | ஆனை | - யானை |
| ஆண் | - ஆண்பிள்ளை | ஊண் | - சோறு |
| ஆன் | - பசு | ஊன் | - மாமிசம் |
| ஊண் | - உணவு | எண்ண | - நினைக்க |
| ஊன் | - மாமிசம் | என்ன | - கேள்வி |
| கண்ணன் | - கிருஷ்ணன் | | |
| கன்னன் | - கர்ணன | | |

## லகர, ளகர, ழகர சொற்களின் வேறுபாடுகள்

| | | | |
|---|---|---|---|
| இலை | - முற்றிய தளிர் | உலை | - கொதிகலன் |
| இளை | - மெழிதல் | உளை | - சேறு |
| இழை | - நூல் | உழை | - மான் |

| | | | |
|---|---|---|---|
| எல் | - சூரியன் | ஒலி | - சத்தம் |

எள் - எண்ணெய்வித்து

ஒளி - வெளிச்சம்

ஒழி - நீக்கு

கலி - உணவு

களி - மகிழ்ச்சி

கழி - கோள், தடி, மிகுதி

கலை - வித்தை, கல்வி

களை - நீக்கு

கழை - மூங்கில், கரும்பு

கிளவி - சொல்

கிழவி - முதியவர்

கிளி - பறவை

கிழி - கோடு கிழித்தல்

குளவி - வண்டினம்

குழவி - அம்மி

குலம் - இனம்

குளம் - நீர்நிலை

குளி - குளித்தல்

குழி - பள்ளம்

சூல் - கர்ப்பம்

சூள் - சபதம்

சூழ் - சுற்றிக்கொள்ளுதல்

தலை - சிரசு, முதன்மை

தளை - கட்டுதல்

தழை - புல், இழை

தால் - நாக்கு

தாள் - திருவடி

தாழ் - தாழ்ப்பாள்

தாளி - குழம்பு தாளித்தல்

நலிவு - நோய்

தாழி - குடம்

தாலி - கணவன் மனைவிக்கு கட்டும் சின்னம்

நளிவு - செறிவு

மால் - திருமால், பெருமை

மாள் - இற

வலி - உடல்வலி

வளி - காற்று

வழி - பாதை

வலம் - திசை

வளம் - செல்வம்

வலை - மீன்பிடி வலை

வளை - பொந்து, வளையல்

வால் - விலங்கின் உறுப்பு

வாள் - கருவி

வாழ் - உயிரோடு இரு

வாலை - இளம்பெண்

வாளை - மீன் வகை

## பிழைத்திருத்தல் மாதிரிகள்

## 2. பிழையான சொற்களை ஒரு பத்தியில் கொடுத்து அந்தப் பிழையானச் சொற்களைச் சரியாக எழுதச் செய்தல்

1 அறம் - அறத்தினைக் கொண்டு இரும்பைத் தேய்த்துக் கூர்மையாக்குவர்

அரம் - தச்சன் அரத்தால் மரத்தை அறுத்தான்

2 அரி - அரியும் சிவனும் ஒன்று பெரியோர் கூறுவர்

அறி - பெரியோரை மதித்து நடக்க வேண்டும் என்பதை பெற்றோர் சொல்ல கேட்டு அறிந்தேன்.

3 அரை - ஒரு பழத்தில் அரை பகுதியை என் தம்பிக்கு கொடுத்தேன்.

அறை - என் வீட்டில் எனக்கென்று ஓர் அறை உள்ளது.

4 அலரி - அலரி பூக்கள் தெருக்கள் தோறும் மலர்ந்திருக்கின்றன.

அலறி - ஆந்தையைக் கண்டதும் அவன் அலறினான்.

5 இரை - ஆடு புற்களை இரையாக எடுத்துக்கொள்ளும்.

இறை - எந்த செயல் தொடங்கும் போதும் இறைவனை வேண்டுகிறேன்.

6 இரங்கு - பாரி எளியோரைக் கண்டால் இரங்குவான்.

இறங்கு - மாடத்தில் இருந்து கீழே இறங்கு.

7 உரல் - மாவிடிக்கும் கருவியைப்(உரல்) புரட்டிப் போடு.

உறல் - அவனின் உறலுக்கு மருந்தாக ஆறுதல் சொற்கள் கூறு.

8 உரு - உருவத்தை வைத்து யாரையும் எடை போடாதே

உறு - உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

9 உரை - உரையாமோ நூலிற்கு நன்கு?

உறை - முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்.

10 ஊர - ஊருக்கு கிழக்கே மலை உள்ளது.

ஊற - நீர் ஊற ஊற கிணறு நிரம்பும்.

11 எரி - காட்டில் தீப்பற்றி எறிகின்றது.

எறி - பந்தினைக் குறி பார்த்து எறி.

12 ஏரி - ஏரிப் பாசனமுறை விவசாயத்திற்கு ஏற்றது.

ஏறி - மரத்தில் ஏறிப் பழங்களைப் பறி.

13 ஒரு - ஒரு மரத்தில் ஆயிரம் பறவைகள் உள்ளன.

ஒறு - இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல்

14 கரி - கரி பிடியோடு வந்தது.

கறி - மிளகுக் கறி சுவையுடையதாக இருக்கும்.

15 தெரி - வானில் விண்மீன்கள் தெரிந்தன.

தெறி - சிலம்பில் இருந்து மாணிக்கப் பரல்கள் தெரித்து விழுந்தது.

16 நருக்கு - ஈயத்தை நருக்கி வெள்ளியதாக உருக்குவோம்"

நறுக்கு - கத்தியைப் பயன்படுத்தி காய்களை நறுக்கு.

17 நரை - யாண்டு பலவாக நரையில வாகுதல்.

நறை - மலைக்குறவர் மக்கள் நறைக்கொடியை அறுத்தெறிவர்.

18 நிருத்தம் - இசையோடு நிருத்தமும் நடந்தது.

நிறுத்தம் - பேருந்து நிறுத்தத்தில் கூட்டம் மிகுதியாக உள்ளது.

19 விழ - விழிகளால் வானத்தை நோக்கு

விளி - கண்ணனை விளித்தால் முருகன் வருகிறான்.

20 கலை - கலையைக் (ஆண்மான்) கண்டபின் மகிழ்ந்தேன்.

கழை - கழை சுவையுடையது.

## மொழிபெயர்ப்பு

ஒரு மொழியில் உள்ள கருத்து, இலக்கியம், அறிவியல் கண்டுபிடிப்புகள் எனப் பல துறைகளிலுள்ளவற்றை மற்றொரு மொழியில் மாற்றுவது மொழிபெயர்ப்பு ஆகும். தகவல் தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், இணையம் என்ற அனைத்து ஊடகங்களும் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

### மொழிபெயர்ப்பின் தேவை

சாதாரணமாக ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஒரே மொழி பேசுவோராக வாழ்கின்றனர். சில நாடுகளில் பல மொழிகள் பேசுவோர் வாழ்கின்றனர். குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் வாழ்கின்றனர். மக்கள் அனைவரும் தங்களுக்கிடையே ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொள்ளும்போது இருவரும் வேறு வேறு மொழிகளில் தொடர்பு கொண்டால் அப்போது இருவருக்கிடையில் மொழிபெயர்ப்பு அவசியமாகிறது.

பதிப்பு ஊடகங்களான இதழ்கள், நூல்கள் முதலியன மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வெளியிடப்படுவதால் அவற்றிற்கும் இன்றைய சூழலில் அவசியம் ஏற்படுகிறது. மொழிபெயர்ப்பின் நோக்கம் கருத்துப் பரவல் என்பதால் அது இல்லாத

துறையே இல்லை என்ற அளவிற்கு அதன் அவசியம் தற்காலத்தில் உணரப்பட்டு, பெருமளவு மொழிபெயர்ப்புப் பணிகள் நடக்கின்றன. இதில் தொடர்புடையன தருமொழி - மொழிபெயர்ப்பாளர் - பெறுமொழி ஆகியனவாகும்.

**மொழிபெயர்ப்பில் மொழிகளின் பங்கு**

மொழிபெயர்ப்பில் பங்குபெறும் மொழிகளைத் தருமொழி, பெறுமொழி, வழிமொழி என அழைக்கின்றனர்.

**தருமொழி**

மொழிபெயர்ப்பின் போது, ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குக் கருத்துகளை மொழிபெயர்க்கிறோம். அப்போது அந்த முதல்மொழியை மூலமொழி அல்லது தருமொழி என்கிறோம்.

**சான்றாக:** தமிழிலிருந்து இந்திமொழிக்கு மொழிபெயர்ப்பு செய்தால் அப்போது தமிழ்மொழி தருமொழி ஆகிறது. ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டால் அப்போது ஆங்கிலம் தருமொழி ஆகிறது.

ஆகவே எந்த மொழியின் கருத்துகளை வேறுமொழிக்குப் பெயர்க்கிறோமோ அந்த மொழி தருமொழி என்கிறோம்.

**பெறுமொழி**

மொழிபெயர்ப்புப் பணியில் தருமொழியிலிருந்து மற்றொரு மொழிக்குப் பெயர்க்கும் போது அந்த மற்றொருமொழி பெறுமொழி ஆகிறது. இதனை இரண்டாம்மொழி என்றும் அழைக்கிறோம்.

**சான்றாக:** தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு ஒரு நூலை மொழிபெயர்க்கிறோம் என்றால் அப்போது தமிழ் தருமொழியாகவும் ஆங்கிலம் பெறுமொழியாகவும் உள்ளன. அவ்வாறே ஆங்கிலத்திலிருந்து இந்தி மொழிக்கு மொழிபெயர்க்கப்படும் போது ஆங்கிலமொழி தருமொழியாக அதாவது முதல்மொழியாகவும், இந்திமொழி பெறுமொழியாக அதாவது இரண்டாம்மொழியாகவும் உள்ளன.

**வழிமொழி**

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்க்கப்படும் போது அதில் முதல்மொழியான தருமொழியும் இரண்டாம் மொழியான பெறுமொழியும் இருப்பது இயல்பு. அதே மூலமொழி சீனமாகவும் இரண்டாம் மொழி ஆங்கிலமாகவும் மூன்றாம் மொழி தமிழாகவும் இருந்தால் அப்போது இரண்டாம்மொழியாகிய ஆங்கில மொழியை வழிமொழி என்கிறோம்.

**சான்றாக:** இந்திமொழியில் உள்ள பிரேம்சந்த் அவர்களின் சிறுகதையோ, புதினமோ முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பிறகு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டால் அப்போது ஆங்கிலமொழி வழிமொழி ஆகிறது. இதில் மொழிபெயர்ப்பாளர் மேலும் ஒரு திறமையான மூலமொழியின் சமூகப் பண்பாட்டுப் பின்னணியை அறிந்தவராக இருக்க வேண்டும் என்பது விரும்பத் தக்கதாகும்.

**மொழிபெயர்ப்பாளர்**

மொழிபெயர்ப்பு என்பது தனிக்கலை. அதனை யார் வேண்டுமானாலும் செய்துவிட முடியாது. மொழிபெயர்ப்பாளர் என்பவர் எந்த மொழியுடனும் தனிப்பற்றுக் கொள்ளாமல், நடுநிலையில் நின்று மொழிபெயர்க்க வேண்டும். குறிப்பாக அவருக்கு இரண்டு மொழிகளிலும் அதாவது தருமொழி பெறுமொழி ஆகிய இரண்டிலும் புலமை இருத்தல் வேண்டும். இரு மொழிகளின் சமூக, பண்பாட்டுச் சூழ்நிலைகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். இது பற்றியெல்லாம் முந்தைய பாடங்களில் நன்கு அறிந்திருப்பீர்கள்.

**மொழிபெயர்க்கக் கூடியவை**

ஒரு மொழியில் உள்ள சிறந்த கருத்துகள், இலக்கியங்கள், அறிவியல் நூல்கள் என அனைத்தையும் மொழிபெயர்க்கலாம். இரண்டாம் மொழியாகிய பெறுமொழிக்குத் தேவையான எல்லாவற்றையும் பல்வேறு மொழிகளிலிருந்து மொழிபெயர்த்துக் கொள்வதில் தவறில்லை. சான்றாக, ஆங்கிலத்திலிருந்து தமிழில் அறிவியல் நூல்கள் பல மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. ஆங்கில இலக்கியங்கள்,

ஆங்கிலம் வழியாக இலத்தீன் அமெரிக்க, சீன, ரஷ்ய ஜப்பானிய இலக்கியங்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சிறந்த உலக அரசியல்வாதிகளின் பேருரைகள், கடிதங்கள், பேட்டிகள் (நேர்காணல்கள்) எனப் பல தமிழிலும் ஏனைய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. ஆகவே பெறுமொழிக்குத் தேவையான அனைத்தையும் மூலமொழிகளிலிருந்து மொழிபெயர்த்துக் கொள்ளலாம். இப்படிப் பெயர்க்கப்படும் அனைத்தும் பெறுமொழி பேசும் மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயன்படுவதாக இருக்கும். ஆகவே, மொழிபெயர்ப்புப் பணியைப் பலர் முன்வந்து செய்யவேண்டும். தமிழ் மொழியில் உள்ள எத்தனையோ நூல்கள் மொழிபெயர்க்கப்படாமல், உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படாமல் இருக்கின்றன. இந்த முயற்சியிலும் பலர் ஈடுபட வேண்டும்.

**நேரடி மொழிபெயர்ப்பு**

மொழிபெயர்ப்பு என்றதும் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதா அல்லது பொருளை மட்டும் மொழிபெயர்ப்பதா என்ற ஐயம் எழுவது உண்டு. இரண்டையும் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. மொழிபெயர்ப்பு என்பது அறிவியல்துறையும் இலக்கியத்துறையும் கலந்த ஒன்றாகும். அறிவியல் கருத்துகளை, விதிகளை, வாய்பாடுகளை அப்படியே சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கலாம். இலக்கியங்களை மொழிபெயர்க்கும் போது பொருளை மட்டும் மொழிபெயர்த்தால் போதும். இந்த இரண்டு வழிமுறைகளிலும் நேரடி மொழிபெயர்ப்புகள் அமைகின்றன. நேரடி மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியின் கருத்துகளை மிகுதிப் படாமலும் குறைக்காமலும் உள்ளது உள்ளவாறு மொழிபெயர்க்கப் படுவதாகும். அப்படி மிகுந்துவிட்டாலோ குறைந்து போனாலோ மூலநூல் சொல்ல வந்த கருத்தை இரண்டாம் மொழி வாசகன் புரிந்துகொள்ளக் கடினமாக இருக்கும். அத்துடன் புதிய நூலாகவே காட்சி அளிக்குமாறு அமைந்து விடவும் வாய்ப்பு உள்ளது. அதனால் உள்ளது உள்ளபடி மொழிபெயர்க்கும் போது, சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல், பொருளை மொழிபெயர்த்தல் ஆகிய இரண்டு வழிமுறைகளையும் பின்பற்றலாம்.

**சிறிய புத்தி ஒன்றை ஆங்கிலத்தில் கொடுத்து**

அதனைத் தமிழில் மொழிபெயர்க்க வைத்தல்

## Translation Practice (Tamil into English and Vice Versa)

### Model Passages For Translation

1. Laughter is a way of showing happiness. This is so because a person can really laugh only when he or she is happy. Laughter is one of the happiest things we know, isn't? Every one loves to laugh. That is why funny films or comedies are big hits and joke books are so popu- lar. Laughter refreshes and relaxes. It lightens our minds and makes us alert and energetic.

2 Two children were walking home from school. Some mischievous monkeys were sitting on a tree, eating bananas. When the monkeys saw the two children passing, they threw down some over-ripe bananas. The bananas landed on the children's heads and were squashed, leaving pulp all over their heads. One child began to roar with laughter, while the other scowled at the monkeys and yelled at them. Both of them went to a tap, washed off the banana pulp and went home.

3. Dietary habits of older persons should be well-regulated. The diet of a person aged sixty-five or over must contain adequate protein as well as fresh fruits and vegetables to provide vitamin C, especially during winter months. Vitamin deficiency is the result of a diet of cheap, processed foods. A combination of poor diet and poor health may cause confusion and death.

4. Water conservation plays a big part in saving the environment. This is because, if we use too much of the ground water, over time, the water table goes down

and all life suffers from too little water. Plant trees in groups or by yourself at home, at school or in the neighbourhood. Why? More trees means more rain. More rain means more trees again.

5. The Fisherman and his wife ha had given that castle to them. It was a huge, stone castle. There were a lot of servants and a lot of rooms. All the rooms had beautiful furniture The charis and tables were made of gold. Behind the castle there was a lovely garden and a huge wood. They saw sheep, goats, hard deers in the castle courtyard there were stables and cow sheds was really a wonderful place.

## Translation of the Passages

1. சிரிப்பு மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ஒரு வழி. இது ஏனென்றால், ஒருவர் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்தால்தான் அவரால் சிரிக்க முடியும். சிரிப்புதான் நாம் அறிந்தவற்றுள் மகிழ்ச்சியான ஒன்றாகும். இல்லையா? ஒவ்வொருவரும் சிரிக்க விரும்புகிறார்கள். அதனால் தான் நகைச்சுவைப் படங்களும் சிரிப்புப்படங்களும் வெற்றி பெறுகின்றன. சிரிப்புப் புத்தகங்கள் புகழ் பெறுகின்றன. சிரிப்பு நமக்கு புத்துணர்ச்சியையும் ஓய்வையும் அளிக்கின்றது. நமது மனதை மகிழ்வித்து நம்மை கவனமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க வைக்கிறது.

2. இரண்டு சிறுவர்கள் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். சில குறும்புக்கார குரங்குகள் மரத்திலிருந்து வாழைப் பழங்களைத் தின்று கொண்டிருந்தன. சிறுவர்கள் போவதைக் கவனித்த குரங்குகள் அவர்கள் மேல் மிகக் கனிந்த வாழைப்பழங்களை வீசி ை வாழைப்பழங்கள் அவர்களது தலைகளின் மேல் விழுந்து சிதறியன. ஒரு சிறுவன் இதைக் கண்டு வாய்விட்டு சிரிக்கத் துவங்கினான் ஆனால் மறு சிறுவன் கோபப்பட்டு குரங்குகளை நோக்கி சத்தமிட்டான். இருவரும் ஒரு குழாயடிக்குச் சென்று வாழைப்பழக் கறையைக் கழுவி விட்டு வீடு சென்றனர்.

3. முதியோர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் நன்கு முறைப் படுத்தப்பட வேண்டும். அறுபத்தைந்து அல்லது அதற்கு மேல் வயதுள்ள ஒருவரது உணவில் போதுமான புரதச்சத்தும் புதிய பழங்களும் காய்கறிகளும் சேர்க்கப்பட வேண்டும். குறிப்பாக. குளிர்காலங்களில் வைட்டமின் C சத்துக்கிடைக்க வேண்டும். உயிர்ச்சத்துக் குறைந்த மலிவான பதப்படுத்தப்பட்ட உணவால் வைட்டமின் பற்றாக்குறை ஏற்படுகிறது. சத்தில்லாத உணவும், உடல் நலக் குறைவும் ஒன்று சேரும்போது குழப்பமும் இறப்பும் ஏற்படுகின்றது.

4. சுற்றுச் சூழலைக் காப்பதற்கு தண்ணீரைச் சேமிப்பது ஒரு முக்கிய நிகழ்வாகும். இது ஏனென்றால் நாம் நிலத்தடி நீரை அதிகமாக உபயோகித்தால், “நீண்ட காலமாக உபயோகித்தால், நீர்மட்டம் கீழே சென்றுவிடும். “அதனால் எல்லா உயிர்களும் மிகக் குறைந்த தண்ணீரால் துன்பப்பட வேண்டிவரும். அதனால் குழுக்களாகவோ அல்லது தனியாக உங்கள் வீடுகளிலோ அல்லது பள்ளிகளிலோ அல்லது அக்கம் பக்கத்திலோ மாங்களை நடுங்கள். ஏனென்றால் அதிக மரங்களை நட்டால் அதிகமாக மழை வரும். அதிகமாக மழை வந்தால் அதிக மரங்கள் வளரும்.

5. மீனவரும் அவன் மனைவியும் கோட்டைக்குச் சென்றனர். மாய மீன் அந்தக் கோட்டையை அவர்களுக்கு வழங்கியிருந்தது. அது ஒரு பெரிய கல் கோட்டையாக இருந்தது. நிறைய வேலையாட்களும் நிறைய அறைகளும் இருந்தன. அனைத்து அறைகளிலும் அழகான மரச்சாமான்கள் உள்ளன. கரிகளும் மேசைகளும் தங்கத்தால் செய்யப்பட்டன. கோட்டைக்குப் பின்னால் ஒரு அழகான தோட்டமும், ஒரு பெரிய மரமும் இருந்தது. அவர்கள் செம்மறி ஆடுகள், முயல்கள் மற்றும் மான்களைப் பார்த்தார்கள். கோட்டை முற்றத்தில் தொழுவங்களும் மாட்டு கொட்டகைகளும் இருந்தன. உண்மையிலேயே அற்புதமான இடமாக இருந்தது.

**வினாக்கள்**

1. ரகர - றகர வேறுபாட்டையினை சான்றுடன் விளக்குக.

2. ணகர - னகர வேறுபாட்டையினை சான்றுடன் விளக்குக.

3. லகர - ழகர - ளகர வேறுபாட்டையினை சான்றுடன் விளக்குக.

4. மொழிபெயர்ப்பின் தேவைகளை விளக்குக.

5. மொழிபெயர்ப்பில் மொழிகளின் பங்கினை விளக்குக.

**சு.பேச்சியம்மாள்,**

தமிழியல் துறை,

உதவிப் பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

தொலைபேசி எண்: 9788749246, 9944182841

EMAIL ID: spetchi29@gmail.com